



உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

மய நூலென்னும்

சிற்பரத்நாகரம்.

பதிப்பாசிரியர்கள் :

க. எ. குமாரஸ்வாமி ஆச்சாரி;

ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை.

1928

65-00

KUGAMAYAM.

Silparathnakaram

COMPILED FROM

Maya's Work consisting of 10,000 Verses,

PERUSED AND CORRECTED BY

VIDVAN

P. A. Muthuthandavaraya Pillai Avl.,

Tamil Pandit, L.M.C. High School, Shiyali,

AND

Professor, Tamil Academy, Shiyali;

AND PUBLISHED BY

S. A. Kumaraswami Achariar,

PUBLISHER OF

Paladeepikai, Jothidaganitham, Putpabantham, Neelakandathajeekam, Sripathi Baddhathee, Vaidyaratna Vachana Bhushanam and Etc.;

AND

P. A. Krishnaswami Pillai Avl.,

Tamil Pandit, L.M.C. Girls' School, Porayar,

AT THE MANORANJINI PRESS,

Ramanuja Iyer St., Sowcarpet,

MADRAS.

1927.

உ

குகமயம்.

குமாரகுருப்யோ நம :

பழைய ஏட்டுச் சுவடியாகிய

மயநூல் பதினாயிரத்தினின்றுந் தொகுக்கப்பெற்ற

சிற்பரத்நாகரம்.

இது

சீகாழி லுத்தரன் மிசியோன் உயர்தர பாடசாலைத்

தமிழ்ப் பண்டிதரும் காழிக் கழக

ஆசிரியருமாகிய வித்வ ஸ்ரீமாந்

ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை

அவர்களால் பரிசோதிக்கப்பெற்று,

'பலதீபிகை,' 'புட்பபந்தம்,' 'சோதிட கணிதம்,'

'நீலகண்டதாஜிகம்,' 'ஸ்ரீபதி ஜாதககர்ம பத்ததி,'

'வைத்தியரத்ந வசன பூஷணம்'

இவைகளின் பதிப்பாசிரியர்களான

பறங்கிப்பேட்டை

சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி

பிறையாறு லுத்தரன் மிசியோன் பெண்கள் பாடசாலைத்

தமிழுவாத்தியாயர்

ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை

இவர்களால்

சென்னை சௌகார்ப்பேட்டை

இராமனுஜ ஐயர் வீதியிலுள்ள

மனோரஞ்சினி

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

FOREWORD.

1. The Goal of every human being in this world is to live a happy life, blessed with children, wealth and all kinds of prosperity. To attain this end, it is important that he dwells in a house built in accordance with Shastraic injunctions. There are houses and houses. Occupants of certain kinds of houses, because of their unshastraic construction, are found to become the Victims of calamities that, one after another, befall them; while, dwellers in the right kinds of houses enjoy all happiness and prosperity. We cannot, therefore, sufficiently lay stress on the importance of House-Building, as found in our Sacred books.

2. This branch of knowledge (the Science of house-building) is usually known as **Silpa Sastra**. Like Astrology, this Science has a firm hold on the minds of the Hindus. It had its origin in the Rig-Veda, where certain injunctions were laid down regarding the preparation of sacrificial grounds. This Science was developed still further, later on, by great Rishis like **Manu, Narada** and **Kasyapa**. There are as many as 32 treatises extant now on this subject. Most of them have not seen the light of day.

3. Besides dealing with House-Building, this Science, which is a Veda by itself, (judging from its importance and size) treats also of the following :—

a, The construction of Temples, images and their installation and forms of worship.

b, The construction of Vehicles, implements of war and agriculture, articles of trade, Preparation of Sacrificial ground etc.

c, The method of locating metals underground.

d, Experimenting upon vegetable and animal kingdoms.

e, Manufacture of jewels, crown etc.

(The subject is to be studied and taught only by a certain class of people known as Viswakarmas. With other people it is a sin to study it.)

Maya, the great authority on this subject, has written a treatise of 10000 slokas, a part whereof goes by the name of **Silpa Rathnakaram**. It deals with house-building in particular. About 1400 verses from worn-out manuscripts have been picked out and connected into an organic whole and given out in easy Tamil for the benefit of the public at large. The publishers of this volume deserve our thanks for this kind of patriotic work. But for their untiring energy and self-sacrifice this work would have been consigned to the limbo of oblivion. They have already brought out very rare Astrological works. They intend to bring forth soon some medical works also. It is hoped that the reading public will appreciate their efforts and render what financial aid they could for them. "May God bless them with long life and prosperity" is my fervent prayer.

SHIYALI.
29 - 6 - 1926.

M. S. Rajagopala Iyer, B.A., L.T.,
Science Master,
L. M. C. HIGH SCHOOL.

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

முன்னுரை.

உலகத்தினர் எவரும் மக்கட்பேறு பொருட்பேறு முதலாய பல்வகைச் சம்பத்துக்களையும் இனிதுற்று, எஞ்ஞான்றுங் களிப்புடன் காலங்கடத்தி வாழவேண்டு மென்னும் நோக்கமுடையாரே யாவர். இம்மனோத மினிதுற அத்தியாவசியமாக வேண்டற்பாலது (சாத்திர சட்ட சம்பந்தப் பொருத்த முடையனவாய் மேலே கூறிப்போந்த எல்லாப் பலன்களையும் கொடுக்கத் தக்கனவாய் வாசயோக்கிய முடையனவாய்க்) குடிவாழ்க்கைக் கேற்றம் உடையனவாய் அமைக்கப் பெற்றிருக்குங் கிருகங்களே யாமன்றோ? (உலகில் நிலவும்) வீடுகள் பலவகை வித்தியாச நிருமாண முடையன. நூன்முறை பிசகி யமைந்துள்ள இல்லங்களில் வாழுநர் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து நிகழ்வனவாய இன்ப துன்பங்களுட்படுதலையும், இந்நெறிக்கு மாறாக ஏற்றவகைக் கண் ஆக்கப் பெற்றிருக்கும் கிருகங்களுள் உறைபவர் (தலைமுறை தலைமுறையாகப்) பல்வகைப் பேறுகளை அநுபவித்தலையும் நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஆகலின், நந்திருமுறைக ளியம்புமாறு வாசஸ்தானங்களை அமைப்பதின் சட்டமுக்கியம் பற்றி எவ்வளவு வற்புறுத்திக் கூறினும் மிகையாது ஏற்குமா மென்க.

மனைகணிக்கு முறைகளைக் கூறும் இக்கல்வியின் பாகம் பொதுவாய்ச் சிற்ப சாஸ்திரம் எனக்கூறப்பெறும். இந்துக்களுக்குச் சோதிட சாஸ்திரத்தில் இருக்கும் இடையறாப் பக்தியைப் போல இந்தச் சாஸ்திரத்திலும் இவர்களுக்கு உறுதியான நம்பிக்கை யுண்டு. ரிக் வேதத்தில் பலிபீடம் ஆக்குவிக்கு முறையில் இதுபற்றி முதல் முதல் எழுதப் பெற்றிருப்பதுங் காணலாம். பின்னர் மநு—நாரதர்—காசிபர்-முதலான ரிஷி சிரேஷ்டர்களாலும் இந்தச் சாஸ்திரம் விருத்திக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றது. இந்தச் சாஸ்திர சம்பந்த

மாய்ச் சுமார் 32 பெருநூல்க ளிருந்தபோதிலும் அவைகளுட் பெரும்பாலன வெளிவந்தில.

அதி முக்கியத்தையும் விஸ்தாரத்தையுங் கண்றுழுங்கால் தானேயாய்த் தனிவேதமாய் நிலவியொளிரும் இந்தச் சாஸ்திரம் மனையமைப்பதை விவரிப்பதுடன் அடியிற் கண்டுள்ளவைகளையும் எடுத்துரைக்கின்றது. அவையாவன:—

1. ஆலயங்கள் அமைத்தல், விக்கிரகங்கள் அமைத்துப் பிரதிஷ்டை செய்வித்தல், அவை சம்பந்தமான பூஜாவிதிகள் கூறல்.

2. வாகனங்கள் செய்வித்தல், யுத்த விவசாய வியாபாரக் கருவிகள் உற்பத்தி பண்ணல், பலிபீடங்கள் செப்பனிட்டுச் சிங்காரித்தல்.

3. பூமியடியிற் புதைந்துள்ள உலோகாதிகளின் இருப்பிடம் நிர்ணயித்தல்.

4. தாவர ஜீவ வர்க்கங்களின் தத்துவங்களைப் பரிசோதித்தறிதல்.

5. ஆபரணங்கள் கிரீடங்கள் செய்தல் இவை முதலியனவேயாம்.

இத்திறப்பெற்றிகள் முற்றிலும் உரைக்கவல்ல இந்தச் சாஸ்திரத்தை விஸ்வகம்மியர் என்ற ஒரு வகுப்பினர் மட்டுங் கற்கவுங் கற்பிக்கவும் ஏற்பட்ட உரிமையுடையவராவர். அவ்விதம் ஏற்பட்டவர்களேயன்றி ஏனையவர் அவ்வாறுதல் பாவமேயென்றறிக

இவ்வகைய இல்லம் இயற்றும் சாஸ்திரம் எழுதிய மயன் என்பார் 10000 சுலோகங்களடங்கிய ஒரு பெரு நூல் எழுதியிருக்கின்றனர். அதனுள் ஒரு பகுதியாகிய இந்நூலே சிற்பரத்நாகரம் என்னும் பெயரியதா யிலகுகின்றது. இதில் மனை ஆக்குவிக்கும் முறையொன்றனையே பெரிதும் விசேஷித்துக் கூறியிருக்கின்றார். பொது நன்மையை உத்தேசித்து உருச்சிதைந்த கைப்பிரதிகளிலிருந்து எளிய நடையுடையனவாகிய சுமார் 1400 பாக்களைப் பொறுக்கித் தொகுத்துத் தொடர்புகுன்றாத ஒருபூரண நூலாக்கிக் கோத்து உலகிற் குபகரித்துள்ள பதிப்பாசிரியர்களாகிய இத்தேசாபிமானிகள் இருவரும் நன்றிக்குப் பாத்திராகின்றனர்.

இவ்விருவர்களிடத்திலும் இத்தகைய சலியா உழைப்பும் சுய நல வெறுப்பும் பிறவாதிருந்திடில் இந்நூல் மறதிக்குட்பட்டு மறைந்தே போயிருக்கும்.

இவர்களிருவரும் சின்னாண் முன்னர் சோதிட உலகங்களிக்க அதி அபூர்வ சோதிட நூல்கள் சில வெளியிட்டிருக்கின்றனர். அன்றியும், சமீபத்தில் சில மருத்துவ நூல்களும் பிரசுரிக்க எண்ணியிருக்கின்றனர். ஆகையால் கல்விவாய்ந்த உலகம் இவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பிரயாசையை நன்குமதித்து இயன்ற பொருளுதவி புரியுமென்று எண்ணப்படுகிறது. ஈசன் இவர்களுக்கு நீண்ட வாழ்நாளையும் சிறந்த முன்னேற்றத்தையும் அளித்து ஆசிர்வதிக்க வேண்டுமென்பதே எமது இடையறாக் கோரிக்கை. சுபம்.

இங்ஙனம்,

M. S. இராஜகோபால ஐயர்,
பி. ஏ, எல். டி,
கலாநூலாசிரியர்,
லுத்தரன் மிசியோன் உயர்தரக் கலாசாலை

சீகாழி.
29-6-1926.

உ

கணபதிதுணை.

சிற்பரத்நாகரம்.

முன்னுரை.

இப் பூமண்டலத்து இயற்கைத் தோற்றங்களை இந்திரிய வாயிலாகக் கண்டுணர்ந்த பெரும்புலவர் அதன் செயற்கைத் தோற்றங்களையும் மானத வாயிலாகவும் கண்டுணர்ந்து அலங்கரித்துப் பாடும் சொற்றெளிவையும் பொருட் பொலிவையும் நாம் எக்காலத்தும் கற்றும் கேட்டும் ஆய்ந்தும் ஓர்ந்தும் திளைத்து வருகின்றோம். எவரும் புகழத்தக்க பேரிசை வாய்ந்த இனிய கவிவாணர்களது புல அறிவிற்கு அத்தோற்றங்கள் எத்துணைப் பேரானந்தத்தை விளைத்துவரும், கற்றளிகளும் செங்கற்றளிகளும் அறையணிகளும் அரண்களும் மண்டபங்களும் நாடு கோட்டங்களும் நகரங்களும் பற்றுகளும் மாட மாளிகை கூட கோபுரங்களும் ஆறு ஏரி குளங்களும் ஆராமஞ் சோலைகளும் அதியற்புத யந்திரங்களும் பொறிகளும் வெட்டுங் கருவியும் குத்துங் கருவியும் ஏனைச் சூழ்ச்சி யந்திரங்களும் ஐம்பெரும் பூதங்களின் வலிகளை எழுப்பும் கருவிகளும் அவற்றுட் பொதிந்து கிடக்கும் வித்யுத்சக்தி முதலியவற்றை வெளிப்படுத்துங் கருவிகளும் தோட்டி முதல் தொண்டைமான் வரையுமுள்ள யாவரும் உபயோகிக்கும் சாதனங்களும் கூலியாளும் குடியானவனும் குயவனும் கொற்றவனும் குறையறக் கொண்டு கூலிக்குழைத்தற் கமைந்த ஆயுதங்களும் பிறவும் நாவாய் தோணி நற்றகை விமானம் ஊர்தி ஆதியந்திரங்கள் கோயில் குளங்கள் பாழி பள்ளிகள் பௌத்த சமண திராவிட சளுக்க ஆரிய கௌட சாரசாணியர் முதலிய சமயநெறி நிற்பாரும் சாதியாரும் அமைத்துள்ள ஆலயாதிகளும் மடங்களும் மடாதிகளும் சவடிகளும் ஓலைகளும் புத்தகங்களும் லிபிகளும் பஞ்சலோக நவரத்தின வேலை

களும் பஞ்சநூற் பொருளும் கம்பள ஆடையும் பட்டுச்சேலையும் கொட்டுவேலையும் சாயவேலையும் மேய சிற்பமும் மாவேலையும் ஸ்திர வேலையும் மண்ணினும் பொன்னினும் மாகினும் பாகினும் மெழுகினும் புழுகினும் வாய்ந்த பல்லுருவங்களும் யாகசாலையும் யூபஸ்தம்பமும் ஆடியும் எண்ணெயும் அமுதமும் பாலும் உணவும் கலமும் உவப்பனயாவும் கைத்தொழிற் கல்வியும் காலினும் கலத்தும் செயத்தக்க வர்த்தகமும் வாணிகம் பலவும் நமது கண்ணைக் கவர்ந்து உளத்தை வயப்படுத்திக் களிப்பை யூட்டித் தம்மையமைத்தாரையும் தமக்குப் பரம நிமித்த காரணனையும் புலப்படுத்துவன வல்லவா?

பழங்கற்காலத்தும் புதுக்கற்காலத்தும் வழங்கிய படைகளும் சரித்திராபர காலத்துத் தாழி முதலியனவும் அணிகளும் பிறவும் உலோககாலத்துப் பெருவேல் குந்தமும் பிறவும் நமது நாட்டகத்து நாம் கல்வியெடுக்கையில் பழந்தமிழ்க் குடிகளின் மாண்பை அறிகின்றோம். கிருஷ்ணவேணி நதியின் கரைகளிற் காணும் பௌத்த கட்டடங்களும் அமராவதி ஸ்தூபமும் மாமல்ல புரத்துப் பல்லவர்கள் அமைத்துள்ள அணிபெறுங் கட்டடங்களும் தென்கன்னடத்தில் சமணர்கள் சமைத்துள்ள முற்பத்திரியாலயமும் கார்கலத்தும் ஏனூரிடத்தும் பிரதிஷ்டை செய்வித்துள்ள விக்கிரகங்களும் பல்லாரிப் பிரதேசத்துச் சளுக்கு வேந்தர் வேலையும் கஞ்சப்பிரதேசத்து ஊரிய மன்னர் கிரியையும் பற்பல இடத்து முகம்மதியர் நாட்டியிருக்கும் மினுறு பள்ளி கோரிகளும் எத்துணைச் சிறப்பு வாய்ந்தன. இவையனைத்தினும் மேலாக மதுரை ராமேச்சுரம் தஞ்சாவூர் காஞ்சிபுரம் திருவரங்கம் சிதம்பரம் திருவண்ணாமலை வேலூர் விஜயநகரம் முதலிய நகரங்களின் கோயில்களும் செஞ்சி வேலூர் திரிசிரபுரம் திண்டுக்கல் குத்தி திபாகதுருக்கம் ஆகிய அரண்களும் இத்தேசத்தைப் புரந்த திராவிட அரசர்களின் மனோசக்தியையும் தேகசிரமத்தையும் பிரதாபத்தையும் விளக்குவனதாமே.

இவற்றிற்குக் காரணமாயுள்ள நூல் யாது! சிற்பம். சிற்பசாஸ்திரம் வேதத்தில் தொகுத்துத் திவ்விய ஆகமங்களின் வகுத்துப் பின்னர் விரித்து ஓதப்பட்ட 32-சாஸ்திரங்கள். இவற்றின் பெருமையைக்கூறும் முன்னர்ச் சிற்ப வேலையைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

சிற்பத்தொழிற் கலையிலும் விஞ்ஞானத்திலும் அடங்கும். பௌதிகச் சக்தியும் இலேகத கலைகளையும். கசா கிரமமாக்கிற்கும் காலாப்ப் போகக் கிற்கும் தேசகாலங்களுக்கும் இன் பிரமாணமாக விளங்கு கொடுமின். காலது முன்னோர் இப்பொருள் அமைப்புகளையும் எவ்வாறு இயற்றி வைத்தார்க ளென்று ஆராய்ந்து சுற்று நோக்குதலால் இக்கலையில் மேம்பாடு டுவனும். பரதகண்டத்தில் பழங்காலம் இடைக்காலம் கடைக்காலம் ஆகிய மூன்று காலத்திலும் இருந்த பழக்கவழக்கங்களைப் பற்றிச் சிறந்த ஆராய்ச்சி செய்தவர்கள் இக்கலைகளைப் பற்றிய புராண விசாரம் ஒன்று எழுத இல்லை. எனினும் அவ்வக்காலத்துக்குத் தென் திராவிட தேசங்களிற் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும் அவற்றின் வேலைத்திறத்தையும் ஒருவாறு ஆராய்ந்து அவைகளைப் பற்றியும் சிற்பிகளின் பெருமையையும் அவர்களது அரிய சிறிய கலைகளின் திறமையையும் வாய்ந்திருந்ததை இவ்விடம் கூறுகின்றேன்.

இவற்றுள் பலவித வாழ்க்கைக்கு, இன்றியமையாதன தொழில் வகைகள் நடை பெறுவதற்கு, அஷ்டலட்சுமி கடாக்ஷம் விளங்குவதற்குக் காரணமாக்க காமதேனுப் போன்ற சிறந்தொழிற்கு விளக்கமானது ஒருவர் தமது வாழ்க்கைக் குறைவேயாகும் பத்திர மித்திர புத்திர வர்க்கத்தோடும் தமது ஜீவனத்தையும் நடத்துவதற்கு அவசியமானது சிற்பமே. அதனில் சிறந்த வேலைப்பாட்டை அறிந்துகொள்ள வேண்டியதே நமது முதற் கடமை.

இனி, உலகத்தில் நாம் காணப்படுகின்ற மக்கள் பலர் வசிக்கும் பெரிய பெரிய பட்டண கிராம திருக்கங்களைக் கட்டிக்கொண்டு பெருமையுற்றும் விமானம் நதி கூடம் தடாகம் ஆபரணங்கள் முதலியவைகளை அமைக்கத் தக்கதொழிலும் வல்லவர்களாக நாம் பெறுவதற்குக் காரணமாயிருப்பது நாம் சஞ்சரிக்கும் இடங்களிலிருக்கும் மிகைகளேயாம். இவ்வகைச் சிற்ப நூல்கள் ஆக்குவிக்கும் விதி முறைகளைக் கூறுவதற்கு எத்தனையோ இருந்திருக்கின்றன. இந்த முதனூலாகிய சிற்பசாஸ்திரம் இயற்றியவர் மயன் ரதங்களை என்று அரசர்களுக்கு வேண்டிய வாகனங்களையும் ஆபரணம் முதலியவைகளையும், ரதங்களுக்குரிய முதலியவைகளையுங் கொண்டு

பேதாபேதங்களைப் போதிக்கும் ஆற்றலுடையது. அந்நூல் சிருஷ்டிக் கைத்தொழிலாளி வர்த்தகன் உத்தியோகஸ்தன் முதலிய இவர்கள் ஐசுவரியத்தையும் ஜயத்தையு மடையவேண்டி அன்னவர்களுக்குரிய ஆயுதங்களாகிய கலப்பை மண்வெட்டி எழுத்தாணி தராசு வாள் வேல் கதை முதலியன இன்ன அளவினதாய் ஆக்கப்படவேண்டுமென்பதையும் அறிவுறுத்துகின்றது. அது யாத்திரை செய்து சஞ்சரித்தற்குரிய வாகனங்களான சகடம் தூமரதம் போர்க்கலம் மரக்கலம் ஆகாய விமானம் முதலியவை செய்விக்க வேண்டிய கட்டளைகளையுங் கூறுகின்றது. அஃது எவ்வகைப் பூத பிரேத பைசாசங்களும் அணுகாமலிருக்கத்தக்க யந்திர மந்திர தந்திரங்களையும் விளக்கிக் காட்டுகின்றது. அல்லாமலும் பூமிபேதம் ஜலம் சல்லியம் இவைகளையும் அறியச்செய்யும் ஆற்றலுமுடையது. இவைகளேயன்றி, அந்தச் சிற்பசாஸ்திரம் அடிபிடிகாலுங் காலமான அளவுப் பிரமாணங்களையும், முழுக்கோலதியான நிறை அளவு முதலான பிரமாணங்களையும் இன்னின்ன ஜாதியாருக்கு இன்னின்ன முழுத்தால் அளக்கவேண்டு மென்பதையும் முழுக்கோலின் பேதா பேதங்களையும் முழுக்கோல் செய்யப்படும் மரம் முதலானவைகளையும், அரசன் கொற்றக் குடையாறு அன்னதுக்குரிய ஈராசனதி கருவி காரணதி சிம்மாசனம் கிரீடம் வாள் தண்டம் வேல் கோயில் செங்கோல் முதலியன இருக்கவேண்டிய பிரமாணதிகளையும், சுவர்க்காதி போகங்களோடு வீடு பெறுதற்கேற்ற காருடபக்தியம் ஆகவளியம் தட்சிணுக்கினி முதலிய முத்தி வளர்த்தற்கேற்ற சாதனங்களையும் ஸ்தூபஸ்தம்பம் சிருக்குச் சிருவாதிகள் அமைத்தலாய பிறவற்றையும், பஞ்ச பௌதிக சம்பந்தங்களில் கூட்டிக் குறைத்துப் பிரயோசன மடைதற்கேற்ற சாதனங்களையும், சுவர்ணத்திரன் உலோகக்கனி இவையிருக்கு மிடங்களையும் அதன் பிரயோசனங்களையும் கல் மரம் முதலியவற்றின் கட்டளைகளையும் அவைகளுள் உள்ள ஆண் பெண் அலி என்னு முப்பேதங்களையும் அவைகளின் பிரயோசனங்களையும், நித்திய நைமித்திய காமியங்களான கிரமங்களையும் அவற்றின் விதாய விதிகளையும் சுருதி ஸ்மிருதி முதலாய 18 வித்தைகளுள் சொல்லிப்போந்த விஷயங்கள் அனைத்து மிருப்பினும் அவற்றுள்ளான போக்கங்களைக் கொடுத்தற் கேற்ற இலிங்காதி பூஜாக்கிரமங்

களையும் அவைகளைத் தாபிக்கும் க்ஷேத்திரம் கோபுரம் ரதம் வாகனம் முதலியன நிருமாணிக்கும் பிரமாணங்களையும், பிரதிஷ்டை விதி பூஜைவிதி மந்திர விதி முதலியவைகளையும் பிறவற்றையும், திருக்கோயில் சம்பந்தமாய அஷ்டபந்தன பிராயச்சித்த ஸம்புரோட்சண ஜீர்ணோத்தாரண விதிகளையும் இன்னும் உற்சவ சம்பந்தமான ஏனைய எல்லா மார்க்கங்களையும் அவைகளுக்கான பிரமாணங்களையும் எடுத்துக் கூறுகின்றது.

மேற்கூறிப் போந்த எல்லா விஷயங்களும் அமைந்துள்ள இந்தச் சிற்ப சாஸ்திரமன்றி வேறொரு சிறந்த சாஸ்திரம் இப்பிரபஞ்சத்தில் யாண்டுமில்லை. இவ்வொப்புயர்வற்ற உயர்தர சாஸ்திரம் மனிதர்க்கு மாதா பிதா குரு தெய்வம் போன்றதாய் மிளிர்கின்றது. ஆகலினன்றோ ஆங்கில துரைத்தனத்தினருங் கூட இஃது இந்துக்களின் தேவதா சொரூபமாம் வேதமெனக் கூறுகின்றனர். நிற்க.

அந்தச் சாஸ்திரப் பிரகாரம் சிற்ப சமர்த்தரான விஸ்வகம்மிய சிற்பிகளினாலேயே கிராமம் ஆலயம் கிருகம் முதலாய சமஸ்த நிர்மாணங்களும் செய்யப்படவேண்டும் என்க. அன்றியும் என்னுடைய பக்தர்களான தக்ஷகர்களாலே ஆலயம் விம்பம் பிரகாரம் மண்டபம் மகாபீடம் பலிபீடம் கோபுரம் மஞ்சன சாலை முதலானவை நிர்மாணிக்கப்படவேண்டும். மோகத்தினாலேனும் திரவிய லோபத்தினாலேனும் அன்னிய ஜாதியர்களைக்கொண்டு செய்பினும் செய்விப்பினும் இருவகைக் கருத்தாக்களும் நாசமுறுவதோடு புவனேஸ்வரனுங்கூட நாசமுறுவன் என ஸ்ரீ விஷ்ணு பகவான் கபிஞ்சலா சம்ஹிதை ஸ்ரீ பாஞ்ச ராத்திர ஜீரணோத்தாரண ஒன்பது, நாற்பத்தோன்பதாவது அத்தியாயங்களில்,

வாஸ்து சாஸ்திரேது ஸம்புரோக்தம்
வாஸ்து வித்யா விசாரதை:
தக்ஷகே ணவகர்த்தவ்யோகி
ராமாதீநிஹஸர்வஸ:

மத்பக்தைஸ்தக்ஷகைரேவ
கேஹம்பேர்நசகாரயேத்
ப்ராகாரம்மண்டபஞ்சைவ
மஹாபீடமஹாநஸம்.

கோபுராத்ருகாராணாத்ச
தடாகைகமேவகாரயேத்
அன்யஜாத்யத்ருதத்மோஹாத்
லோபாச்சேத்பத்திரகாதிகம்.

கர்த்தாகாரயிதாசைவ
ராஜராஷ்ட்ரந்ருபஸ்ததா
தஸ்மாத்ப்ரயத்நதோவர்ஜ்யந்
தக்ஷகேர்யத்க்ருதாதிகம்.

காரயித்வாவிசேஷேணதஸ்மின்
ஸம்ஸ்தாப்ய காம்யயேத்.

எனக் கூறியிருத்தலின் விஸ்வகர்மியர் மேன்மையும் அறியக்கிடக்கின்றது. இன்னோரன்ன எடுத்துக் காட்டுகளாலே விஸ்வகர்மியர்க ளல்லாத பிறரால் இருகல் ஆலயம் முதலிய எவ்வகைக் கட்டடங்களும் பிறவும் ஆக்கப்படலாகா தென்பதும் பிறவும் பெறப்படும்.

ருக்வேதம் ஐத்ரேய பிராம்மணம் கண்டம் 27 அத்தியாயம் 5-ல்

சில்ப்பாநிஸம்ஸந்திதேவ
சில்பாந்தேவஹ்ருதம்ஸ்ய
சில்ப்பாநாமாநுக்ருதீக
சில்ப்பமத்ரகல்பயதே.

எனவருங் கூற்றுப்படி வேத பிரதி பாத்யமான இச்சிற்பம் இத் தன்மைத்தென உணரக் கிடக்கின்றது. இவ்வாறு மகாத்மியம் பொருந்திய சிற்பம் ப்ரஹ்மாரண்யோபநிஷத்

கல்ப: சில்பாத் கல்பாச்சில்ப:

எனுமாறு முதற்பத்தி பிரமனின் உத்தரவதனத்தில் ஸ்தாபத் தியமெனத் தோன்றினதாகவும், பின்னொரு காலத்தில் மனுவாதி ரிஷிகள் வாக்கினின்று தோன்றினதாகவும் பின்னொரு காலத்தில் ஸ்தபதிவேதமென விஸ்வகர்மாவினால் மொழியப்பட்டதாகவும் கூறுவாருமுளர். அந்த எவ்வாறு ஆயினும் அண்டத்தி னுள்ளதே பிண்டத்தினுள்ளது எனுமாறு இது வேத பிரதி பாத்யம் ஆன தென்பதே முறைமை. இச்சிற்ப வேதத்தை ஓதவேண்டியவர்கள் ஸ்த பதி-ஹுலெஷ்டா-தக்ஷக-ருத்திர கிராஹி-மநுமய-சிற்பி-வர்த்தகி, விஸ் வகர்மா என்பன ராகிய விஸ்வகர்மர்களேயாம்.

இவ்வகைச் சிற்பம் 32 விதமாம். இவைகளின் சுலோக சங்கியைகளைக் கீழ்க்காணப் பெறும் மயமதம் 15 ஆவது அத்தியாயத்து 1—முதல் 8 சுலோகங்களால் அறியலாம்.

* பரார்த்தம்விஸ்வகர்மீயம்
விஸ்வேஸம்அற்புதம்பவேத். (௧)

விஸ்வபோதம்விஸ்வதர்மம்
கல்பாக்கியம்விருத்தமேவச
மயம்பானுவிசாலாக்ஷம்
சிருஷ்டம்ப்ரயுதம்பவேத். (௨)

வாஸ்துபோதஞ்சமஹாதந்திரம்
ஆதிசாரந்திரிசங்ககம்
பாராசர்யம்த்ரிகோடிஞ்ச
மானஸாரந்ததாபவேத். (௩)

* பதினைந்தாம் பக்கம் பார்க்க.

ஸௌரம்இந்திரம்சைத்திகஞ்ச
வஜ்ரம்கோடிசமந்விதம்
மானபோதஞ்சகர்வம்ஸ்யாத்
அநுயான்னளமாயுதம். (௪)

வாஸ்துவித்யாபதிச்சைவ
தாவட்டந்துநிகர்வகம்
பஹு சுருதம்சாத்விசஞ்ச
சுருடிசந்துபத்மகம். (௫)

விஸ்தாரம்நாமஸங்கித்யம்
காபில்யஞ்சதிரிகோடிகம்
ஏதேதேவருஷய : ப்ரோக்தம்
தத்வாத்ரிம்சதிசங்க்யயா. (௬)

த்வாதிரிம்சருஷிதந்தரக்ஞும்
சில்பசாஸ்திரமிதம்ஜகத்
தத்தத்கோத்ரவசாஜ்ஞாதோ
சில்பிஸர்வத்ரயோக்யகம். (௭)

வாஸ்துக்ருத்யம்விநாசில்பி
தத்தத்கர்த்தாகுலக்ஷயம்
தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந
சில்பிநாஸர்வகர்மக்ருத்

ஏவம்முநிவரை:ப்ரோக்தம்
கிரககிராமாதிவாஸ்துநாம்

ஏகம்	1	பிருந்தம்	1000000000
தசம்	10	கர்வம்	10000000000
சதம்	100	நிகர்வம்	100000000000
சகஸ்ரம்	1000	மகாபத்மம்	1000000000000
அயுதம்	10000	சங்கம்	10000000000000
நியுதம்	100000	ஜலதி	100000000000000
பிரயுதம்	1000000	அந்தியம்	1000000000000000
கோடி	10000000	மத்யம்	10000000000000000
அற்புதம்	100000000	பரார்த்தம்	100000000000000000

இந்தச் சிற்ப சாஸ்திரம் எல்லாச் சாதியாருக்கும் எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவான நூல். இதின் சுலோக சங்கியைகளை அளவிட்டு உரைத்தற்கு இயலாதெனக் கூறுவர். எற்றுக்கெனின், இஃது இறைவனாலும் பல்வகைப் பிரஜாபதிகளாலும் அநேக மகரிஷிகளாலும், சொல்லப்பட்டிருத்தலின் என்க.

மேலும் அவ்வகை நூல்களுள்ளும் சிரேஷ்டமான விஸ்வகர்மீயம்-மநு ருத்திரம்-மயமதம்-துவாஷ்ட்ரு தந்திரம்-ஐந்திரமதம்-சௌரம்-பிரஜாபத்தியம் காஸ்யபம்-மநுசாரம்-மானசாரம்-விஸ்வம்-விஸ்வதர்மம் முதலாய சிற்பக் கிரந்தங்களிலே அந்நூல் ஆக்கியோர்களையும் அவர்களின் உற்பவங்களையும் அவர்களின் நித்திய நைமித்தியகமான பிரமகர்மங்களையும் கோத்திர சூத்திர சாகை பிரவரம் நூல்களின் எண்ணிக்கை சுலோகங்களின் கணக்கு முதலியவைகளையும் பிறவற்றையும் பரக்கக் காணலாம்.

விஸ்வகர்மாவசிஷ்டச்ச
ப்ருகுராத்ரியமஸ்ததா
நாரதோநக்னஜிச்சைவ
விசாலாக்ஷ : புரந்தர :
பிர்மாகுமாரோநந்தீச :
சௌநகோகர்க்கஏவச
வாசுதேவோநிருத்தச்ச
ததாசுக்கிரபிரஹஸ்பதி:
அஷ்டாதசைதேவிச்யாதா
வாஸ்துசாஸ்திரோபதேசகா :

என்னும் சப்தகல்பத்ரும சுலோகப்படி : விசுவகர்மா-வசிஷ்டர்-பிருகு-யமன்-அத்திரி-நாரதர்-நக்னஜித்-இந்திரன்-பிரமா-சுப்பிரமணியர்-நந்தி-சிவன்-சௌனகர்-கர்க்க-வி[illegible]-அநிருத்தர் சுக்கிரன்-பிரஹஸ்பதி முதலான பதினெண்மரும் சிற்ப சாஸ்திர பிரவர்த்தகர்களாகவே யிருக்கின்றார்கள்.

சிற்பம் ஐந்திரமதம் முதல் அத்தியாயம்
தாருபிஷ்டிசிலாலோகா
ஸுதாமிருத்சுடுசர்க்கரா
தந்தயந்திரக்ரியாபாஸா
சில்பிநாம்தசகர்மணும்.

எனக் கூறுதலின் இப்பிரவர்த்தகர்களான சிற்பிகள் மரம் செங்கல் கல்லோகம் சுதை மண் சர்க்கரை தந்திரம் யந்திரம் படம் முதலியவைகளினால் செய்யப்படும் பதினெண் கர்மங்களுமறிந்தவர்களாயிருத்தல்வேண்டும்.

இத்திறம் பெற்றவர்கள் விஸ்வகர்மிய சிற்பிகளே சிற்பம் மயமதம் ஐந்தாம் அத்தியாயம்

தேஷாமேவஸ்தபத்யாக்யோ
விஸ்வகர்மேதிஸம்க்ருத :
ஏபிர்விநாஹிசர்வேஷாம்
கர்மகர்த்துந்நசக்யதே.

தஸ்மாதேதேசதாபூஜ்ய
ஸ்தபத்யாதிசபஞ்சகம்
யேபிஸ்தபத்யாதிபிரத்ரலோகே
விநாகிரஹீதுஸூகிருதந்நசக்யதே
தைரேவஸார்த்தம்குரவச்ச
தஸ்மாத்பவந்திமோக்ஷம்
பவதாந்தமர்த்யா: . எனக் கூறுமாறும்,

சகளாதிகாரம் முதலாம் அத்தியாயம்

கர்த்தவ்யோவாஸ்துசாஸ்திரோக்தம்
ராஜராஷ்ட்ரசுகப்பவேத்
கால்ப்ரஷ்டுபயோத்பாவோ
தநதாந்யசுபாவஹம்.

காவச்சஸூதுகாநித்யம்
ஜநோரோகம்விவர்ஜயேத்
வாஸ்துசாஸ்திரக்ரியாஹீநம்
கர்த்துருநாசம்குலக்ஷயம்

தத்ஸர்வம்வாஸ்துரூபாணும்
சில்பிஜீவிதமுச்யதே
அன்யஜாத்யுத்ருதந்மோஹாத்
சர்த்தாடர்த்தாவிநஸ்பதி

எனக்கூறுமாறும் பாஞ்சாலரான விசுவகர்மாக்களென அழைக்கப்பெறுவர். ஆகவே இவர்களைத் தவிர வேறெவர்களும் எவ்வித சிற்ப கர்மங்களையும் செய்ய வொண்ணுது. எனவே இவ் வைவகை சிரேஷ்டர்களே போற்றத் தக்கவர்கள் ஆவர். இந்த ஸ்தபதிகளைத் தவிர எவ்வகைச் சுகிர்தங்களையும் அடைய வேறெவ்வகை மார்க்கமுமில்லையாகலின் இவர்களே மோக்ஷ நெறிகாட்டுங் குருமாரும் ஆவரெனக. வாஸ்து சாஸ்திரமாம் இந்தச் சிற்ப சாஸ்திர ரீதியாய் அமைக்கப்பெறும் நிருமாணங்களால் அரசன் தனது ராச்சியத்தில் க்ஷேமகரமாய் காலபயமில்லாமல் தனதான்ய சம்விர்த்தி சேனுபிவிருத்தி பால்பசு அபிவிர்த்தி அரோக திடகாத்திரம் முதலியன

அடைந்து சகல சாம்ராச்சியங்களையும் உயிர் வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்கள் யாவும் அடைவன் என்க.

சுருக்கச் சொல்லின் விசுவசர்மீயம் 12-ஆம் அத்தியாயம்.

தேவாநாம்மாநுஷ்ப்ரோக்தம்
ஸர்வப்ராஸ்யாபரிக்ரஹோத்
ஸ்தாபிதம் விஸ்வகர்மந்ச
நிர்மிதாயாத்யநிச்சிதேள
ஸர்வசாஸ்திரேஸாஸ்ராந்து
கல்பயேத்விஸ்வகர்மண:

எனக் கூறுமாறு எல்லா நிர்மாணங்களுக்கும் சிற்பசாஸ்திரிகளே சர்வாதிகாரிகளாவர்.

இந்த ஸ்தபதிகள் ஒவ்வொரு சாதனங்களுட் பிரவேசிக்கும் போதும் பிரவர்த்தக மாரம்பிக்கும்போதும் தேவபிம்பங்களில் ஒவ்வொரு உறுப்புக்களை ஆக்க ஆரம்பிக்கும் போதும் சதுர் வேதங்களில் அவ்வவ் வகைகளுக்குரிய சூக்தம் அநுவாகம் பனசை பிரஸ்னம் முதலிய மகாமந்திரங்களை அத்தியயனம் பண்ணிக்கொண்டே பிரவர்த்தகம் நடாத்தவேண்டும். ஆகையால் தான் ஆதியாகப் பிரவர்த்திக்க விஸ்வகர்ம வம்சத்தவர்களே எல்லாக் காரியங்களுள்ளும் பிரவேசிக்க வேண்டுமென்றும் அதை ஸ்திரப்படுத்தவே மேலே உதாகரிக்கப் பெற்றுள்ள வேதசாஸ்திர புராணேதிகாசங்கள் யாவும் விஸ்வகர்மா தான் செய்யவேண்டுமென்றும் துவஷ்டா தான் செய்யவேண்டுமென்றும் சிற்பி தான் செய்ய வேண்டுமென்றும் வர்த்தகி தான் செய்யவேண்டுமென்றும் தக்ஷகர் தான் செய்யவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறுகின்றன.

உலகத்தினர் பல்வகை நன்மைகளையும் பெற்றுய்யவேண்டுமாறு அதிரில் வெளிவந்துள்ள இந்தச் சிற்ப சாஸ்திரத்தின் ஒரு பகுதியாய் மயனால் எழுதப்பட்ட 10000 சுலோகங்கொண்ட மயநூலின் ஒரு சிறு பகுதியே இந்தச் சிற்ப ரத்னாகரமாம். இது சிற்பிலட்சண முதல் சிற்பன் அதிர்வாக லட்சணம் வரையில் உள்ள பலபலன் களையும் கூறுகின்றது.

இது மயன் நூல் தன்மையே தெரிந்துப் பின்பற்றி எழுந்ததல்லவு என்றவர்களின் இதனை மயசாஸ்திரம் எனவுமாம் பொருந்தும். இது

பல பழைய ஏடுகளிலிருந்தும் திரட்டி எடுக்கப்பட்டது. இது ஏறக்குறைய 1400 இனிய செய்யுள்களைக் கொண்டது. இந்தச் செய்யுள்கள் யாவும் பழைய காலத்தனவாகலின் சிற்சில யாப்பின் போக்கு மாறுமாகும் எனினும், இவையாவும் பெரியோர்கள் பாடல்களாகலானும் தற்காலத்துக் கேற்றவாறு ஒருவாறு திருத்தி அச்சிடினும் இந்த நூலைப் பெரிதும் போற்றி அநுசரிக்கத் தக்கவர்கள் சிற்பிகளே யாகலானும் கடிய நடையில் எழுதுதல் யாவரும் விரும்பத் தக்கது அன்று ஆகலானும் அவைகளை இருந்தபடியே அச்சிட்டிருக்கின்றனர்.

இந்நூற் பதிப்பாசிரியர்கள் ஆகிய சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி, ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை இவர்கள் இத்தமிழுலகத்துக்கு உதவியாக முன்னர் வெளிப்படுத்தி யிருக்கும் பல சோதிட சாஸ்திரங்களைப் போலவும் இனி அச்சிடப்போகும் வைத்திய சாஸ்திரத்தைப் போலவும் இந்தச் சிற்ப ரத்நாகரமும் நம் தமிழ் நாட்டுக்குப் பெரிதும் நன்மை புரியுமென்று நினைக்கிறேன். நந்தமிழுலகத்துக்கு இத்திற நன்மைகளைச் செய்துவரும் இப்பதிப்பாசிரியர்க ளிருவர்களுக்கும் எல்லா நன்மையும் இனிதுறுமாறு எல்லாம் வல்ல கடவுளைத் துதிக்கிறேன். சுபம்.

ஸ்ரீகாழி.
12 - 6 - 1926

ப. அ முத்துத்தாண்டவராய பிள்ளை,
வித்வான்,
கல்விக்கழகம்.

குகமயம்

ஓம் குமார குருப்யோ நம:

பதிப்புரை.

புரந்தரன் வேண்டப் புரிந்தா னருட்குகப் புங்கவன்றுட்
சிரந்தனிற் கொண்டெம் மனத்துறு மார்வந் தெரிதரநற்
கரந்தனைக் கொண்டு பதிப்புரை தீட்டினங் கற்றமயன்
றிரந்தனைக் கொள்சிற் பரத்நா கரமெனுஞ் சீர்மறைக்கே.

உலக முய்ய வான்றோ ராக்கிய நூலனந்த மென்ப. அவை யொவ்வொன்று மொவ்வோர் செம்பொருள் பயக்குஞ் சிறப்பினை யுடைத்துமாம். அன்றியு மவை லௌகிக வைதிக மார்க்கங்க ளிரண் டனையு முணர்த்துவனவாயு முள. எந்நூ லெத்துறையினை எவ்வாறு விளக்கினு மந்நூற் பொருள்கொடு வின்பந் துய்ப்பான் கருதுவோன் மானிடனே யாவன். அன்னோன் எவ்வாச்சிரமியே யாயினு மவற்கோ ரில்ல மவசியம் வேண்டற்பாற்றே. வரம்பி லின்பமாம் மோக்கப் பேற்றை அவாவ விரும்புநரும் தமதிருக்கை சிற்ப விலக்கணப்படி யமைந்தா லொழிய அந்நெறி யெய்தப்பெறு மின்பமு மொருதலை. ஆகவே யந்நூற்கு முன்னூலா யெல்லவர் கருதலர்க்கு மிருப்பிட விலக்கணங் கூறுவதாயு முள விந்நூற் பொன்னூலே யெனல் மிகை யாகா தன்றோ!

அன்றியும், பகவத்கீதை—,

சன்னியாஸঃ கர்மயோகஞ்ச
நிஸ்ரேயஸக ராவுபௌ
தயோஸ்து கர்ம ஸன்யாஸாத்
கர்மயோகோ விஸிஷ்யதே.

ஏவம்க்ஞாத் வாக்ருதம்
கர்மபூர்வாபி முமுக்ஷுபிஃ
குருகர்மை வதஸ்மாதம் பூர்வைஃ
பூர்வதரம் க்ருதம்.

எனப் பகர்ந்திருமாறு பரமனெனுநூலன் சாத்திரவிதி விலகி தனதிட்டப்படி விழைந்திடு கருமத்தி வீடுபேறுவிலனே யன்றி இகத்தும் பரத்து மின்ப மெய்தப் பெறு னாகலின், அன்னான் சுருதி வழிநடந்து,

யஸ்ஸாஸ்திரவிதி முத்சிருஜ்ய
வர்த்ததே காமகாரதஃ
நஸஸித்திம வாப்நோதி
நசுகம் நபராங்கதிம்.

தஸ்மாத் சாஸ்திரம் ப்ரமாணந்தே
கார்யா கார்யவ்ய வஸ்திதௌ
க்ஞாத்வா சாஸ்திர விதாநோக்தம்
கர்மகர்த்து மிஹார்ஹஸி.

என்னுங் கீதா கூற்றுக்களின்படி கர்மாநுஷ்டான சித்திபுற்று,

யதஃ ப்ரவிர்த்தி பூதாநாம்
யேந ஸர்வமிதம் ததஃ
ஸ்வகர்மணு தமப் பியர்ச்சிய
சித்தம் விந்ததி மாநவஃ.

எனக் கிருட்டிணன் தெருட்டின மொழிப்படி கர்மாநுஷ்டானமான விக்ஞான மென்னும் சிற்பசாஸ்திரங் கடைப்பிடித்து, அமரகோசம்—,

மோக்ஷேதீக் ஞானமந்யத்ர
விக்ஞானம் சில்ப சாஸ்திரயோஃ

என அறையு மாறிந்தால் பிர்மகர்ம ஸ்வபாவங்களி லொன்றாவது முன்னி—,

ஸமோதமஸ்த பஸ்ஸௌசம்
க்ஷாந்தி ரார்ஜவமேவச
க்ஞாநும் விக்ஞா நமாஸ்திக்யம்
பிர்மகர்ம ஸ்வபாவஜம்.

னைப் பகைக்கடக் களிக்கிறது, ஞானேந்திரிய கன்மேந்திரிய நிக்கிரகங்கள், தவசு, ஆசாரம், பொறுமை, கபட மின்மை, ஞானம், விக்ஞானம், நம்பிக்கை என்பவைகளான பிரம கர்மானுஷ்டான வழிகளானு மன்றி, விஞ்ஞானப் பிரவர்த்தியாம் தேவாராதன முதலாய கர்மாநுஷ்டானங்கள் வழியாயும் மோக்க சாதன மடைய வழி யிருத்தலின், விஞ்ஞானமாம் சகுண ரூபமின்றி ஞானம் பிரவர்த்திக் காதாகலின், அவ்விக்ஞானமே சிற்ப சாஸ்திரமாய் அச்சிற்பமே பிரமகர்மங்களுக் கடித்தானமாய் மோட்சத்திற் கேதுவா யிருத்தலு மறிக.

இவைகளுமே யன்றி இந்நூல் பிரபஞ்சத்தை யாளும் சக்ரவர்த்தி போன்றது. சகுணரூபமும் சாத்வீக குணமு முடைத்து. சரிவை யாதி பெற்றினையு மளிக்க வல்லது. வேதாங்க உபாங்க கலைஞானங்களுக்கு வித்தானது. ஸ்தாபத்திய அதர்வோப வேத அர்த்த சாத்திர மென்றறைய வல்லது. விஸ்வகர்ம சாத்திரமாய்க் கணிதங்களுக்கு மாதாவாய் விளங்குவது. ஆகவே இத்திறப் பெற்றி வாய்ந்த சிற்ப சாஸ்திரோக்தமாய் மனையை நிருமாணிக்கின் அரசர்க்குங் குடிகளுக்கும் க்ஷேமமும் கால பய மின்மையும் தனதான்ய ஸம் விருத்தியும் பசுக்கள் பாலபிவிருத்தியும் அரோகமும் உண்டாகும். இந்நூற்கு முரணு யமைப்பின் மேற்கூறியவை யாவும் மாறும்.

அன்றியும் இந்நூல் தொகுதிகளை யாக்குவித்த கர்த்தாக்கள் இருவகையின ரென்ப. அவருள் ஒருவர் தேவ மயனென்றும் மற்றொருவர் அசுரமய னென்றும் அறையப் பெறுவர். பாரதம் பகருமாறு பாண்டவ பற்குனன் காண்டவவனம் பாவகற் கிரையூட்டியபோது பாதுகாக்கப்பெற்றவனே அசுரகம்மிய னென்றும், அவனே காண்டவ கதையாதி பிறவற்றையும் பாண்டவர்க்களித்தன னெனவும், பதுமகோமளை மண்டோதரி முதலாயினார்க்கு முற்பிதா வானவனெனவும் பகரப்படுபவனென்க. இத்திறப் பெற்றியான் பகுப்பினர் தெய்வகம்மியராம் துவஷ்டாவாதி விசுவகர்ம வமிசத்தார்க்கஞ்சி ரோமாபுரியை யடைந்து தங்குலத் திறைவர்களாகிய அசுரர்கட்குக் கம்மியராகி அன்னார்க் கேற்ற படைக்கல ஆகாயவிரத மாட மாளிகாதி கூட கோபுரங்களும் ஏனைய பிறவுங் நிர்மிக்கும் விதங்களையும் பயிற்றுவிப்பா ராயினர். அப்புரி கடல்கொண்டபோது அவ்வமிசத்தினருட்

சிலர் அப்பெருங்குக்குத் தப்பி மீண்டி மாரிய நாடடைந்தனர். அங்ஙனம் அடைந்தார் பெருக துவட்டா வகுப்பினர் அருகினர் போலும். ஆகையாற்றான் ஆலய கிருக சிற்ப மானங்கள் ஆகமத்தி லொருவாறும், மயன்விதியி லொருவாறுமாக இந்நாளிலும் முரண்படுகின்றன. ஆகவே மயன் சந்ததியினர் தானவர்க ளெனவும், துவஷ்டாவருப்பினர் தேவர்களெனவும் ஐயந்திரிபின்றி யறிந்தாம்.

அன்றியும் † மானசாரம் சிற்போற்பத்தி பற்றி, பரசிவமாம் விஸ்வகர்மாவினிட மிருந்து சிருஷ்டிகர்த்தாராம் பிரமாவும் உபேந்திரனும் விஷ்ணுவும் உண்டாயின ரெனவும், அப்பிரமனுக்கு விசுவகர்மா வெனு நாமம் ஈச்வரனாலே கொடுக்கப்பட்ட தெனவும், அவ்விச்சுவ கர்மனே பிரமாண்டத்தைச் சிருஷ்டித்த னெனவும், அன்னானிட மிருந்துதான் நான்கு பேதங்களோடு கூடிய பிராமணர்கள் உண்டாயின ரெனவும், அவ்விசுவகர்ம பிரமத்தின் பூர்வமுகத்திற்கு விஸ்வபூ: எனவும், தெற்கு முகத்திற்கு விசுவவித வெனவும், மேற்கு முகத்திற்கு விசுவ பிரஷ்டாவெனவும், வடக்கு முகத்திற்கு விசுவம் எனவும் பெயருண்டென்றும், இந்நான்கு முகங்களினின்றே நாலுவகை விசுவ கர்மாக்கள் உண்டானார்களென்றும் அவர்கள் முறையே கிழக்கு முகத்தி லுற்பவித்தவர்கள் விஸ்வகர்மாக்களாகவும், தெற்கு முகத்தி லுற்பவித்தவர்கள் மயனாதியர்களாகவும், மேற்கு முகத்தி லுற்பவித்தவர்கள் மனுக்களாதி யர்களாகவும், வடக்கு முகத்தி லுற்பவித்தவர்கள் துவஷ்டாவாதியர்களாகவும் அழைக்கப்படுவ ரெனவும், கிழக்கு முகத்தி லுற்பவித்த ஆதிவிசுவகர்மா உபேந்திரனும் விஷ்ணுவின் புத்திரியையும், தெற்குமுகத்திற் றோன்றிய மயன் இந்திரன் புத்திரியையும், மேற்கு முகத்தி லுற்பவித்த மனு வருணன் புத்திரியையும், வடக்கு முகத்தி லுற்பவித்த துவஷ்டா குபேரன் புத்திரியையும் விவாகம் செய்துகொண்டன ரெனவும், இவ்விதம் விவாகஞ் செய்விக்கப் பெற்றுள்ள பெண்டிர்களிடம் விசுவ கர்மாவுக்கு ஸ்தாபதி யென்பாரும், மயனுக்குச் சூத்திர கிராஹி என்பாரும், மனுவுக்குத் தக்ஷகனென்பாரும், துவஷ்டாவுக்குவர்த்தகி யென்பாரும் புத்திரர்களாய்ப் பிறந்தாரெனவு மறிவுறுத்து மாறு மறிக.

† இந்நூற் பெற்றியினை எம்மால் விரைவில் வெளியிடப்பெறும் சிற்ப சாகரம் இனிது விளங்கும்.

இவ்விருவகைக் கருத்தாக்களும் அவ்வக்காலங்களில் அடியிற் காணப்பெறும் சிற்ப உபசிற்பங்களாம்:—

1	மகாவிஸ்வகர்மீயம்.	34	நாமஸங்கிதை.	67	பிரசஸ்பதீயம்.
2	விஸ்வகர்மீயம்.	35	காலரூபம்.	68	யமம்.
3	விஸ்வம்.	36	சற்பாரியம்.	69	வாசுதேவம்.
4	விஸ்வசாரம்.	37	தாவட்டம்.	70	அநிருத்தம்.
5	விஸ்வபோதம்.	38	சாத்விசம்.	71	பீர்மியம்.
6	விஸ்வகாசியபம்.	39	ஐந்திரமதம்.	72	பிரஜாபத்தியம்.
7	விஸ்வதர்மம்.	40	சித்திரசமானம்.	73	பிரயோகம்.
8	விஸ்வேசம்.	41	சித்திரபாகுல்யம்.	74	அகஸ்தியம்.
9	விருத்தம்.	42	மனோவில்யம்.	75	மார்க்கண்டம்.
10	விசாலம்.	43	பராத்சித்ரகம்.	76	கோபாசம்.
11	விசாலாக்ஷம்.	44	பிரபோதசபஞ்சலி.	77	நாரதீயம்.
12	வஜ்ரம்.	45	சித்திரகண்டம்.	78	போஜமதம்.
13	வாஸ்துவித்யாபதி	46	ஈசானம்.	79	வால்மீகம்.
14	வாஸ்துபோதம்.	47	அரிடிகம்.	70	பாணி.
15	விஸ்தாரம்.	48	சயிந்திசம்.	81	பாரத்துவாசம்.
16	மனுதந்திரம்.	49	வைசத்திரம்.	82	கௌர்க்கம்.
17	மயமதம்.	50	காபிலகாலரூபம்.	83	விசுவ த்திரம்.
18	துவாஷ்டருதந்திரம்	51	பிரபத்தம்.	84	கௌதமம்.
19	நளதந்திரம்.	52	சகளாதிகாரம்.	85	வாஸ்துபத்ததி.
20	பிரபோதம்.	53	தியானபத்தத.	86	வசிஷ்டம்.
21	மானவித்மானம்.	54	சிற்பார்த்தாகரம்	87	பிருகுமதம்.
22	மானசாரம்.	55	ஸாகம்.	88	ஆத்ரேயம்.
23	மனுசாரம்.	56	நாராயணியம்.	89	சௌநகம்.
24	ஆதிசாரம்.	57	பிராமம்.	90	நக்னசித்தம்.
25	மகாசாரம்.	58	குமாரசம்.	91	பாத்மீயம்.
26	மானபோதம்.	59	இந்திரம்.	92	சிந்து.
27	மகாதந்திரம்.	60	லாவக்ஞம்.	93	பிரபோதகம்.
28	காசியபம்.	61	சௌரம்.	64	சாதகம்.
29	பகுசுருதம்.	62	பாநுமதம்.	95	வாஸ்துவாதிகாரம்.
30	சிருஷ்டம்.	63	ஹநுமான்.	96	யந்திராதிகாரம்.
31	கல்பாக்கியம்	64	ஸௌமம்.	97	பிராயச்சித்தாதி
32	சாதகசாரம்.	65	பாராசரீயம்.		[சாரம்
33	ஸாரஸம்மிதை.	66	பார்க்கவம்.		

இவை முதலான நூல்களை யியற்றி வித்தனரெனத் தெரிகிறது. அவைகளுட் சில இன்னுமிருக்கின்றன. அவைகளுட் சில இந்நான்று மாட்சிமைதங்கிய திருவனந்தபுரம் சமஸ்தானத்தரால் பிரசுரமாயுமிருக்கின்றன.

இத்தகைச் சிறப்பு வாய்ந்த சிற்பநூல்களுள் ஒரு பகுதியாய இச்சிற்பாத்தாகரம் வந்தாரின் காப்போன் போன்ற பருத்துவ நூல்

கள் போலாது வருமுன் காப்போனுயு மிளிர்கின்றது. இது சுகாதாரத்தைப் பேணி யதனை விரித்துரைப்பதில் ஒப்புயர்வற்றது. மாசுபோல் காணுங் குற்றங்களை யாழ்ந்தறிந்து கண்டுபிடிக்கு மாற்றலுமுடைத்து. அன்றியும் இது மேற்கூறிப் போந்தபடி பிரமாணரூபமாய்க் காட்டப்படும் நூல்களு ளொன்றுவது மறிக.

இந்நூலைப் பழைய ஏட்டுச்சுவடியிலிருந்து எழுதித்தந்தாரான எமதாப்த சிஷியர் சிதம்பரம் - வடுகர் தெருமேடு - சிற்பசாஸ்திர விற்பந்த ஸ்ரீமாந் சு. கோவிந்த ஆச்சாரியார் அவர்களும், இந்நாலின் சிற்சில பகுதிகளை எமக்கனுப்பியுள்ள அனந்தசயனம், நாகர்கோயில் பீஜைகூஷிபுரம் சமஸ்கிருத பண்டிதரும் முனிசிபல் கௌன்சிலருமான பிரமஸ்ரீ ஆ. முத்தாச்சாரியார் அவர்களும், இவ்வாறே சிதைவுற்ற சிற்சில செய்யுள்களை யனுப்பியுள்ள திருநெல்வேலி பாளயங்கோட்டை புத்தனேரி ஜோதிஷர் பிரம்மஸ்ரீ D. ஸ்ரீநிவாச திருமலாசாரிய ஸ்வாமிகளும் செய்த நன்றியை யென்றும் மறப்போமல்லோம்.

எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிதேவசேனா சமேதராம் குமாரக்கடவுளின் குன்றாப் பெருங்கருணையால் வெளிப்போந்துலவும் இவ்வினிய நூல் சாதுக்கள் க்ஷேமார்த்தம் நீடு வாழ்க. சுபம். சுபம். சுபம்.

"நல்ல ஞானமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை இல்இல் லோர்க்கே."

அதிவீரராம பாண்டியர்.

வாழ்க மாமறை வாழ்கநல் லன்பர்கள்
வாழ்க செந்தமிழ் வாழ்க அறிஞர்கள்
வாழ்க வையகம் வாழ்க மயனெறி
வாழ்க நூலிது வாழ்க மனுக்களே.

இங்ஙனம்,

பறங்கிப்பேட்டை } சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி,
சிம்மராவி 12 உ } ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை,

பதிப்பாசிரியர்கள்.

பிழையுந் திருத்தமும்.

இப்பிழை திருத்தங்களை அவ்வப் பக்கங்களில் திருத்திக்கொள்ளுக.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
7	18	1	[illegible]	[illegible]
14	63	1	அணி	மணி
19	103	1	சுத்திய	சாத்திய
22	114	4	விலைபுரம	விலைபுரம்
22	118	1	காலையில்	[illegible]
23	130	3	பிச.	பிச
24	135	3	வண்டகி	பண்டகி
,,	136	3	[illegible]	நிகிபகு
,,	137	2	காளிரிட	[illegible]
,,	138	4	சல்பமு	சல்லிபமு
,,	139	3	உம்பதில்	வம்பகில்
28	165	1	மாறல்	மாற
,,	,,	3	[illegible]	பரன்
,,	167	3	[illegible]	பார்க்கிடுக்
29	170	2	கன்னிபாவிட	கன்னிபவிட
,,	,,	4	[illegible]	[illegible]
,,	173	2	செலவகி	[illegible]
30	176	3	பானை	[illegible]
,,	177	4	குசகுசெ	[illegible]
,,	181	,,	பெப்றுயில்	[illegible]
31	187	3	[illegible]	[illegible]
,,	,,	4	சோரா	[illegible]
33	198	1	நிகழுத்திபெ	[illegible]
,,	199	3	தேவ	[illegible]
35	213	4	மாற்றுத*	[illegible]
46	285	2	கூற	[illegible]
49	304	2	வாசலே	[illegible]
50	311	2	மன்னு	[illegible]

பிழையுந் திருத்தமும்.

இப்பிழை திருத்தங்களை அவ்வப் பக்கங்களில் திருத்திக்கொள்ளுக.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
51	319	1	பத்து	புத்து
,,	,,	3	கொத்து	சுத்த
,,	322	2	கண்டறிங்	கண்டறிந்த
53	328	2	சேரு	சாரு
,,	,,	3	பொற்குணமமிழ்	பொற்குணம்புகழ்
,,	,,	4	ஊர்க்குணம்	நற்குணம்
54	337	4	பாழதாமே	நாசமாமே
57	350	1	எலியது	கார்எலி
,,	351	2	மாண்டவர்	பாண்டவர்
64	391	3	சக்கரவு	நக்கரவு
70	426	2	போட்டிட	போட்டிடு
71	429	1	துருவம்	துருவ
72	435	3	யொனபா	யொன்பா
80	478	4	சேர்ந்ததே	சார்ந்ததே
80	482	2	பின்புகர்	பொன்புகர்
82	493	2	பன்னிய	கன்னிய
92	546	3	யேது	எதுவு
95	570	2	யதிபனுமே	யதிபனும்
100	599	2	மாளியில்	மாணியில்
102	609	2	தனி	தனிய
103	616	3	ஏர்பெரும	ஏர்பெரும்
105	631	2	வதியம்	மதியம்
106	633	1	உற்ற	எற்றை
109	656	3	அடையுமே	இடையுமே
112	674	1	மிராசிக்யாளர்	மிராசியாளர்
113	679	3	பின்பு	முன்பு
127	761	3	ஏன்னது	மன்னது
130	780	2	பருவவாங்	பருவரவங்
131	789	2	பத்தி	பத்தி
132	792	3	மாகில்	மாறில்
135	812	3	தயழ்வுகள்	தாழ்வுகள்
142	855	2	மனையுமைந்தர்	மனைவிமைந்தர்

பிழையுந் திருத்தமும்

இப்பிழை திருத்தங்களை அவ்வப் பக்கங்களில் திருத்திக்கொள்ளுக.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
149	895	3	யாக்	யாக
160	961	3	வேளான்	வேளாண்
166	992	4	ஏற	ஏற்ற
167	997	1	ஒழிநதிடிங்	ஒழிந்திடிங்
171	1017	2	பெருத்	பெருத்த
172	1022	4	வீடென்னி	வீடெண்ணி
183	1069	3	யருமை	பருமை
184	1073	3	யுரமுயர்ந்	புரமுயர்ந்
185		15	காட்ட	கட்ட
205	1203	2	பலாவும	ப்லாவும்
206	1205	3	நொச்கி	நொச்சி
,,	1209	2	அவுரி	அவுரி—
208	1218	3	சிறபிபில்லே	சிறப்பில்லே
215	1253	3	மின்னுறு	மினனுறு
216	1260	3	தொழ்க்கூடும்	தொழுக்கூடும்
221	1288	2	பாமம்	பரமம்
226	1317	3	பொன்னேரி	பொன்ஞேரி
228	1327	4	மல்லலோங்யர்புகு	மல்லலோங்குயர்பு
232	1351	4	தன்மயம்	தன்னயம்

இந்நூல் 181 ஆவது செய்யுளின் 2 ஆம் அடிக்கு எய்துகின்ற கிணறிட்டு எடுத்து மண்தின்றழுவாள் எனப்பிரதி பேதமுமுண்டு.

112-ஆம் பக்கத்தில் கீழ்க்காணும் பெறும் 677 ஆம் செய்யுளொன்று விடுபட்டிருத்தலின் இதனையும் அறிந்துகொள்க.

மனையதுவெடுக்கும்போது மகிழ்வுடன்முன்றைந்தேபூ
கனிவுடன்கொண்டாயானுல்கடிந்தன்பம்வறுமையோடு
வினையினுன்மெலிந்துவாடி வீரியமிழப்பரென்று
நினைவுடன்முன்னோர்சொன்னநெறியினையுணர்வீனிரே.(677)

இந்நூலில்வரும் 1349-1350-1351 ஆம் பாக்கள் மூன்றனையும் ஆசிர்வாத பாக்களாகக் கொள்ளுக.

மேலே கண்டவைகளல்லாத பிழைகளுமிருப்பின் திருத்திக்கொள்க.

சுபம். சுபம். சுபம்.

உ

குகமயம்.

வேண்டுகோள்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எனத் தமிழ்மறை கூறலின் எம்சிற்றறிவிற் கெட்டியவரையில் இம்மைநூற் பெருஞ் சாகரம் புகுந்து திரைத் திவலைகளிலொரு சிறு பகுதியை அவாமிகுதியான் விழைந்து சிரமிசை கொடு வெளிவந்தேமாகலின் இப்பொருளெத்தன்மைத்தாயினும்,

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமைதரும்."

என்னும் அந்நூற் கூற்றினையே மீண்டுந்தழுவி

"எழுத்தறியார்க் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார் காணி னிலையாம்."

என்னுங் கூற்றிற் கிலக்கான எங்களையும் எங்களிந்நூலினையும் இவ்வுலகு,

"குணநாடி குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்."

எனு முத்திப்படி இனிதேற்று எங்கள் முயற்சியை நன் முயற்சியாக்குவிக்குமாக. எற்றுக்கெனின்,

"குடிசெய்வ லென்னு மொருவர்க்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்."

எனுமுதுரைப்படி நம்முற்பிதாக்கள் அபரிமிதச் சிறப்பினையடைந்தவாறே யாமுமடைய வேண்டியிருத்தலின், ஆகலே,

"இசையா தெனினு மியற்றி யோராற்று
லசையாது நிற்ப தாண்மை."

எனுமாறு பல்துறைகளுள்ளும் பயின்று எம் சிற்றறிவிற் கெட்டியவாறு சிறு வழியிற் சிலகாலம் முயன்றிதனை எங்கட்குக் கிடைத்துள பிரதிகளின் படி திரட்டியுள்ளே மாகலான் இதில் காணப்பெறும் இலக்கண வழுக்களைக் கருதாது எற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றனம். சுபம். சுபம். சுபம்.

இங்ஙனம்,

பிரபவஹு சிம்மரவி 12உ பறங்கிப் பேட்டை	சு. ப. குமாரஸ்வாமி ஆச்சாரி, ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை, பதிப்பாசிரியர்கள்.

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.

குருமயம்.

சிற்பரத்நாகரத்தின்

குறிப்பு:—இந்நூற்கண் யாப்பிலக்கண அமைதிக்கான செய்யுள்கள் குறைந்தும் அவ்வாறுகார் செய்யுள்கள் நிறைந்தும் இருக்குமேனினும் தமிழுலகம் பொறுத்து திருத்தியுபகரிக்குமென்று உள்ளதை உள்ளபடியே வெளியிட்டிருக்கின்றனம். அன்றியும் இடையிடையே காணப்பெறும் ஏனைய தவறுகளையுந் திருத்திக் கொள்ளுமாறும் பிரார்த்திக்கின்றனம்.

இங்ஙனம்,

பறக்கிப்பேட்டை } சு. வ. குமாரஸ்வாமி ஆச்சாரி,
பிரபலரு சிம்மரவ். } ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை.

பதிப்பாசிரியர்கள்.

உ

குருபாதம்.

சிற்ப ரத்நாகரம்.

"உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்".

வெண்மையாங்கொம்பனீசன்வெண்பொடிபூசுஞ்செவ்வேள்
வண்மையாயடியார்வாழ்த்தும்வாலைதம்பதங்கள்போற்றி
நன்மையாய்ப்பயனூர்நூலைநாதர்கள்முன்னர்க்கூற
வுண்மையாய்வாணியென்னாவுறுதியாயுரைசெய்வாளே.

நலந்தந்திலங்குமிந்நாட்டிலுள்ளோர்மெச்சநல்லநல்ல
பலந்தந்துசொல்லப்பயன்பத்திஞானமென்பாலளித்துத்
தலந்தந்துவாய்மொழிபேசிப்பிசகாத்தமிழருளி
வலந்தந்துவாழ்கவென்னுள்ளத்துவாணிமலர்க்கழலே.

விஷ்வ கர்மத்தியானம்.

திருவார்வதனமைந்துடனேதேசாக்கம்பநினைந்தும்
திகழுஞ்சடையாலியன்றமுடிதிக்குநான்கீசானத்து
மருவார்வெண்மைகார்சிவப்புமஞ்சள்பச்சைநிறத்தனவாற்
வதனஞ்சத்தியோஜாதம்வாமதேவமாதியவாய்
உருவார்மேனிபொன்னிறமாயுபருங்கரங்கள்பத்தடைவில்
யுயருமட்சமாலைமையுரசஞ்சூலம்வில்லுடுக்கை
தருவார்வீணையப்புசங்குசக்கரத்தையணிந்துசெவி
சர்ப்பத்தோட்டிலகவுடைசாம்பூநதமாஞ்சுவணமதே.

உலகஞ்சுமக்குபோரரவமுபவீதந்தானுவணிந்து
திலகவக்கமாலைதனைத்திகழ்ச்சாத்திப்புலியின்தோ
லிலகவசைத்துப்பலவிரவிவில்லிட்டொளிரத்தபாபரனும்
அலகில்தேவவிசுவகர்மவண்ணல்குருவைப்பழிக்கின்றேன்.

மாட்டுமயனுரைநூற்பதினாயிரமாதவர்க்கு
சூட்டுந்தமிழினடங்காதொகைவகைதொல்லுலகோர்
காட்டும்படிமனைநான்காகுஞ்சாதிநயமறிந்து
காட்டுங்கருணைமயநூலிதனைக்கலக்கமற்றே.

ஆக்கியோன்.

உற்றதோர்வள்ளிநாடனுயர்தருமாங்கைவேந்தன்
சொற்றதோர் நூலைக்கண்டுசுருதியும்பிறவுமாய்ந்து
பெற்றதோர்பெருமான்மைந்தன்பிக்கனுன்சொற்றவுரை
கற்றறிபெரியோராசகழறியேமகிழ்வர்மாதோ.

நூற்பாயிரம்.

நற்பிரமனருள்விசுவகர்மனுரைத்தபடி
நல்லிசையபிரமசாஸ்திரம்
நால்வேதஎண்ணெண்கலைக்கியானநிலையினால்
நாடுநகர்தேவநிலையும்
சிற்பிசாஸ்திரமெனுமனுவத்தியாயமும்
சீரசுவவத்தியாயமும்
திரமானயானையத்தியாயமும்மாளிபத்தங்களும்
தெய்வீகசாஸ்திரங்களும்
கற்பனைப்படியின்மயன்சாஸ்திரம்சூத்திரம்
கருதரிய அடிசாஸ்திரம்
கண்குறிப்பானநாற்சதுரமும்மாறலும்
கதிர்மதிகள்வருநேர்மையும்
விற்பனமதாகவேதெற்குடன்வடக்கறிந்து
உயர்துருவநிலையின்விதமும்
உயர்பூமிபாகாசவரைகண்டுகவிசகஸ்ர
மோதினன்வேதமகனே. (1)

இன்னநிலையின்னதிசையின்னவிடமென்றுமே
யின்பமுடன்நல்லநாள்கள்
எடுத்துஅகமேற்றமனைகோலவே
சிற்பியன்இனமறிந்துசெய்யவும்

சொன்னமுடனேபாக்குவெற்றிலைகள்தேங்காய்
சுயம்பாகமும்கதலிகள்தூப
தீபாராதனைகொடுத்துமேவிநாயகன்
தோத்திரம்செய்யும்விதமும்
கன்னியர்கள்வந்துமேஜலம்விட
கண்டகுறியைப்பார்க்கவும்
கற்பெனப்படிநன்மைதின்மைகள்பலாபலன்
கண்டகுறியைச்சொல்லவும்
மண்ணுலகிலேநாடூமூர்கோபுரம்வீதி
மதில்மண்டபச்சத்திரம்
மாடமாளிகைவீடுதன்னையுமேனும்
வகையுடன்சொல்லுவோமே. (2)

மனையெடுக்குநிதானமும்மத்தியிலிருந்து
வளாலகுசாத்துகள்வைப்பதும்
பார்த்தின்னமண்ணித்துகளெண்பதும்
மனைபிறந்திடும்வேளையில்
தனதுதிசைசக்காம்கோசாரபலனுடன்
சந்திரலக்கினமமிசையும்
தனதாக்ஷியுச்சம்பகைநீசபார்வை
தனைநனமவலுவுடன்நோக்குகள்
தினமதனில்வருமுளிகன்யந்திராயந்திரங்கள்
திதிவாரநட்சத்திரமுமிராசி
ஓரையும்ஏகாதிபத்தியம்திரிகோணசோதனையும்
இனமறிந்துசெய்யவும்
சர்வாஷ்டகவர்க்கபிந்துவியல்
நவக்கிரகநிலையால்
இன்னபடியென்றுமனைசாதக
குறிப்பியலுடன்சொல்லுவோமே. (3)

மனையோனிநிலையோனிநட்சத்திரயோனியும்
மனைக்குடையவன்யோனியும்
வாரம்திதிராசியங்கிஷம்சாதியும்
வயதுசெலவுஆதாயமும்

தனதானகருடனுடன்பூனையுஞ்சிங்கமும்
தகுநாய்கள்பாம்புஎலியும்
சத்தமதயானையும்முயலொடுஎண்யோனி
தானிருக்கின்றநிலையும்விதமும்
அனமாதுகணவனுக்கேசந்திரபலமும்
அருள்வளரும்ஜென்மபலனும்
அந்தந்தயாதமதில்வாஸ்துவின்பலனுமே
அதிகசென்மாதிபலனும்
இனமாகவேயின்னபடியென்றறிந்து
மனைசாஸ்திரக்கணக்கினால்
ஈசானஆக்ஞாஒட்டங்கள்பார்ப்பதும்
இயலுடன்சொல்லுவோமே. (4)
செஞ்சிதல்கள்பூச்சியொடுசுவர்பிளந்திடுமனையில்
திரமகறையான்புத்துகள்
சேயிழைகௌளிகள்அங்கிகளிருப்பிடம்தீர்க்காயிசு
வளருபநிலைமை
பொங்கனககூட்டுடன்சாலநீரோட்டமும்
பொருள்சேர்க்கைதேவநிலைமை
புதல்வரைப்பெறுதல்தாய்தந்தையர்
கிருப்பிடம்பூமிபயிர்விரைகட்டுதல்
மிஞ்சிவளர்பெருகுகன்றுகாலிதொழுவமும்
விருந்துவர்களுண்ணிடமும்
வீடுசுத்திகள்செய்துகுப்பைகள்கொட்டிடம்
விளங்குநீர்க்குடங்கள்வைப்பதும்
பஞ்சலட்சணப்புரவிமதகரியிருப்பிடம்
பார்த்தின்னபடியென்றுமே
பன்னிரண்டுராசியின்சாஸ்திரப்பிரமாணம்
பரிவுடன்சொல்லுவோமே. (5)
நிலத்தினில்பாதாளசாகரவரைக்குமே
நீரோடும்வழிகள்கோவில்
நின்றிடும்சிவாலயம்காளிகோட்டங்களும்
நீடியமயானம்ஓடை
பலத்திடும்முச்சந்திசூலக்கல்நாட்டிடம்
பொருள்புதையல்முதுமக்கள்சாடியும்

வளர்கிணறுசாலிசாம்பல்வருவிறகு
கரிகட்டைபஞ்சலோகங்களும்
வனஎலிகள் இடிவிழுதலும்தலத்தினில்
கிடக்கின்றபதினாறுவகையான
சல்லியம்பார்க்கும்வகையும் தனைக்கண்டு
நால்வகைச்சக்கரம்பிரமாணம்தன்னையும்
பலபலவிதத்திலும்பண்பாகநூன்முறைகள்
பாலித்தவகையையோர்ந்து
பாவலர்கள்மெச்சவேபார்மீதுசிற்பநூற்
பரிவினிற்சொல்லுவோமே. (6)

பிரமக்ஷத்திரியவைசியசூத்திராதிநால்வர்க்கும்
விளங்குகோல்பிரமாணமும்
மோரடிப்பிரமாணம்குழிகள்பிரமாணமும்
விளங்குகெஜப்பிரமாணமும்
தருமபரிபாலனம்செய்தவர்கள்வாழ்வதும்
தக்கசிற்பியன்வருவதும்
சாண்கோல்முழக்கோல்கெஜக்கோல் அடிக்கோல்
தகைமையின்பொருள்காண்பதும்
நிலைமையுளவடிவாலைபுவனை திரிபுரை
தன்னைநெஞ்சினில்வைத்து
நாளும்நிலைமைசகுனங்கள்பார்த்துமே
சொல்லவும்நிலைமைதனை நெஞ்சிலுன்னி
வருமமதைநினையாமல்ஒருமனதுடன்
சாஸ்திரவகைதனைக்கண்டுசொல்ல
மண்ணுலகில்வாழ்மனிதர் எந்நாளும்
இப்படிவளர்ந்திடமயன்சொன்னதே. (7)

குடியிருக்கை அவசியமெனல்.

வீடேபிரதானம்வேண்டுஞ்சுகபோகம்
வீடேதருமாதிமேலளிக்கும்— வீடே
வளியாதிதோடமறவாழ்விக்கும்வீடே
களியாதியைத்தருமேகாண். (8)

சிற்பி இலட்சணம்.

பொன்னொடுபூணூலும்பவித்திரப்பாணியுண்டு
சென்னியிற்சிகையுந்தேவபூசனைசெனித்தவன்பு
மன்னியகுலமுமிக்கமனச்சுத்தந்தானுமுள்ளான்
அன்னியசாதிகூடாதறிந்தவன்சிற்பனாமே. (9)

சுத்தமாமறைகளோதித்தூயநல்லாடைசாத்திச்
சித்தமேதெளியும்வண்ணஞ்சிறப்புடையானாகி
நித்தியகர்மமெல்லாம்நெறிதவறுமற்றெய்வ
பத்தியாய்நூல்களாய்ந்தபண்பினன்சிற்பனாமே (10)

முழக்கோல் இலக்கணம்.

தந்தியின்மருப்புவேணுத்தருகருங்காலிதேக்குச்
சந்தனத்தாலந்தென்னைதாமரையாதிதம்மால்
விந்தைசேர்முழக்கோல்செய்வர்மேவியசிரசில்விஸ்வன்
அந்தமத்தியிலேராஜலட்சுமியுயிற்கூவே (கூடப்பிராட்டி) (11)

பொருந்தியமட்டக்கோல்தான்புளிவேங்கைதேக்கோடாச்சா
வருந்தியபுளியேபார்ப்பான்மன்னவனுச்சாவாகும்
விரும்பியவணிகன்றேக்குவேளாளன்வேங்கையாகும்
இரும்புதான்றேவர்மிக்கவர்க்குமேயாகுமன்றே. (12)

வேறு.

சந்தனமரத்தினொடுதக்ககருங்காலி
சிந்துசிறுசெண்பகம்பிலாத்திமிசைச்சீர்கொள்
ஐந்துவிரல்கணந்தெய்வத்தலமானால்
முந்தியவைரவிரல்கணம்மூங்கிலதுகோலே. (13)

தாக்குடைமூங்கிலோடுதக்கதேராச்சாவாகும்
தேக்குடைவேங்கையானுஞ்செய்வர்முழக்கோல்தன்னை
ஆக்கமுள்மறையோன்மூங்கிலரசனுக்காச்சாவாகும்
தேக்குடன்வணிகனுக்குச்செய்யமற்றோர்க்கும்வேங்கை. (14)

வேறு.

மறையினில்மறையோனுச்சாமன்னர்க்குவணிகன்றேக்குப்
பொறையுடைச்சூத்திரர்க்குப்புகல்கருங்காலிவேங்கை
குறியிடையிரும்புதானும்கொள்வதிங்கெவர்க்குமாகும்
நெறியுடன்மட்டக்கோல்தான்நிகழ்த்தியவாறிதாமே. (15)

இப்படிமுனிவர்சொன்னாரின்னமோர்நடத்தைகேளாய்
செப்பியகுருவச்சாதிசேருநான்மூன்றதாகில்
தப்பிலாவிரலேவெட்டுச்சாதியினடியென்பார்கள்
இப்படியிதுபத்தாகிலிதுவொருகஜமென்பாரே. (16)

முழக்கோற் பெருமை.

மூன்றடியொருகோலென்பர்முறைபலவுலகமெல்லாம்
சான்றநீதகணமதாகுஞ்சாரங்கபாணிமுன்னாள்
மூன்றடிபுவியைக்கேட்டுமூவுலகளந்தானென்றால்
ஊன்றுகோலளவைச்சொல்லவொருவர்க்குமுடியாதென்க. (17)

வேறு.

பரமவணுவிதுநான்கிரதரேணுவிதுவெட்டேபஞ்சின்றூளாம
இரியிதுவெட்டுறிற்பாலன்கேசநுனியாமிதுவோரெட்டிலீகை
யரிதருமீதிநநான்குபேனிதுவெட்டியவையென்பவதுவெட்டெய்
திற்,றரிசொன்மானுங்குலமாமிதுவாறுகொண்டதுவேதாலமா
தோ. (18)

தாலமிரண்டுறில்விதஸ்தியிதுவெட்டேயஸ்தமிதுநான்குதண்டம்
எழுமிதுவீரிரண்டுபாகுவாமிதுநான்கேயெழிற்குரோசஞ்
சாலவிதுநான்குசத்துவாரியிவைநிற்கமுனஞ்சாற்றுமஸ்தஞ்
சீலமிகுமெண்வகையாமிவைமானங்குலத்தளவாற்செப்புவாமே. (19)

செப்பறுநான்குறிற்கிஷ்குவையைந்துசேர்பிரஜாபத்யமாகுந்
தப்பிலிருபத்தாறுதநுர்முஷ்டியிருபத்தேழ்தநுக்ரகந்தான்
வைப்புறுநாலேழுபிராப்யமிருபத்தொன்பான்வைதேகமாகில்
முப்பதுவைப்புல்யமுப்பத்தொன்றுபிரகீர்ணமெனமொழிவர்மன்
னே. (20)

மன்னுயிரனையுடன்றனக்கிரகந்தேவகுடிமறையவர்க்காந்
தன்னுவைப்புல்லியமுடனேதநூர்முஷ்டிவேந்தருக்காஞ்சொலூர்
வைதேகம், பின்னவில்பிரஜாபத்தியமும்வணிகருக்காகும்பிராப்பங்
கிஷ்கு, வென்னுமிவைபின்னவர்க்காமியாவருக்குங்கிஷ்குவைஸ்ரமிய
லுந்தானே. (21)

இயல்கமுகுபனைவேக்கைமூங்கில்புளிகருங்காலியிருப்புதென்னை
பயிலுமதகரிமருப்புச்சந்தனம்தேக்காச்சாசண்பகம்பலாசு
நயமிகுதாமரைக்கொடிமற்றிவைகண்முழக்கோலுக்காநவிலிரும்பு
வயமுறுதெய்வங்கண்முதலியபலர்க்குமூங்கில்புளிமறையோருக்
கும். (22)

ஒருநனிவலியாச்சாவரசருக்குப்வானளவுமோங்குதேக்குச்
சீரியநல்வணிகருக்கும்புகழ்வேங்கைசூத்திரர்க்குஞ்சிறந்ததாகும்
பாரினிடையிவைகளுமேற்கூறியவும்பொதுவாகப்பலர்க்குமாகுஞ்
சாரிவைகளலதுபிரிதாமுழக்கோலாகவாந்தரணிமீதே. (23)

தருமியவைமுதலாவங்குலந்தாலம்விதஸ்தியஸ்தம்தண்டம்பாகு
ஒருவருகுரோசமுடன்பொலிசத்துவாரிவரைபொன்பதாக
வருமளவைத்தக்கபடிதனித்தனியேயளவுகொளும்வகையுரைப்பாம்
பொருவருதேயங்கள்சத்துவாரியினலாங்குநனிபொருந்தக்கொள்
ளே. (24)

பொருந்துமுயர்சம்வாகங்கர்வடங்கேடசமடப்பம்பொலிகிராமம்
பெருந்திருவாழ்நகரமொடுசிற்றூராதியவெல்லாம்பிறங்குதண்டால்
வருந்தலிலாச்சுவருள்வாயாதியகலத்தானும்வளர்சுற்றாலும்
திருந்தவளந்திசைந்தபடிகுழிபெருக்கியாயாதிதேர்ந்திடாயே. (25)

ஆயதேவாலயங்கெர்ப்பக்கிரகமண்டபங்களவைகளோடும்
ஏயபரிவாரதலஞ்சாலைபிரகாரங்கோபுரமிவற்றைத்
தூயகாற்புறநடுவுள்வாய்ப்பித்தியகலமையஞ்சொலுமிவற்றின்
மேயகநீளமொடுசுற்றுமுழுத்தார்கொள்ளல்விதியாமென்றே. (26)

விதித்திடுநாற்குலத்தோர்க்குமுறைத்தபுறத்தான்மறையோர்வீட்டு
னுக்குக், கதித்தசுவர்ப்புறமையமுள்வாயுந்திகழரசர்மனைக்கு
மதித்தசுவர்நடுவகவாயுட்காலுள்வாய்ப்புறமும்வைசியர்க்குத்
துதித்திடுகாணடுப்பித்திநடுவுமாமிவ்வகைசூத்திரர்க்காமாமே. (27)

ஆகுமறையவராதியாவருக்குஞ்சுவர்ப்புறவாயாதியாகப்
பாகமுடனேயளந்தாயாதிகொளலாமெனவும்பகருமுன்னூல்
யோகமடஞ்சத்திரமாத்தொழுவநிப்படித்துறையோடுயர்நீர்ப்
பந்தல்,கோகனகதடந்தாவுமிணறுமுனமுரைத்தவணங்கொள்ள
லாமே. (28)

கொள்ளுமுயர்தண்டிகைசிம்மாசனம்பீடஞ்சகடுகுலவுமஞ்சம்
உள்ளிவையாதியைமானுங்குலத்தளவாற்காற்புறவாயுள்வாமையந்
தெள்ளுயாஞ்சுத்தாதிகொள்கபற்பலாயுதமுஞ்செயமுண்டாக
விள்ளருஞ்சீர்த்தேகலப்தாங்குலத்தளவானணிபொருந்தும்விதங்
கொள்வாயே. (29)

விதாணஞ்சேர்தேகலப்தாங்குலமாத்திராங்குலமேல்விளங்குசீர்த்தி
யிதமுறுமானுங்குலமற்றிவைகளாற்சிவலிங்கமெழுவாயாக
வதிபுகழ்விக்கிரகமெலாம்பாதாதிகேசவுயரத்தாற்கொள்க
துதிபலிபீடத்தைத்தாங்குலத்தளவாற்கொள்கமுன்னூல்சொற்ற
வாறே. (30)

சொற்றிடுமாத்யார்த்தகிரகார்ச்சனைவிம்பங்களமைத்துகளுறுமற்
கற்றவர்சொல்மாத்திராங்குலத்தளவாற்நானுகவாகனங்கடம்மை
யுற்றபின்சாலடியாதிதலைமட்டம்வரையிலுமேலுரைசர்ப்பத்தை
யெற்றுறுவானுணியாதிதலைவரையுமளந்துநலமிணைசயக்கொள்க. (31)

இசைவுறுபல்பலகைகளைக்காலாதிதலைவரையுமினிதுகொள்க
பசைமிகுகற்பகவிருக்ஷந்தோரணநற்கதலிகெர்ப்பபாதத்தோடு
வசையில்மனுவாரபாதங்கிரகபாதமுடன்வயங்கிதெல்லாந்
திசைகொளுயரத்தின்மானுங்குலத்தாலளந்துகொளச்சிறக்குமாதோ

சிறந்தகர்த்தாநடுவிரலின்சுற்றளவேமாத்திராங்குலமாஞ்சீர்சால்
அறந்தருவிக்கிரகமுதலியவுயரந்தேகலப்தாங்குலமதாகு
மறந்தவிரியவையாதிபாதஞ்செய்தியைந்துகொளவருமிவற்றுட்
குறைந்திலகுமளவைத்தாங்குலமாகும்பரவுநலங்குலவுமாதோ. (33)

ஆலயங்கிரகமாங்கமாண்மனையலங்கமாலில்
சாலையுமன்னசத்ரம்சாவடிசமர்க்களங்கள்
சோலைசூழ்தடாகம்வாவிதுஜமரம்யாகசாலை
வேலைசெய்வித்யாசாலைவிளங்கவேபொருத்தஞ்செய்வர். (34)

கைத்தடிவில்லும்வாளிகருதிபலகையம்வாளும்
கத்திகட்டாரியீட்டிகன்னக்கோல்செங்கோலாணி
சத்தியாம்சூலம்வேலுஞ்சதுர்முகனாசங்கள்
பத்தியாய்ப்பொருத்தஞ்செய்வாய்பகைவரைவெல்வதற்கே. (35)

சிந்திக்குமிரதவிதிசிற்பத்திலாகுநெடுஞ்சிலைக்குநீளம்
வந்தித்தநான்குதலைதொண்ணூறென்றறைவர்வடிவாளின்நீளம்
பந்தித்தவிரலைம்பானகுமெனப்பகர்வரிவ்வாள்பற்றுவோர்க்கு
முந்துற்றபொருத்தவகையுணிவோர்களுரைத்தபடிமொழிவாய்
மின்னே. (36)

அடுசுடர்வாளிநீளமளந்திறைவலதுசெங்கை
நடுவிரலிறையதாக்கிநற்றியகுணத்தாற்றூக்கிக்
கொடைநிதியுடனேகூட்டிகோவிஞலீந்தசேடங்
தொடிபடுமங்கைநல்லாய்துவசமேமுதலாய்ச்சொல்லே. (37)

கேதனம்பொருளாந்தூமங்கேடதாம்சீயம்வென்றி
போதுநாய்பீடையாமேவுறுபுவிபுரக்குங்கோகு
தீதுறுவிதனந்தந்திசெல்வங்கார்மகளேயாகிற்
போதணிகுழலாய்நன்மைபொருந்திடாதென்றுபோற்றே. (38)

சுற்றெயில்கோபுரமிரதந்துவசதண்டம்தெண்டாகுந்தூலங்குவிம்பம்
பற்றியவாசனஞ்சுடர்வாள்பயில்காளங்கலம்விளக்குபரிசைசாபந்
தொற்றியந்தர்ப்பணம்வாசல்காலிவைகள்விரலாகுஞ்சொன்னங்காசு
நற்றுகொழுவாபரணமிவையவையாமளவுநாட்டுங்காலே. (39)

வேறு.

அளக்கநாற்சாணுமாகிஅங்குலம்நாற்பத்தெட்டு
துளக்கறப்பிடித்துவெண்ணிநண்டிதமரைக்காலாக்கி
குளக்கரையரைக்கால்வீசங்குறிப்புடன்முக்கால்பூட்டி
பளக்காமலளந்துபார்த்துநன்மனையெடுக்கநன்று. (40)

ஆதியாம்பிரமாவுக்குஅன்பாணவேம்பின்கோலே
நீதியாம்மன்னவர்க்குநேர்மையாமிலுப்பைக்கோலே
சோதியாம்வைசியர்க்குத்தோடகங்காலியாகும்
பேதியாம்சூத்திரர்க்குபிரபலமிந்நான்காமே. (41)

ஆமெனகோல்கள்தன்னிலலங்காரமின்னங்கேளு
வேயெனபூவரசுதெங்குவேழமுமாகுமென்று
தாமெனமயனார்சொன்னகோல்தனையிருந்தெடுத்து
ஆமெனக்கண்டித்துக்கோலையளக்கவுஞ்சொல்கேள்மாதே. (42)

இசைந்தமூங்கில்தேக்குமரமினியவாச்சாவேங்கைமரம்
உசத்திமருதாருளவாக்கஉன்னபன்னிரண்டங்குலந்தான்
கிசத்திலெட்டுபாகமதைகிரகித்தெடுக்கமுழக்கோலாம்
நிசத்திலிதனையெடுத்தாள்வாய்நிமலனாணைபொய்யாதே. (43)

வாஸ்துதியானம்.

ஒருமுகமிரண்டுகைகள்உயர்சடைமகுடங்கொண்டோர்
உயர்செவிரத்னத்தோடோடுயர்களங்கலன்கள்மின்னத்
திருமுகஞ்சயனங்கொண்டோர்திகழ்பதமூன்றுகொண்டோர்
திவாகரற்கியைந்தபந்துதுவாதசாசிபீடத்
தொருமுகமாகவெவ்வோற்கேழாகுமிடத்துவைகி
உயர்வலம்வாளிடத்தேயோங்கியபரிசுதாங்கித்
திரிதருங்கரத்தராகித்தேவாய்ப்புவிக்குமேனி
சிவந்தவர்வாஸ்துநாமச்சீலியர்சுபத்தைச்செய்க. (44)

வாஸ்து சயன இலட்சணம்.

உக்கிரமுகமுங்கண்ணுமொருகையிற்சொர்க்கமாறும்
திக்கிரவிண்ணோர்கூட்டம்நீடவேசாடுதாளும்
மிக்கதோர்முதுகிற்கூனும்விரிசடையொப்பினோடு
வக்கிரமேனியோடுவாஸ்துதான்கிடக்குமாறே. (45)

மீனமுமாடுமேறுமேற்றிசைந்தலையதாகி
ஊனமற்றிடக்கைக்கீழாயுத்தரதிசையைநோக்கி
சேனைவாசவன்றன்மேலேதிசைபெறக்காலைநீட்டி
மானெனும்விழியாய்கேண்மோவாஸ்துதான்கிடக்குமாறே. (46)

தண்டொடுநண்டுசிங்கந்தலையதுவடக்கேவைத்து
வண்டிசையிடக்கைக்கீழாய்வலக்கைதான்மேலதாகி
திண்டிறலியமன்மேலேதிசைபெறக்காலைநீட்டி
வண்டணிகுழலினாளேவாஸ்துவுங்கிடக்கும்பாரே. (47)

கன்னியுந்துலாமுந்தேளுங்கதிர்முடிதிசையிற்சேர்த்து
மன்னியவருணன்மேலேமகிழ்பெறக்காலைநீட்டி
இன்னிசையிடக்கைகீழாய்யமன்றன்றிசையைநோக்கி
வன்னமாமாதேகேளாய்வாஸ்துதான்கிடக்குமென்றும். (48)

தனுவொடுமகரகும்பந்தலையதுதெற்கேவைத்து
மனுவொடுவிடக்கைக்கீழாய்வலக்கைதான்மேலதாகி
மனமொடுமுகமுமேற்குவடக்கினிற்காலைநீட்டி
வணமுலைமாதேகேளாய்வாஸ்துவுங்கிடக்குமாறே. (49)

திங்களோராசிதன்னிற்சிறப்புடன்சிரசைவைத்துப்
பொங்கியராசிக்கேழாம்புகழுயர்ராசிதன்னில்
றங்கியகாலைநீட்டிசகப்பிரதிட்டையாக
மங்கையேசொல்லக்கேளாய்வாஸ்துதான்கிடக்குமாறே. (50)

எங்கேமாதந்தானென்றேயிராசிநிலைகள்தானெண்ணி
அங்கேபாதந்தனைநீட்டியதனுக்கெதிரேதலைசாய்த்துப்
பங்கேயிடக்கைகீழாகப்பகரும்வலக்கைமேலாக
மங்காப்பூவாம்மாநிலத்தேவாஸ்துபதிதான்கிடப்பதுவே. (51)

கிடப்பதுமிடக்கைகீழாய்க்கிடந்தவனெழுந்திருந்து
நடப்பதுவலமேயாகில்நல்லதோரிராசிதோறும்
படுக்கையில்வயிற்றைப்பார்த்துப்பரிவுடன்வாசறன்னை
மேழைக்குஞ்சுணங்கனுரகமெலிவழுவைமுயலோடிவையுளது
செழிக்குமுயலின்ஞாளிபகைசிறந்தகரிக்குச்சிங்கமதாந்
தழைக்குமெலிக்குப்பூனையணிதனக்குப்பருந்துதான்பகையே. (345)

கருடயோனி பலன்.

சயமுள்ளகருடயோனிசரியுள்ளமனையில்சேர்ந்தால்
நயமுள்ளதிருவேசேர்வாள்நலமுள்ளமக்கட்பேறு
மியலுள்ளவிந்திரன்போலவிரவியுள்ளளவும்வாழ்வார்
குயமுள்ளமடநன்மாதேகூறினர்வேதத்தோரே. (346)

தாமயோனி பலன்.

துலங்கியமனைகள்தம்மில்தாமமேசனிக்குமாகில்
கலங்கியபிள்ளைபெண்டீர்காதலர்நாசமாகும்
இலங்கியதேசந்தன்னிலிரக்கவேபோடப்பண்ணு
மலங்கியகொங்கைமாதேமையமுற்றிக்கம்பாரே. (347)

சிம்ம யோனிபலன்.

சிங்கமேமனையில்வந்துசிறப்பொடுதோன்றுமாகில்
தங்கமேபொலியுமிக்குசந்திரன்மக்கட்பேறும்
பொங்கமாங்குழலினாளேபுவியில்வெகுநாள்வாழ்வர்
மங்கையேமயனார்சொன்னவண்மையைவிளம்பலுற்றேன் (348)

சர்ப்ப யோனிபலன்.

நன்றிசைமனைகள்தம்மில்நாகமேஜனிக்குமாகி
லென்றிசைமனையோருக்குமிந்திரபதமேயாகு
மென்றிசைபுனைமெல்லாமியல்பெறும்புகழாமென்றே
மன்றிசைமயனார்தாமும்வண்மையாயுரைத்திட்டாரே. (349)

எலி யோனிபலன்.

கருதியமனைகள்தம்மில்எலியதுஜனிக்குமாகில்
உறுதியாய்ப்பிள்ளைபெண்டீர்உடம்பினில்பிணியுண்டாகும்
அறுதியாய்த்தானதர்மம்அகமது அழிந்துபோகும்
தருவியநூலின்வல்லோர்சாற்றியவண்மைபாரே. (350)

சுவான யோனிபலன்.

ஈன்றமேதாரமனைகள்தம்மிலிசைந்திந்துசுவானம்வந்தால்
மாண்டவர்தம்மைப்போலபதியைவிட்டேகப்பண்ணும்
காண்டமாமிடியும்நோயும்கண்ணீரும்மிகவும்வீழும்
தாண்டவப்பெருமானார்சாற்றியவண்மைபாரே. (351)

கஜ யோனிபலன்.

நேயமாயானையோனிநிலையுள்ளமனையிற்சேர்ந்தால்
மாயவன்மாதுசேர்வள்வறுமைகளணுகிடாது
தூயவேபிள்ளைபெண்டீர்சுகமுடனினிதாய்வாழ்வர்
ஆயமாமயனார்சொன்னநன்மையைவிளம்பலுற்றேன். (352)

மூசல் யோனிபலன்.

வாயசயோனிதானுமனைதனில்சனிக்குமாகில்
தீயதாய்வியாதிசேரும்செல்வமும்பெருமைபோகும்
நேயமாய்ப்பிள்ளைபெண்டீர்நிச்சயமரணமாகும்
மாயபாய்மயனார்சொன்னவண்மைநூல்விளம்பலுற்றேன். (353)

யோனிபலம் வேறு.

கருடனுனதுவயோனிமுதலாக்கதிக்குமெட்டைவற்றால்
கருதும்செல்வங்கலகுரூபம்கன்மயோகம்தனங்கேடு
சருதுஞ்சுகம்விஷபலந்தருமேகருடன்ஏகம்கஜமேமூ
கருதுஞ்சிங்கம்திரியோனிகரியபாம்பிங்கையோனி. (354)

யோனி பரிவர்த்தனை.

கீழைத்திசையிற்றுவசமெனக்கிளர்புள்தானமரியானை
வாழப்பந்துமாண்பளிக்கும்வளருமங்கிதான்சத்துருவாம்
சாலத்தெற்கேசிம்மத்துஞ்சாரும்வடக்கண்யானையினும்
மேலைக்கருடன்பந்துவாம்மெல்லியறிந்துகொள்வாயே. (355)

சிம்மத்தானத்தகிபகையாம்தேசார்சஜத்தும்அரிபகையாம்
சிம்மத்தானக்சஜம்பகையாந்திசமூங்கஜத்தேயரிபகையாம்
சிம்மங்கஜம்புள்மேலகியிற்சேரப்பகையாம்வடகஜத்துச்
சிம்மச்சர்ப்பஞ்சத்துருவாந்திகழ்புள்நட்பாச்செப்புவரே. (356)

அவ்வவ்விடத்தேயவ்வத்பர்ஆகலமேயடைந்திடுவர்
எவ்வமில்லாக்கீழ்த்திசைப்புள்ளியையச்சிங்கங்கஜந்தாமும்
செல்விச்சுகமேமருவியிடுந்தெற்கேசிம்மந்துவஜமுமின்
நல்விழியாய்தனமாயுள்நற்றுனியங்கள்பல்கிடுமே. (357)

மேலைத்திசையாஞ்சர்ப்பத்திலெளிபயாம்புவரினன்மை
சாலும்வடக்குக்கஜந்துவஜஞ்சாரும்சித்திபமங்களங்கள்
பாலர்பயக்கும்பயன்பலவாம்பண்புநலமுந்திகழ்ந்திடுமால்
ஞாலத்தவர்க்குநான்மறைதேர்நர்பன்மயனன்றுரைத்தனவே. (358)

கிழக்கேத்துவஜம்சர்ப்பமுறின்கேடாமரணந்துன்பமுமாம்
வழக்காந்தெற்கேசிம்மத்தில்மரணபயம்புநிருநீங்கும்
முழக்குபாத்தோல்தனாசமுன்னுமேலைச்சர்ப்பத்தில்
இழக்குஞ்சிங்கம்அகிவரினேஇனித்தோல்வடக்குதயானமுமாம். (359)

யோனி பரிவர்த்தனையின் பலன்.

கருடனில்சிங்கம்யானை சுனைமுறும்நன்மையாகும்
பருகியசிங்கவீட்டில்பருந்ததேலாயுள்நீடும்
திருகிலாச்சர்ப்பவீட்டில்கிடகஜம்அரிபுள்ளாகா
மருவியபருந்துவீட்டில்மன்னதேமயனின்மாற்றம். (360)

நின்றுறுமானைவீட்டில்பணியரிநிற்கத்தீது
மன்னியசர்ப்பத்தானமரிவரமாணமுண்டாம்
கன்னியசிங்கவீட்டிற்கரியுடன்சர்ப்பந்தீது
நின்றிடுஞ்சொந்தவீடுநிறைசெல்வமயனார்சொல்லே. (361)

வேறு.

மேற்கதுவாசல்சர்ப்பம்மேவினும்வடக்குயானை
தீர்க்கமாங்கிழக்குவாசல்செங்கருடனுமேயாகில்
மூர்க்கமாந்தெற்குவாசல்முயன்றநுஞ்சிங்கம்வந்தால்
தார்க்கவேமனைக்குயோனிதான்வரில்கேடுண்டாமே. (362)

ஆதியாம்மேற்குவாசல்*அரியுமேசுகமதாகும்
நீதியாம்வடக்குவாசல்நிகழும்புள்சிங்கம்வெற்றி
ஓதியகிழக்குசிங்கம்உயர்கரிபருந்துமென்மேல்
வீதியில்தெற்குப்பாகம்விதிமுறைகருடயோனி. (365)

பரிவர்த்தனை யோனிகளின் பலன்.

கருடன்கீழ்சாரியாகி†காளிதென்சாரியானல்
அரவம்மேல்சாரியாகி‡அத்தியுத்தரபாலானல்
மருவறுசெல்வம்பெற்றுமக்களும்மனைவியோடு
பெருகியேவாழ்வரென்றுபேசினார்மயனார்தாமே. (364)

திசையோனிதேர்ச்சிமனையோனியிரும்
நிசமர்கவொன்றல்நியாயம்—வசைபடுமேல்
வீட்டெஜமான்துஞ்சிவிரோதம்பலதுன்பம்
ஈட்டுமெனநெஞ்சேயிசை. (365)

---

* பாம்பு. † சிங்கம். ‡ யானை.

கருடயோனிமிழ்புரத்தில் ஜம்புப் சிங்கம்வருயானால்
வருமேசுபங்கள்கலைவுண்டு* மாரளம்வருமேல்மனையெஜமான்
அருகுவானேதென்புறத்தில்† ஆனியோனிகலுழன்வருமேல்
பெருகும்வயதுதனம்தானியம்பிணக்கேயானையங்கதமே. (366)

பிணக்கமாகில்சுதன்பேரன்பிணமாயெஜமான்மரிப்பானே
பணமுங்குறைந்துபோய்விடுமேற்கே*பாந்தள்யோனியிலே
*பணமேவலாம்பொருத்தங்காண்†பாம்பு‡ஓங்கல்§புள்ளரசு
பிணக்கம்அதனால்சுதன்பேரன்பிணமாயெஜமான்மரிப்பானே. (367)

வடக்கேயானையோனியிலேவரலாம்கருடன்மங்களமே
இடமாம்சிங்கம்சர்ப்பமிவையிறப்பர்புத்திரபௌத்திரரே
தடமேபொருவுமிளமுலையாய்சான்றோர்புகழும்மயன்சொல்போல்
திடமாய்மனதில்உறுதியுடன்செய்கக்ஷேமம்அடைவாயே. (368)

குத்தல்.

மனந்திசழ்மானேகேளாய்பனிதர்தாம்பனையைக்கட்ட
பனைதனைமனைகள்குத்தல்மாண்டிடும்மனையின்மக்கள்
மனைதனைத்தேவர்குத்தல்வாழ்வற்றுமனையும்பாழா
மினமுடனுவலவேண்டிவிவற்றைநீயுற்றுப்பாரே. (369)

கன்னிநீர்மனைமேடுகளாலயம்
உன்னிலீசன்மனைதூங்கும்நாளிலே
முன்னிலங்கியிவ்வகையேறிடக்
குன்றும்வாயுதன்னீருங்குடிகளே. (370)

மேனிவீடுவிளங்காதெங்நாளுமே
காளிகூலமவ்வீதிகலங்கிடும்
சாலிபொன்னுஞ்செலவுகளாகியே
சேளிகுன்னிசெடியிலுள்ளாவயே. (371)

---

* பாம்பு. † சிங்கம். ‡ யானை. § கருடன்.

மூலையில்மூலைக்குத்தல்முழுமையும்பழுதேயாகும்
ஆலயம்மூலைக்குத்தல் அன்பில்லாமனைபாழாகும்
சோலையினடுவேநிற்கிற்சோமனுள்ளளவும்வாழ்வர்
ஆலயங்குத்தலாகிலம்மனைவாழாதென்னே. (372)

அந்தணர்வீட்டுக்குத்தல்ஆவுகள்வரவுங்குத்தல்
பந்தமாஞ்சோமன்குத்தல்பாங்குடனிரவிக்குத்தல்
நந்தவனங்கள்குத்தல்சலமானநதிகள்குத்தல்
பந்தமாமிந்தக்குத்தல்பாங்குடனிதாமென்னே. (373)

ஆலயம்வலதுதோள் அகமுங்குன்றிடும்
ஆலயம்இடதுதோள் அகமுமெய்திடும்
ஆலயம்எதிரிடில் அசைந்துதூங்கிடும்
ஆலயம்பின்மனையகலுஞ்செல்வமே. (374)

கரிபரிகுத்தல்நேர்ந்தால்கர்மந்தான்வாழ்வுகுன்றம்
நரியொடுநாய்கள்பூனைநலமில்லாக்குரங்குக்குத்தல்
தடியொடுவரும்பைராகிசன்னியாசிவீதிக்குத்தல்
கொடியதாம்ருத்திரதேவர்கோவில்கள்குத்தலாகா (375)

ஆலயம்விளக்குப்பார்வைஅணிமதில்கோவில்குத்தல்
சாலவும்எதிராம்பார்வைசந்நிதிவீதிகுத்தல்
கோலமாய்மனைக்குப்பட்டால்குறைந்திடும்செல்வமெல்லாம்
வாலயமிறந்துபோவான்மயனுரைதப்பாதன்றே. (376)

முடுக்குவீதிமுகடுகள்மண்டபம்
தொடுக்குநந்தவனந்தொடுகோவில்கள்
விடுக்குவேதமொழியுமடங்களும்
யிடுக்கமாகுமனைதனைநோக்கினால்
நடுக்கமுன்றுயர்தான்மறையாய்ந்ததே. (377)

கோவிலின்வீதிகோடிகுத்தலாமெதிர்த்தவாசல்
சாவடிக்கடுத்தவாள்தூரத்திரத்தெதிர்த்தவீடு
காவிடுங்குலம்நசிக்குங்கழுத்திடுகாராசத்திற்
பூமகள்விடாளுலும்பூதங்களடையுந்தானே. (378)

வாசற்படிக்கெதிரேவாழ்மரங்கள்கம்பங்கள்
நேசவிமானங்கள்நீறுமே— பாசமுடன்
சந்நிதியிமோடைதான்தாக்குறுமேற்கேடாகும்
மன்னனுடன்பெண்டீர்மடிந்து. (379)

மடிந்திடுவர்மக்கள்மாடுகன்றுகேடாம்
மிடமனையில்செல்வம்இகலும்— திடங்கொள்
தமிழ்வல்லோர்சாற்றியவாறிதுவென்றார்
அமிழ்தன்னநன்மயனாராய்ந்து. (380)

ஆலயஞ்சன்னமையமண்டிடும்பசாசுகோவில்
நீலியாந்துர்க்கைதேவிநெறியபல்வலக்கண்ணோட்டம்
சாலையிலிவர்கள்வன்மையமர்த்தனைத்தவிர்த்துக்கொள்ள
வாலையம்பதிவருக்கவல்லவன்மயனுஞ்சொன்னார். (381)

ஆலயந்தம்பமையமடுத்ததோர்தலங்கள்சாலை
மேலவேதட்டுமாகில்சாவதுதிண்ணமென்ன
நீலவேல்விழியினாளேநேரிடும்பசாசுகோவில்
மேலவேதட்டுமாகில்வீட்டிறைசாவுமாமே. (382)

தண்ணீர்த்துறைமுன்னரண்மனைமுன்தாழ்ந்ததெருமுச்சந்தியின்
முன்உன்னீர்அரசர்கோட்டைகள்முன்ஊரின்நடுவேசுடலைமுன்னர்
மனைமுடித்துவாழ்ந்துகொண்டிருக்கவேறுமென்றுசென்று
யின்னிலங்கள்மனையெடுக்கவெடுத்தமனையும்பாழாமே. (383)

வாழலாமனையில்பூமிவழிக்குளநின்றயேரி
தாழலாமாலம்வாய்க்கால்தாழ்ந்ததற்றலங்களோடு
நீளமாந்தெருக்கள்கோவில்நிலைமரந்தூரவுகேணி
பாழுதாமனையிற்பட்டால்பாலகன்மடியுந்தானே. (384)

கன்றுமேதட்டுமாகில்கணவனேகேடதாகு
மென்றுமேமையமாகில்எழில்பெறுமக்கள்தாழ்வர்
நூன்றுமேசட்டமாகில்குறைவிலாச்செல்வங்குன்றும்
ஊன்றுமேசதுக்கமாகில்பிக்கவேமக்கள்சாவே. (385)

சங்கொடுமுகடுகோடிசதுர்மறையகரங்கோவில்
வக்கிடுங்கிணறுகேணிமடங்களாலரசுதோட்டம்
முந்தியயாகம்தெய்வமுழுமசானங்கள்சேரி
யிந்திடமனையேசெய்தாவிடுக்கமாய்நசிக்கும்வாறே. (386)

சந்நிதிவிளக்குக்குத்தல்சார்ந்தகோபுரத்தின்குத்தல்
உன்னியமதிலின்குத்தல்ஒருபுறம்சந்துகுத்தல்
மன்னியபிடாரியையன்விநாயகர்துர்த்தெய்வங்கள்
நன்னியமனைகளெல்லாம்நயமில்லையழிந்துபோகும். (387)

நலந்தருங்கோவில்நல்லதேவாலயம்
நயந்ததேவிதுர்க்கைக்காளியம்மனும்
பிலந்தருமனைகண்ணோட்டமாய்மனை
பிழையதாயயெசமானுக்குக்கேடதாய்
விலந்தவாலயங்கோடியெதிர்த்திடில்
பிகுவில்லாமனைகோடியேவாலயந்
தலந்தனிலப்படிவாயவிடுமே
தக்கபாழாயெசமானனுமாய்வனே. (388)

நிலமதுபள்ளமாகில்நீள்யுகமூரேவாழா
மலைகளில்மனைகள்நிற்கமாண்டுபோம்மனிதரெல்லாம்
பாற்கடல்சயனன்றேவிபரிவுடனுரைத்தாளென்று
சீர்பெறுமயனார்சொன்னசேதியைவிளம்பலுற்றேன். (389)

அழிந்திடுங்கோவில்தானுமரவுசேரிடமில்லங்கள்
விழிந்திடும்பறையர்செம்மான்மேவியமுனிகளெல்லை
அழிந்திடுசுடுமக்காடுமமர்க்களத்தவனியாகா
ஒழிந்திடுமந்தவில்லமோங்கியவனமதாமே. (390)

முக்கோணம்அறுகோணம்முடிலம்வட்டம்
முறம்போலும்கயல்மூதுகுசூலாகாரம்
சக்கரவின்பின்பக்கம்போலும்பூமி
நடுபள்ளம்கோமுகமாய்நமன்றிசையில்
அக்கோணம்நிருதியுமேற்குத்தாழ
அமரேசன்றன்றிசைக்குப்
பருவங்களில்லாமல்மேடாகில்
பாரினில்மனையெடுக்கினும்பாழாம்பாரே. (391)

நாலுதிக்கிலுநன்மனைதன்னிலே
மூலைப்பாய்ச்சலாய்முற்றத்திற்குற்றிட
ஆலையிலமர்ந்தகரும்பைப்போல்
வாலையாகியமங்கைமரணமே. (392)

சீதரன்கோவில்பின்னும்சிவன்முன்னோன்கோவில்முன்னும்
சாதனம்அமைந்ததாமம் அல்லலேயடையுந்தானே
காதலன்மனைக்குட்செல்லுங்காலத்திலெதிரில்ஞாலம்
நீதுறுமுன்றிற்குற்றம்சேருமேல்தோஷஞ்சாவாம். (393)

அந்தணர்மடங்கள்குத்தல் ஆரெறிகோவில்குத்தல்
நந்தனவனங்கள்குத்தல்நதிகுளம்கிணறுகுத்தல்
இந்தநல்வாசல்நேரே இருகூரைசந்துகுத்தல்
பந்தமாம்கருவும்போகும்பரிமனையாட்குத்தோஷம்
விந்தையாய்மயனார்சொன்னார்வெகுமனைபாழாமென்றே. (394)

நீற்றுநுதல்சேர்திருவன்னைப்பொன்னைக்கருத்தாய்க்கேள்
ஆற்றுப்பார்வைகுளத்துப்பார்வையாழ்கிணற்றுத்தெருப்பார்வை
வாழ்த்துங்கோவில்மதிற்பார்வைமன்னர்க்கோட்டைமதிப்பார்வை
பாழ்த்தபோகுமனையென்றுபகர்ந்தார்பெரியமயனாரே. (395)

நிவிர்த்தி.

நாடியவீதிதானும்நாற்பது அடியதானால்
கோடியுங்குத்துந்தள்ளுமேகாவுடன்தேர்நடக்கி
ஊடியவொழுங்குதான்நீள்நிலத்திற்சிற்றடியேயானால்
தேடியகுற்றமெல்லாந்தீப்படும்பஞ்சுதானே. (396)

கூறியகோவில்கோடிகுலமுடன்கிணற்றுப்பாய்ச்சல்
வீறியதெருவின்கோடிவீடுடன்வயலிற்பாய்ச்சல்
தேடியவடிநாலுகிலெந்தோஷமேமனைக்குமில்லை
ஆறியமயன்தானித்தையநுமையாயுரைசெய்தானே. (397)

தேவரும்பிரமர்தாமுஞ்சிவனரியிவருஞ்சேரத்
திகழுமாலயங்கள்நூறுதெருக்கேணிமுப்பதாகக்
காவலரசுமாடங்கருதுபத்தைந்துமாகக்
கனத்தமண்டபங்கள்சாலைகருதுசத்திரங்கள்பத்து
மேவரவடிகள்கண்டுவிரும்பியேயமைத்தல்வேண்டும்
மேலுறுங்கட்டைகுத்தல்மேவிடாவண்ணஞ்செய்க
காவலர்நீலத்தொட்டிகலக்குஞ்சநதடிபத்தென்று
கனமுயர்மயனார்தாமுங்கருணையாற்கூறினாரே. (398)

ஆரணர்மதிலும் அரன்மதிலும் அறுநூறு அடிக்கப்புறமாம்
அரிமாமுகவன் அரிஹரபுத்திரன் அகோரபிடாரிக்கு அடிஎழுநூறும்
பாணர்பாலன் ஆனைமுகன்பரவாழ்மாரிதெருவினடியில்
திரமாயெழுபதடிதள்ளிசெப்புங்கிரகஞ்செய்பிடுமே. (399)

இல்லறமெடுக்குஞான்றுன்திர்மனையிருந்ததாயி
னெல்லையுங்குறுக்கேயானாலிதற்கதுன்திரியில்லை
வல்லதோர்தெருவினேரேமறுமனைவேண்டொணாது
சொல்லியமனைக்குக்குற்றஞ்சூத்திரமறிந்துபாரே. (400)

ஆளும்வீட்டினருகினிலேகோவிலிருந்தால்சதாகவலை
நீளும்நான்குசந்தியுறில்நிலவுங்கீர்த்திகுறைபடுமே
நாளும்இரண்டுவிடம்மறுத்துநகர்தல்முக்கியதருமமென
மீளியறிவின்மயனாரும்விளங்கவுரைத்தார்பயன்பெறவே. (401)

கருதியபூமிதன்னில்கனத்தநீர்கிழக்குக்கெதற்காம்
பெருகியசெல்வமுண்டாம்பிரமிக்கும்வடக்குமேற்கே
யுருகியயுறைநீர்தாழ்தலுத்தமம்மேல்நீர்காண
மருமலர்க்குழலாய்கேளாய்மனைவிதியறைந்ததென்னே. (402)

மணல் பரீட்சை.

சிற்பன் மண்ணைப் பரீட்சை செய்தல்.

மண்ணின்குற்றம்மயனறிவதல்லா
லிந்நிலத்தோரிதையறிவார்களோ
நண்ணிலத்தில்நாளுந்தினவோரை
கொண்ணிடுமண்ணின்குற்றமுரைப்பதே. (403)

சொல்லுவேன்மண்ணின்சூட்சமறிந்திடு
நல்லநாட்கள்நிலத்தினில்மெல்லுக
வில்லறங்கட்டகீழ்வெள்ளைதோன்றினல்
கொல்லையாஞ்சுடுகாடதாகுமே. (404)

வெள்ளைமேலதாய்வெள்ளைப்பார்கீழதாய்க்
கிள்ளையாங்குடிகெட்டிடுங்கட்டினல்
அள்ளையாடையதிசிவப்போடினல்
தள்ளுதள்ளுதயங்காதேநீயுமே. (405)

ஒருமண்ணுகவுதித்திடவப்பனை
யிருமண்ணுகவிருக்கில்நன்மையாம்
யிருமண்ணுகவிருக்கில்கலங்கார்
உருவும்வாழ்வும்உதித்துவிளங்குமே. (406)

எலும்புபோல்மண்ணிருந்திடவந்நிலங்
கரும்புபோல்மனைகட்டிடவேண்டினல்
அரும்புபூத்துமவியுமதுபோல
சுரும்புபோல்சுகந்தூங்கிடும்நாளிலே. (407)

கூறும்பூமிகுறிக்கும்வெளுப்புடன்
வீறுந்தித்திப்புவிரும்புமருசியுடன்
பேருந்தாமரைபெருத்தபூவாசனை
ஏறும்பூமியிருக்கமிகநன்றே. (408)

நன்றாமாரியர்நவிலமாளிகட்டில்
குன்றுதெந்நாளுங்கூறக்குடும்பமும்
நன்றுயோங்குநலம்பெறுநற்சுபம்
பொன்தாமரையாள்புகுவள்நிசமிதே. (409)

ஓதும்பூமியுயர்ந்தசிவப்புமாய்க்
காளாந்துவர்கருதியபூமியும்
ஏதலாம்பரியெழில்மணம்போலவும்
பூதலத்தில்புகழ்மாளிகட்டவே. (410)

கட்டினால்மாளிகாசினிராசர்கள்
பட்டினம்வாழ்பகருங்குபேரன்போல்
கட்டம்நீங்கிக்காட்சிமிகப்பெற்றே
அட்டியில்லாதருமையாய்வாழ்வரே. (411)

சங்குஸ்தாபனம்.

உத்தராயணமுமாகஉயர்ந்தநல்வாரம்பார்த்துச்
சித்திரைமாதநன்னாட்சிறப்புடன்பார்த்துவானிற்
சுத்தமாய்க்களங்கமில்லாச்சூரியன்விளங்கும்போது
நத்தியேயவ்விடத்தில்நவிலுவேனினிதுகேளே. (412)

ஒருதெண்டுக்கொருதெண்டேதானுண்மையாய்ச்சதுரமாக்கி
விரவியேமட்டங்கொண்டுவிளங்கநீர்மட்டஞ்செய்து
பரவியநடுவின்வட்டம்பாவுமண்டலம்போல்வீசித்
திருந்தியசங்கையூன்றச்செயும்பிர்மாணஞ்செய்யே. (413)

சங்கின் உயரமும் கனமும்.

உத்தமசங்குக்கேதானுயரமோர்முழமதாகும்
நத்தியவடியிலாறுவங்குலம்நவிலக்கேளு
சுத்தமாயத்தலைக்கனந்தான்சொல்லுமங்குலமொன்றாகு
பத்தியாய்த்திரளநன்றாய்ப்பரிவுடன்கடைச்சல்செய்வாம். (414)

சங்கு செய்யும் மரங்கள்.

தந்தியின்கொம்புவாகச்சந்தனம்வன்னிதேக்கு
முந்தியபுளியினோடுமுயர்கருங்காலிசெய்வாம்
விந்தையாயிவையல்லாமல்வேண்டுபால்மரந்தானாகும்
அந்தமாம்வயிரத்தோடுமனமதோர்பிரிவுசொல்வாம். (415)

தேவர் முதல் நான்கு சாதிக்கும் சங்குசெய் மரங்கள்.

சந்தனந்தந்திக்கொம்புதகைமைசேர்தேவர்க்காகும்
விந்தைசேர்மறையோர்க்கேதான்மிகுகருங்காலிவன்னி
சிந்தைசேர்மன்னர்க்காகுந்தேக்கதுவைசியர்க்காம்
புந்திசேர்புளியினோடுபுகலமைசூத்திரர்க்கே. (416)

பாதச்சாயை

மேவுமுத்தரபாகத்துமிகுந்ததெட்சணபாகத்து
மாவவற்சாயலுண்டுமந்தமண்டலத்தில்வந்த
வோவியபுள்ளிரண்டிலோடவேகிழக்குமேற்குந்
தாவியவந்நாள்தன்னில்தகைமையறிவாமென்றே. (417)

இரண்டுபுள்ளியின்பால்மீதேயேகவேவெளியில்நன்றாய்த்
திரண்டசேர்க்கயல்மீனாகச்சிறப்புடன்வீசிப்பின்னு
முரண்டதோர்மீனின்வாலின்முகத்தினுங்கூடுநூலை
யிரண்டதையோடவாங்கியாகநூலிரண்டுஞ்சொல்வாம். (418)

திறமைதெட்சணபாகத்தின்சிறந்ததோர்தேக்கின்மீதே
யுறமையுத்தரபாகத்தேயுத்தரபாகமீதே
முறமையாமிரண்டிடத்தினுயர்ந்திடுநூலைப்பெற்றே
யுறவுடன்கொள்ளுவாய்ப்பின்னுண்மையாய்விளம்புவேனே. (419)

சாயல் மாதங்களின் விலக்கம்.

மேவுவைகாசியோடுபுரட்டாசிரண்டு
தாவவச்சாயலில்லைசாற்றுவேனினிதுகேளு
ஆவணியாணியோடுமைப்பசிமேடமாத
மோவியசாயல்ரண்டுமுண்மையங்குலமென்றோதே. (420)

ஆடிகார்த்திகையாங்கூனியங்குலம்நான்குசாயல்
நீடுமார்கழியுமாசிநிரைவிரலாறுசாயல்
தேடுதைமாதமெட்டுந்திறமையங்குலஞ்சாயற்றான்
பாடலாம்புகழைக்கூறப்பண்பிதுபகருவேனே. (421)

சங்குஸ்தாபன மறிந்து மனைகள் கட்டுவதின் பலன்.

சீருடன்மனைகள்தம்மைச்சிறப்புடன்சமனதாக்கி
நேருடன்கிழக்கறிந்துநின்றதோர்நூலறிந்து
பேருடன்மனையைத்தாக்கிப்பெருகவேமனைகள்செய்தால்
பூரணமதியம்போலப்பொருந்தியேவாழ்வார்தானே. (422)

துருவலட்சணம்.

கூறுகண்டதுவிதியொழுங்கவேகூடுமேயறுபத்துநால்பங்குமே
ஆறுகண்டதுமஞ்சுமூன்றாகியே அதற்குமத்தியிலஞ்சுதூணைட்டியே
யேறுகண்டகடகம்பமட்டமேலங்குமூன்றுறுகொள்ளியுங்கட்டியே
பாருகண்டதுமூன்றுடன்சாமமும்பார்க்கவேயதுமுத்தாயாக்கவே.

வேறு.

அரக்கனுநம்மைநோக்கித்தபசுதான்
அன்பாய்ச்செய்தான்றுருவமவனுக்குத்
திருக்கயிந்துமகாமேருவுச்சியிற்
சேரவைத்துநவக்கிரகாசியும்
பருக்கநட்சத்திரஞ்சேர்வகைகளும்
பண்பாய்ச்சாட்டைகொண்டேகட்டிசுற்றிடப்
பெருக்கயிந்தோம்வடக்கிலிருமென்று
பெற்றநேர்மனைபேறதாய்ப்பார்ப்பதே. (424)

தங்கமேருவினுச்சியினின்றுதான்
தவஞ்செய்யுந்துருவத்தைவடக்கதாய்
இங்கினின்றிடத்தானதுதெற்கதாய்
ஏகநூலிலிணக்கமதாகவே
சங்கொழுங்கினில்நிதானஞ்செய்த
தறிமுளைக்காகவேநன்றாகச்சேர்த்துநீ
திங்கள்செங்கதிராய்மனைவீதியும்
தேசமெங்குங்கட்டடம்செய்வீரேல். (425)

பாத்துதென்வடலாகியவாசல்மனை
பண்பதாய்த்துருவத்தாலேபோட்டிட
வேத்தகீழ்மேல்மனைவாசலுக்குத்தா
னின்பமாய்ச்சங்குவைத்தேநீபார்ப்பது
மேத்துஞ்சங்கதுபன்னிரண்டங்குல
மின்பமேகணமப்படியாகவே
காத்துநான்குசெய்யூசியோர்பங்குமே
கனத்தவவ்வடிமூன்றுபங்காக்கவே. (426)

செய்துமேகடைந்தேதானேபார்த்திடத்
தேவருக்குமனிதர்க்காகுவா
லுய்துமத்தியுமிச்சிமரமுமா
முயர்ந்த ஆவணியைப்பசிதேளுமே
யெய்தும்நன்மைக்கிசந்தமாதங்களில்
இன்பவாரநாள்பக்கமும்பார்த்துமேல்
செய்துபூமியைமட்டத்தளமதாய்த்
தீரமாயிருகோலளவாகவே. (427)

ஆகவேமுகூர்த்தங்களுங்கொண்டுதான்
அடியில்தங்கநவரத்தினமுமே
பாகமேசெய்துசங்கதைவைத்துநீ
பண்பதாய்நிழல்கண்டபடிமைய
மேககாலமுமந்தியும்பார்த்துநீ
யீரிரண்டுகோலளவுநுனியடி
தாகமாயிருகால்முனைமையத்தில்
கண்டபடிவிடங்கிபூமேனுமாம். (428)

மேலதிற்றுருவம்முகவாசலுமிக்கநன்மை
யெப்போதுஞ்செல்வந்தருஞ்
சேலதாய்ரவிவாசலுமப்படி
சேர்க்கையில்லாமல்தப்பிடில்கேடதாய்
கோலதாயமூல்பார்த்திடுமேலதில்
கொண்டநோயுமதிகமதிலுறும்
ஞாலமில்லாமகவுமழிந்திடுமாதி
ஞாதிசத்துருவால்துன்பமெய்றுமே. (429)

ஆயாதிப் பொருத்தங்கள்.

நாலுசாணில்கோலாக்கிநலமாயிருபாரிசமளந்து
கோலிச்சதுரங்குழிமாறிக்குறையாதாயகுழிமூன்றின்
மேலுமாறியிருநான்கில்விளைந்துகழித்துமீதிகண்டு
சாலமனைக்குவரும்யோனிதன்னையறிந்துதரிப்பதுவே. (430)

தரிக்குங்குழியொன்பதிலேற்றிச்சதுர்த்தற்கீந்தால்வரும்சாதி
பரிக்குழுவொன்பதிலேற்றிப்பரிவாய்நூறிற்கழிக்கவது
விரிக்கும்வயதுமுப்பதின்மேல்விளங்கும்குறைபில்மிகவாகா
தெரிக்குமூன்றுசாதியிலேந்தேனுர்நாலாஞ்சாதிசெப்பே. (431)

ஆயந்தனைநாலிற்பெருக்கியதனையொன்பான்றனிற்கழித்தே
யியுஞ்சேஷந்தஸ்காமும்இசைந்தசத்திதானியமும்
மாயும்புவிராச்சியம்துக்கம்வறுமைவிளைவுசுகமிவையிற்
பாயுந்துக்கந்தரித்திரமும்பார்தஸ்கரமும்பலியாதே. (432)

வந்தகுழியையிருநான்கில்மாறில்பன்னிரண்டாதாயம்
வந்ததொகையைமூவொன்பான்தள்ளவருநாளாகுமது
முந்தமுப்மூன்றிற்பெருக்கிமுடிப்பதுளவேவான்செலவாகும்
பிந்துமுனிவோர்க்கிந்தபடிபெருகுங்கிழமைபெறுமிதுவே. (433)

இதுவேவாயக்குழியொன்பதிலேற்றிமுப்பதினுங்கீந்தால்
பொதுவேபக்கம்நான்குபன்னிரண்டில்பொருந்துசேடம்ராசியதாம்
சதுர்வேதியர்க்குச்சிங்கமனைதருமன்னவர்க்குக்கஜமனையாம்
மதுவைசியர்க்குக்கநடமனைமற்றோர்காகமனைவளமே. (434)

சந்திர நேத்திரம்.

வளமேபருதிமுதலாகவடித்துக்கூட்டிமுற்றித்து
வுளமேவருநாளுடன்கூட்டிவுறவாய்த்தாரகமுதலெண்ண
தளமாயெனபானேர்கண்ணுந்தவமுமிராறிருகண்ணும்
மளவாயாறுங்கண்ணில்லைமன்னயைந்தளுவகையிதுவே. (435)

வேறு

அருக்கனுர்கிழமையாதிசென்றவக்கிழமையாய்ந்து
பெருக்கிமூன்றதனின்பெற்றமாமுதற்கழித்துப்பின்னை
இருக்குநாளன்பானேர்கண்பன்னிரண்டிருகண்காணும்
தருக்கில்லாப்பின்னுளாறுங்குருடுசந்திரற்கேயாகும். (436)

ஆதாயபலன்.

வெல்லிடும்யோகம்போகஞ்சீர்த்திவீரியமேயாக்கம்
புல்லிடும்தருமஞானம்சத்தியம்பொருளிலாபஞ்
சொல்லிடுலாபம்நன்றும்தொகையைந்தாறுபத்தும்
இல்லாமலாபம்வந்தால்இடர்மிகும்பகையுஞ்சேரும். (437)

விரயபலன்.

ஏழொன்பானைந்துமூன்றுமீந்தபூரணமேநன்றும்
சூழ்ந்திடுமகவுலாபம்சுகிர்தமாம்நன்மையுண்டு
பாழொன்றிரண்டுநான்காறெட்டுடன்பத்துங்கொண்டால்
வீழ்கனல்மரணஞ்சார்நோய்விரோதங்களர்த்தநாசம். (438)

வாரபலன்.

வாரநாள்கொள்ளும்போதுமதிபுதன்வியாழன்வெள்ளி
சீரிதாய்ச்சிறப்புமுண்டாகுஞ்சேய்சனியிரவிவந்தால்
பாரினிலர்த்தநாசம்பலபிணிகலகஞ்சாரும்
சூரியஜென்மவாரமாகிற்குணமுண்டாமே. (439)

பக்கபலன்.

ஒன்றுநான்கிரண்டுமெட்டுமொன்பதும்பதினொன்காகா
நின்றிடில்பக்கம்தீதாம்நிலைவளர்கொண்டபோது
கன்றிடில்மிகவுந்தீதாம்கலைவளர்பக்கத்தேனும்
சென்றபிற்பக்கத்தேனுஞ்செய்கபின்னிரட்டைதீதே. (440)

இராசிபலன்.

சாற்றியஉதயராசிதன்னைநீர்பகுந்துகாணில்
போற்றியமகரந்தீதாம்புகழ்தருமற்றதெல்லாம்
மாற்றிடுமகரந்தன்னில்மனையிருளுற்றதாகில்
மாற்றிடுமனைதானென்னவறைந்தனராசில்நூலோர். (441)

அமிச-வமிசபலன்.

தோகைசேர்குழலாயங்கிஷஞ்சொல்லிடிலொன்றுமாறும்
வாதைசேரேழுமெட்டும்வரும்பிணிமிகப்பொல்லாது
போதருமற்றதெல்லாபுகழ்தருமிகவுநன்றே
வோதுமேவொற்றையாகில்உத்தமமென்றேநினறோ. (442)

வயது-யோனிபலன்.

சாதியாயிதனினுண்மைதருயோனியொற்றைநன்றாம்
பேதியாதிரட்டைதீதுபெற்றிடுமாயுள்சாற்று
நோதிலாறைந்திற்குள்ளாய்க்குறைந்திடில்மிகப்பொல்லாது
தாதுசேர்குழலாய்பத்துப்பொருத்தமுந்தாமுநன்மை. (443)

நட்சத்திரபலன்.

அசுபதிவிஜயஞ்செய்யுமடுப்பனல்வியாதிரோணி
திசைபூமுதாளுவன்மீன்ஜெயம்பெறுசெங்கைச்செல்வம்
வஞ்சயிருபூசப்யோகமரணமாயிலியமாரும்
மசகெலிமக்கட்பேறுபூரமுப்சண்டைதானே. (444)

உத்திரநிலைமையஸ்தம்யோகமாம்பயறுரோகம்
புத்திரப்பேறுசோதிபணிதருஞ்சுளகுபுத்தேள்
வெற்றியாங்கேட்டைசெல்வம்வியாதியாம்மூலம்பொய்மை
சத்துருமிகவேயாடித்தழைத்திடுஞ்செல்வந்தானே. (445)

திருநிறையோணம்விட்டம்சோதனஞ்செக்குச்செல்வம்
தருவனுழிசண்டைதருவெந்தாய்வெற்றித்தோணி
பெருகியவியாதியென்றுபேசினர்மனைக்குமுன்னோர்
வரிவழியுடையமாதேமயனுமேயுரைத்தாரன்றே. (446)

ஆயாதியில் வந்த நட்சத்திரத்தினல் அம்சங்கண்டு பலன் கூறுவது.

நரபதியம்ச பலன்.

அசுபதிமகமேமூலம்ஆனதோர்மனையில்வந்தாற்
பசுபதிகிருபையாலேபாக்கியம்லாபம்பாலர்
திசைபுகழ்கீர்த்தியுண்டாம்தெரிவையுஞ்சுகமதாகும்
வசையிதற்கொன்றுமில்லைவாழ்வெனமயனுரைத்தார். (447)

தஸ்கராம்வ பலன்.

பரணிபூரம்பூராடம்பார்த்திடமனையில்வந்தால்
திரணமாம்வியாதிசண்டைசேர்ந்தவர்பகையுமாகும்
விரணமுப்பயனும்நாசம்மெல்லியும்புதல்வர்தானும்
மரணமேசெலவேயெய்துமனையாயந்நீறுதானே. (448)

கிலீபாம்ச பலன்.

உத்திரமுத்திராடமாரல்உண்மையாய்மனையில்வந்தாற்
புத்திரன்சேதங்காலிபோய்விடும்தனமும்பூமி
மித்திரனாலேதுன்பம்விளைவதுகுன்றிப்போகும்
மெத்தவேபகையதாகும்மெல்லிநோய்மயன்சொன்னாரே. (449)

புத்தியம்ச பலன்.

அஸ்தரோகணியுமோணம்ஆருமேமனையில்வந்தால்
கர்த்தனார்ருளினாலேகாலிசேய்பெண்டிரின்பம்
மெத்தவேதனமுங்கூடும்வெகுஜனம்நட்புமேதை
வித்தையும்புத்திமேலாம்விருத்தியாமயன்சொன்னாரே. (450)

நிர்ப்பீதியம்ச பலன்.

சித்திரைமுன்னின்றோடுசெய்திடமனையவிட்டம்
கொத்தவர்பகையுமாகுங்கொடுந்துன்பமனையுமாகும்
நித்தமும்பிணிதப்பாதுநேரினமுசங்கதோஷம்
அத்தியுமிகவுண்டாகும்ஆகாதுமயன்சொன்னாரே. (451)

நிதனம்ச பலன்.

பிண்டியும்பூரட்டாதிபிணிவரும்விசாகந்தானும்
தெண்டனைமிகவுண்டாகுந்திருடனால்பயமுண்டாகும்
பெண்டுடன்பிள்ளைசாவாம்பிசாசினாலச்சமுண்டாம்
மண்டலவாசனாலேவருந்துன்பமயன்சொன்னாரே. (452)

தானியாம்ச பலன்.

பூசமுமனுஷந்தானும்புகழுத்திரட்டாதியோடு
நேசமாமனையில்வந்தால்நீதியும்நிதியுஞ்சேரும்
கேசவன்பூசையுண்டுகீர்த்திபூஷணமுமுண்டு
வாசவன்போலவாழ்வுவருமெனமயனுரைத்தார். (453)

சக்தியம்ச பலன்.

ஆதிரைசதயஞ்சோதி ஆருமேமனையில்வந்தால்
நீதியும்நிதியுஞ்சேரும்நேரிழைபூமிலாபம்
வாதனையொன்றுமில்லைமகவுடன் அரசர்நேசம்
ஓதினார்யோகம்மெத்தவுண்டையாய்மயன்சொன்னாரே. (454)

பிரேஷியனம்ச பலன்.

கேட்டையுமாவந்தோணிகேடதுமனையில்வந்தால்
சேட்டையுமதிகமாகும்செலவதுசெலவுகாலன்
வேட்டலுமதிகமாகும்வியாதியாமனைவிசாவாம்
காட்டுமித்துன்பமெல்லாங்கர்த்தனுமயன்சொன்னாரே. (455)

நேத்திர பலன்.

ஒருகண்ணுண்டானநாளுமுக்தமமாகுமிப்போ
திருகண்ணுண்டானதாகிலின்பமனையும்வாழு
மிருகண்ணுமில்லாவிட்டாலியற்றியகருமந்தீதாம்
கிரவியசுற்றத்தோடுங்கெடுமரோமனையும்வீணே. (456)

இராசிப்பொருத்தம்.

அகருறுஞ்சென்மமூன்றைந்தாமாசறுமேழுமின்னம்
பகருமொன்பானும்பத்தும்பதினொன்றும்நன்மையாகு
மிகழ்தருமிரண்டுநான்குமெட்டுமீராறுமாறும்
புகல்துராசிதன்னிற்பொருத்தங்களுரைக்குங்காலே. (457)

தாராபலம்.

பிறந்தநாளிரண்டுநான்குமொன்பதுமெட்டுமாறுஞ்
சிறந்தசீர்வாதைமற்றுஞ்சீருடன்சம்பத்தாகு
மறிந்தநூல்கற்றவல்லோரஞ்சுமூன்றேழுநீக்கிச்
சிறந்ததுமொழிந்ததெல்லாந்தினமெனப்பொருத்தந்தானே. (458)

ஆயாதிப் பொருத்தங்கள்.

எட்டுபன்னிரண்டுமாக்களழிலொன்பான்பத்தழிவுமாகுந்
திட்டமூன்றெட்டுயோனிதிருவெட்டு மூவொன்பானுள்
வட்டமொன்பதிலேழ்வாரம்வளர்நாலொன்பதுவேயங்கிசம்
சட்டமொன்பதினல்சாதிதிதியொன்பான்முப்பதாமே. (459)

ஆய்ந்தநான்குபன்னிரண்டிலுழுகியாசியாகும்
வாய்ந்தபின்பெருக்கப்பின்னும்வருவதற்கீய்ந்தசேடம்
மீந்ததுபலனதாகும்விரும்புவாரறிந்தோர்மெய்யில்
தோய்ந்தவேல்விழியினுளேவயதுதான்சொல்லலுற்றேன். (460)

மனைவருமாயமெட்டுமாமுதற்கியநாளா
மினிதுநாள்பெருக்கிநூறிலிடவதுவயதேயாகும்
கனியொடுபாகுதேனேகண்டெனுமொழியினுளே
நனிவருமயனார்சொற்றநறுந்தமிழ்ப்போற்றுவாயே. (461)

பார்க்குங்கிழக்குகொடியாகும்பக்கம்தென்கீழ்ப்புகையதுவாம்
தேர்க்குந்தெற்குசிங்கமதாந்தென்மேல் ஞலைநாயாகும்
மேற்குசர்ப்பம்வடமேற்குமிக்ககழுதைவடக்கானை
ஏர்க்குவடகீழ்க்காகமிந்தவெட்டும்யோனிவரும்வாறே. (462)

கொடியேயாகில்திருவாகுங்கோலையேகாட்டும்புகையாகில்
நெடியசிங்கம்வெற்றியதாம்நிகழுஞ்சுவானங்குற்றமதாம்
படியசர்ப்பமிகநன்றுபாரிற்கழுதைநோயாகும்
கடகமியானைமிகநன்றாம்காகம்பொல்லாதெனவுரையே. (463)

அன்னைபருந்துவரிநாகமானைநன்றுமனைசெறியி
னென்னைபூனைசுணங்கனிவையியலுங்கருப்பைமுயலாகா
தன்னைமுரணச்சாவுறுமேசாருமாட்சிமிகநன்றும்
மன்னேவாழ்நாள்ஐம்பதினுள்வாழ்நாள்குறைதல்மனைக்காகா. (464)

முன்பதிலருக்கன்வாரமுதலாகமூன்றுக்கிட்டே
அன்புடன்முதல்நாள்கூட்டியடவிலேயெண்ணிநீக்கி
யொன்பதுக்கொருகண்ணுகுமுற்றபன்னிரண்டுகண்ணும்
பின்பொடுவாறுநாட்டம் பெட்பில்லைசோமனார்க்கே. (465)

ஆயங்குறைந்துவியமிகுந்திட்டம்சமானொன்றதுவரினே
தீயவாகுமெனநீக்கித்தினமும்பொருந்தாத்தீநாட்கள்
சாயவகற்றிவாரமதிற்சனிசேயிரவிதனைநீக்கி
யேயமனைகள்செய்திட்டாலின்பம்பொருள்சேயினிதுறுமே. (466)

ஆயாதிப் பொருத்தங்கள்.

* ஒட்டுநீளமகலமுழத்தையு
மொன்றேடொன்றுடன்தாக்கக்குழியதாம்
இட்டவெட்டுடன்பன்னிரண்டாக்கமாம்
இசைந்தவொன்பதும்பத்துஞ்செலவதாம்
முட்டுமூன்றுடனெட்டுமேயோனியாம்
மூறுமெட்டுமூவொன்பதுநாளதாம்
வட்டமாநவமுப்பதும்பக்கமாம்
வகுத்தவொன்பதோடேழுங்கிழமையாம். (467)

மத்தநான்குமீராறுமிராசியாம்
மறுத்தவொன்பதும்நால்வகைச்சாதியாம்
உத்தநான்குடனொன்பதுமங்கிஷ
மோதுமூவொன்பதும்நூறுமாயுசு
பெத்தரும்மனைகோலியவாறெலாம்
பெருக்கிப்பின்புகழித்ததைக்கண்டுதான்
முத்தமானதைமுற்றிலுந்தள்ளியே
முன்புகோணத்தைமூர்த்தமாய்க்கொள்ளவே. (468)

கெற்பப்பொருத்தம்.

சாணன்குகோல்கொண்டுதப்பாமல்நான்கெல்லை
கோணமலிங்கேகுழிமாறி—நாணமல்
இப்பாரில்மானேயிருநான்கிற்கிவீரேல்
கெர்ப்பக்கிருககுணம். (469)

அஞ்சிலாசாள்வாருகிலருந்துயரம்
மிஞ்சியமூன்றொன்றேழுவேள்வியாம்—துஞ்சர்மல்
நாலெட்டிரண்டுநாசமாமம்மனைக்கு
மேலெட்டேசொன்னார்விதி. (470)

---

* இந்நூல் முழுவதையும் நாங்கள் சமீபத்தில் புத்தக ரூபமாய் வெளியிடுவோம்.

பூமலிநான்குசாண்பொலிந்தகோலினை
தேமலிமனைதனைக்கெல்லைத்தேடிய
தாமலிபூருவந்தழைத்தவுத்தமங்
காயவியாயமாங்கணக்கின்சீரதே. (471)

ஆதாயபலன்.

சீர்பெருமாயத்தைச்சேரவெட்டினிற்
கூர்தரவேற்றிக்குலவுபன்னிரண்
டேர்தரக்கழித்திடவொன்றிலக்கமே
ஏருமாதாயமென்றிசைத்ததந்தையே. (472)

மேவியவொன்றிரண்டேகபோகமாம்
மேவியதிரிசதிர்கீர்த்திசௌரியந்
தாவுமைந்தாறினிற்றானியந்தன
மேவுமேழெட்டினிற்சுகமெய்ஞ்ஞானமே. (473)

எட்டுடனொன்றினிற்கியன்றபோகமாம்
மட்டருந்தசந்தனில்வசியுமன்னுமே
எட்டவேகாதசியினியதாமமாஞ்
சட்டமாந்துவாதசிசமஸ்தநன்மையே. (474)

செலவின் பலன்.

நன்மையாமாயத்தைநவத்திற்றாக்கியே
பொன்னியபத்தினிற்பொருந்தநீக்கினி
லன்னிலைசெலவதாமறியவொன்றினிற்
குன்னியவனவிரண்டேத்தங்குன்றுமே. (475)

குன்றிடமூன்றினிற்குலவுநற்செயம்
வென்றிசொனாவினில்விளங்கும்புத்திரர்
ஒன்றுவைவையந்தினிலோங்குநற்செயம்
என்றனர்தரித்திரமேழுக்கென்னவே. (476)

என்னவெட்டதனினிலக்குமிவாசமாம்
பன்னியநவத்தினிற்பாலராவிபோம்
முன்னியதசமதிலுத்தமந்தரும்
மன்னுவெங்கோனெடுத்துரைத்தவாசகம். (477)

யோனி பலன்.

உரைத்தவாயத்தைமுறைந்துமூன்றினிற்
பொருத்தமாத்திரவட்டமத்திற்போக்கிட
விருத்தியாய்நின்றதுவிளங்கும்யோனியன்
தரித்தியாயிக்கான்கறையஞ்சேர்ந்ததே. (478)

சொற்றதிலேகமாஞ்சுபுத்திரபாக்கியம்
மற்றிரண்டதனில்மாகனகமன்னுமே
சுத்தமூன்றரிச்செயந்துலங்குநாலினிற்
கத்துசுவானம்பிணிகாட்டுமென்பரே. (479)

காட்டியவைந்தினிற்சர்ப்பங்கனதனம்
பூட்டியநத்தையர்கரதம்பொன்னிருங்
கூட்டியவேழ்கஜங்குலவுநற்சுகம்
நீட்டியவாயசமெட்டில்நிஷ்பலம். (480)

நட்சத்திர பலன்.

பலமதாமாயத்தைப்பாரிலெட்டினில்
நலமதாயேத்திமூவொன்பதாகுநாள்
அலகிடக்கழிக்கவேவஸ்வனிற்பய
னிலகியமுசியம்வந்தெய்துமென்பரே. (481)

என்பதாமிரண்டுசொற்கினியமாரணம்
பின்புகார்த்திகைப்புகையதாமனல்
வன்புறுமுரோகணிவசியமெய்துமே
அன்புறுமாண்டலேயதிகோசமே. (482)

ஆதிரைசெயம்புனர்பூசம்பாலராம்
ஓதிம்பூசங்காலொழியும்பாம்பிது
மேதமில்வேள்விவனுள்விளங்கெனி
பேதமில்லுத்தமமென்றுபேசினர். (483)

பேசியவுத்திரம்பெருகுதன்மையின்
நாசமாமசனஞ்ப்நணுகுமென்பிணி
பாசமாஞ்சோதிசுகம்பாய்விடும்
நேசமிலாமொரம்நேருந்துன்பமே. (484)

நேர்பெறுமநுஷமுத்தமநேரிலா
கூரியகேட்டைகொடுமைமூலத்திற்
பாரியபிணியுறும்வாவியாவிபோ
மூரியற்கடைக்குளமுதவுநற்சுகம். (485)

சுகமெலாந்துரோணமாம்துன்பவட்டமே
அகமனையகற்றும்போரதுசௌபாக்கியம்
மிகபூரட்டாதிகால்மாவீடற்றுப்போம்
சகமலரேவதிசாரும்ரோகமே. (486)

வாரபலன்.

சாருமுன்னையத்தைத்தனித்தவொன்பதி
லேறவேபெருக்கியேமுக்கிய்ந்தமீதியை
வாரமானதினகரன்வருங்குரோதமே
சேரவேசோமனிற்செழிப்புண்டாகுமே. (487)

ஆகுமங்காரகனர்த்தநாசமாஞ்
சேகரம்புந்தியிற்சேருஞ்சௌக்கியம்
வாகமாங்குருவினின்மன்னும்புத்திரர்
சோகநீர்ச்சுங்கனிற்சொல்லுநன்மையே. (488)

அமிசபலன்.

சொல்லிய்சனியினிற்சொரிகுரோதமாம்
செல்லலாமாயத்தைநேர்ந்தநாலிற்செய
துல்லியநவத்தினிற்றொடர்ந்தகாலரும்
செல்லலாங்கிடமெனநிகழ்த்துவார்களே. (489)

நிகழ்த்தியதடகாம்நெற்பாாததாம்
புகழ்த்தியேபோகித்துநன்மைசத்தியில்
விகழ்த்துமாரோக்கியம்வீசுந்தானியம்
தொகுத்துலாபமெனச்சொல்லுவாரரோ. (490)

நல்லதேநெற்பதிநவில்கிலிற்பனில்
சொல்லியகலகமாம்சோரனிற்பிருதி
யெல்லலாமிராகுதன்னடுத்தமத்திபம்
புல்லுபேரேசியன்புகலுமுத்தமம். (491)

வமிசபலன்.

புகன்றவாயத்தைநான்கொன்பதிற்பூட்டியே
விகன்றமன்னவர்வைசியர்வெற்றியாம்
அகன்றசூத்திரர்க்காகுந்துயரங்கள்
புகன்றகோகிலம்போல்மொழிமங்கையே. (492)

திதி பலன்.

என்னுமுன்னுயத்தையேய்ந்தவொன்பதிற்
பண்ணியமுப்பதிற்கழிக்கச்சேடமே
நன்னியமுதற்றிதிநவமிரண்டினில்
அன்னியத்திருதிகையனுருநற்செயும். (493)

ஜயமிலேசதுர்த்தியைச்சார்ந்தபஞ்சமி
நயமுளசிறுவாானந்தையாயுளாம்
வயமுளசஷ்டியேல்வயங்குமுற்பலன்
வியம்பிணிநவந்தனில்விரியுநாசமே. (494)

சார்தசம்பாக்கியந்தங்கேகாதசம்
சிருமத்திபம்துவாதசஞ்செம்மலாம்
பார்திரயோதசிபகர்சம்பத்ததாம்
ஓர்ப்தினன்கதேல்உறும்நாசமே. (495)

ஏறியபூரணையியம்புமுத்தமம்
கூறியகுருவுமேற்கொள்கையாமிதி
லேறியவிருகதிர்சேரவோர்திதி
வேறியவில்லையெனவிளம்பினாரோ. (496)

இராசி பலன்.

காட்டியவாயத்தைநாலிலேற்றியே
ஈட்டிமுன்னான்கினுக்கியநின்றது
கூட்டியவொன்றதேற்குலவுமேஷமா
மீட்டியவிரண்டினில்ரிஷபமாகுமே. (497)

மதித்தமூன்றுடன்மன்னுநண்டெனிற்
கதித்தநற்செயமரிவசியங்காட்டுமே
துதித்தபெண்ஞானமாந்துலாமும்யோகமாம்
படித்ததேள்நலந்தரும்பலவுநன்மையே. (498)

நன்மையேமகரமுநாளுநல்குமே
துன்மையேகும்பமுன்தினமுங்கூட்டுமே
வன்மையிலாதமீன்வளமையீயுமென்
றன்மைசேர்முனிவர்கள்சாற்றினாரோ. (499)

ஆயுசு பலன்.

ஓதுமாயத்தையுமொன்பதிலேற்றியே
நீதியாய்த்தசந்தனிற்கழிக்கநின்றது
சோதிசேர்மணியினுக்காயுள்சொல்லுமே
வேதையாநாலுபத்தைந்துமெய்யிதே. (500)

என்பதிலுயர்ந்ததுமெய்ந்தஉத்தமம்
இன்பதிலதிற்கழிவியலுந்துன்பமென்
றன்புரைநாடியவையன்முன்னமே
தென்புறவுரைத்தனன்தெளியுமுள்ளமே. (501)

பஞ்சக பலன்.

சேர்ந்ததோர்பஞ்சகந்தான்சிறப்புடனில்லாவிட்டால்
ஆய்ந்ததோர்களவுபோகும்அக்கினிபயமுண்டாகும்
வாய்ந்ததோர்மாணமுண்டாம்வருமதுராசதெண்டம்
பாய்ந்திடுமனைபாழென்றுபகர்ந்திடுமயநூல்தானே. (502)

பஞ்சகம்கொஞ்சமேனும்பழுதறச்செய்வானாகில்
சஞ்சலமில்லையங்கேசகலமும்விருத்தியாகும்
சுந்தரமயனார்சொன்னார்சோரமேயில்லையென்க
பிஞ்ஞகனருளினாலேபிசகில்லைவாழ்வார்தாமே. (503)

மனைக்கு அடிக்கும் முளையின் அளவு நீளம்.

பகர்ந்ததோர்முளைக்குநீளம்பதினொருவிரற்றொடங்கி
இகழ்ந்ததோர்விரலாலேற்றியிருபத்துநான்குங்கொள்ள
மகிழ்ந்தவைகடாவும்போதுவாஸ்துவின்வயிற்றிற்கெல்லி
லுகந்துதன்மூலைதன்னையுமுன்னிடமாய்த்தாக்கே. (504)

வேறு.

முளையதுமொழியிற்பத்தோர்விரற்கடைநீளந்தானும்
விளைவுறுவித்துநான்குவிரலளவாகக்கொண்டு
வளைவறக்கிடக்குமந்தவாஸ்துவன்வயிற்றிற்கெல்லி
முளையதுதென்மேல்மூலைமுதலிடமாகத்தாக்கே. (505)

வேறு.

முழமாஞ்சாண்பிடிகளிருமுழமிரண்டாம்
முழிவிரல்வளஞ்சேர்மூவெட்டங்குலமாம்
குழல்சேர்பற்றுவதுபாகியுடல்சாணொருநாள்
பத்தமேமத்திபத்திலாழிமுழவரையிரண்டே. (506)

எழுவிரல்நீளம்எட்டிமுளையடிக்கும்
மழவடியார்கள்மனைமுளையடிக்குமையம்
குழற்கரிகூத்தனெடுகாத்துடனேமத்து
அழற்பெரியாசனருளங்கிவளர்செப்பே, (507)

முளையடித்ததின் பலன்.

முளைதனையிடத்தில்வாங்கிமூலமேகுருவேயென்று
தளர்விலாவாசிகூறிதாக்கியெட்டடியடித்துக்
கிளைவளர்கயிறுபூட்டிக்கிளர்ந்தபால்மஞ்சளிட்டே
அளைப்பிலாமுளையடிப்பதாமெனமயனுஞ்சொன்னர். (508)

அடித்ததோர்முனையினுச்சியலறிடிவில்லம்பாழாம்
பிடித்ததோர்முனையின்கண்டம்பிளக்கிலோபிணிவந்தெய்தும்
படித்ததோர்மாதேசிந்திப்பறந்திடிற்பதிசாவாகும்
செடித்தவம்முளைதெறிக்கில்செல்வமும்சிதறுமென்னே. (509)

வேறு.

போற்றிதென்மேற்குமூலையிடமதாய்பொலியிடக்கையிலேமுளைவாங்கியே, சாற்றிலாமூலக்குருவைநினைந்துதான்தாழ்மையில்லாமல்வாழ்பவொன்றுமே, யேற்றியெட்டுஅடி அடித்தேதபலன்யின்மைதப்பிபிளந்திடிலேபிணி, பாற்றியுச்சியலறிடப்பாழதாம்பலங்கள்தாமுமே கண்டேயுரைத்திடே. (510)

இட்டுநட்டுமுளைதானெடிந்திடி
வின்மையில்லாதகேடுமிகுதியாம்
தொட்டுநட்டகயிறதுபூட்டியே
துணிவதாய்விகுவாகவிழுந்திடில்
நட்டுவைத்தமுளைபிடுங்கேகுதல்
நடுமுளைக்கனெடிசலறுதலுஞ்
சட்டமாய்மனையாளெசமானுக்குத்
தாட்சியென்றிசனான்றுரைத்ததே. (511)

உரைக்கவேயெஜமானவன்நாளுக்கு
உற்றவம்மனைதேறியகோலுக்கு
வரைக்களந்துகிழ்மேலுமறிந்துநீ
வண்மையாய்முளைமட்டுமடித்திடு
நிரைக்குத்தெற்குவடக்குள்ளகோலுக்கு
நெறிமுறைப்படிகண்டடித்தான்முளை
உரைத்தசோலுக்குத்தென்மேலுமப்படி
யுற்றகோலளந்தேமுளைபூட்டிடே. (512)

பூட்டிமேற்குகிழக்குமறிந்துநீ
புனிதமாகமனைக்குநூல்போட்டிடு
வீட்டுக்குள்ளமனையான்கோலுக்கு
வீதிகண்டுமனையைச்சதுரித்துத்
தாட்டுமூலைக்குமூலைக்கயிறிடு
தக்கவொத்தகுறைச்சலில்லாமலே
வாட்டமில்லாமலேமனைதாபித்து
வண்மையாயீசனார்தம்பதம்பணி. (513)

பணிந்துகீழ்மேல்மனைவாசலுக்குத்தான்
பதியுமேவலமுந்தியேபார்த்திடே
அணிந்துதென்வடலாகியவாசலுக்
கன்புபெற்றிடமுந்தவேபார்த்திடு
தணிந்தவுள்ளளவேகோலதிரண்டுமே
தக்கமூன்றுமேதான்வைத்தமைத்திடு
குனிந்துநீளத்தையொன்பதமைத்திடங்
குன்மமாவலம்பூதமேவாசலே. (514)

முழக்கயிற்றின் லட்சணம்.

பட்டுநூல்தருப்பையோடுபகருமால்விழுதுபண்பார்
கட்டனைப்பனையினாலும்நவிலுநூல்தேவரோடும்
திட்டமாமறையோர்தானுஞ்சிறந்தக்ஷத்திரியசூத்ரர்
மட்டவிழ்வைசியரோடுவகையதுபிரிவுசொல்லே. (515)

வேறு.

தேவர்க்குப்பட்டுநூலாஞ்சிறந்தமுப்புரியதாகும்
மேவியமறையோன்றர்ப்பைவிளங்குமுப்புரியாமன்றை
காவியால்விழுதுமூன்றுகவல்புரிவசியநாலாந்
தாவுசூத்திரன்பனைநார்தாவிருபுரியதாமே. (516)

வேறு.

மறையவர்தெர்ப்பைநூலின்வான்புரிமூன்றுகொள்க
விறையவன்கதம்பைதன்னுலிசைந்தமுப்புரியேகொள்க
பெருமெணவைசியர்க்காகில்பெண்ணைநார்புரியிரண்டே
அறிவுடன்சூத்திரர்க்கேஅத்திநார்புரியிரண்டே. (517)

முழக்கயிறு மண்வெட்டி சகுனம்.

மனைகோலவந்தமண்வெட்டிதானு
முனைமுறிந்திடினுமுனைபறித்திடினு
மினமுறச்சேர்க்குமிசைகொடியறுதலும்
வனைகுழலாளேவந்திடுந்துன்பமே. (518)

கொட்டுமுளைபறித்தல்கோத்தகயிறறுதல்
நட்டமுளைபறித்தல்நடுவேமுறிந்திசைத்தல்
விட்டவாசலடைத்தல்வேறேவாசல்விடுதல்
சட்டமானமனையாளுந்தாமேசாவள்தப்பாதே. (519)

வேறு.

பத்தியாங்கயிற்றற்றுவிடுகுதல்பண்டறைந்தமுளையைப்பறிக்குதல்
மத்திமத்தினில்வாசல்விடுகுதல்மாறிப்பின்னர்முளைகளைநாட்டுதல்
புத்திகொடிறும்போதங்களைந்நிறம்பூவின்மாறுமணங்களுங்குன்றிடும்
சத்திமாமுனிவேதத்திநூன்முறைதப்புமோயிதுகாரணிதன்னிலே.

வேறு.

கொட்டுமண்முறிபலாகாகொடுஞ்சிறாலறுதலாகா
நட்டகால்சாயலாகாநடுபடையிடியலாகா
வெட்டியமரங்களோசைவீறிட்டுவிழுவுமாகா
கட்டியமனைக்குக்குற்றங்களைக்குறியறிந்துகொள்ளே. (521)

மனையளக்குநூலறுந்தால்வந்துவிடுஞ்சாதன்
முனைமுனையேநீங்கிவிடின்மூசல்—மனையெசமான்
சிற்பிதவறிவிடின்சேர்க்கவேவீதலென்ப
கற்புடையநூலோர்கருத்து. (522)

மனை சதுரித்துத் தாபித்தல்

தற்புருஷமேகிழக்குதானகோரம்தெற்காகும்
இப்புவியில்மேற்குசத்தியோஜாதம்—ஒப்புடனே
வாமம்வடக்காகும்மையமேஈசான்யம்
நேயமுடன்நீயறிந்துகொள். (523)

நீகோலாயீசானம்நிச்சயமாய்ச்சொல்லுகிறேன்
வாகானநடுவதல்லால்மற்றொன்றுமில்லையென்றேன்
பாகானமாருதத்தேபல்பிணிகள்சேராகும்
தாபாக்கினிவளர்ந்தாற்றரியாதுகாலிகளே. (524)

காலிதரியாதுகன்னிமூலைவளர்ந்தால்
கோலில்பிணியுந்துயராகுங்—கோலியே
யீசான்யமூலையினிவளரவில்லறத்தில்
பேயாங்குடிகொண்டுபின். (525)

ஈசான்யமூலையென்றிழுத்துவைப்பார்நீயும்
வாசமுடனேவளர்ந்தால்மாடுசேரா—நேசமாய்
நற்சதுரமாகவேதானெடுத்தால்நல்லறங்கள்
யுச்சிதமாய்வாழ்வுமோங்குமே. (526)

தன்னைச் சதுரமதாய்த் தானெடுத்தாலம்மனைக்கு
வின்னருகுறையொன்றில்லைமேலவா—பின்னையே
யுச்சிவருமேடுமுத்தமேயீசான்யம்
மெச்சியிடுமென்றார்மயன். (527)

ஈசான்யந்தானறியாரிப்புவியுலுள்ளோர்கள்
பாசமுடன்வார்க்கைபசப்புவார்—கூசாமல்
முற்றமேயீசான்யமும்மேடுதான்சரியாய்
மற்றுநிறுத்தென்றார்மயன். (528)

மயனுரைசையைத்தட்டிமனையெடுப்பாரேல்
கயநோய்ப்பிணியிற்கலப்பார்—செபமாகுங்
கண்ணிருந்தபெருக்குக்காட்டிமனைகோலாய்
விண்ணுமண்ணுள்ளார்விளக்கு. (529)

மனைமுகமேகிழக்காகவபத்நின்மேற்புப்புறமும்
யினமாகதெற்குடனேமேல்வடக்கும்நினைவாக
யெண்ணியந்தமனைதனிலேயென்றிசையுங்கன்று
இன்னிதம்செய்யமயன்இனிமையுடன்இசைத்தனரே. (530)

வேறு.

அஷ்டதிக்குசதுரங்கோணமனும் அளவிட்ட நாலஹுவிசகாமனும் கஷ்டப்பட்டுகருத்துடனாக்குகட்டியமனைமாளியமைத்திடில், அஷ்டலட்சுமிவாசம்பொருந்துவாள் அளவிட்ட தனதானியம்பெருகிடும் இஷ்டமுடனுடுமாடுபெருகிடுமென்சனுமேயன்றுஉரைத்ததே.

ஈசான்யபார்வையிழுத்துவைப்பாரிந்நூலை
ஈசான்யங்கண்டவர்களிவ்வுலகில்—தேசாகப்
பேசாதளந்துபெருக்கமுழமாக்கிக்
கூசாமல்கோலரைக்கால்கொள். (532)

சொல்லுந்துருவம்நிலையறிந்துசுடர்கம்பங்கொண்டெதிர்நிறுத்தி
நெல்லுங்கடைக்கால்நூல்கட்டநிசம்கோவிற்கிரண்டங்குலமாகும்
நல்லவந்தணர்க்கொன்றேமுக்கால்நவில்க்ஷத்திரியர்க்கொன்றரையாம்
சொல்லும்வைசியர்க்கொன்றேகால்சூத்திரர்மற்றோர்க்கொன்றமே.

கோடிப் பாய்ச்சலினலுண்டாகும் பலன்

கோடியேகோடிபாயில்குலமகள்தனக்குமாகா
நீடியஎதிரிவாசல்நேரடிவாசலாகா
வாடியமுடியதாக்கவலமிடம்பார்க்கலாகா
கோடியமனையைப்பற்றிக்கொண்டவர்லோபராவர். (534)

கரணமாங்கோடிப்பாய்ச்சல்கருநியகட்டைப்பாய்ச்சல்
விரணமாயொன்றுக்கொன்றுவிலகிடாதுள்ளேநின்றால்
சொரணம்போமுயிரும்போகுஞ்சோர்ந்திடுங்கன்றுகாலி
பரணமாமொழியினுளேபதிமனைபாழதாமே. (535)

சல்லியம்

அப்போதளந்தவடியிருபத்தெட்டுடனே
தப்பாமற்கூட்டித்நகராதி—செப்பமுடன்
பன்னிரண்டான்மாறிபதினறுக்கீய்ந்தபலன்
உன்னியவர்க்கெல்லாமுறை (536)

உள்ளதுரையுந்தலையோடெலும்பீட்டி
வள்ளோடுசுள்ளிமகிழ்தெய்வம்—தெள்ளிய
சாம்பல்கரிசவம்தானியம்பொன்கற்றவளை
யாங்கோடுநாய்சாடியாம். (537)

தரித்துக்கண்டசல்லியத்தில்தவளைபிணங்கள்சாம்பலுடன்
சிரித்துப்புரமூன்றெரிப்பதுபோல்சிராத்துயாம்சிதூளதாம்
பரித்துத்தெய்வம்பசிநோய்பெரிதாம்பலமும் மழுகவிடும்பெரிதே
கருத்துக்கிசைந்தபொன்சாலைக்கண்டால்மனையுங்கனம்பெறுமே.

கனமாந்தலையோடெலும்புகண்டால்கருமந்தவறும்கடிவிஷங்கள்
இனங்கள்குடியிருக்கும்வினையும்வெளவாலடைந்துமனைபழுதாம்
யினமாஞ்சாடியெலும்புகண்டாலடைந்தகப்பவிஷந்தொடுக்கும்
மனமுங்கலங்கும்வறுமைபிணிமாறாத்துயரம்விளைந்திடுமே. (533)

அரைவிளங்கும்நான்காகவாயன்மேலேழா
அரைவரைந்துநாலேழரையில்—பிறையினோர்
நின்றவரைசல்லியமாம்நேரிறுவாதியாய்
வொன்றிவரச்சக்கரத்தையோது. (540)

கார்த்திகைநாளாதியாய்க்கண்டநாலேழரையுள்
சீர்தங்குரெண்டுவிட்டுமூன்றெண்ணி—பேர்த்துமேல்
நான்கைந்துமேலெண்ணிநல்லிரண்டுநீழெண்ணித்
தாங்கண்டுமுன்வலமாய்ச்சாற்று. (541)

ஒன்றியமுன்பின்கதிரோன்பகலிரவுள்
சென்றுவலஞ்சேரிசைவழியே—நின்றநிலை
ஆல்மகமநுஷமவ்வவிட்டம்நாழியடை
ஒருமிரண்டேயுரைக்கலுற்று. (542)

மனையையெழுநான்கறையாகவகுத்தேயாரல்முதல்வைத்து
முனையுங்கால்நாள்சென்றளவின்முகமேதென்பால்தலைகீழாய்
மனையுமிரவில்பாதிசென்றால்பதிவிட்டத்தைமுதல்நாட்டி
அனையுங்குளம்பினபிசித்துஅடவானித்துவாகுமிதே. (543)

ஆகநாட்டுமனைதனிலேவாசனிருக்கவாழமுண்டாம்
நாகஞ்சசியோடுநிற்கவுடம்நாட்டுமிடத்தின்காரிவரும்
பாகந்தனிலேகரியுமியும்பட்டமரங்கள்சாம்பலுண்டு
மேகந்தருசுக்கிரன்புதனும்முனைந்துகூடில்மிகநன்றே. (544)

நன்றாம்விளைந்தசந்திரனைநல்லோர்சேரின்வினையில்லை
குன்றும்சசியைகுசன்சேரில்கொடுஞ்சூனியமும்கொலைப்பழியும்
பண்டாம்பணியுங்கேதுவரின்படுவெண்கலங்கள்பாழ்ங்கிணறும்
அன்றேகாணுமிரவிவரின்ஆளவேதெய்வமடுத்திடுமே. (545)

உத்தமதிக்கில்பணிரெண்டில்ஓராரெட்டில்சல்லியத்தால்
மெத்தவறுமைநோயில்லைவேந்தர்பகையுமிடியுண்டாம்
யேதுமிடஞ்சல்வழிகாட்டுமினத்தில்சண்டையென்னேரம்
பத்தித்தொடரும்பூசைபீலிபடரும்பண்பாய்ப்பகருவதே. (546)

நாகஞ்சசியோடுறிற்கண்டம்நாட்டுமிடத்திற்காரிவரின்
வேகந்தருசேயுறின்நோக்கின்வினையுமிரத்தக்காட்டேரி
யூகம்பணிபூனைசுணங்குவோந்திகாலியோடுராகின்னம்
போதாகந்தவிருபலபூதம்புணரும்புலமும்பொல்லாங்கே. (547)

இயம்பினாற்கண்டத்தில்பானுமொன்றால்
பயனருஞ்சேய்பாம்பருக்கனெனில்
நயன்றதால்தீயெனவேயாகுமாம்நற்கோள்
நயந்துநிற்கில்ஆழநிலைநன்மையறி. (548)

ஆர்த்துரைத்தகண்டத்தில்நற்கோளைதீக்கோள்கள்
பார்த்திடுமேசல்லியமும் பாருறுமாம்—தீர்த்தக்கால்
திங்கள்சேயங்குடனேல்நிற்குமேசெய்புரைநாள்
அங்காட்டுக்காலென்றறி. (549)

விளம்புமதியாவுகண்டத்தில்மேவ
விளம்புமாவுமதிவெல்நாள்—விளம்பிய
நச்சரவின்முதுகென்பும்நணுகுமா
மெச்சவேதப்பில்லைமெய். (550)

பகரின்மதியொடுமோடுபயம்பொன்னாள்
நிகரில்லாக்கண்டத்தில்நிற்கில்—நிகரில்லா
பண்ணியவேதியனென்பும்பசுவென்பும்
பொன்னிருக்கும்பொன்னுரைநாட்புக்கு. (551)

புந்திமதியுடனிற்குமேநாயெலும்பு
புந்தியுரைநாளறையில்போதுறுமா—முந்தியே
வெள்ளிமதியுடநாள்நிற்குமேவெண்கலங்கள்
வெள்ளியுரைநாளறையில்வேண்டு. (552)

என்றுமேகண்டத்திருசுடர்மேலன்புமிக
வென்றியகோள்களுடன்றெய்வங்க—ளொன்றியே
நீலன்மதியுடன்நாள்நிற்கில்சனிபறையில்
பாலெருமையென்புண்டுபார். (553)

என்றுமோர்கண்டத்தில்நற்கோளைத்தீக்கோட்கள்
சென்றடைந்துநோக்கில்திபனவாம் —நன்றியிலும்
வாயுமுடியாணில்மாள்வன்தனிவென்றி
சாயுமாம்நற்கருத்துதான். (554)

தானமதிவெள்ளியுந்தண்டரும்புந்தியு
மூனமிலாகண்டத்தில்வாதானே—நானம்
வளர்ந்தருளும்செல்வம்மகிழ்ந்துலகில்நாளும்
துலங்குமிகநோக்கஞ்சொல். (555)

சொல்லிபநற்கோளுச்சம்கோள்பிறசேரலின்றிச்
சொல்லியபூமிதுறந்தாலுஞ்—சொல்தீது
தெய்வம்பிசாசென்றுசொல்லதில்மிக்கவு
நொய்துறுமென்றெண்ணினோம். (556)

கண்டத்துள்வந்தகரையுற்றநாளாகி
யுண்டென்றுமொவ்வாதேயுற்றுரைக்கக்—கண்டத்துள்
நீலனுளனாகில்நிற்கிற்சனியறையில்
சாலனிலனாகுஞ்சாற்று. (557)

ஆய்ந்தமனையகலநீளமளந்ததனை
வாய்ந்தவைத்தன்னேடுமாறியே—வேய்ந்த
எழுநான்கிற்கீந்ததனைமுழமாக
வருவதனையாறிரண்டால்மாறு. (558)

மாறியதுகொண்டசாண்மற்றெழுந்தாறினால்
மாறியதையங்குலமாக்கேதேறி—வீறும்
அனைத்துமுழஞ்சாணோடங்குலங்கண்டாழ
மினைத்தாலேயுண்டென்றியம்பு. (559)

உரைத்தவெழுநான்கறையிலுற்றமுழுநாளை
நிரைத்தவறையில்நிறுத்தி—உரைத்த
முறையவமேயெண்ணிமுழுமதிநாள்நின்ற
வரையவையேசல்லியங்களாம். (560)

என்றுமாரல்முதலாயெண்ணியந்தச்சக்கரத்தில்
அன்றுமதிநின்றநாள் அறையு—ளென்று
முதயத்திற்றேர்ந்துமுன்னதனையெண்ணி
மதியத்தைக்கண்டுமதி. (561)

பருதிபாரஞ்சாண்கீழேபாரதுகரியெனும்பு
தெரிகுசன்சாணேழுக்குள்செங்கல்லுமண்டையோடு
மரிதிசைபுதனெட்டுக்குள்மதமதச்சாடிசாம்பல்
சரிகுருவதற்கொன்பான்சாணினில்கருங்கல்லுண்டாம்

புகரிருசாணுக்குள்ளேபித்தளைவெண்கலங்கள்
அகர்சனிமுச்சாண்கீழேயடவுகக்கருத்தெனும்பு
யிகரொறிகயிற்றில்ராகுக்கிடிபாருகிணறுண்டென்று
வகரமாய்ச்சோதிடத்தில்மயனுரைசெய்தவாறே. (563)

ஆரூடமுதயராசியதற்குநாலேழுபத்தில்
காரியுமதியுஞ்சேரில்கரியொடுமுமியெனும்பு
வீரியமுடனேகாணுமேலதிற்கிணறுமுண்டு
சூரியனுதயமாகில்சூனியமிருக்குந்தானே. (564)

தானுமேகேந்திரத்தில்சனிசுபருடனேகூடி
யீனமாயிருக்கப்பார்க்கவின்குலமிணிதாமென்றே
பானமாமேழாமாதிதனிரெண்டாறெட்டின்மூன்றில்
ஊனமாயிருக்கவந்தானுற்றசல்லியங்களில்லை. (565)

இல்லையாறுடையோன்மூன்றிலிராகுகேதுடனிருக்கவேமண்டை
யோடு, அல்லதாயுதயம்நான்கேழுபத்திலிரவிதானிருக்கவவ்வடை
வேயாகுந், சொல்லரிதாய்க்கண்ணேட்டமுதயமாகுமாருடந்தொடுத்
துநின்றுகேட்டவர்க்கு, வல்குளிகன்சேய்வேளைவந்துகேட்டால்வஞ்
சமறச்சல்லியத்தைவகையாயோதே. (566)

கலைநிறைமதியுங்காரிகலந்துடனுயிரேநின்றால்
விலைசெறிவெண்கலங்கள்பித்தளையிருப்போடீயம்
சிலையதுகருங்கல்காணுஞ்செவ்வாயுங்கூடிநின்றால்
தலையதுதானேயென்றுதாழ்சடைமுனிவர்சொன்னார். (567)

தொட்டலக்கினத்திற்காரிசூரியன்செவ்வாய்ராகு
திட்டமாயேழுபத்தில்சீரணமதியுந்தோன்றில்
பட்டதோர்மரங்கள்கட்டைபானையோடெலும்புசாம்பல்
சட்டமாயிருக்குமென்றுசாற்றினார்மயனுமன்றே. (568)

மதிக்குநாலேழுபத்தில்மந்திரிபுந்திகூடில்
அதற்குமூன்றெட்டிலாதித்தன்வாலையாகில்
பதிக்குள்ளராசிபத்தில்பாவரொன்றில்லாராகில்
நிதிக்குள்ளபலனுமென்றுநிச்சயமயனார்சொன்னார். (569)

உதயமாரூடந்தன்னில்சனிசெவ்வாயிரவியுற்றால்
பதியுமேநாலாம்ராசிபதியனுமேபார்க்கிலந்த
அதிபதியுடனேகூடிஅவனையாகிலுந்தான்பார்க்க
சுதையமண்கறுப்புவெள்ளைதோன்றுமென்றியம்பினாரே. (570)

சுக்கிரனுடனேபுந்திதோன்றிடவஞ்சில்மன்னன்
வக்கிரமில்லாதங்கேமன்னவன்மதிக்குமைந்தன்
நிற்கவேநிதியமெல்லாம்நிலைத்திடுமில்லாவிட்டால்
பக்குவமுடனேவெள்ளிபார்தனில்மிகவுண்டாமே. (571)

உண்டதாய்நாலில்சேயுமுறுமதியுடனேகூடில்
சென்றதாய்நிதியுமுண்டுநிசழ்நாலாந்தனலாபத்தில்
பண்டதாயிரண்டுநின்றுபார்க்கரசனுமேலொன்றால்
நின்றிடநிதிநிட்சேபம்நிச்சயங்காணலாமே. (572)

காணலாந்தன்மயிரண்டுக்கனவினைறலாபகேந்திர
தானமாயிருக்கத்திங்கள்சுக்கிரன்சரமுமாக
சேணதாயிருக்கப்பார்க்கதிறமுள்ளநிதிநிட்சேபங்
கோணலில்லாமல்தானேகுறித்திடமயனார்சொன்னார். (573)

சாம்பலுமெலும்புங்கூடித்தழைத்திடுமனையினின்றால்
சோம்பலுமதிலேயுண்டாஞ்சுகபிடந்தன்னில்நின்றால்
பாம்பினாலச்சமுண்டாம்பாரியாள்வியாதியுண்டு
நாம்பணமூலகில்கண்டுநன்மயன்வகுத்தவாறே. (574)

களத்திரத்தானந்தன்னில்கரியொடுமுமியெலும்பும்
வளைத்திடுமனையினின்றால்மனைவியேமரணமாகும்
விளைத்திடுமிதனின்மேலும்வியாதியாஞ்சங்கடை
கிளைத்தெழுகுலத்திற்கெல்லாம்கேடென்றுமயனுஞ்சொன்னார்.

புத்திரத்தானந்தன்னில்பொருந்தியசல்லியத்தான்
சத்துவமானகல்லுந்தரித்திடமரங்கள்கட்டை
பெற்றிடுமெலும்புகூடிப்பெரியதம்மனையினின்றால்
அற்றிடுகுலங்களொன்றுமாகியின்மயனுஞ்சொன்னார். (576)

உயிருடனிரண்டின்மீதுஉற்றதோர்சல்லியத்தில்
மயிர்முனைகூடிநின்றால்மன்னவர்தனக்கேயாகா
தயிரியம்வீரியங்கள்சம்பத்துமழியுமென்று
குயின்மொழியனையமாதேகூறினார்மயனுமன்றே. (577)

சாடியுமெலும்புங்கூடித்தழைத்திடுமனையில்நின்று
லோடியகப்பலாழியுடைந்ததுபோலேயொக்கும்
வாடியேமனந்தளர்ந்துவாழ்மனைநாசப்பண்ணும்
பாடியேமயனார்சொன்னபயன்றனையறிந்துபாரே. (578)

கருங்கல்லோடெலும்புகூடிக்காரியத்தானந்தன்னில்
இரும்பொடுதாரவுங்கட்டையீயம்பித்தளையுமானால்
அரும்பொருள்நாசமாகியடிமனையிடியுமென்று
வரும்பொருளுணர்வாய்ப்பவறைந்தனன்மயனுமன்றே (579)

ஆறெட்டுப்பன்னிரண்டிலாயதோரிடமேசல்யம்
கூறிட்டுநின்றதாகில்குற்றமொன்றில்லைமாதே
வீறிட்டலாபமேழில்வித்தையுஞ்சென்மமொன்றில்
பேறிட்டசல்லியமுநின்றால்பெரும்பிணிமிகவுண்டாமே. (580)

சல்லியங்கிடந்தபூமிதன்னிலேமனையுண்டானால்
அல்லலேமிகப்படுத்துமலைச்சலுந்துன்பமுண்டாம்
பில்லிசூனியங்களாகப்பின்புமேநோயுண்டாகும்
வல்லிநாயகனானாலும்வந்திடுமிடுக்கந்தானே. (581)

தனமிகுசூனியந்தான்தருசரியெலும்பினோடு
பிணமுடன்காணவேண்டில்இயம்புவேனராசேகேளும்
மனதுடனிருபத்தெட்டுவாகுளபாகஞ்செய்து
வினவியதிங்கள்வீட்டில்விருப்பமாயிருக்குமென்றே. (582)

துன்னிமித்தம்.

நன்றானதினமதில்தேவாலயத்திருவிழாநடத்தல்தூர்க்குறி
நாடுமபவாக்குஇடிகொள்ளிசத்துருபகைநற்புரோகிதர்மனங்
குன்றல்தேங்காய்சிதறல்மனைவிருதுவாய்விலகல்குரலழல்
பிணப்பறையொலிஅன்றுபால்நிறைகுடங்கவிழ்தல்தும்முதல்
சிந்தல்ஆவிபெருமூச்சுவிடுதல்ஆயுதர்கள்கைம்பெண்பாம்பாட்டி
பகையாளிஅக்னிபஞ்சுசிதறல்என்றவிவ்வகையெலாங்காணி
லன்னாள்தீதுயிடர்வினையினாலழிவுறுமிவையெலாநீக்கியே
சுபமுகூர்த்தங்கொளஅன்புறுமயனாறைந்ததே. (583)

நன்னிமித்தம்.

கிரகவியல்பறிபுநாள்வாஸ்துவெழாநாளில்சுபகணிதபஞ்சாங்க
வோரை, கேடிலாபட்சிசரவேளைபஞ்சகநலம்கிருபைவான்நிர்மல
மதாய்ப், பாவுமக்கினிதினம்அனற்சிகைதன்யநாள்பாவுமக்கினிமண்
டலம், பாடாவரிச்சுங்கன்மாலஸ்தமனநீக்கிபகருவிஷகடிகை
பூச்சியம், திராசியாயிரண்டஞ்சுநாலேழுடையார்ஜெபமாய்மால்
பொன்வர்க்கமாய், சேயிரவிபதனமாயிரண்டேழுசுத்தமாய்
சேருமுற்பகல்குளிகனில்; உரையுமுத்திரமூன்றுமஸ்தமான்றலை
புணர்தம்ஓங்குபார்தோணிசுபமாய், யோககரணதிதிவார
சுபமுற்பகலில்உயர்மனையெடுக்கநன்றே. ((584)

துன்னிமித்தம்.

பொல்லாதநாட்கள்வாரம்பொருந்தாதாரசிமாதம்
செல்லாதவெள்ளிபாடுதியாச்சியமிராகுகாலம்
எல்லாருநன்மைவாஸ்துஎழுந்திருக்கின்றபோதும்
வல்லாண்மையுடையோரெல்லாமனைகோலலாகாதன்றே. (585)

வட்டமாங்கொடியவாரமந்தனோடருக்கன்செவ்வாய்
தொட்டிடுங்கிராணந்தீண்டில்சூழ்ந்திடும்பொல்லாநாட்கள்
விடமூடிடும்வெள்ளிபாடுவிஷமெனுங்கடிகைமப்போட்டம்
அட்டமிமழையோடமாவாசிபூரணையாகாதே. (586)

முட்டியகொடியவாரம்மந்தாரமழைமுறிதல்
தொட்டிக்குங்கிராணம்பத்தும்சூழ்ந்திடும்பொல்லாநாட்கள்
விட்டியும்வெள்ளிபாடுவிஷமெனுங்கடிகைநேரம்
அட்டமியுவாவிருத்தைசந்திராஷ்டமமுமாகாதென்றே. (587)

தருமனுநாலாங்காலிற்றழலுருண்முதற்காறன்னில்
பருதிதானிற்குங்காலம்பாவகநாளதாகு
மாமயஞ்சிலையேசெம்புமண்ணினன்மனைகள்செய்யி
லெரியருந்திடுதறிண்ணமெனச்சனற்குமாரன்சொன்னான். (588)

தேவாலய முகூர்த்தகாலம்.

சீர்பெருகுந்திரேதாயுகம்பதினேழாயிரத்திற்குமேலேசெல்லுகின்ற
பிரபவாயுதித்தவிருபத்தெட்டின்மேல்ஜெயவருடம்திகழ்
திங்கள்தன்னில்,தார்பெருகுமெட்டினில்சோமவாரந்தன்னில்திரு
வண்ணாமலைமுகூர்த்தம்,தருமகாம்பணிரண்டில்சுக்கிரவாரந்தனில்
தில்லையேநல்முகூர்த்தம்,பேர்பெருகுயேஷத்தில்திங்களீரைந்
தில்திருவாரூராலயங்குளமுகூர்த்தம்பெருகுவிடைதிங்களில்
மூவேழுநாளினில்பெருங்கடையூர்முகூர்த்தம்,சார்பெருகு
மாவணியோராறுதன்னினில்திருவானைக்காவல்முகூர்த்தம்,கனக
சபைபெருமுழத்தினல்லெடுத்தபெருவாலயம்கனிவுடன்மயன்
வைத்ததே. (589)

மனைமுகூர்த்தமாதம் முதலியன.

சித்திரைவிடையேசிம்மம்சிறந்தஐப்பசியுந்தேளும்
பத்தியாமகரத்தோடுபாங்குளமாசமாறில்
இத்தரைவாஸ்துஉந்தியெழுபதிதேதிதன்னில்
முத்தியாமனையைக்கோலிமுகூர்த்தங்கள்செய்விப்பாயே. (590)

பங்குனிஆனிபுரட்டாசிமார்கழி
பொங்குமனைகோலிபுந்தியிலே —மங்குமே
நாளாகும்பொல்லாங்குநாட்டிற்குஆகாது
பாழாகுமேமனையும்பார். (591)

ஆடியொடுமாசிஆகுமென்பார் அம்புவியில்
நாடிமனைகோலநன்றென்று—கூடியே
நாடாளும்பொல்லாங்குநாட்டிற்கேஆகாது
பாழாகுமேமனையும்பார். (592)

வேறு.

சித்திரையிடபம்ஆடிசிறந்தஆவணியுமாகும்
வைத்தவைப்பசியுமன்றிமன்னுகார்த்திகையுநன்றாம்
தைதனில்மாசியெட்டும்சாற்றியதிசைமாதப்போ
புத்தியால்மனைகள்கோலப்புகழுடன்நன்மையாமே. (593)

ஆனியும்நாரிமிக்கவந்தமார்கழியினோடு
கூனியேயிவைகள்நான்குங்குடிபுகார்மனையைக்கோலா
ரீனமுறுமாமிம்மதியில்மிகுமனையெடுப்பாராகில்
வானமருதேவரேனும்வாழ்வரிதென்னலாமே. (594)

வேறு.

ஆடித்திங்களில்ராவணன்பட்டதுமாலித்தேபெரும்பாரதமார்கழி
பிடித்தேபுரட்டாசியிரணியன்பெருமான்நஞ்சையுண்டதுமாசியில்
பாடிக்காமனையெரித்ததுபங்குனிபார்விட்டேகினன்மாபலியானியில்
நாடியிம்மதிகளில்நன்மனைகோலிடில்நற்றலமகன்றேகுவருண்மையே.

வேறு.

தையில்வானவர்கூட்டந்தக்கன்வேள்விவைகாசி
செய்பசித்திரையமிர்தஞ்சேர்ந்தவாவணியிடபம்
மைபணிசாகத்தேயாக்கர்பகருக்கார்த்திகைகளையவர்
வெய்யத்தோன்றலாகளிறுள்வீடுபெருக்கமிகன்றே. (596)

மாத பலன்

வேறு

செப்புஞ்சித்திரைசிறக்கமதிதனில்
ஒப்புமாளிகைபொவ்வவமைத்திடில்
தப்பில்லாமற்றனமதற்காலியாம்
மெய்ப்புடன்மயன்விரும்பியுரைத்ததே. (597)

பேசும்வைகாசிபெருக்கமாளிகட்டில்
தேசும்புருஷசெபப்பிரதக்களாம்
நேசமாம்பெண்டீர்நெருங்குஞ்சுபபலம்
மாசிலாமயன்மன்னர்க்கறைந்ததே. (598)

உள்ளாராயுரைக்கின்றேன்மாந்தர்க்கு
தெள்ளுமாளியில்திடமாளிகட்டிடில்
பிள்ளைகுட்டிகள்பெருமிருந்துபயம்
கொள்ளமயனுரைகூறியதண்மையே. (599)

சொல்லுமாடிதொடர்ந்தமாளிகட்டில்
சொல்லுங்காரம்பசுக்கள்துன்பமாம்
சொல்லுஞ்செல்வமுஞ்சிருக்கொலித்திடும்
சொல்லுமயனார்தொகுத்தசிற்பநூலே. (600)

உரைத்திடுமாவணிமாளிகைகட்டிடில்
நிரைத்திடும்பந்துநிதமும்வருத்துவாம்
உரைத்திடுமயன்வாக்குஉறுதிகாண்
பரைத்திடும்பஞ்சணைத்தார்க்கறைந்ததே. (601)

மாயுமேபுரட்டாசிமதிதனில்
ஏயுமாளியெழில்பெறக்கட்டிடில்
மாயுநோயுமகாரோகமெய்திடுந்
தாயுமேமயன்றயவாயுரைத்ததே. (602)

காணுமைப்பசிகனத்தமாளிகட்டில்
ஆறும்பெண்ணுமரியகலகமாய
பூணுமாடைபுகலுமாபரணமும்
வேணுஞ்சேதம்விளையுமென்மேலுமே. (603)

கனத்தமாசிகழறுங்கார்த்திகையில்
தனத்தமாளிதகைமையாய்க்கட்டிடில்
அனர்த்தம்வாராதன்புள்ளமாந்தர்க்கு
நினைத்தலட்சுமிநெருங்கும்வாசமதே. (604)

செல்லுமேதிருவாதிரைமார்கழி
புல்லுமாளிபுகழவேகட்டிடில்
கொல்லுமேபயங்குவலயந்தன்னிலே
வெல்லுமயனுர்விரும்பியுரைத்ததே. (605)

கிரணம்வீசுங்கிளர்க்குந்தைமாதத்தில்
முரணமாகமுகிழ்மாளிகட்டிடில்
மாணமேதருமக்கினிபயமுண்டாம்
சரணப்பண்ணித்தடுப்பதுநன்மையே. (606)

அருமையாகவுரைகின்றேன்சிற்பநூல்
பெருமையாய்மாசிபிலக்கமாளிகட்டிடில்
சிறுமைநீங்கிசிறக்குஞ்செல்வங்களாம்
ஒருமையாகவுரைக்குமயநூலே. (607)

மெள்ளவேபங்குனிமேன்மாளிகட்டிடில்
உள்ளரத்னமுறையுமாபரணமும்
தெள்ளுமட்டசிறந்ததோர்செல்வமும்
கொள்ளைபோமெனக்கூறினுர்சிற்பரே. (608)

வாரபலன்.

இனியவாரமெழில்பெறும்ஞாயிறு
தனிசெவ்வாய்தனிலக்கினிபயம்
குனியதிங்களுங்கூறிடுநற்சுபம்
துணிவுடன்மயன்சொன்னதுமுண்மையே. (609)

உண்மையாம்புதனுக்குரைக்கும்வியாழமும்
தண்மையாம்வெள்ளிதாக்குஞ்சுபாசுபம்
உண்மையாஞ்சனிக்குஉண்டகோரபயம்
வண்மைவாரமறிந்துமாடங்கோலே. (610)

வேறு.

ஞாயிறிங்கலையச்செய்யும்நலந்தருந்திங்களாகில்
சேயன்றீப்படுவதாகும்செழும்புதன்மகப்பேறுகும்
வீயமாம்வியாழன்பொன்னும்வெள்ளியே விளைவுண்டாகும்
ஆயதோர்சனிப்பெருக்காம்அகந்தனைக்கோலுங்காலே. (611)

மனைமுகூர்த்தத்திற்கு ஆகும் ஆகாத் திதிகள்.

தெரியுஞ்சுக்கிலபட்சமதுநேரிரசப்பிரத்தமாதம்
செரியுங்கிருஷ்ணபட்சமதுசிறந்தவிரவிபோனதின்பின்
பெருகுந்திருதிகைமுதலாய்பேசும்பௌர்ணமிதொடங்கி
உருகுஞ்சத்தமிதன்வரைக்குமோங்குசுக்கிலபட்சமதே. (612)

மற்றநாள்கிருஷ்ணபட்சமாதியாக
உற்றபிரதமையோங்கும்சஷ்டிகளும்
மற்றுமேகாதசிமாண்தருகணத்தை
பெற்றதிதிபலன்போர்த்தவானியே. (613)

வாரிட்டாதுதியைவருசத்தமிகளும்
ஓரிட்டதுவாதசிஉறுபத்திரை
நேரிட்டதிதிநிகழ்பலன்பந்தனம்
கூறிட்டமயன்குறித்ததுண்மையே. (614)

தக்கவட்டமிதாக்குந்திரிதிகை
பக்கமேதிரயோதசிபண்புடன்
மக்கண்சேயவருந்திதியாமிவை
சிக்குஞ்சுபமெனச்செப்பினர்சிற்பரே. (615)

சீர்பெருஞ்சதுர்த்திநவமியும்
தார்செறியுஞ்சதுர்த்தசிதன்முதல்
ஏர்பெருமரிக்கத்திதிபலன்
போர்செறிமிருத்துபயம்புகலுவாம். (616)

சொல்லும்பஞ்சமிதோற்றுந்தசமிதான்
வெல்லும்பௌர்ணமிவேண்டும்பூரணதிதி
புல்லுமிதின்பலன்போற்றுஞ்செயப்பிரதம்
அல்லுமமாவாசியர்த்தவானியே. (617)

நட்சத்திர பலன்.

ஓதுமஸ்தமுரையுமுறுரோகணி
நீதியாயவிட்டம்நிறைசதயமும்
கோதிலாமிருகசிரம்குணபூசமும்
தீதிலாத்திருவோணமுநன்மையே. (618)

நன்மையாஞ்சுவாதிநல்லநுடமும்
துன்மையில்லாத்துடர்ந்தசித்திரையும்
வன்மைரேவதிவளமுத்திரட்டாதி
பன்மையுத்திராடம்பார்க்கச்சுபமிதே. (619)

பார்க்கவுத்திரம்பகருநட்சத்திரம்
ஏர்க்கவேபதினான்குமின்பசுகம்
தீர்க்கமாய்சிற்பநூலைத்திரட்டியே
மார்க்கமாகமயன்சொன்னவாறிதே. (620)

யோகபலன்.

தங்குமேசுபந்தந்திடும்பிராமியம்
பொங்குமாகேந்திரம்போற்றுநற்சாத்தியம்
எங்குமேசுபமேற்குந்சுப்பிரம்
சங்கமாயிசுமான்தருஞ்சௌபாக்கியம். (621)

காணுந்துருவங்கழறும்வைதிருதியாம்
வேணுஞ்சோபனம்விரும்புஞ்சுகமதாம்
தோணும்பிரிதியுந்தோற்றுஞ்சித்தங்களும்
பூணுமியோகம்புகலும்பன்னுன்கரோ. (622)

மாதுவியாகாதம்வழுத்துங்கண்டங்களாம்
கோதுசூலங்குறிக்கும்விஷ்கம்பமாம்
ஓதும்வச்சிரமோங்குமதிகண்டமாம்
பூதியாம்வியதிபாதம்பொல்லாதிதே. (623)

பொல்லாதையாபுகலும்பரிகமாம்
நல்லாவைதிருதிநவிலும்யோகங்கள்
பொல்லாப்பென்றுமேபுகலும்சிற்பநூல்
புல்லாவொன்பதும்போற்றும்பொல்லாதிதே. (624)

கரண பலன்.

பண்ணும்பாலவம்பகரும்பவமுடன்
அண்ணலாருமையறையுங்கௌலவம்
எண்ணுந்தைதுலேயேற்குங்கரசியாம்
நண்ணும்பத்திரைநற்சுபமீயுமே. (625)

உய்யுநாகமுமோங்குஞ்சகுனியும்
பையசதுஷ்பாதம்பகருஞ்வனசையும்
மெய்யவேகிமத்துக்கினமைந்தும்
பொய்யகாணம்புகறுப்பொல்லாதிதே. (626)

ஸ்தம்பம் நாட்டும்
மாதபலன்.

மேடாதிமாதந்தம்மில்மிளிருமேசுபங்கள்செல்வம்
பாடாதல்பசுக்கள்நாசம்பசுவதுவிருத்திமைந்தர்
வாடாதவன்னபானம்வளர்சுகந்தான்யலாபம்
கூடாதஅங்கிகொற்றங்குளிர்சுபமசுபமாமே. (627)

வாரபலன்.

ஞாயிறுசெவ்வாய்தீயாம்நற்பக்கமல்லாத்திங்கள்
ஆயிடுஞ்சோகம்பூர்வபக்கத்துத்திங்கள்மைந்தர்
வாயுறும்வெள்ளிதேவர்மான்குருதணவரத்துப்
பாய்புதன்சனிவாரத்துப்பகர்பலன்திறமதாமே. (628)

நட்சத்திர பலன்.

கோதில்மான்றலைஉரோணிகுதிரையுத்திரமூன்றத்தம்
சோதிசித்திரைபூசங்கள்தோணியோடநுடமோணம்
ஏதமில்லவிட்டஞ்சுண்டனிவற்றினில்தம்பம்நாட்ட
ஓதியமைந்தர்லாபம்உற்றவைசுகமேயெல்லாம். (629)

ஆய்ந்ததோர்தம்பம்நாட்டலதுபுதுகிருகத்திற்காம்
வாய்ந்ததுமகேசன்திக்கில்மாண்புறநாட்டல்வேண்டும்
ஏய்ந்ததோரிரண்டாங்கட்டிலிவ்வணஞ்செய்க
மாயைகாய்ந்தசீர்முனிவர்சொன்னகருத்தினையுணர்மினீரே. (630)

ஸ்தம்பம் நாட்டுங்காலங்களில் கிரகங்களின்
சஞ்சார பலன்.

நாட்டுங்கங்குலிற்பிற்பாதிநவில்ரோணியாரல்சூரன்
வாட்டியவதியம்ஆரல்மகமத்தம்மூலம்பூசம்
கேட்டபாற்குனியேநாவாய்கெடுகுசன்ஆகாதென்னே
காட்டியஇல்லாளுக்குக்கடிந்தநாள்எவைக்குமாகா. (631)

புந்தியேயஸ்தம்ரோணிபுகலுமான்பரியுத்திரத்தோ
டந்தச்சித்திரையில்நன்றாம்அடுத்திடுங்குருவும்ரோணி
தந்தமான்பூசமோணதக்கவுத்திரங்கள்வாவி
இந்தநாள்மீன்களோடேஇயைசெல்வம்மைந்தர்நல்கும். (632)

உற்றசீர்சுக்கிரன்றன்இறைபுனர்ப்பூசம்விட்டம்
முற்றில்சித்திரையேசெக்குமுன்னுறத்தான்யலாபம்
நற்புகர்வழாந்தானம்காடிடில்பலனேநன்றாம்
பொற்புறுகிரகம்பத்தேழ்பொருபகையுடனேயாகா. (633)

மந்தனேயநுடங்கேட்டைமன்னுமுத்திராடஞ்சோதி
தந்ததோர்பாணிபொய்கைதானுறிற்சனியன்கேடாம்
வந்துமேபிரமாக்கன்மருவுமேயாதலாலே
எந்தநாளும்நன்றாகயிசைதலேசுபமாம்மாதோ. (634)

வேறு.

கூறும்பரணிகுறிக்குமிரண்டாம்பாதம்
வீறுங்கார்த்திகைவிளம்பும்நாலாம்பாதம்
கோறும்ரோகணிகுறிக்குமுதற்பாதம்
மாறுமேழிலும்வருத்தம்பருதியே. (635)

பருதிநின்றுபகர்மாளிகட்டிடில்
குருதியக்கினிகொடியபயம்சொலும்
பருதிபோல்மயன்பகருநற்சாத்திரம்
நிருதிமாந்தர்க்குநோயுரைத்ததே. (636)

செப்பிடுமதிசிறந்ததோர்கார்த்திகை
ஒப்பிடுபூசமோங்குமகமுடன்
வெப்பும்பூரமும்விளங்கிடுமஸ்தமும்
தப்பிலாரேவதிகண்மூலம்பொல்லாதிதே. (637)

பொல்லாதையாபுகலுங்குருமொழி
கொல்லும்நட்சத்திரங்குறிப்பேழிலும்
வெல்லுமங்காரகனிருக்கவீடுகட்டில்
புல்லும்புத்திரர்புகலவானியதே. (638)

தோஷ பரிகாரம்.

வஞ்சிகேளும்வழங்குமகரமீன
மிஞ்சுமகாமேவுங்கடகமும்
செஞ்சுமேபூரணசலராசியாம்
கஞ்சமயனூர்கழறுநூல்பொய்யாதே. (639)

வகுத்திடுந்துலாம்வழங்கும்விருச்சிகம்
தொகுத்திடுமேஷம்தோன்றுமிகப்பாதம்
பகுத்திடுஞ்சலராசியெனப்பகர்
நிகழ்த்துமயனூர்நோயுரைத்ததே. (640)

பாரிற்கும்பம்பகுக்கும்ரிஷபமாம்
சேரசிங்கஞ்சிறக்கவிவைகளும்
சீருமர்த்தசலராசிசெப்புக
பேருமயனூர்பேணியுரைத்ததே. (641)

பாரெலாங்கன்னிபகருமிதுனமாம்
ஏருந்தநுசுயேற்கவிவைமூன்றும்
கார்நிறச்சலராசிகருதுவாய்
சீரும்பூரணஞ்சேர்சலராசியே. (642)

ஏந்துமிந்தஎழில்பெறுராசியில்
போந்தமாளிபுகலவமைத்திடில்
வேந்தனுத்தமமானவிராசிதனில்
கூந்தல்வேனில்குருசுக்கிரனுமே. (643)

ஆமேசந்திரனறையும்பார்வைதனில்
தாமேமாடந்தனிமாளிகட்டிடில்
போமேயங்காரகதோஷம்பொலிவில்லை
நாமேசிற்பநூல்நவிலவுரைத்ததே. (644)

பொன்னுமஸ்தம்புகலுமசுவினி
மன்னுமுத்திரமாமிருகசிரம்
வின்னும்ரோகணிவிளங்குஞ்சித்திரை
துன்னுமாறுந்தொகுப்பாயுரைத்ததே. (645)

உரைத்திடும்பதியோங்கும்புதனிருந்
திரைத்திடும்பதிதன்னிலிருந்தாலும்
உரைத்திடும்பதியுச்சத்திலாவது
குரைத்திடமாளிகூட்டுவதாட்சியே. (646)

ஆட்சியன்றியணிபெரும்புத்திரர்
மாட்சிமேவுமதிகமாமன்னவர்
காட்சியாவுங்களித்திடுமிப்பலன்
தாட்சியின்றிதணியவறைந்ததே. (647)

ஆயவுத்திரமானதிருவோணம்
தூயவுத்திராடமுத்திரட்டாதியும்
ஏயபூராடமேற்குமாரோகணி
சாயுமிருகங்கழலுறும்பூசமே. (648)

பூசமேவுபுகலுமாயிலியம்
வாசம்வீசும்வகுக்குநட்சத்திரம்
நாசஞ்செய்யும்நவிலவொன்பதும்
நேசஞ்செய்யநெருங்கும்பலமதே. (649)

செல்லவுத்திரஞ்செழிக்கக்குருநிற்கில்
வல்லலக்கினம்வழங்குமுச்சத்திலும்
செல்வமாளிசிறக்கவேகட்டினல்
நல்லலட்சுமிநவிலும்வாசமதே. (650)

நண்ணுங்கேட்டைநவிலும்புனர்ப்பூசம்
ஒண்ணுஞ்சித்திரையோங்குமசுவனி
வண்ணமேவும்வகுக்கும்பூராடமாம்
அண்ணலாருறையறையுமவிட்டமே. (651)

மேவிடுமநுஷம்மேன்மைவிசாகமும்
தாவுமேதிருவாதிரைதன்முதல்
மேவுசதயம்விளம்புமிப்பத்திலும்
தூவுசுக்கிரன்தோன்றலுநன்மையே. (652)

நன்மையாம்பதிநவிலுஞ்சுக்கிரனும்
வன்மையாகவலுத்துமேநின்றிடில்
புன்மையாமாளிபுகலவேகட்டிடில்
துன்மைநீங்கிசுகந்தருமுண்மையே. (653)

வருஞ்சதயம்வகுக்கும்பூரட்டாதி
இருஞ்சுவாதியெழிலுத்திரட்டாதி
ஒரும்பாணியாமோங்குமவிட்டமும்
தருவநுடமுந்தாங்குங்கேட்டையதே. (654)

இந்தநட்சத்திரபலனெட்டிலும்
தொந்தமேவுந்தொடருஞ்சனிநிற்கில்
அந்தமாகவறைமாளிகட்டிடில்
பந்தமற்றுப்போய்பாழுமடைவதே. (655)

அடையும்பூதமறையுமாளிதனில்
படையுமற்றுப்படையுமூதேவியாள்
அடையுமேபிரமராக்ஷஸனெப்போதும்
இடையுஞ்சீதேவியெழில்வாக்குத்தப்பாதே. (656)

சொல்லுமேவுந்தொடருமிராகுதான்
வெல்லும்லக்கினமேகமெதிர்சாரம்
புல்லுமேபதினான்குநட்சத்திரம்
கொல்லுமிருத்துவசாரம்பொல்லாதிதே. (657)

குரு சுக்கிரன் அஸ்தமனபலன்.

கூறுடன்சுக்கிரன்குருதன்முதல்
வீறுமஸ்தமனமீதுதன்னிலும்
கூறுமேவுங்குறிக்குநீசத்திலும்
தூறுமேபகைதோன்றலுமுண்மையே. (658)

உண்மையாகவுரையுஞ்க்ஷேத்திரபதி
தண்மையாஞ்சத்துருக்களிருக்கினும்
வண்மையாய்மாளிவருக்கவேயாகாது
கண்மையாமயன்கண்டுவுரைத்ததே. (659)

கூறுமாளிகுறிக்குமதிகாரம்
தூறுமெந்ததுரைசாதியானாலும்
சேருமந்தசிறந்திடுஞ்சாதிக்கு
கோருங்கிரகம்குறிக்கப்பொல்லாதிதே. (660)

குறிக்கசத்துருகூடவிருக்கினும்
தெறிக்கவேதிகழஸ்தமனப்போதும்
முறிக்கநீச்சமுடிவுதானத்திலும்
மறிக்கமாளியமைப்பதுண்மையே. (661)

கூறுந்துன்பங்குறிக்குமனிதர்க்கு
நேருஞ்சங்கர்ப்பநிகழுமெக்காலமும்
கூறுமன்னியர்கூட்டமிட்டேவந்து
கூறுமக்கிரமமாகக்கொள்வார்களே. (662)

இலக்கின பலன்.

பாலசிங்கம்பகரும்ரிஷபமாம்
ஞாலகும்பம்நவிலும்விருச்சிகம்
கோலமாமிந்தகுறிக்குஞ்க்ஷேத்திரங்கள்
ஏலவேநன்மையெழிலுத்தமாகுமே. (663)

சாருங்கடகஞ்சாற்றிடுமேஷமும்
சேருமேதுலாஞ்சிறந்தமகரமும்
நேருநாளுஞ்நிகழ்சாலக்கினம்
பாருமத்திபம்பகர் சிற்பநூலிதே. (664)

ஏயகன்னியேயெழிலாமிதுனமும்
தூயமீனந்தொடருந்தநுசுவும்
ஆயவிங்நான்குமரையுஞ்சுபாபலன்
நேயமாமுபயராசிநிசமதே. (665)

ஆனதிருலறைமாளிகட்டிடில்
கானமேவுங்கடுராசிபொல்லாது
ஊனமாகவுறையும்லக்கினபதி
போனகிரகம்புகலப்பொல்லாதிதே. (666)

இலகுஞ்சத்துருக்ஷேத்திரந்தன்னிலும்
குலவும்லக்கினங்கூறுங்கணேசுரன்
அலகுஞ்சத்துருஅறையுஞ்க்ஷேத்திரம்
கலகலக்கினம்கருதுபத்ததே. (667)

இருந்தமாளியெழிலாயமைத்திடில்
பொருந்தவேளைபுகலப்பொல்லாதிது
பருந்துமேவும்பாரதீனமாய்ப்போகும்
தெரிந்துமயனுர் தெரியவுரைத்ததே. (668)

எஜமானனுக்கு ஆகாத விராசி.

சொன்னமேவுங்கிழக்குத்துவசாயம்
மின்னும்விருச்சிகராசிக்குமாகாது
துன்னுமேவுதென்கிழக்குதூமாயம்
என்னுமீனராசிக்குமேற்காதே. (669)

அறியுந்தெற்கு அருள்சிம்மாயமாம்
உறுதென்மேற்குவுரையுஞ்சுநகாயமாம்
செறியுமேற்குசிறந்தரிஷபமாம்
நெறியுந்தநுவிராசிநோககாதே. (670)

அச்சமானவரையும்வடமேற்கு
நிச்சகாராயம்நேருந்துலாவுக்கு
உச்சமானதொருபோதுங்கூடாது
சொச்சமயனார்சுளுவாயமைத்ததே. (671)

உண்ணுமேவும்உரையும்வடக்கதாம்
நண்ணுங்கஜாயம்நவிலவுரைக்கின்றேன
தன்னுமேஷவிராசிக்குமேதவிர்த்து
அன்னமயனார் அறியவுரைத்ததே. (672)

இலங்குமேஈசான்யங்காகாயமாம்
துலங்குகும்பதோன்றலுக்குமாகாது
நலங்கொள்மகரம்நவிலுமிதுனமாம்
பலங்கொள்சிங்கம்பகரும்ரிஷபமே. (673)

சொல்லுமிக்கதுலங்குமிராசிக்யாளர்
வெல்லுங்கிராமம்விளங்கிடுமத்தியில்
புல்லுமாடம்புகலவேகட்டொணு
தல்லுமயனார்தமிழிலறைந்ததே. (674)

கூட்டினல்மாடமாளிகாண்பின்னமே
கட்டினல்தோஷம்கருதுமானியாகும்
கட்டினல்மாளிகனமுமேயாகாது
கட்டினல்சீரணங்கடுகடைவரே. (675)

தாராபலம்.

பிறந்தநாளிரண்டுகான்கும்பேசுமொன்பானெட்டாறும்
சிறந்தசீர்வகையுமற்றுஞ்சேர்ந்திடுஞ்சம்பத்தாகும்
அறிந்தநூலனைத்தும்வல்லோரைந்துமூன்றேழுநீக்கி
சிறந்ததாய்மொழிந்ததெல்லாந்திடமுடன்பொருந்துங்காணே. (676)

மூன்றைந்தேழ்நாண்முதலொன்பதிற்றீதாதியந்தமூன்று
மேன்றவிக்காலிடையொன்பதிற்றீதின்பவென்பவல்லா
தான்றமதியட்டமதினமெண்பத்தெட்டாயகாலிற்
றோன்றியவைநாசிகங்கழித்தாற்சுபநாளென்பாரே. (678)

தனதுநாளும்பின்னாளும்சாற்றிடுநாலுமாறும்
வினவியெட்டொன்பாநாளும்விருத்தியேமிகவுமுண்டாம்
பின்புமூன்றைந்துநாளுமேழாநாளிவையேயாகா
நினைவுமுன்சொன்னநாளில்நீமனையெடுக்கும்வாறே. (679)

உற்றதோர்மனையில்வரும்ஓரையில்உள்ளதாரகைமூன்றும்பிருத்து
வாம், சப்தநாள்ஒத்தஜீவனென்றேயறிதக்கபின்னொன்றுமேஜீவனில்
லையே, மற்றவெட்டுடனாள்நிறைஜீவனுமாகவகமேநாள்உயிரில்லை
யேழ், பெற்றிடும்கமலச்சீவனில்லாமனைபேச்சுமூச்சில்பிரேதத்துக்
கொப்பதே. (680)

வாஸ்து பூசை செய்தல்.

இதனைக் குரு முகூர்த்தமாய்க் கேட்டறிக.

திடமாய்வாஸ்துபூசைக்குத்தீர்த்தமெடுக்குங்குடந்தோளை
விட்டுநழுகேல்நழுமாயின்மேலும்மேலும்தொந்தரவே
விட்டுத்தோளைக்குடம்வீழ்ந்தால்வீயுங்குலமேவுடைபடுமேல்
கட்டுமெஜமான்கேடுறுவன்கவலைபெறுமேகுலமாதோ. (681)

கால் உடல் தலையற்ற நாட்கள்.

உன்னுகார்த்திகையுத்திரமுத்திராடங்காலற்றநாள்
அன்னுமிருகசீரிஷஞ்சித்திரையவிட்டமுடலற்றநாள்
பொன்னும்புனர்பூசம்விசாகமுடன்பூரட்டாதிதலையற்றநாள்
மன்னுமிவையொன்பதுநீங்கமற்றதெல்லாமுழுநாளே. (682)

காலற்றன இடையற்றனகனதலையற்றனநாளில்
கோலக்குயமடவார்தமைக்கூடின்மலடாவர்
மாலுக்கொருமனைமாளிகையிவைகோலிடில்பாழாம்
ஞாலத்தவர்வழிபோகினும்நலமாவதுமிலரே. (683)

தங்குபுத்திரன்தானறுங்காலற்றால்
பொங்குசெல்வமேபோகுஞ்சிரமற்றால்
பங்குசிற்றிடையற்றநாள்பாரிலே
பங்கம்செய்திடுமென்றேபகர்ந்தனர். (684)

மங்குமிப்படிமண்ணில்மனைசெய்தால்
இங்குமித்தனைநாட்களாகாதரோ
பொங்குமேமுழுநாளில்புரிந்தக்கால்
சங்கமாகிடும்வேந்தன்சபையைப்போல். (685)

நட்சத்திர பலன்.

காழியுமூரசுதோணிநல்லதோர்சதயநாளில்
வாழியாய்மனைமுகூர்த்தம்வருவதேதனங்கள்சேத
மூழியால்நோயுங்காணுமுறன்முறைநோக்குமாகுஞ்
சூழவேமனையும்பாழாம்சுருதியால்மயனுரைத்தார். (686)

தேருடன்மும்மீன்மாசிதிறம்புள்ளுமாடியஸ்தம்
பாருடனுத்திரமுநாளில்பண்புடன்முகூர்த்தஞ்செய்தால்
சீருடன்தனங்கள்சேரும்செப்பியமனையும்வாழும்
பேருடன்மயன்தானித்தைப்பெருமையாயுரைசெய்தாரே. (687)

அன்புடன்றரகமூங்கில்அரவமூப்பூரமாடை
தென்புடன்விசாகமூலம்திறமுடன்மனைநாளாக
பண்புடன்பசுக்கள்சாவுபாக்கியம்மக்கள்சேதம்
வன்புடன்மயன்தானித்தைவரிசையாயுரைசெய்தாரே. (688)

மனைகோலற்காகாக் காலம்.

விரிகதிர்மாமகம்விசாகந்திங்களாம்
அருங்குசனுகிரையாயில்யம்புதன்
விரைகுருசதயமும்வெள்ளிரோகணி
இரைசனிபூராடமெரிக்குநாட்களே. (689)

அஞ்சுமகந்திருதிகையுமநுடமொருமூன்றுநவம்
மிஞ்சுகார்த்திகையுமிக்கமேவொணாரோகணியும்
கஞ்சுநான்குத்திரமிந்நாளில்மனைகோலுமவர்
துஞ்சுவரவ்வாண்டுக்குள் துய்யமயன்சொல்லிதுவே. (690)

செங்கதிரோனுதித்தநன்னாட்பரணியாகா
செழுமதிக்குச்சித்திரைசெவ்வாய் உத்திராடம்
பொங்குபுதனவிட்டமென்பர்பொன்னிற்கேட்டை
புகர்பூராடஞ்சனியிரேவதியினாளில்
மங்கையரைமணம்புணரில்விதவையாவள்
மனையெடுக்கிற்பாழாகும்வழிநடக்கார்
செங்கயற்கண்ணாள்சேரமலடியாவாள்
சிறுகுழந்தைபிறந்திடினுமரணந்தானே. (691)

வீடாலயமடம்விக்கிரகந்தோணிசந்தை
பாடாவிதியான்மனைகட்டல்—கேடாகும்
ஆதிமுதல்மூன்றுமவிட்டமுதல்ஐந்தும்
சோதிமுதல்நான்குந்துயர். (692)

வாஸ்து நிலையறிந்து குழிகெல்லல்.

சீர்த்திப்புருஷன்விழிநோக்குமனையையறிந்துசெயவேண்டிற்
பார்த்துமனையைநாலேழாய்ப்பகிர்ந்துக்காலிற்பதினேழுஞ்
சாற்றுந்தலையிலீரைந்துந்தள்ளிநடுவிலொருபங்கில்
ஏற்றமுகூர்த்தமாமென்றுமின்பம்பெரிதுமுண்டாமே. (693)

கிடந்தபதியைநாலேழாய்க்கீறியதன்மேல்பரிவைத்தே
யிடங்கொள்ளநடநின்றமட்டுமிழுக்கவருமேதீயந்தம்
குடந்தைதசமும்சூரியனும்குபேரனுதிப்பதெனவுரையே
நடந்துசோமன்சலத்தினிலும்நல்லமனைகள்தமைக்கோலே. (694)

உரைசேரின்பம்தில்வெப்பம்உலையுமென்றுமுள்வினையாம்
வரைசேர்ஜலத்தில்வாழ்வுண்டாம்வறுமைகாணுஞ்சூரியனும்
விரைசேர்குழலாய்மதிவாழ்வுவிதித்தபடியேமண்டலத்தில்
பரிவால்பாரிற்மனைக்குரைத்தபந்தந்தானும்பார்த்துரையே. (695)

பூமியில் முகூர்த்தம் செய்யுமிடம்.

வாசமாம்பூமிதன்னில்வகுத்துநாற்கூறுசெய்து
பேசிமாநிதிபதங்கள்பெரியதோர்வித்தைசெல்வ
மீசனூர்கண்டந்தன்னிலினமனையெடுக்கவேண்டும்
ஓதினார்தமிழினாலேவுத்தமமிதுவேயென்றார். (696)

முகூர்த்தம் செய்யும்போதுண்டாகும் சுபாசுபம்.

உன்னியமுகூர்த்தஞ்செய்யஉகந்திடும்போதிலங்கே
துன்னியேமணிசேகண்டிதுலங்கிடுசங்கீதமேளம்
கன்னியர்புரவியானைகண்டுமன்வார்த்தைகோவும்
பன்னியமனையில்செல்லவருவதுபட்சிநன்றே. (697)

வாழ்ந்திடுமனையைச்செய்யமகிழ்ந்திடச்சங்குமேளம்
சூழ்ந்திடமணிசேகண்டிதுய்யசங்கீதந்தன்னி
லாழ்ந்திடும்புரவியானைஅங்கதுகமுதைநாதம்
தாழ்ந்திடக்கேட்குமாகில்தாழ்விலாமிகவாழ்வாமே. (698)

முகூர்த்தஞ்செய்ய குழிகெல்லும் போதுண்டாகுஞ் சுபாசுபங்கள்.

மனைதனில்வந்துநின்றுவாஸ்துவினிலையறிந்து
வினவியவிடத்துமேவிவிரும்பியேமுகூர்த்தஞ்செய்ய
கனமெனுமண்ணைவெட்டக்கருதியகுழியிற்குள்ளே
இனமெனுஞ்சகுனங்காணுமியல்பதுவிளம்புவேனே. (699)

நல்லதோர்நாளும்பக்கமுகூர்த்தமும்பொருந்தக்கேட்டு
கெல்லித்தான்பார்க்கும்போதுகெடுகரிநோயதாகும்
புல்லியவுமியேகாணிற்பொருளதுகேடுசொல்லு
மெல்லியவிறகுகாணின்வியன்குலங்கேடதாமே. (700)

திண்டிறலெறும்புதேளுசிதலொடுகட்டைபொல்லா
அண்டமுமுதிருங்கேசம்அமர்ந்திடின்முற்றும்பொல்லா
வெண்டலையோடுகாணில்வெறுமையுங்கேடுமென்று
தண்டமிழ்நூல்வல்லோர்கள்சாஸ்திரத்துண்மைபாரே. (701)

மண்டுகமரணைபல்லிவன்புழுச்சிலந்திவண்டு
நண்டுக்ணடக்குமாகில்நன்மையேமிகவுமுண்டாங்
கொண்டெழுமுடும்புபாம்புகொடியதேளாமைபூரன்
மண்டெலிகிடக்குமாகில்வாழ்வுபோய்வெந்துபோமே. (702)

கல்லொடுசெங்கல்சிப்பிகண்டுகண்கனக்கவாழ்வாம்
நல்லுயிர்ப்பிள்ளையென்றுநயம்படப்பெருகிவாழ்வார்
பல்லொடுவோடுசாம்பல்படுகரிவேர்க்குந்துத்தி
இல்லத்தில்சாவுகேடாயிருவினைவிளையுமாதோ. (703)

ஈண்டியதனத்தைக்காணிலின்பமாந்துன்பமில்லை
காண்டகுதனங்கள்சேருங்கவலையாங்கல்லுங்காணில்
பாண்டரும்பசுவின்கொம்புந்தாணியஞ்செங்கல்வெள்ளி
வேண்டியயோகமுண்டாமிருந்திடுஞ்செல்வந்தானே. (704)

பொன்னுடன்வெள்ளிசெம்புபொருந்திடினன்மையாகும்
பின்னுமோடிரும்போடையம்பித்தளைமத்திபந்தான்
கன்னல்சேர்மொழியினாளேகருங்கல்லோடெலும்புகாணில்
மண்ணியமனையாள்சாவாள்மாளுவன்கணவன்றானே. (705)

தீண்டுமேதேளுமாகில்சிதலொடுசெல்வம்போகும்
மூண்டிடுவண்டுகசமும்முகரமொடுகாணலாகா
வேண்டினாரிவைகளெல்லாம்வறுமையாமென்றுபின்னும்
நீண்டதோருலகிலந்நாள்நிகழ்த்தினார்மயனுமன்றே. (706)

இளமணல்சூனியங்கள்யிகழ்ந்திடுந்தலைகளோடு
வளமிகுபானைகூபம்வளர்ந்திடுமரங்கள்கட்டை
தளமிகபிளப்புச்சோர்வுதந்திடுஞ்சுக்கான்கல்லு
தளமிகவுமியுஞ்சாம்பல்தலந்தனிற்காணலாகா. (707)

கல்லுடன்செங்கல்சிப்பிகண்டவன்கனமாய்வாழ்வான்
வெள்ளியும்பொன்னும்முத்தும்வெளுப்புடன்சிவப்புமாகும்
பல்லுடன்ஓடுசாம்பல்பலகரிதோன்றுமாகில்
அல்லலுமதிகமாகும் அம்மனைசுடுகாடாமே. (708)

செங்கல்லேகாணுமாகில்செம்பொன்னேசேர்வதாகும்
மங்கியேசிப்பிகாணில்மைந்தருமிகவுமுண்டு
துங்கமாய்பசுவேர்காணில்துக்கமேமிகுதியாகும்
கங்குலால்கரியேகாணில்கல்மனையெரியுங்கண்டாய். (709)

வேறு.

நல்லதோர்நாளைப்பார்த்துநலமுடன்முகூர்த்தங்கொண்டு
செல்லியகுழியைப்பார்க்கில்கிடந்தநற்சகுனந்தன்னில்
புல்லையுமுமியுங்கண்டால்பொருளதுகேடதாகும்
வில்லியவிறகுமாகில்விளங்கிடாக்குலமென்றோதே. (710)

தெண்டிரைக்கறையான்முட்டைசிதலொடுநண்டுக்காலி
மண்டையும்பொறுத்துக்கிரிமரித்திடில்மிகவும்பொல்லா
வெண்டலையெறும்புகாணில்வெறுமையும்நோவுங்காட்டும்
வண்டமிழ்நூலின்வல்லோர்வகுத்தனரிதனைமன்னே. (711)

வேறு.

நாற்றிசைநடுவேயாகநலமுளவட்டம்போல
தாற்றியமுழங்கையாழந்தணிவதாய்க்கெல்லிநல்ல
தூற்றியசிப்பிகாணில்சுற்றத்தார்கிளையைமாற்றும்
காற்றியகரியைக்காணில்கனல்படுமில்லந்தானே. (712)

சிலையதுகாணிலாக்கஞ்செங்கல்லேகனகமாகும்
நிலைசிப்பிகாணிற்பிள்ளைநெடுநாளும்பலநோயுண்டாம்
உலைந்திடுஞ்சருகுகாணில்தையலுக்குறவுண்டாகும்
புலைக்கரியாகிலின்னம்பொரிபட்டுவேகுந்தானே. (713)

கணங்குநாப்புழுவேயாகில்காரியங்குறைவுண்டாகும்
குணங்குன்றுமோடுகாணில்குடியதுவோடிப்போகும்
பிணங்குறுவேருமற்றால்பெருங்கிளையறுமேயென்பர்
இணங்கியசெங்கல்காணிலிருநிதிவாருந்தானே. (714)

ஆக்கிய குழியில் ஜலம் விடு மிலட்சணம்.

தாழ்விலாமனைநடுவேசதுரமாயொருமுழத்தில்
ஆழமுமகலங்கெல்லியதனில்நீர்விட்டபோது
வாழ்கதிரோனைநோக்கிவலமிகவருவதாகும்
ஏழ்புவியிடமேசுற்றியெழில்மனையெடுக்கப்பாழாம். (715)

வேறு.

நிலமதுமுழமதாகநீர்தனைவிட்டபோது
வலமதுபுரியுமாகில்வான்பொருள்வந்துசேரும்
கலகமாயிடமேசுற்றில்கன்னிகைமரணமாகும்
சலமதுகுமிழியாகில்தாழ்ச்சியாய்வெந்துபோகும். (716)

ஜலம் விட்ட குழியில் புஷ்பமிட்டுப்பார்க்கு மிலட்சணம்.

தாளவேமுழங்கையாழந்தசைபெறவெட்டிவாங்கி
நீளவேஎடுத்துவந்துநீரதில்பூவும்போட்டுக்
கேளடாயீசான்யத்தில்கிருபையாய்நீரைவார்த்தால்
சூளவேதிசையில்பூவும்சுற்றியதிசையைப்பாரே. (717)

வலம்புரிசுற்றுமாகில்வாமதுமகிழ்ச்சியுண்டாம்
இடம்பெறசுற்றுமாகில்இல்லறமங்கைக்காகா
பலம்பெறஉள்ளேசுற்றில்பகையுண்டுபலனுமில்லை
செலந்தனில்பூவும்வாகும்செப்பிடாய்மறைக்கொண்ணுதே. (718)

ஈன்றியபூவைப்போட்டால்இடம்புரிசுற்றுமாகில்
தோன்றியதுன்பமெய்தும்துய்யபூவலமேயாகில்
வான்றருசுகமாய்வாழ்வான்வலமிகவோடுமாகில்
கான்றருகுழவிதுக்கங்காட்டிடுசமநன்றுமே. (719)

வேறு.

திடமுளநிலத்திற்சென்றுதெரிந்துநாற்சதுரமாக்கி
நடுவதுவாகக்கெல்லிநாற்றிசைமுழமுங்கோலி
வடிந்திடுநீரைவிட்டால்வலஞ்சுழித்தோடில்வாழ்வார்
இடமதுவாகச்சுற்றிவிடுக்கமேமிகுதியாகும். (720)

வேறு.

பன்னியகுழியிற்றண்ணீர்பாலுமாய்க்கலந்துவிட்டு
நன்னியபூவைப்போட்டால்நலமுண்டுவலமாய்ச்சுற்றில்
துன்னியசுகங்கொடுக்கும்தூவிடஞ்சுற்றிலாகா
உன்னிருபுறமுஞ்சுற்றில்உயரும்பின்செல்வமென்னே. (721)

அப்புஷ்பமொதுங்கி நிற்கும் பலன்.

இந்திரன்மூலைதன்னிலியல்புடன்கிழக்கில்நின்றால்
செந்திருவாசமாவாள்செம்பொன்னுஞ்சேருமின்ப
மைந்தரைப்பெற்றுவாழ்வார்வளர்கன்றுகாலிசேரும்
முந்தவேமயனார்சொன்னமுறைமைநூலிதுகண்டாயே. (722)

அக்கினிமீதில்நின்றாலாயிழைமலடியாவாள்
செக்கர்வாளரவந்தீண்டுந்தீப்படுமண்ணெடுக்கில்
தொக்கிழமிகவுமுண்டுசோரர்கள்கலகமுண்டு
இக்கருமயனார்சொன்னவிசையுநூலிதுகண்டாயே. (723)

அந்தகன்தெற்குமூலையன்புடன்வந்துநிற்கில்
சிந்தனைமிகவுமுண்டாஞ்செருக்கமுங்கலகமுண்டு
பிந்தியதீமையோடுபிணியினாலச்சமுண்டாம்
செந்தமிழ்ப்புனைந்தபாடற்றீதிலாமயன்சொன்னாரே. (724)

கன்னிமூலையிலேநின்றால்கைப்பொருண்மிகவுண்டாகு
மன்னமுந்தனமுஞ்சேருமாயிழைவந்துநிற்பள்
பொன்னொடுதானியங்கள்பொருந்தவேசெல்வமுண்டா
முன்னமேமயனார்சொன்னமுறைமைநூலிதுகண்டாயே. (725)

வருணன்றன்மேற்குநோக்கிவந்துமேநிற்குமாகி
விருநிதிசெல்வமுண்டாமெங்குமேவினையுமாறி
கருதியகருமம்நன்றாங்கருணையும்பெற்றுவாழ்வர்
மருவியகனதையுண்டாம்வளம்பெறுமயன்சொன்னாரே. (726)

வாயுமூலைதன்னில்வந்துடனிற்குமாகில்
காயநோய்கொண்டுசாவன்களவினால்பொருளும்போகும்
பேயுமேபிடித்துக்கொள்ளும்பிணஞ்சுடுகாடதாகும்
சேயுமேசாவனென்றுசெயல்பெறுமயன்சொன்னாரே. (727)

குபேரன்றன்வடக்குநோக்கித்துணம்பெறநிற்குமாகில்
விபவமாய்ப்பொருள்கைகூடும்வேண்டியசொர்ணஞ்சேருஞ்
சபைநலம்பெரியோனவன்தன்மசிந்தனையுண்டாகும்
அபயமென்றோரைக்காப்பனருள்பெறுமயன்சொன்னாரே. (728)

ஈசான்மூலைதன்னிலின்பமாயிருந்துகொண்டு
வாசமாமதனில்நின்றால்வரிசையும்வாழ்வுமுண்டாம்
போசனம்பெரியோர்க்கெல்லாம்பொருந்தியமனிதனாவான்
வாசமின்குழலினாளேமயனுரைநூல்கண்டாயே. (729)

குழியில் ஜலம்விட்டு அந்த ஜலத்தைப் பார்க்கு மிலட்சணம்.

நாலுசாணகலநீளம்நாலுசாணாழமாக
நாலுமூலைக்குமற்றைநடுவதிற்குழியாய்வெட்டி
மேல்கதிருதயகாலம்வெள்ளநீர் நிரம்பப்பெய்து
மாலையில்பாருமென்றுமயனுமேயுரைத்தானன்றே. (730)

பார்த்திடும்போதிலங்கேபரிவுடன்சலமேல்சேரேல்
சேர்த்துடனிருக்குமாகில்செல்வமுமக்கட்பேறும்
பேர்த்தடுங்காய்ச்சலாகில்பெரியதோர்மிடியுமாகும்
ஆக்கியமனையேபாழாம்அறிந்துசொல்லணியோர்க்கே. (731)

வேறு.

நிறையநீர்வார்த்துநீள்கதிரெழுந்தபோது
முறையதில்வந்துபார்த்தால்முன்படிநீருண்டாகில்
இறையவனில்லம்போல்இருநிதிபெருகுமென்று
செறிவளைகையின்மாதேசெய்யதோர்மயனுஞ்சொன்னான். (732)

வற்றியோர்சிலந்திக்காலாய்வகிர்பிளந்திருக்குமாகில்
உற்றிடுபிணியுண்டாகும்உறுபொருட்கெடுமேயென்றுஞ்
செற்றலர்சிறுத்துவந்துசெல்வத்தைச்சிதைப்பாரென்று
மற்றுநூன்முறைமையாலேமயனுமேயுரைத்தவாறே. (733)

முகூர்த்தத் தேங்காய் மேற் பூச்சும் அதன் சகுனமும்.

உண்டியகணபதிக்குப்புகந்ததோர்தேங்காய்ப்பூசை
பெண்டியேயடைக்காய்நல்கிபெருகியசெம்பொன்வைத்து
கண்டியேமுழஞ்சாணிட்டுகனபனைதன்னிற்கெல்லி
தொண்டியேவண்மைபெற்றசொல்குறியறிந்துசொல்வாம். (734)

முத்தொடுபருப்புவெல்லிமுழுதுமாவரிசிசாந்து
அத்தொடுசந்தனத்தையமுத்தியதேங்காய்தன்னை
மெத்தவேகணபதிக்குவேண்டியேமுகூர்த்தஞ்செய்யில்
ஒத்துடன்உடையுமாகில்உண்மையாய்வாழ்வார்தானே. (735)

தேங்காயுடைவதின் சகுன பலன்.

அடித்ததோர்தேங்காய்தானும்அலறியேசிதறிவிட்டால்
முடித்ததோர்மனைவிக்காகாமுகிலுடனேடுமாகி
லெடுத்ததோர்சிறுவன்கையிலிடறியேவிழுமேயானல்
வடித்ததோர்சிவாலயங்கள்வாழ்வெல்லாம்பாழாமென்றே. (736)

வேறு.

முடிபெருத்துவட்டமிடிற்றிருவேசேரும்
மூன்றிலொருபங்குடைந்தால்ஜெயசந்தோஷம்
நெடியலொன்றுஅஞ்சிலொன்றுகலகஞ்சேரும்
நீங்கநரம்பினில்பிடித்தால்நிதானவாழ்வு
கடியகாய்கைக்குள்ளேல்கலகஞ்சேரும்
கண்ணிரண்டுமூன்றடித்தால்கனத்தபூசை
அடியவர்க்குமுன்னிலங்குங்குருவாம்வேலர்
புகழ்தேங்காய்சகுனமெனவறிந்துகொள்ளே.

அடித்தகாய்சிதறினக்காலாசர்க்காகா
அந்தமணைக்காகாதுவதுவுமல்லால்
தடித்தசட்சணைக்கண்விடதாணியில்
காய்த்தறியாமல்மாங்காய்ந்துசாய்ந்துபோகும்
முடிதலையினேடுவிட்டால்கைதான்கொண்டு
மோதினவர்க்காகாதுஉண்மையாக
படிந்திட்டவந்தோர்க்காகாவுதிரமாய்ப்
படீரெனமூச்சுவிட்டுவுடைந்தக்காலே. (738)

மூடியிரண்டாகவுடைந்திடில்முதலுண்டாகும்
மூடிபெருத்தாலுநன்மைமுக்கியமாங்கீழ்
மூடிதன்னிலொருமுட்டுறிற்சமமாம்
மூடிகொப்பரைகழன்றால்முழுநன்றாமே. (739)

குருத்துடன்முளையுநன்மைகுறுக்காகிலநற்வேதின்மை
அருத்துவசிதறுமாகிலறுந்தனந்துன்பமெய்து
பெருத்ததிங்கழுகுமாகிற்பேசொணுச்சங்கடங்கள்
வருத்தமுமிகுதியாகுமாண்கவியுரைத்தவாறே. (740)

வேறு.

முடிபெருத்துவட்டமிடிற்றிருவேசேரு
மூன்றிலொருபங்குடைந்தால்ஜெயசந்தோஷம்
நெடியவைந்திரண்டிற்குந்தொலையாச்செல்வம்
நீங்கிரம்பேபிடித்தால்நீடுவாழ்வாம்
கடுகதனையுள்ளாலிரத்தினஞ்சேரும்
கனக்கவஃதிரண்டிற்குகருதுபூசல்
வடிவமெனுந்தமிழோதுமபணர்சொன்ன
வளமைதேங்காய்ச்சகுனவண்மைதானே. (741)

உண்டோரிரண்டுதனக்குநன்மையாறுநாலா
யுடையவெகுதுன்பமதுவோதக்கே
ளண்டுமெயிற்கண்டெறித்தால்மாணமாவ
னுகவுநல்லோடுவிட்டாலசனம்வெல்லும்
விண்டோடுதெறித்திடவேபிணியாமெய்யின்
மேதினியிலேவிளைவும்வில்லையுமாவன்
பண்டுதமிழறிந்தோதுமயனூர்சொன்ன
பாடற்றேங்காய்ச்சகுனப்பகரக்கேளே. (742)

மனைமுகூர்த்தக்கல் விவரம்.

பகருவேன்ஆலயங்கள்கோபுரங்கள்
பரிவானநகரமொடுமாளிகைகள்தானும்
சுகமுடனேமுகூர்த்தமிடும்நாளில்செங்கல்
சுத்திசெய்தொன்பதுமேற்காதியாக
வகையுடனேயொன்பதுகோள்அதின்மேல்தாக்கி
வரிசையுடன்பூசைபுஷ்பம்தூபங்காட்டி
நகையுடனேமங்கிலியமாதர்கையால்
நலமுடனேதொட்டெடுத்தபலனைச்சொல்வேன்.

கிரக் அமைப்பு.

பாநுவுக்குத்தானடுபார்க்கவர்க்குப்பூர்வமிந்து
தானந்தீசேய்தட்சணமாமிராகுவுக்கேநிருதி
மைந்தன்மேல்பார்கேதுவாயுகுருஉத்திரமாம்
புந்திக்குஈசான்யமெனப்போற்றுவர்பெரியார். (744)

பலன்.

தானுமேசெங்கல்லாலேதான்மனைகோலவேண்டில்
பானுவாம்முதற்கிழக்கேபருதியின்முதலாய்மேற்கே
ஊன்றியேபூமிதன்னில்உகந்துநீவாழ்கவென்று
தேனுயிர்வாழ்கவேதான்செய்யபிஷேகஞ்செங்கல். (745)

செங்கல்லால்கிரகம்நாட்டித்திறமையாய்த்தீபங்காட்டிக்
கொங்குசேர்குழலினளேகுமரனைக்குலவிப்போற்றி
மங்கலமாதுமூவர்மகிழ்ச்சியாய்வரவழைத்துத்
திங்கள்போல்முகப்நல்மாதுசேயிழைகையால்வாங்கே. (746)

சொல்லவேபருதிமுதல்வந்ததானல்
சுகமுடனேமுச்சாரிமுடிவதாகும்
வல்லமையோர்தாய்தந்தைக்கிடறதாகும்
வரிசையுடன்திங்களீரெட்டில்கட்டும்
நல்லமதிதோன்றிடவேசெல்வமுண்டாம்
நயம்பெறவேதிங்களீராறில்கட்டும்
வில்லைப்போலிடையுடையமாதேகேளாய்
விசுவகுலமயனரும்விளம்பினரே. (747)

விளம்புசேய்தோன்றிடவேதிங்கள்பத்தில்கட்டும்
விடமில்லைகட்டுவதுகுறைநில்லாதே
இளமையுள்ளசகோதரர்கள்அநேகருண்டா
மிருமனையுண்டாகிவிடுமிருமூன்றில்
வளம்பெறவேபுதன்தோன்றில்வாழ்வுண்டாகும்
வரிசையுடன்திங்கள்பதினேழில்கட்டும்
கலக்கமில்லைகட்டிவிட்டால்மனையாளுக்குக்
கருவில்லையிருமனைவிகண்டுபாரே. (748)

கண்டுபார்குருவந்தால்கலக்கமில்லை
கடனில்லைதிங்களொடுஐந்தில்கட்டும்
தொண்டுசெய்யஅடிமையவர்அநேகருண்டு
துஷ்டரெல்லாம்வணங்கிடுவார்துணிந்துசெப்பு
பண்டுபுகர்தோன்றில்பலழயதனங்கிடைக்கும்
பகையில்லைசெல்வமுண்டுபெண்பிறக்கும்
மண்டலத்தில்கீர்த்தியுண்டுதிங்களாறில்
மனையதுவுங்கட்டிவிடுமகிழ்வுண்டாமே. (749)

மகிழுடனேசனிதோன்றில்பீடையுண்டு
மறிபட்டுமனையதுவும்மூன்றுறில்கட்டும்
சுகமுடனேயிராகுவந்தால்முடிந்திடாது
சுத்தமாகக்கட்டுவதுவெகுநாள்செல்லும்
செகந்தனிலேகேதுவந்தால்யீரைந்தாண்டில்
சீக்கிரத்திற்கட்டுவதுபோற்செயமுண்டாகும்
வகையுடனேஉலகோர்க்குமயனார்சொன்ன
வரிசையுடனிந்நூலைவகுத்துப்பாரே. (750)

மனைமுகூர்த்தஞ் செய்யும் நேரத்தைக் கொண்டு ஆயுள் அறிதல்.

எட்டாறுபன்னிரண்டிலிருந்திடிலிராகுகேது
கட்டுடன்காரிசெவ்வாய்கதிர்மதிஎவர்நின்றாலும்
சட்டமிருந்துவாழ்ந்தால்சலிப்புடன்மனையுஞ்சேதம்
திட்டமாய்த்தனக்குச்சேதம்சீர்மனையத்தில்போமே. (751)

ஆறெட்டிற்பன்னிரண்டிலமர்ந்திடிலரசன்சுங்கன்
சேரவேபுதனுந்திங்கள்சேர்ந்திடில்சிதறும்செல்வம்
யேறிசைசாவதாகுமில்லவள்கலகம்போவாள்
பாரெனவழக்குச்சண்டைபற்றிடுமனைபாழாமே. (752)

ஆக்கமதுடையான்றன்னையரசனும்புகரும்நோக்கில்
தாக்குமேவயதுநூறுசந்திரன்புதனும்நோக்கில்
சேர்க்குமேயெட்டுப்பத்துச்செல்வமும்யோகஞ்செல்வம்
தூக்குமேயெதிரிநில்லான்துணைவனுமுதவியாமே. (753)

லாபத்துக்குடையோன்றன்னைநலமுடன்ராகுகாரி
தாபமாய்செவ்வாய்கேதுதன்னிலேயொருவனோக்கில்
சோபமுஞ்சேத்மவாயுபித்தம்துக்கமாம்தனக்குச்சேதம்
சாபமும்வறுமையுண்டாம்தரித்திரமனையாம்பாரே. (754)

தனமதுவுடையான்றன்னை தயவுடன்றீயோர்நோக்கில்
கனமுடன்லாபஞ்செம்பொன்கனப்பட அழிவுசேத
மினமுடன்வாழ்வதில்லைஇனிவளர்மைந்தர்சாவே
அனுமதிபழிவுசேதம்அடிமனைபெட்டில்போமே. (755)

வாக்குடன்எட்டில்லாபம்வளர்பிறைபாசனோக்கில்
தாக்குமாமுதலும்லாபம்தையலார்கேவலத்தர்
காக்குமாமனைதான்வாங்கக்காதலிபுதல்வருண்டாம்
சேக்குமாமனையும்பூமிகிரயம்வாந்தூக்கேளே. (756)

கன்றிடும்வாக்குநாதன்கனமுள்ளலாபமெட்டு
நின்றிடில்காரிதீயோர்நிலைவரம்நின்றுபார்க்கி
லின்றுள்ளமனைவிமைந்தர்யிசையிசைநகைகள்சேதம்
வென்றிடும்யோகஞ்செல்வம்விளங்காதுமனைதான்கேளே. (757)

வன்னமாறுவிரண்டில்வளர்மதிபாசன்நின்றால்
துன்னவேவயதுநூறுதோற்றமேயோகம்வாழ்வு
மன்னவன்புகரிரண்டில்வாழ்ந்திடில்வயதுநூறு
தன்னவன்மனையையாண்டுதழைத்தவன்வாழ்வான்பாரே. (758)

புத்திரன் எழுபத்துபிறந்திடுப்புனிதமேழாம்
குத்திரம்பெற்றுவாழ்ந்துகிளையுடன்கூடிச்சேர்ந்து
சித்திரமனைவிமைந்தர்செல்வமும்சிறப்புவாழ்வு
பத்திரம்பூசைதீட்சைபால்பழம்விளங்குந்தானே. (759)

வருத்தசஞ்சலங்கள்நீங்கும்வளர்ந்திடும்யோகம்செல்வம்
கருத்துடன்கல்விகேள்விகன்னிகைபூட்டலாடை
குருக்களைவணக்கப்பூசைகுலத்துளோர்க்கின்பம்நல்கிப்
பெருத்துடன்மைந்தர்நட்டோர்பெருமைசேர்மனைதான்கேளே.

மன்னவன் ஏழில்பத்தில்மனைரெண்டில்நிற்கநோக்க
தன்னவன் தாயுந்தந்தைதலைவியும்மனைவிமைந்தர்
என்னதுயோகஞ்செல்வம்மணிரகம்பூமிநாற்கால்
அன்னவன்பொசிக்கலுற்றால் அகம்வயதெண்பதாமே. (761)

காரிதான்ஏழில்பத்தில்கதித்தவனிருக்கநோக்கச்
சாரியாய்மூன்றுபத்திற்சாரைந்தில்நாகஞ்செவ்வாய்
ஆரியமதியும்பார்க்க அகத்தவள்மனையுந்தோற்று
நாரிசேர்மனையுங்கெட்டுநாற்பதிலிறக்கும்பாரே. (762)

தோற்பதுமனைவிமைந்தர் துணைவனும்எதிரிபேசல்
காப்பதுமானங்கல்விகற்படுலாபஞ்செய்பொ
னேற்பதுநினமும்போகும்எதிரியால்கடன்றுணுகும்
ஆற்பது அணுகில்லாதே அகலுவானங்குவிட்டே. (763)

அகமதையுடுத்தோன்வாழ்வன் அகன்றவன்பாலன்சாவான்
முகமுடனிருந்தான்றனுமுழுதுமேயிறந்தேஉண்பான்
பகையுடன்வளர்க்குஞ்சண்டைபாலனுமிறந்துசாவான்
தொகையெனுமனைநாலைந்தில்சேர்ந்திடுந்திண்ணந்தானே. (764)

வல்லவனிரண்டாமாதிவருத்தமாய்ப்பகைகள்நீசம்
நல்லவன்சேர்ந்துநோக்கநயமில்லைவயதெட்டாகும்
கல்லவன்முடவன்சேயுங்கதிர்நாகங்கூடிச்சேரில்
இல்லவளிறப்பாளஞ்சில்இடியும்பன்னிரண்டிலில்லர். (765)

நித்தியகுடும்பவாதிநின்றிடில்பகைபதாகில்
சத்தியாய்ச்செலவுபோகுஞ்சஞ்சலம்வருத்துச்சேதம்
பெத்தியகாரிநாகம்பின்னியேசேர்ந்துநோக்கில்
கத்தியேமனைதான்பாழாய்க்கழன்றிடும்பதினேழாண்டில். (766)

சாடியவிரண்டாமாதிசனியுடன்தீயோர்கூடில்
தேடியமுதலுஞ்சேதம்தினம்நகைபொருளுங்கொள்ளை
நாடியவயசீரெட்டில்நல்மனைவிற்றலாகும்
வாடியமனையிழந்துவளர்மனையிடிதலாமே. (767)

கன்றிடுமிரண்டாமாதிசுகிப்புடனுச்சம்பெற்றால்
நின்றிடும்வயதுநூறும்நிலவரம்அரசன்நோக்கில்
வன்றிடுங்காரிநோக்கவளர்செல்வம்செலவேமிச்சம்
பின்றிடும்பலனுஞ்சீரும்பெலமுறுவயசுநாலில். (768)

மூன்றினில்செவ்வாய்காரிமுழுதுமேநிற்கநோக்க
மான்றிடுமைந்தர்சேதம்மறுதம்பிபகையேசண்டை
நீன்றிடிலரசன்சுங்கன்நிறைசெல்வப்பயிருங்காலி
ஆன்றிடும்வயசுநாளும் அடிமையாம்மனைவிமைந்தர். (769)

நல்லவனிருக்கநோக்கநலம்பெறமூன்றிற்கேளு
வல்லபந்திரள்யோகம்வரும்பகையிடறுமில்லை
வில்லவன்காரிதீயோர்விரும்பியேகிரகம்நோக்க
அல்லவன்பொருளும்போகும் அழிந்திடுமாறுமாண்டில். (770)

போய்விடுமனைபிற்செல்வம்பலனறுமுயிரும்போகும்
தேய்வுறுங்கருமமெல்லாம்தினம்பகைநிதியும்போகும்
நோய்பெறுமனைவிமைந்தர்நுவன்றுபொய்மெலிவாள்மங்கை
நீபடுமகமுங்கொள்ளைநீங்குபத்தாண்டிற்போமே. (771)

மனமுடனாசன்நாலில்மனைநூறுவயதாமென்பர்
தனம்நகைகிரகம்பூமிதந்தைதாய்மனைவிமக்கள்
கனங்காலிப்பயிர்விளைச்சல்கனிவர்க்கமுதுபாலும்
தினமநுபவிக்குஞ்செல்வம்திருவொடுவாழ்வுஞ்சேரும். (772)

நலமுடன்காரிசெவ்வாய்நலமதாய்ச்சேரநோக்க
மெலிவுடன்செல்வஞ்சிந்துமெலியவேளமனையாள்நோவால்
சலமுடன்புதல்வர்சாவாம்சஞ்சலமிகுதிசேரும்
அலமரும்பெருமைபோகும் அழிந்திடுமனைநான்கேளே. (773)

அஷ்டமத்துடையோன்றனுமாறெட்டீராறுசேரில்
வெட்டவேவிரணஞ்சேரும்வியாதியும்வறுமையுண்டாம்
பொட்டவேசாவுகூடும்பொன்னதுஅடருஞ்சேதம்
தொட்டதுசெலவுண்டாகும்தோற்குநல்மனைநாண்பத்தில். (774)

வரத்தொடுசெல்வஞ்சேதம்வைத்திடுபொருளுஞ்சேதம்
பரப்பதுபசியுங்காந்தல்பசிக்கவேபொசிப்புதப்பும்
திரப்படுசுகமும்போகும்திண்ணமாந்தனக்குக்கண்ட
மிரப்பதுமனைதான்பாருமிசையறுநாற்பதாமே. (775)

சத்துருபகைகள்நீசம்சஞ்சலமெட்டோன்கூட
வெத்துருமவர்க்குமேனிமெலிந்திடுஞ்சரீரகாந்தி
பெற்றிடும்பிள்ளைசாவாம்பெறுவதுபெண்ணேயாகும்
குத்திடுமனையில்சண்டைகுலைந்திடுமுப்பதாண்டில். (776)

சீரியநாகங்காரிசேய்கதிரிவர்கள்நால்வர்
கூறியவெட்டாமாதிகூடியேகலந்துவாழ்ந்தால்
பூரியயோகஞ்செல்வம்புகல்மனைபிரியும்ரெண்டாய்
ஈருறுமிகுசேதமிறந்திடும்நாற்பத்தேழாம். (777)

மால்மதியாசன்சுங்கன்மதித்தவர்சேர்ந்துநின்றால்
பாலுடன்எட்டோன்றானுபட்சமாய்க்கூடிவாழில்
மேலுடன்மேன்மையோகம்மேவியமனைவிமைந்தர்
சேலுடனவர்க்குவெற்றிசெய்மனைவயதுநூறும். (778)

தினம்லாபம்வெற்றிசேரும்செய்தொழில்சிறப்பாமேன்மை
தனங்காலிபயிருஞ்சேருந்தழைப்பவர்மனைவிமைந்தர்
இனம்நகையுடைமைசேரும்இனிவருமுகனுஞ்சேரும்
சனமிகுதுறையாச்செல்வம்சலிப்பறும்வயசுநூறும். (779)

பெருநாகப்எட்டில்நிற்கப்பிரிவதுசெலவாய்லாபம்
பருவவாங்காரிசெவ்வாய்பார்க்கவேயெட்டிற்சாவு
கருதியகதிரோனாகிற்கண்டநீசாவதஞ்சாம்
விரவியபாம்புகண்டால்வீவதுமாறுமாண்டில். (780)

நாகமேயெட்டைநோக்கநலமில்லைலாபம்போகும்
பாகருமழிவுசேதம்பலனில்லைவாழ்வுமில்லை
ஆகுமேவழக்குச்சண்டைஅடுத்தபோர்நகைப்புநஷ்டம்
சாகவேதனக்குக்கண்டம்சரிவரும்பதினேழாமே. (781)

அறிந்திடிலெட்டைக்காரியனாகிடில்நோக்கமானால்
பறிபடுலாபஞ்செம்பொன்பாலனுமிறந்துபோகும்
செறிந்திடுஞ்சிரங்குரூசிதறுமேமனைவிமைந்தர்
பறிபடுமசருங்கோபப்பற்றிடுமிருபத்தேழில். (782)

எட்டவனெட்டில்நின்றால்எதிரியால்வழக்குச்சண்டை
செட்டுபோம்செலவும்லாபம்செயமற்றுக்கடனுஞ்சேரும்
விட்டுடன்குலைதான்காணும்விஷத்தினால்மனைவிசாவாள்
முட்டுடன்பலனுமற்றுமுப்பத்தேழுதனிற்போமே. (783)

எட்டவனெட்டில்நிற்கஎழுபதுவயசில்சேதம்
சட்டமாய்ராசன்நோக்கச்சனமிகுவயதுநூறும்
பொட்டவேநின்றனாகில்புண்ணியவயதுநூறு
திட்டமாய்ச்சுத்தமானால்நிறமனைவயதுநூறே. (784)

உச்சமேயெட்டொன்றாகில்உயர்ந்திடும்தனமும்வாழ்வும்
மிச்சமேயோகம்செல்வம்மிகுத்திடுமனைவிமைந்தர்
பட்சமேஆக்ஷிபெற்றால்பருமனைவயதுநூறு
அச்சமும்பயமுந்தீரும்அதிபலனாதியாமே. (785)

மந்திரியேழில்நிற்கமனைகட்டிமுடிந்திடாது
அந்தகங்குடிபோமுன்னேவாசனாலழிவுமுண்டு
புந்தியுமந்தனேழில்புத்திரர்நாசமாகும்
சந்திரனேழில்நின்றால்தழலெறிவிறகோடொக்கும். (786)

மங்களனேழில்நின்றால்மனைவியேமரணமாகும்
செங்கதிரதிலேநின்றால்சேதமாங்குடிபாழாகும்
சுங்கனுமாவுநின்றால்தொல்குடியழியுமென்று
பொங்குமாமறைதெரிந்தோர்புகன்றனரென்றுகூறே. (787)

காணுஞ்சென்மசனியெட்டுமேழுங்காண்
பேணியில்லம்பெருக்கவேகோலினால்
நாணங்கெட்டுமேநாட்டிலலைகுவன்
காணுங்காணுஞ்சனியவன்கூத்தையே. (788)

கண்டலக்கினத்திற்கஞ்சில்கரியவன்பாம்புநிற்க
உண்டசேய்பருதிபததிலொன்பதில்நிற்கநோக்கக்
கொண்டராசனுமைந்தன்கூறுமோராண்டில்சாவு
மண்டுமாளிகைசெய்வோர்க்குமயனவனுரைத்தவாறே. (789)

திங்கள்பாம்பாறுமூன்றில்தினகரன்கூடிநோக்கச்
சுங்கன்மாலெட்டுமாறுசொல்லீராறடைந்துகாணப்
பொங்கமாலயனுக்காகப்பொருந்திடமனைசெய்தாலும்
தங்குமூன்றாண்டுக்குள்ளேதான்சுடுகாட்டிற்சேர்வன். (790)

கதிருடன்மதியுங்கூடிக்கலந்துலக்கினத்தில்நிற்கப்
பதிருடனனையுந்துன்பம்படைமனைதனைவிட்டேகும்
நிதிகெடும்விழிக்குரோகம்நேத்திரம்பழுதுண்டாகும்
சதிருடன்நாலில்நிற்கச்சந்ததிசிதறும்பாரே. (791)

அரசனுமுதயங்காணஅருமையவ்வளவேவிசெல்வம்
திரமதாய்க்காரிகாணில்திங்கள்நாலேந்தில்சேதம்
பாவியசெவ்வாய்காணில்பலன்கெடுவருஷமாகில்
உரகனுநின்றுகாணிலுலைபதியிநபத்தேழில். (792)

பாவுதிங்கள்பொன்பத்துறில்நாலுறத்
தாணிசேயசத்தாகப்பதினொன்றில்
வரையிலெய்தியவாழ்மனைசெய்திடில்
வருஷமெண்பதுமண்ணில்விளங்குமே. (793)

இருங்குருவெள்ளிதானுமிலக்கினம்நாலேழ்நிற்கில்
வருங்கதிரா றில்நிற்கமந்தன்பாம்பேழில்நிற்கப்
பெரும்புரங்கோயில்வீடுபீடமேசெய்வீராகில்
திருந்தியவருஷநூறுதீர்க்கமாய்வாழ்வீரே. (794)

பார்மகன்புகர்பானுபொன்னுறுடன்
ஓரைமூன்றுயரைந்தினிலுற்றிட
ஊரிடம்புரமோர்நகர்செய்திடில்
ஏர்கொள்ரண்டுநூறுண்டுஇலங்குமே. (795)

தூயவோரைபத்தேழினிற்சொல்லிய
மேயதிங்கள்புதன்குருமேவவே
கோயில்மாநகர்கூடகஞ்செய்வீரே
மேயவாண்டதுநூறுவிளங்குமே. (796)

உதயலக்கினத்தானுட்சிஉயர்திரிகோணநட்பு
துதிபெறுமுச்சங்கேந்திரம் துகைபெறவயதுநூறும்
பதமதாம்நற்கோள்காணில்பார்தனில்வயதுநூறு
குதைபடத்திக்கோள்காணில்குறைபடுமனையதற்கே. (797)

மன்னவனுதயத்தோனும்மருவியலாபமேழில்
துன்னவேசுககங்கள்கீர்த்திசுத்தமாந்தேகம்பூமி
பின்னுமேயெழுச்சியோகம்பெருகுமேதனமும்லாபம்
சொன்னதுசிறப்புமேலாய்சுகமனைநூறதாமே. (798)

அந்தணன் அரிமால்புகர்கேந்திரம்
எய்தவன்குசன்கோணமிருந்திட
சுந்தரமனைகோலத்தொடங்கிட
முந்திமுந்நூறுயாண்டுமுழங்குமே. (799)

பாவுதிங்களும்பொன்னுடன்பத்துற
தாணிசெய்சனிதக்கபன்னொன்றினில்
மருவிவீடெனமாளிகைசெய்வீரேல்
வருஷமாயிரமண்ணில்விளங்குமே. (800)

திங்களஞ்சில்தினகரன்புத்திரன்
பொங்குநாலுடன்ஒன்பதில்பொன்னவன்
தங்கிநிற்கத்தாணிமனைகோலப்
பொங்கமாயிரம்ஆண்டுபுகழுமே. (801)

உரைபுகர்வியாழந்திங்கள்வோரையேழ்பத்தில்நிற்க
வரையறமனைகள்கோலில்வருடமாயிரமுமன்னி
பருமணிநகைகள்பொன்னும்பாக்கியமவர்க்கேபூமன்
திருவருள்புரிந்தவேந்தர்திருவருள்புரிகுவாரே. (802)

பருதிபுந்திபுகர்பன்னொன்றினில்
அரியவோரையிலந்தணன்கேந்திரம்
மருவுலாவியமாளிகைசெய்வீரேல்
வருஷமாயிரம்மண்ணில்வழங்குமே. (803)

மந்தன்கேதுவருமைந்தொன்பதில்
புந்திராஜன்புகரும்நால்பன்றொன்றினில்
சந்திரன்குசனுகவேசார்மனை
மிந்திரபதியாகுமீராயிரம். (804)

வாஸ்து ஆட்சியாகுங் காலத்தில் முகூர்த்தம் செய்தற் பலன்.

வாஸ்துவேயாட்சியாகில்வாழலாமனேககாலம்
வாஸ்துவேஉச்சனுகில்வாழலாம்உள்ளமட்டும்
வாஸ்துவேநட்பதாகில்வாழ்வதுபெருகும்நூறு
வாஸ்துவேபகைநீசத்தில்வாழ்வதுகுன்றுந்தானே. (805)

வாஸ்துமண்ணுக்குடையவன்றன்னிலே
பார்த்துவாட்சிபகருச்சநட்பதாய்
சேர்ந்திடும்போதில்திகழ்மனைகட்டினல்
சாற்றுமில்லந்தழைத்திடும்வாழ்வதே. (806)

வாழ்வுமில்லைமனைக்கேஅழிவுகேள்
தாழும்வாஸ்துவன்றன்னிலைமாறியே
சூழும்நீசம்பகைவந்துஎய்திட
பாழதாமில்லம்பகர்ந்தான்மயனுமே. (807)

வாஸ்துசுங்கனும்மாலவன்கூடினல்
பார்த்துமில்லறம்பாங்குடன்கட்டினல்
சேத்திகழ்மாமனைசெல்வம்பொங்கிடு
மேத்திசைக்கும்விளங்கிடுஞ்செல்வமே. (808)

வாஸ்துசேயுடன்காரியும்வந்துறில்
நாற்றிசைக்கும்நடுக்கம்வந்தெய்திடும்
காற்றுந்தீயும்கலந்திடுவாறுபோல்
தோற்றுநோயும்துயருடனெய்வனே. (809)

நொய்வதாலுள் நுவன்றிடுசந்திரன்
உய்வதாலதில்ஒங்குவள்பெண்டுதான்
நைவதல்லால்நயமொன்றுமில்லைவந்
தெய்வதெல்லாம்இப்பாழுக்காகுமே. (810)

ஆட்சிவாஸ்துவாங்கிரகமுதித்திட
ஆட்சிபாகவே அண்ணியகோமகன்
ஆட்சியாமனை அவ்வாறிருக்குமே
ஆட்சியாட்சிமயனுரைபாட்சியே. (811)

கூடம் தாழ்வாரம் அறைகள் முதலியவைகளின் அளவும் பலன்களும்.

ஏழடிமுதலாய்நீளம்எத்தனையாகுமென்றால்
வாழ்மனைகணக்குக்கூட்டிவைப்பதுமுப்பத்தைந்து
தழ்வுகள்நீங்கல்தள்ளிதனித்தனிபுரைப்பதானால்
தோஷமுந்தீரத்தானேதொகைதொகையாகச்சொல்வேன். (812)

நாசபாம்ராச்சயமாகும்நன்றிருவிருக்கன்நாடி
போசனம்மகவுங்கேடுபெண்கேடுவிரோதம்பொல்லாப்
பாசைசொல்லுறுதியுண்டுவாக்கம்சம்பத்துலாபம்
தாசனேகுடியேயோட்டும்தனமிகச்சேருந்தானே. (813)

சேதமாமிருபுறக்கும்தீம்பெனுமஞ்சுவான்கேள்
சூதினால்விலங்குபூணல்சொல்லுகவுறுதியுண்டு
வேதனுலாபமுண்டுவெகுநன்மைகுடிக்கிக்கேடு
மாதரிமனைபாழாகும்மணமுமாமாணமாமே. (814)

தண்டிகைவருகும்நல்லதாவியோட்டுங்காண்தீயும்
அண்டிடமுறுப்போக்குவாயிசுகுறையுநன்மை
மண்டலம்புவியிலுள்ளோர்வகையுடனெண்ணில்வாழும்
திண்டிறல்நீக்கல்தள்ளித்தீர்க்கத்துநாட்டுவாயே. (815)

குறுக்களவு.

உத்தமமெட்டுமாகும் உறவுடன்வாழ்வுண்டாகும்
பத்துமேபாலுஞ்சோறும்பகர்ந்திடும்பசியுந்தீரும்
ஒற்றைமாடில்லாநிற்பர் ஒன்பதில்திருவுநில்லாள்
குற்றங்களிதுதானென்றார் குறுக்கடி குறிப்புத்தானே. (816)

தரித்திடுமெட்டடிதன்காலினுவிட்டுத்தடையறவே
விரித்துவுபாமெதிர்கூரைமட்டும்வினவிச்செய்ய
பரித்திடுமேதைகளாடுமாடுகளியாவும்பலுகிடும்பார்
தரித்திடுமஷ்டலட்சுமியாளுந்தண்குடியே. (817)

மிடியாளகற்றுமின்னார்செல்விமிகவருளே
குடியேயிருப்பாள்குலாவுவளேசெல்வங்குறையறவே
துடியாகப்பெண்பிள்ளையுங்களகஞ்சுபமங்கிலியாள்
அடிபணிந்தேத்தியமர்த்துவளேகுறையாவையுமே. (818)

வேறு.

ஆறடியகலநீளமமைத்திட்டவீடதாகிற்
பாரினில்பலித்தசெல்வம்பங்கயன்வீடதாகுந்
தாரணிதனிலுள்ளோர்க்குசதாசிவன்சொன்னநூலே
சீர்பெறவாய்ந்துபார்த்துச்செயமனைகோலுவாயே. (819)

ஏழடியகலநீளமெண்ணியேவமைப்பாராகில்
தாழ்வுடன்செல்வம்போகுந்தரித்திரமிகவுண்டாகு
மூழ்வினைதானுமுண்டாமுறைமுறைபொல்லாப்பாகி
பாழதாய்ப்போகுமென்றுபாமனுமுரைசெய்தானே. (820)

எட்டடியகலநீளமெண்ணியேவப்பாராகில்
துட்டநிக்கிரகமுண்டாந்தொலைவிலாச்செல்வமெய்து
மட்டில்லாமனுவோடொத்துமகிழ்ச்சியாய்வாழவல்லார்
தட்டுதலில்லையென்றுதயவுடனருள்செய்தாரே. (821)

ஒன்பதாமகலநீளமோங்கிடி லுயிர்கள்சேதம்
அன்புடனதனில்வாழ்ந்தாலருங்குடிநசித்துப்போகும்
சம்புவேயாய்ந்துசொன்னார்சலிப்புகள்மெத்தவுண்டாம்
வம்பதுசெய்யவேண்டாம்மறையனும்வேதம்பாரீர். (822)

பத்தடியகலநீளம்பரிவுடன்வைத்தபேர்க்குக்
கொத்துடனுடுமாடுங்குறைவிலாச்செல்வமுண்டாம்
மெத்தவேநன்மையெய்தும்வேளாண்மைமிகுதியாகும்
கர்த்தனாரிவைகடமைக்கருதியேசொன்னார்தானே. (823)

பத்துடனொன்றதாகிற்பரிவுடன்சொல்லக்கேளும்
பொற்றுகில்பகையுமுண்டாம்போசனமிகுதியாகும்
சத்துருவிலகிப்போவார்சங்கரன்கிருபையுண்டாம்
மெத்தவேபாக்கியங்கள்மென்மேலும்பெருகிவாழ்வார். (824)

ஈராறுஅடியதாகிலின்பமுஞ்சுகமுமில்லை
பேராரும்வியாதியாலேபெண்டுபிள்ளைகளும்நைவர்
வாராதஆபத்தெல்லாம்வந்துமேபொல்லாப்புண்டாம்
காராதகலகமென்றுகைலாசபதியுஞ்சொன்னார். (825)

எழுடனாறதாகிலெண்ணியகருமந்தீதாம்
தாழ்வுடன்செல்வம்போகும்தரித்திரமிகவுண்டாகும்
வாழ்வுடன்மக்கள்நோயாமகிழ்ச்சியெந்நாளுமில்லை
தாழ்வுடன்பொருளும்போகும்தபவுடன்மயனுஞ்சொன்னார். (826)

எட்டுடனாறுமாகவியன்மனைகோலுவானேல்
தட்டுமுட்டெல்லாந்தோற்றுந்தரித்திரமிகுதியாகும்
பட்டுடன்பணிகள்போகும்பைந்தொடிவேசியாவள்
தட்டுதான்செய்யுமென்றுதாண்டவமூர்த்திசொன்னார். (827)

மூவைந்து அடியதாகமுயற்சியாய்வைப்பாராகில்
தாவுறுசெல்வம்போகுந்தரித்திரமிகவுமுண்டாம்
பாவமும்வியாதியாலேபாரினிற்கிலேசமாகும்
ஆவதுவேண்டாமென்றுஅன்புடன்மொழிந்திட்டாரே. (828)

பத்துடனாறதாகில்பாக்கியமெத்தவுண்டாம்
பொத்துடனகையுமுண்டுபூஷணமிகுதியாகும்
சத்துருவிலகிப்போவார்சங்கைகளொன்றுமில்லை
மெத்தவேயடிமையோடுவேளாண்மைமிகுதியாமே. (829)

ஈரைந்தோடேழுமானாலெதிரியும்வணங்கிநிற்பன்
தாருடன்கொன்றைசூடுஞ்சங்கரருதவியுண்டாம்
பாரினில்மன்னராவர்பாக்கியம்வந்தேயெய்து
வாருறத்திரியவேண்டாமானிடாறிந்திடீரே. (830)

எட்டுடன்பத்ததாகிலிலட்சுமியிருப்பதில்லை
பட்டுடன்பணிகளெல்லாம்பாரினில்விலையதாகும்
கட்டுவன்காலன்வந்துகாரிகைபிணியதாவள்
தட்டுதல்செய்யுமென்றுதாண்டவர்மொழிந்தார்பாரீர் (831)

ஈரொன்பதொன்றுமாகிலேந்திழையடியாள்சாவள்
பாரினில்செட்டுசெய்யப்பலியாதுதீதுமெத்த
மார்கொண்டுதிரியவேண்டாமனைவியும்வேசியாவள்
சீர்கொண்டசிவனார்பார்த்துச்செப்பினாரிந்தநூலை. (832)

இருபதாமடியதானாலேற்றமாமனையுநன்றாம்
பெருகுறும்பிள்ளையாகுப்பிரபலமின்னஞ்சேரும்
வருவதுமசுவயோகம்வாணிபம்பலிக்கும்பாரு
திருவுடன்மகிழ்ச்சிசெய்துதிருச்சடைநாதர்சொன்னார் (833)

நாலைந்துமொன்றுமாகில்நான்முகன்கடாக்ஷத்தாலே
பாலுடன்பசுக்கள்மெத்தபாக்கியம்வந்தேயெய்தும்
சாலவேவாழ்வதற்குச்சஞ்சலமொன்றுமில்லை
மாலுடனீசர்தாமுமகிழ்ச்சியாயுரைசெய்தாரே (834)

மூவேழுமொன்றுமானால்மூத்தவள்வாசமாகும்
சாவதுமெத்தவுண்டாம்சலிப்புவந்தெய்துங்கண்டாய்
ஆவதையறிந்துசொன்னாரன்சதாசிவனார்தாமும்
பூவதுபூத்திடாதுபுண்ணியமெய்திடாதே (835)

இருபதுமூன்றேயாகிலெய்திடுங்கொடியநோய்கள்
வருவதுகலங்கிநிற்கும்வாழ்வுமேயற்பமாகும்
திருமகள்கடாக்ஷமேகும்செல்வமுநசித்துப்போகும்
மருவுள்ளசேதமுண்டாமாரியும்பெய்திடாதே. (836)

அறுநான்காமடியதாகிலற்பமாய்வயதுகுன்றும்
ஒருநான்குமிருபத்தொன்றிலுமையவள்கடாக்ஷம்போகும்
இருநான்கோடெட்டுபத்திலெமனுலகடைவார்பாரு
தருமனேன்மணியாள்பங்கன்சதாசிவன்சொன்னதாமே. (837)

எழுடனிருபதாகிலெய்திடுமிகுக்கபோகம்
தாழ்விலாச்செல்வமுண்டுசங்காருநளிசெய்வார்
பாழ்போனபயிர்களெல்லாம்பலிதமாய்விளையும்பாரே
ஊழ்வினையொன்றுமில்லையுமைபரன்சொன்னார்பாரீர். (838)

இருபதுமெட்டுமானாலின்பமுஞ்சுகமுமில்லை
பெருகியபிள்ளையெல்லாம்பிணஞ்சுடுகாடதாகும்
தருவதுபொருளுஞ்சேதம்தரித்திரமிகவுண்டாகும்
இருப்பிடம்விட்டுநீங்குமீசனார்சொன்னதாமே. (839)

ஒன்பதுமிருபதாகிலோங்கியசெல்வமெய்தும்
ஒன்பதுமிருபத்தொன்றிலுலகெலாம்புகழ்ச்சியுண்டாம்
சம்புவேபார்த்துச்சொன்னார்சலிப்புகளெல்லாமேகும்
வம்பதுசெய்யவேண்டாம்மறையவர்வேதம்பாரீர் (840)

முப்பதுமொன்றுமானால்முக்கண்ணாருளுமுண்டாம்
முப்பதுமிரண்டுமாகில்முகுந்தனார்கடாக்ஷமுண்டாம்
செப்பியசொல்மேலாகத்தேசத்திற்செழித்துவாழ்வர்
தப்பில்லைசொன்னேனந்தச்சங்கரிமணாளர்சொன்னார் (841)

ஐயாறுமூன்றுமானாலவனியிற்செல்வமுண்டாம்
ஐயாறுநான்குமாகிலருமனைநசித்துப்போகும்
ஐயாறுமைந்துமானாலஷ்டலட்சுமியுஞ்சேர்வள்
ஐயாறுமாறுமாகிலரசரோடரசாள்வாரே. (842)

ஏழைந்துமிரண்டுமாகிலின்பமாம்பொருளுமுண்டாம்
ஏழைந்துமூன்றுமாகிலெப்போதும்பசாசுசேரும்
ஏழைந்துநாலுமாகிலின்பமுஞ்சுகமுமுண்டாம்
ஏழைந்தோடைந்துமாகிலென்றைக்குஞ்சலிப்புண்டாமே (843)

எண்ணைந்துமொன்றேயாகிலெய்திடுங்குபேரசெல்வம்
திண்ணவேயேழாறுகிலிலட்சுமிகடாக்ஷஞ்சேரும்
விண்ணவேழைந்தோடெட்டாய்விதித்திடிற்பீங்குண்டாகும்
கண்ணியேயாறெட்டேற்கண்கெட்டுக்குருடராவர். (844)

கிருக அமைப்பு.

தலையாகுமாசாரந்தான்கட்டுக்கோல்தனை
மலையாமல்கேள்மாதேமாநிதிகளேறிவிடும்
வலையமாய்நான்குதிசைவாறடியில்மொப்புவிட்டு
மலையாகக்கன்னிதிசைவாழடுக்களைமயிலே. (845)

கட்டுமடுக்களைக்குக்கனமானகோல்தன்னை
மட்டுமுச்சாரிதன்னைமயங்கவிடாமல்கூடமிட்டே
வெட்டுடன்மேலுமாகவெதிரியாய்த்தாழ்வாரத்துச்
செட்டுடன்கன்னிதிக்கில்சென்றிடவாசல்வையே. (846)

ஐந்துமூன்றைந்திரண்டாயவ்வளவதைக்குறித்து
முந்துமுதல்வாசல்முன்படியுங்கட்டிநன்றாய்ப்
பிந்துபுறக்கடையைவாசலதைப்பீடுறவே
நைந்துநடுவீடுமொன்றுநலமாய்ப்பதிமானே. (847)

தென்வடலுங்கூடாண்டாயதிசைமேற்குவீடுரண்டாய்
நன்மனைக்குக்கீழ்த்திசையில்நயமானகூடமொன்று
பொன்வழங்குங்கூடமதில்போதகமாயீரறைநே
ரென்சொல்வேமனம்மனைக்கேயீரேழிடந்தொழிலே. (848)

இட்ட கட்டுக்கீழ்த்திசையிலேற்றமாய்க்கொட்டகை
மட்டுக்கடுக்களோமாறுமற்போட்டுமதிற்
திட்டசெங்கல்தூணிறுத்திச்செயமாகக்கட்டிடவே
அஷ்டலட்சுமியாளும் அகலாளொருநாளும். (849)

முற்றமெனும் வாசலின் பொருத்தம்.

பன்னரியகுணவானுமயனுர்சொல்லைப்
பகருவன்கேள்வாசலதுபொருத்தந்தன்னை
மன்னுமதைகுறுக்குநெடுக்களந்துபின்னர்
வந்திடுமங்குலத்தைநவத்தாற்பெருக்கி
இன்னுமதற்கெட்டதனிற்கீந்தசேடம்
ஏகமெனிலிந்திரன்றன்வாசலாகும்
துன்னுமதிற்களவுவதிகசம்பத்தப்பா
துவிதமெனிலக்கினியின்வாசலாமே. (850)

அக்கினியின்வாசலதிற்றீயாற்சேத
ஆமூன்றுக்கெமன்வாசல்சாவுசொல்லு
தக்கதொருதரித்திரமாம்நிருதிவாசல்
தகுமைந்துவருணனதுதான்யவிருத்தி
எக்காறில்வாயுவதிலனந்தரோகம்
ஏழதனில்குபேரனதுமிக்கசெல்வம்
அக்கெட்டுக்கீசானமரணமென்ன
வறைந்திட்டாரறிவுடையமயனுர்தானே (851)

சென்னைப் பிரதி.

அத்தொகையையொன்பதுதன்னூற்பெருக்கியெட்டில்
வைத்துக்கொடுத்தவந்தவாளெண்கள்—உச்சிதமாம்
இந்திரனேமுன்னனவெண்மர்க்குமாகுமே
சுந்தரனேகேளாய்சுகம். (852)

சம்பத்துதீமரணம்தாழ்வுதான்யவவிருத்தி
வெம்புற்றநோய்கள்மிகுசெல்வம் —துன்புற்றுச்
சாதலேயாகச்சதுர்மறைதேர்ந்தார்சொல்வர்
போதவேகொள்வாய்புகல். (853)

மனையும் வாசலும் விரோதிப்பதின் பலன்.

கேளப்பாவீடுமனைகருடயோனி
கிளர்வாசல்வருணனுமேயாயிற்றானல்
நாளப்பாகொன்றிடுமேயெஜமான்றன்னை
நலமாகமனைசர்ப்பம்வாசலிந்திரன்
கோளப்பாகுலநாசம்மனையும்போகும்
குறித்திடாய்குபேரனுக்குச்சிம்மமீதே
ஆனப்பாகஜயோனிவாசல்கூற்றம்
அடுத்திடுமேசங்கடங்களறிந்துகொள்ளே. (854)

வேறு.

கட்டியமனைக்குள்வாசல்கரியரியெழுந்துநோக்க
விட்டிடில்மனையுமைந்தர்மேவியபொருளும்நாசம்
தட்டியபலனதாகுந்தாணியுமிழக்கப்பண்ணும்
மூட்டியகருடன்சர்ப்பம்வாசலும்முழுதுந்தீதே. (855)

நடுவீட்டில் முற்றம் கம்பம் முதலியன இருப்பதின் பலன்.

நடுமனைவாசலும்நடுமனைக்கம்பமு
மிடுசிலையிரட்டையுமேந்துகையிரட்டையும்
முடுவளைதாழ்தலுமுந்துகையுயர்தலும்
குடியதிற்புகுந்திடிற்குணமில்லைகுடிலமே. (856)

வேறு.

இடிசுவரிரட்டையாகில்ஏறுகையொற்றையாகில்
நடுமனைவாசலாகில்நடுமனைக்கம்பமாகில்
விடுதுளைமாறினல்லமிஞ்சுகையேறுமாகில்
குடியதுபுகுதவேண்டாம்கூற்றுவன்கொல்வன்றானே. (857)

வேறு.

நடுமனைக்கப் பமாகிநடுமனைவாசலாகில்
விடுசுவரிரட்டையாகிலேற்றுங்கையொற்றையாகில்
முடிவளைதாழுமாகில்முந்தூங்கையேறுமாகில்
குடிபுகுமாந்தராவிகுன்றிடுமுண்மைதானே. (858)

வேறு.

கோடுமனைமுறிதல்கோத்தகயிறறுதல்
நட்டதூண்விழுதல்நடுமனைவாசலாதல்
விட்டவாசலடைத்துவேறேவாசல்விடுகுதல்
நட்டமாமனையிழப்பர்நானிலத்தர்நாசமே. (859)

வேறு.

இடுப்படையிரட்டையாகில்ஏற்றுங்கையொற்றையாகில்
நடுமனைவாசலாகில்நாட்டுங்காலொற்றையாகில்
முடிநிலைக்குள்ளேகட்டைமுன்மனைமையகம்பம்
குடிதனைத்துரத்திவைக்கும்கூற்றுவனதுவேயாகும். (860)

வேறு.

மனைநடுகூபம்கூடாமனைதனில்ஸ்தப்பட்கூடா
மனைநடுஅடுப்புகூடாமாசாம்ஒற்றைகூடா
மனைதனிஉத்திரங்கூடாவாசல்முன்சாலகமுங்கூடா
மனையின்வாயிலின்முன்னுகவாரைநீர்கூடாவன்றே. (861)

முரண்படநிற்குமாயின்முடிவனேதலைவனுண்மை
முரண்டநோய்ப்பன்னோய்த்தோன்றிமுதலையுமிழப்பர்மற்று
மிரணியரிழப்பரங்குஇருப்பவரொவருமென்று
அரண்ப்டுமயனார்கூற்றையறைந்தனன்சிறக்கமாதோ. (862)

மையக்குறட்டையர்நாற்றமலமூத்திரங்கெடுமே
மையத்தடுப்பானெருப்பின்மணமும்வெகுண்டிடுமே
மையத்தகத்திற்படுத்தமதனோய்மலடிடுமே
மையத்தடத்தினில்மாதவபூசைமயங்கிடுமே. (863)
மனைமையஉத்திரங்கள்மதிகெடும்விதிவேறாகும்
துணையினால்துயரமாகும்தூஷணையடைவார்மேலும்
வினையினால்சோம்பல்வேதவிதிகளும்தவறிப்போகும்
பிளந்திடுந்தச்சன்மாய்வன்பிணமுகப்படுவான்கொற்றன். (864)

சிற்பன் மரம் வெட்டும்போது செய்யவேண்டியவை.

மரங்கள்வெட்டப்புனலிதுமூழ்கியேவந்துநீறணிந்து
நிரம்பவேபலவாகாரங்கொண்டபின்நேர்மையாகதாம்பூலமணிந்த
பின், உரமதானதளிகைநெய்பாலிலுகந்துதோய்த்துவிநாயகபூசை
யும், விரவுடன்தூபதட்சிணைபாக்கிலைவிர்த்தியாகவென்றேபூசைசெய்
திடே. (865)

செய்யும்போதுசுரிகையும்தர்ப்பையுஞ்சேரவைத்துநீதேங்கா
யுடைத்தபின், நெய்யும்பாலும்பலகனிவர்க்கமும்நேர்மையாகநிவேதி
யஞ்செய்தபின், கையினாலெடுத்தானமரம்பார்த்துமேல்கனிந்த
கொம்புதழுவிழுழவிட, வுய்யுமூன்றுவெட்டாகவேவெட்டிடவுகந்து
தான்பலனுண்மையறிந்திடே. (866)

அறியும்வெட்டுவாய்நீரதிரத்தமேவந்துதேரையதினுற்றொடிதலும்
விரிசாய்ப்பாடிமுழங்கிடில்வீழ்மரமேலமைபேய்போல்மனிதரழு
வதும், நெறிதவறியலறிடில்தாழ்வதாய்நின்றசிவன்பொருளும்அழி
வரே, குறியதெற்கொடுமேல்விழில்கேடதாம்குபேரனிந்திரன்வீழ்
மரம்நன்மையே. (867)

வேறு.

கருதியமுகூர்த்தங்கொண்டுகாட்டினுள்மரங்கள்வெட்டப்
பரிவுடன்பாலுஞ்சோறும்பணியாரம்பலவுங்கொண்டு
மருவியபூசையிட்டுவனதேவிபலிகொடுத்து
புருடனுமரத்தின்கீழேபொற்புறநிற்பர்மாதே. (868)

தென்புறமேற்குமாகதெற்கேகோடாரிவைத்துத்
தன்மரம்பூதம்பேயைத்தூரத்தேபோகச்சொல்லி
இன்மரம்பால்குடித்தேதெளிற்கோடாலிதோய்த்தே
அன்பிலேலர்முழத்தைவிட்டே அடைவுடன்வெட்டுவாயே. (869)

வெட்டியவாயில்நீர்பால்வீழ்ந்திடிலாகாதென்க
வெட்டவீழ்மரத்தின்சத்தம்வெம்புலியானைநன்றாம்
வெட்டவீழ்மரத்தின்சத்தமழுகையுஞ்சிரிப்புமாகா
வெட்டியமரங்கிழக்கும்வடக்குமாய்வீழ்தல்நன்றாம். (870)

மரங்களின் இலட்சணம்.

காணவேமரங்கள்தம்மைக்கருத்துடனறியும்போது
தானெனத்திரண்டுநின்றுசுத்தமாயொழுங்கதாக
நீளுயர்ப்பாரின்மேலேநின்றிடுமாகினல்ல
ஆண்மரமென்றுசொல்லி அறைந்தனர்வேதத்தோரே. (871)

கண்ணுறுமரங்கடன்னைக்கருதியேபார்க்கும்போது
விண்ணுமையடிபெருத்துமேலதுசிறுத்துநின்றால்
பெண்ணெனவகுத்துநன்றாய்ப்பெருமையாயோதலாம்பின்
றண்ணெனத்தமிழாலோதுந்தூயனுமயன்சொற்றானே. (872)

இலகியமரங்கடன்னையியல்புடன்பார்க்கும்போது
நிலமதிற்சிறுத்துநீண்டுநெடுமையதாகிப்பின்னர்
தலையது மிகப்பெருத்துத்தானதுநிற்குமாகில்
அலிமரமாகுமென்றேயறைந்தனர்வேதத்தோரே. (873)

வீடுகட்டவாகாத மரங்கள்.

அகத்தினுக்காகாதென்றுமகற்றியமரங்கள்தாமும்
மிகுத்ததுவேணுமென்றுவிரும்பியமரங்கள்தாமும்
மகத்துளதேவர்கட்கும்மற்றுளமாந்தருக்கும்
பகுத்திருவகையாயாய்ந்துபற்பலவகையுஞ்சொல்வாம். (874)

அம்பலூர்வளவுகோவிலனற்படல்பறவைசெல்ல
வம்புடன்கொடிகள்சுற்றல்வல்புழுவினங்கள்சேர்க்கை
தும்பியால்காற்றால்வீழ்தல்சுடுகாடுபாழ்மனையுஞ்சேரி
வெம்புறனுடன்பேய்பூதமேவல்வோற்றதாகா. (875)

சீறியகாற்றில்வீழ்ந்ததிறமைசேர்மாமுமல்லாற்
கூறியவாலயத்திற்குணம்பெறநிற்குநல்ல
தேறியமரமயானத்திருந்திடுமரமகந்தான்
மாறியேகட்டுமாகில்வம்மிசநாசமாமே. (876)

அத்தியுமாலுமிச்சியரசுடனிலவுதானும்
நத்தியபுரசுகுச்சம்நவின்றிடுமிலந்தைபீலி
வித்தமமகிழுங்கூறும்விளாவுடனிவைகளெல்லாஞ்
சித்தியாயகங்கள்கட்டச்செல்வமுங்குன்றுந்தானே. (877)

வேறு.

அத்தியாலிச்சுமாசுபுரசுவிளா
வெற்றிமகிழிலுப்பைவெண்குடசை — சுத்த
இலந்தைமரங்களிவைபத்துமானே
கலந்துவெட்டிக்கட்டிடலாகா. (878)

பெருங்காற்றில்வீழ்ந்துபோனதில்வெந்து
மருங்கோயில்பிம்பத்திலார்ந்தும் — பெருந்திருவே
யிந்தமரங்களெடுத்தில்லங்கட்டினால்
அந்தமனைபாழென்றறி. (879)

அத்திபுரசுயாசுவிளாவிச்சு
தித்திமகிழிலந்தைதீகுடசை — நித்த
விலுப்பைமாம்யாவுமின்குயிலேசேர்த்து
வலிசேர்த்துக்கட்டல்மறு. (880)

புசலிலேவீழ்ந்தும்புகழ்கோவில்பிம்பம்
வசமார்ந்துந்தீபற்றும்வானம்—நிசமாக
விந்தமரங்களெடுத்தில்லம்கட்டுவரேல்
அந்தமனைபாழென்றறி. (881)

இன்னவைகளுக்கு இன்னமரம் ஆகுமென்பது.

கருதுமாண்மரமேயாகிற்காலொடுதுாணுக்காகும்
மருவுபெண்மரமேயாகிற்வளையுத்திரம்பொதிகைக்காகும்
விரவலிமரமேயாகில்விட்டமுஞ்சட்டமாகும்
உரவியகைகளாகியுத்தமமரங்களாமே. (882)

அடிதலையிரண்டுமொத்தாலாண்மரமதுவேயாகும்
அடிபெருத்ததுவேபெண்ணுமம்மரந்தலைபெருக்கில்
வடிவுள அலியதாகும்வளைகளுத்திரங்கள்போதி
மடிவிலா விட்டஞ்சட்டம்மரமதுபெண்ணேயாமே. (883.

ஆனமரமாஞென்றுபலவாகிற்பெலன்களாராய்ந்து
ஊனமில்லாததையுரித்தேஉரமாயுத்திரந்தானிசைக்கில்
ஈனமில்லைமனைக்கிடறுமில்லைவாழ்வுமிகவுண்டாம்
போனதிசையும்நன்றாகும்புகழுஞ்சிற்பன்றனக்காமே. (884)

உத்தரமிசைக்கவேண்டினுன்னிநீர்கேளுமெல்லாம்
அத்தனையகலந்தன்னையளந்துநற்சதுரமாக்கி
வைத்ததோர்கனத்தைநேரேவடிவுறநூலாற்கண்டே
இத்தனையொன்பதாகவிசைந்ததுகுடுமியாமே. (885)

உத்தரமிசைக்கிலாணியுத்தமமாகக்கொள்ள
உத்தரமிசைக்கிலாணியுலகத்தில்வலமதாக
உத்தரமிசைக்கிலாணியுலகத்திலிடமதாகிற்
சத்துருபெருத்துப்பின்னும்சாலேதீப்படுதறிண்ணம். (886)

அடியதுகீழுக்காகுமகத்துச்சீர்மேலதாகும்
படிமுதலானதெல்லாம்பார்த்துடனிசைத்துக்கொள்ள
முடியவேயோரமாகில்மூலமுமுள்ளேவாழும்
கடிகமழ்நூலினுள்ளேகண்டநூலுரைத்தவாறே. (887)

மையதாகநல்லமரந்தனையிசைப்பாராகில்
கையினில்பொருளும்போகுங்காவலன்றனுஞ்சாவான்
பையவேயாகில்மையம்பாதியிற்பாதிகொண்டு
செய்யவேயிசைத்தல்நன்றும்தேனினைப்பழித்தசொல்லாய். (888)

நிறைநெய்யில்லாவயிரமுடன்நெய்யில்வயிரந்தானிசைக்க
வறண்டவயிரந்தனுடனேவறண்டவயிரந்தானிசைக்கச்
சிறந்தவலத்தில்நெடுவடையுஞ்சேருமிடத்திற்குறுவடையும்
புரம்பில்தச்சனின்றிசைக்கப்புகழுஞ்சிற்பனுள்ளிசையே. (889)

இருந்தமுதுமைமுதுதலையுமிளமையோடேயிளந்தலையும்
பொருந்தியிசைப்பாராமாகிற்பொல்லாநோயுமிகத்தொடரும்
திருந்துமுதுதலையிளந்தலையுஞ்சேருமிசைகள்மிகநன்றாம்
வருந்தியிசைப்பாராமாகில்வாழ்வுசம்பத்துண்டாமே. (890)

ஓரிசைதானேயாகிலுத்தமமல்லமென்றும்
பேரிசையிரண்டதாகிற்பிரவுபகாரசென்ம
நாரிகொள்மூன்றினோடுநாலிசைவெறும்படாக
மேரிசையைந்துமாறுமியல்புதவற்றமாமே. (891)

ஒப்பியவிசைகளேழெட்டுள்ளதுதேவசத்தி
செப்புமேலிசைகளெல்லாம்தெண்டிகையென்றுபேராம்
இப்படியறிந்திசைக்கிலதிலிடறில்லையென்றும்
துப்புறுகிளையுமிக்கசுகத்தையுங்கொடுக்கும்நன்றே. (892)

காலளவு விவரம்.

பரப்பினையொன்பதாக்கிப்பண்புடனொன்றுநீக்கி
இரப்பதோரெட்டுங்காலாயிரண்டுகீழ்மேலுக்காகும்
குருத்துடன்கவருதானுங்கொள்வதுமிச்சமாகும்
திருத்தமாய்முகூர்த்தங்கொண்டுதென்மேற்குமுன்னநாட்டே.

பன்னுறுமகலம்பற்றிபன்னிருகூறுசெய்து
அன்புடனைந்துமஞ்சாமாற்றதுதொகைபதாகும்
இன்பமேழ்நடுவிற்கையாமெட்டுகோடாகையாகு
மொன்பதுகூறுதானேயுற்றதுகோடியாமே. (894)

அஞ்சினிலிரண்டதாகிலகலத்தையிருபதாக்கி
மஞ்சதீராறுபன்மூன்றடியிலமஞ்சாகையாக
பூஞ்சொல்நடுவாகையிரேழ்மூவேழ்கோடாகையாக்
குஞ்சியதிருண்டமாதேகொடிபதினாறுகொள்ளே. (895)

எழினில்மூன்றங்கைக்குஇருப்பதைமூவெட்டாக்கி
வாழுமீரெட்டுமஞ்சிமஞ்சிகைபதினேழாகும்
மூழியில்நடுவாகைக்குமுன்தலையொன்பதாகுஞ்
சூழ்கொடிகைப்பதொன்பான்சொற்கொடியிருபதாமே. (896)

ஒன்பதுநான்குதன்னிலுறுநளியிருபத்தெட்டி
லன்புடைமஞ்சுபத்தொன்பதாகுங்கையிருபதாகும்
நன்கோடதிருபத்தொன்றுநடுவாகைகோடாகைகோடி
முன்புறுவழியாமென்றுமுறைமையாலேற்றிக்கொள்ளே. (897)

பதினொன்றிலஞ்சுகையில்பாரகலமுப்பத்திரண்டா
மதிலிருபத்திரண்டுஅஞ்சுமஞ்சாகையான
வதனடுவாகைகோடாகைகொடியடைவிலேகையேற்றி
விதியினிலொவ்வொன்றாகவிரும்புகையளவதானே. (898)

உன்னுமஞ்சுமூதுகுயாமொன்பதொன்றுகொடியாகும்
பன்னும்பலசார்கைதனக்குப்பாரப்புமுதுகின்மேலதனைப்
பின்னும்பாரப்புமூன்றுகைகால்பெய்தகோடாகைமூன்று
மன்னும்நடுவாகையிரண்டுமஞ்சாலக்கொன்றிழுக்கதுவே. (899)

கொடிக்கு முதுகுயரம்.

மஞ்சுமுதுகையைந்தாக்கிமருவுங்கொடிக்குத்தண்டேத்து
மிஞ்சவேற்றுஞ்சேடமதுவிரண்டுநான்குகூறாக்கி
நஞ்சல்கோடாகைமூன்றுநடுவாகைக்கோரிரண்டாகு
மஞ்சாகைக்கையொன்றாகி அறையுமுதுகினுயரமதே. (900)

தெருவாசற்காலின் இலட்சணம்.

கன்னிலேதேவர்க்காகுங்கனமறையோர்க்குவேம்பாம்
மன்னவர்க்காச்சாதேக்குவைசியர்க்கிருப்பையாகும்
பண்ணுவேளாளர்கட்குபகர்தெங்குமுசிலையாகும்
யின்னவைதமிழினாலேயியம்பினர்வேதத்தோரே. (901)

நிலைதனையகலங்கொள்ளில்நேர்படச்சேர்க்கும்போது
நிலையகலத்தினாலேகனமதுநீட்டிக்கொண்டு
நிலையகலித்துமுக்கால்நீளமைகாலேயாகில்
நிலையகலத்தால்வந்தநிலத்தளவொத்ததாமே (902)

மட்டுக்கொண்டநிலைநீளம்வளையின்கீழ்மன்னவர்க்காகும்
எட்டுகூறிட்டாறுமொன்றுளச்சமூன்றுபடியாகும்
வட்டமலைபோல்தனம்படைத்தமங்காய்துங்கமதிமுகத்தாய்
சட்டமாகமயனுரைத்தசங்கைதெளிநூலிதுவாமே. (903)

ஓதியநிலைநீளத்தையொன்பதுகூறுசெய்து
நீதியாயிரண்டுமைந்துநீள்விரல்முறியாவண்ணம்
பாதியாம்விரலையொற்றிக்கொள்வது பழுதொன்றில்லை
மீதியாயிரண்டொன்பானல்மேலைந்துகீழ்நால்காண்க. (904)

மட்டுரைநிலைநீளத்தைமன்னியவேழுசெய்தே
ஒட்டோடாறிரண்டுநீக்கியொன்றினையொன்பதாக்கி
இட்டதோர்கூறுதன்னில்மேலைந்துகீழ்நான்காகும்
வெட்டிடிற்பாதிபோகும்விரலொற்றிக்கொள்வர்நாமே. (905)

கதவுகளின் இலட்சணம்.

நாவலுந்தேவர்க்காகும்நவில்மறையோர்க்குவேம்பாம்
மேவுமன்னவர்க்குத்தேக்காம்மிக்கவைசியர்க்கிலுப்பை
தாவுவேளாளர்தெங்குதனியெட்டியெவர்க்குமாகா
காவியமாகச்சொன்னேம்கதவுகளியல்புதானே. (906)

சிறப்புடைதேவர்க்கண்டல்புறத்தலாமிரண்டுமாகும்
சிறப்புடைவடமிரண்டாயடைத்தலுந்திறத்தல்தானும்
சிறப்புடையகலமொன்றுதேவர்கட்கன்றியாகா
சிறப்புடன்கதவுங்கோலுஞ்சிக்கெனச்செய்தல்நன்றே (907)

நிலையுறுமரங்கள்தானும்நீள்முடிநிலையுமட்டந்
துலக்கமாங்கதவுக்கானசூத்திரப்படிதுணைக்கோல்
நிலக்கமாந்தாழ்ப்பாளொன்றுயிரண்டுமேயளவதாகும்
பலக்சநாட்டிடவும்வேண்டில்பன்னிரண்டளவுகொள்வாம். (908)

தெருவாசல் விடுமிடம் இன்னபாகத்திலிருந்து எண்ணவேண்டு மென்பது.

வாமத்தில்கதிரோனுதிவந்திடுங்கோள்கள்தானும்
சேமத்தின்வலத்தின்கோடிசெம்பாம்பென்றுரைப்பதாகும்
நேமித்துமனைசெய்வோர்க்குநெறிமுறைவழியைக்கண்டு
பூமியில்கதவைநாட்டப்பொருந்தியவிடத்திற்செய்யே (909)

தேறியமனைக்குவாசல்தெருப்புறஞ்சுவாளந்து
கூறதுநவமேசெய்துகுணமதிபுதன்சூர்கண்டு
தேறுகவாசல்விட்டுத்தெருக்கெதிர்கொல்லைவாசல்
தேறியமனைக்குச்செல்வம்சிறப்பெனமயனுரைத்தான் (910)

விடுப்பன்தயொன்பதாய்வீட்டையளந்துகொண்
டிடப்புறமூன்றுமியல்வலமைந்து
நடுப்புறத்தொன்றில்நலம்பெறவாசலா
யெடுப்பதுசொன்னேமினிக்கதவிடுவதே. (911)

ஒன்றாகநின்றமனையுயர்நீளமதைக்
குன்றாமலொன்பதாய்க்கூறிட்டு—நன்றாக
வாமத்தில்மூன்றும்வலத்திலேதானைந்தும்
சேமத்தேவாசலிடச்செப்பு. (912)

மன்றுறுமனையினீளம்வகுத்ததோர்முழங்கடம்மை
ஒன்பதுகூறுசெய்தேயொருமூன்றுமிடத்தேபோக்கி
நின்றதோர்வலத்திலைந்துநீக்கியேநின்றகூற்றில்
அன்பொடுவாசலாக்கஅறிந்தவருரைத்தவாறே (913)

ஊனமில்நெறியில்வந்தமுழந்தனையளந்துகொண்டு
மானிடர்தமக்கதாகில்மையத்திவிடத்தேயாகும்
தேனமர்குழலினாளேதேவர்கடமக்குமைய
மானதோர்வாசலென்னவறிந்தவருரைத்தவாறே. (914)

ஓங்கியநீளந்தன்னையொன்பதுகூறுசெய்து
பாங்குடன்வலத்திலைந்தும்பரிவுடனிடத்தில்மூன்றும்
நீங்குறக்கூர்வதென்றுநீதியாய்நின்றவொன்றில்
தீங்கில்லாவாசல்விட்டால்சிறப்புடன்வாழ்வர்தாமே (915)

அரிதாம்மனைக்குவாசல்விடவதனைப்பாலொன்பதுமாக்கி
உரிதாம்வலத்தில்பங்கைந்துடனேயிடத்தில்மூன்றுபங்கும்
விரிவாம்நடுவிலோர்பங்கில்விடுவாய்வாசல்கதவும்
பெரிதூண்கூரையுத்தாங்கள்பேசாதோடாதவைசிறுத்தே. (916)

ஆண்பெண் மனையறிந்து வாசல் விடும்விதி.

அருக்கனுங்குபேரன்றானுமாணதுமனையதாகும்
பெருக்கவேவருணன்சிம்மம்பெண்ணெனவகுத்தார்நூலோர்
இருக்கும்ஆண்வலத்திலைந்தேயேந்திழையிடத்திற்பூகம்
வருக்கமாய்வாசல்விட்டால்வாழ்வெனமயனுரைத்தார். (917)

வீட்டிற்குமத்தியில்வேண்டாம்வெளிப்போக்கு
வேட்டலுடன்விளக்குங்கால்—மாட்சி
குறைந்தும்விருத்திகுறைந்தும்முடிவில்
இறந்திடுவரிப்பூஇழந்து. (918)

வாசற்கால் அளவுப் பொருத்தம்.

தெருமனைவாசற்கால்கள்செய்திடும்மனைகேளப்பா
அருமையாய்க்குறுக்கும்நீட்டும் அளந்து அங்குலமாய்ச்செய்து
துருவம்ஈராறுசேர்த்துத் துலங்கேழுபெருக்கிய
ஒருமையாய்வருஞ்சேடத்தின் ஒருபலாபலன் சொல்வாயே. (919)

சொல்லுவாயொன்றுதோன்றில்சுகமதாமிரண்டேயாகில்
ஒல்லையிலிலாபஞ்சேரும்உற்றபொன்போக்காமூன்று
வல்லநான்காகில்பந்தம்வருஞ்செல்வமைந்துநின்றால்
அல்குமேயாறில்துக்கம்ஏழ்வரிலருகலாமே. (920)

வேறு.

வாசற்காலுள்நீளம்வண்குறுக்குத்தானளந்து
கூசக்கருதங்குலமாக்கிப்—பேசத்
துருவமதுபன்னிரண்டுசேர்த்துத்துகளில்
மருவவெழுவெண்ணால்வரு, (921)

ஒன்றுமுதலேழுக்குமோங்குபலன்கேளாய்
துன்றுசுகம்லாபம்சுழிவிரயங்—கன்றுமே
பந்தனம்செல்வம்பகர்துக்கம்சாக்காடு
சிந்தனமேகொண்டுதெளி. (922)

வாசல் விடுவதின் பலன்.

பருதியின்கூற்றிற்பகிர்த்துவாரம்
ஒருபொழுதும்வையேலுறுதி—பொருளற்றுச்
சந்ததியும்பூச்சியமாய்த்தாரமிழந்திடுவன்
அந்தமனைப்பாழாம்அறி. (923)

சந்திரனில்வாசலிடுசம்பத்தாம்தீதறவே
இந்திரனைப்போல்வீட்டில்எந்நாளும்—அந்தமுறத்
தப்பாமல்பால்பசுவுஞ்சந்தானம்தான்மலிய
எப்போதும்வாழ்வாய்இனிது. (924)

கொடிய அழல்கூற்றில்கூடாதெருவாய்
மிடியும்பலநோய்விளையும்—முடிவில்
வறுமைக்கலகம்வரும்நிசம்பேய்பிச்சி
சிறுமையேவந்தணுகும்நேர். (925)

புதன்கூற்றில்தூம்புபுரிவரேல்அவ்வில்
பதம்பெருகும்சம்பத்துபாங்காம்—சதம்பெருகிச்
சீதேவிவந்தணுகும்செல்வம்நிதம்மலியும்
மேதாரம்போல்பூதிமேல். (926)

குருகூற்றில்வாயில்குலவவிடுமேல்
அரசர்நிலயம்அணியாம்—அரியமனைக்
காகாதுசந்தானம்அற்பமாம்பேர்மங்கல்
போகாதுயசம்பொலிந்து. (927)

வெள்ளிதனில்வாசல்வேண்டாவிளக்கினுல்
கள்ளிருளில்கள்வரால்நாசமுறும்—பள்ளியிலே
தூங்கவொணுபால்பசுவும்துன்பமுற்றுவீணுகும்
தேங்கமலகண்மனைவிதீங்கு. (928)

காணுர்சனிவாசல்காட்டுங்கலகமிடி
வீணுனதுன்பம்விளையுமே—நாணம்போம்
ஆணுனபேர்க்கச்சம்ஆகுமேயம்மனையில்
தோணுதுகோதைசுகம். (929)

பாம்பிங்கிரண்டில்வழிவைத்தால்பன்னுளும்
சோம்பல்விஷம்யாவும்தோன்றுமே—தீம்பான
பில்லியுடன்சூனியங்கள்பேய்முனிகள்வந்தணுகி
அல்லல்படுத்தும்அறி. (930)

வேறு.

கரியபாம்பில்வழிவிடகாணுமேகலக்கம்
பிரியமுடன்வாழும்பெரிய—கருநாகம்
நாடதனிலம்மனையிர்பிளப்புற்றுமே
வாடலுடன்வாழும்அது. (931)

கேதுவினில்கால்நாட்டகேடாம்பழையதனம்
சேதம்படியதனில்சேருமிக—தீதுடனே
மாக்கள்மிகுதுன்பம்நோயிடர்வாதை
நோக்குமிடமெல்லாம்நுவல். (932)

சன்னல் உத்திரம் சாத்துதூண் தண்டியம் இவைகள் அமைக்க வேண்டிய விதி.

நகருத்திரந்தூண்சன்னல்நாடதனிலிரட்டையின்பம்
சுகமஃதுதானிரட்டைசொற்றியவசமுநன்றாய்ப்
புகலுவாய்ஒற்றையாகாபொலிந்திடும்நிலையும்ஒற்றை
செகம்புகழ்மயனார்தாமும்செப்பியதறிந்துகொள்ளே (933)

வேறு.

சன்னலுத்திரஞ்சாற்றுகைத்தூண்களுந்
தன்னமின்றிச்சமநிலைவாழ்வதாம்
பின்னமாகவியநிலைபேசினு
மின்னல்தீமையிடுக்கண்வறுமையே. (934)

வாயில்விடு மாதங்கள்.

ஒழுக்கியகுண்டையாழ்நண்டுவர்கிழக்குடன்வடக்காம்
மழப்புலியரிவைகோலேல்வயங்கியகிழக்குந்தெற்கு
விழித்திடுந்தேளும்வில்லுமகாமுமேற்குந்தெற்கு
வழுத்தினர்குடமீன்மேடம்வாசலாம்வடக்குமேற்கு. (935)

வேறு.

மிட்டுமேடமீனகும்பம்வடக்குமேற்குவாசல்தாம்
விட்டமகரந்தநுசுதேள்மேற்குதெற்குவாசல்தாம்
தெட்டுதுலாமுங்கன்னிசிங்கம்தெற்குகிழக்குவாசல்தாம்
கிட்டுங்கடகமிதுனவிடைகிழக்கும்வடக்கும்வாசலே. (936)

வேறு.

ஆடிசிங்கம்மேல்சார்ஆமேகிழக்குமேல்வாசல்
கேடில்லாததைமாசிகீழ்சார்மேல்வாசல்தானே
காடிமேடம்வைகாசிதென்சார்நாடும்வடவாசல்
தேடிற்குதிரைகார்த்திகையில்தென்வாசலைவைவடசார்பே. (937)

காதல்வடசார்தென்சாரல்கருதுந்தென்சார்வடசாரல்
மாதுங்கீழ்சார்மேல்சாரல்மற்றுமேல்சார்கீழ்சாரல்
போதும்வலமாம்பெருக்கமுடன்புகலும்சன்னல்தான்விட்டால்
தீதுநீங்குங்குற்றமில்லைசெய்துவாரங்கொளுமிக்கோன். (938)

வேறு.

மாசிதையிற்கிழக்கதுசார்பினில்வகுத்தசித்திரைவைகாசிதெற்கதாம்
வாசியாவணியாடிமேற்பாரிசம்வந்தகார்த்திகையைப்பசிஉத்தரம்
தேசிப்பின்னிருநான்குமாதத்திலும்செல்வமுண்டதன்சார்பிலெடுக்கவே, நாசபங்குனியானிபுரட்டையும்நாகமார்கழிநாசமென்றார்
மயன். (939)

தூண் ஒழுங்காக நடாததினாலுண்டாகும் பலன்.

ஒற்றியேதூணுங்காலுமொழுங்குடனட்டாணுகில்
தத்தியேதலைகள்வீழும்தனமதுசேதமாகும்
பெற்றிடும்பிள்ளைபெண்டீர்பெருகியேவியாதியாவர்
பத்தியாய்மயனார்தாமும்பண்புடனுரைசெய்தாரே. (940)

வீட்டில் பத்தியொடு பத்திகள்சேரும் பலனும் சேராப்பலனும்.

பத்திகள்பத்திசேரிற்பதியுடனிருந்துவாழ்வர்
பத்திகள்கலையுமாகில்பதியதுகலையுமென்ன
உத்திரந்தூண்கள்தானுமொழுங்கிலேகில்லாதாகிற்
சத்துருவாலேயந்தசாலைதீப்படுவதாமே. (941)

ஆயப்பத்தியகப்பத்திவந்திட
அழகதாகியவம்மனைபாழதாம்
வாயப்பெற்றதிசைக்கிடம்வந்திட
வாடியேயுயிர்தானுமடிந்திடும்
மாயற்குற்றவயனிட்டநூல்வழி
வகுத்தபத்திகளட்டமத்துற்றிட
வேயப்பெற்றவர்மாரணமெய்துவர்
விளம்புமாறுவிதியறிந்தோர்கவே. (942)

சுவர்பிளத்தலின் பலன்.

ஆனதோர்சுவர்வெடிப்புமடுத்ததோர்கிழக்குநாசம்
வானந்தீமூலையல்லல்மாமகோரந்தெற்கிற்குத்
தேனுதல்கன்னிபோகஞ்சிறந்ததோர்மேற்கேயாக்கம்
கோன்வடமேற்குச்சாவுகுறித்தநல்வடக்குலாபம். (943)

வேறு.

எடுத்தமனையில்சுவர்பிளக்கிலெண்ணிக்கிழக்குமுதலாகத்
தொடுத்தநாசஞ்சிலுருடனேதுக்கமழகுசுகஞ்சாவே
அடுத்தலாபமரணமுடனுகவெட்டுத்திசைதமக்கும்
விடுத்துவலமாய்த்தான்கண்டுமிக்கபலனைவிளம்பிரே. (944)

வேறு.

நல்லமனையில்சுவர்பிளக்கிலருக்கன்றிசையில்நாசஞ்சே
யல்லலுறும்பொன்சாவுபுதனழகாம்புகர்மேலாக்கமதாங்
கொல்லுங்காரிமதிநிதியம்கூற்றுபாம்பாமெனக்கொள்க
வெல்லையருக்கன்சேய்பொன்மால்புகர்சுன்மதிபாம்பெண்டிசைக்கே.

முகப்புமுன்சுவர்வெடித்தல்மூத்தவள்குணமுங்காட்டும்
தகப்பனையடிக்கும்பெற்றதாயையும்குடிவிட்டோட்டும்
மிகப்புரட்டானவார்த்தைவேலையாமங்குஇல்லை
சுகப்பட்டபாடுமில்லைசூலாடுபோலேயாழ்வர். (946)

புற்றெழுமிலட்சணம்.

செஞ்சிதல்மனையில்வந்துசேர்ந்திடில்பலன்கடன்னை
முன்சொன்னநடுகிழக்குமுதலண்டமெட்டுங்கொள்ள
மிஞ்சியகேடுநன்மைவிருத்தமாமின்பமாகு
மஞ்சுறமனையேசெல்வமனையுமேவாழ்வுபீடை. (947)

எண்டிசையுங்கிழக்குமுதலாகவெண்ணிலிந்த்ரனக்கினியமன்நிருதி
வருணன்வாயு—, வண்டமுறுமதியீசனட்டதிக்குமகலம்நடுவேலயன்
மேற்புற்றெடுக்கில்—, மண்டிசாவிந்திரன்மேற்செல்வமங்கிமனையிடியு
மியமன்றுயரம்நிருதிவாழ்வு—, கொண்டல்வருணன்மகவுகாற்றுக்
கூற்றங்குலமதியேநலமீசன்குறுகுநோயே. (948)

நடுவுங்கிழக்குமுதலெட்டும்நடுவணைதன்னில்புற்றெடுத்தால்
நடுவாயெண்ணிப்பலன்சொல்நடுவதனிற்சாவுசெல்வம்
மிடியுந்தெற்குதுக்கமதாமெண்ணுஞ்சிறியபுத்திரனு
மடியுமாணநன்மையதாமற்றவியாதியதுவாமே. (949)

ஜலதாரையிலட்சணம்.

தெருசித்தவாரல்நீர்தென்திசையேகிடில்
வருசித்தசெல்வம்வற்றுமென்றார்மயன்
வருசித்தவாரல்நீர்வடதிசைபாய்ந்திடில்
தெருசித்தபால்நெய்சேருமநுதினம். (950)

கோசலம்போல்குடிகள் தழைத்திடும்
பூசல்களுண்டுபெருக்கநிதமுமே
யீசனுணர்வாரல்நீர்வருணனில்பாய்ந்திடத்
தேசுற்றலட்சுமிசேராதொருநாளும். (951)

வேறு.

கூற்றுவன்றன்றிசைகூர்த்துநீர்வீழ்ந்திடிற்
காற்றினைபோலகங்காணுமேநிதம்
சோற்றுக்கிலாய்ச்சுழன்றலைவாரெனப்
பார்த்துமயனார்பரிந்துரைத்தாரே. (952)

வேறு.

முற்றத்தின்நீர்கள்போக்குமுறைமையைசொல்லக்கேளு
கொற்றவிந்திரனின்மேலுங்குளிர்கொடையீசன்மேலும்
சொற்றிடுநீர்ப்போக்கெல்லாஞ்சுகமேதேயாகுமென்றும்
மற்றதோர்திக்கிலேதான்மனையினீர்ப்போக்கொணாதே. (953)

முற்றம்வீழ்நீர்கள்போக்குமுதற்றிசைசோமனீசன்
பெற்றிடுதிக்குநன்றாம்பேசும்மற்றுளதிக்காகா
துற்றிபூண்மிச்சிற்சுத்திசோமன்கீழீசனன்று
மற்றுளவைந்துதிக்கும்வருப்பொருண்மைநந்தர்கேடே. (954)

வீட்டின் உயர்வு தாழ்வு இலட்சணம்.

கட்டியமனைகள்தம்மில்கருணையாய்கிழக்கும்தெற்கும்
திட்டமாய்உயர்ந்ததானால்சீரிய அரவந்தீண்டும்
நட்டமாய்மனையும்பாழாம்நல்மனையாட்டிபாழாம்
கெட்டிடும்கிருஷிபாழாம்செய்தொழிற்கிடைஞ்சலாமே. (955)

திடத்துடன்மனையைச்செய்வோர்திக்குகள்உயரவேண்டில்
இடத்துடன்வடக்குமேற்குமிடமதுமுயரில்நன்றாங்
கிழக்குடன்தெற்கேயோங்கில்கேடடைந்திடுவொன்று
விடப்பணியாவம்பூண்டவிமலனாருரைத்தவாறே. (956)

கோணமேதெற்குயர்ந்தால்குலமனைதான்பாழாகுங்
கோணமேமேற்குயர்ந்தால்கொண்டதோர்பொருளாதாயங்
கோணமேகிழக்குயர்ந்தால்கொள்ளைபோம்பிணிபால்காசம்
கோணமேவடக்குயர்ந்தால்கோடிபல்தனமுஞ்சேரும். (957)

வேறு.

குடதிசைவடக்குத்தாழ்தலுத்தமமாகுமேற்கு
இடமுடனுயரமெத்தயின்பம்வந்தெய்துஞ்சால
திடமுளசுற்றத்தாரும்தெளிந்தநீர்சூழல்போலப்
படமுடன்காணிகோடிவயதுடன்வாழ்வார்தானே. (958)

இச்சையாய்மேற்குதெற்கேஇடமுடன்தாழுமானால்
வைச்சதோர்நிதியம்வேறாய்மக்களும்சாவர்கண்டீர்
பட்சமிப்படியேகாணில்பாழ்கருமனையேயென்று
இச்சையாய்மயனார்தாமும்இயம்பினர்உலகுக்கன்றே. (959)

வேறு.

வளர்நிலங்கிழக்கொடுவடக்குத்தாழ்ந்திடி
லளவிலாவாழ்வுடனாக்கமெய்துமால்
விளைவுறுதெற்கொடுமேற்குதாழ்ந்திடில்
கிளர்பெருந்துன்பமுஞ்சேடுமெய்துமே. (960)

சாரிகள் உயர்வதின்பலன்.

மூன்றுசாரியுமூடிடக்கட்டினால்
தூண்டுதீபம்சுடர்புறம்நீண்டிட
மீண்டுயோகந்தனமும்வேளான்மையும்
வேண்டுநாளுவிளங்கிடுவாமரோ. (961)

மூன்றுசாரியுமூடவேகட்டிட
தூண்டுதீபம்சுடர்புறமூடிட
ஆண்டுதோறுமசமிகநோயதாம்
வேண்டுநாளும்விளங்கிடாதென்பவே (962)

ஒத்தைமேடுறவோர்சுவர்கீறிடப்பார்த்து
உத்தமாக்கமிரந்துண்ணும்வீடுதான்
அத்தமாடிமட்டடங்கியாய்விடும்
பொய்த்ததாமனைபுகன்றதுவேதமே. (963)

மோடொத்துத்தனிமுன்மனைநாழிகள்
ஈடொத்துவிடம்நித்தமுஞ்சுற்றிட
கேடொத்துநலங்கெட்டிடும்நாளிலே
நாடொத்துண்ணுந்தன்மனைசார்ந்ததே. (964)

மோடொத்துக்கதிர்முன்னெடுவீடுதான்
ஈடொத்துவலம்எந்நாளுஞ்சுற்றினால்
நாடொத்துநன்மனைபொருந்திடும்
கோடொத்தமனைகொற்றவனாதமே (965)

வீதியுயர்ந்து வீடுதாழ்ந்ததின் பலன்.

வீதியுயர்வாகிவீடதுவேதாழ்வானாற்
பேதமையின்வாழ்தம்பிசகாகும்—ஊதியம்
போய்விடும்சத்துருக்கள்புக்கில்பருதவர்
நோய்கவலையென்றுரைக்கும்நூல். (966)

வீதிக்கு வீடு உயர்ந்திருக்கவேண்டிய அளவு.

மன்னுற்றவீதிதலைவாசலுக்குமே
துன்னிட்டவங்குலஞ்சோதியாகுமே
தன்னுற்றவீதிக்குந்தலைவாசற்படிக்குமே
வின்னுற்றவங்குலமிருபத்தொன்றாகுமே (967)

முகடு உயர்ந்திருப்பதின் பலன்.

வாயுமுகடதுமட்டுமுயர்ந்திட
நோயும்வறுமையுந்துன்மையாய்த்தோன்றிடும்
தீயுமூலைமேலேதிட்டதுயர்ந்திடில்
சாயுமாரகந்தரியாதனைசெப்பே. (968)

தென்றிசைவீட்டிலஞ்சிகாமுயர்த்திட
மன்றிடுமாக்கம்வளருமேன்மையாம்
கன்றிசைபருக்கலும்கவினுமேல்திசை
மின்றின்றிட்டுயர்த்திடமேன்மையாகுமே. (969)

†

முகடு குந்தியதின் பலன்.

மோட்டினில்பாக்குத்தமுகத்திலில்லத்துண்டாகும்
போட்டிப்பேசிடுவார்வீட்டையாளர்கேட்பார்கண்டோர்
கீட்டியபொருளுந்தாரார்நிலவாய்நின்றாய்க்காக்கைக்
கூட்டிலுள்ளமுஞ்செய்யுஞ்சுணையுமுன்றேகுடியிருக்க. (970)

முகடு பிரிந்த வீட்டின் பலன்.

மோடுதான்பிரிந்தவீட்டிலுற்றவனடைஞ்செய்வான்
ஆடுடன்மாடுமாதுக்கடுதினஞ்சண்டையுண்டு
ஓடுவார்வீட்டைவிட்டுஉலாவுவார்பணத்தைத்தேடி
வாடுவார்வனத்தில்லாமல்மயங்குவார்மதிகெடுவார். (971)

கோடிமனையின் பலன்.

வாழுவார்கோடிப்பிணைப்பலகைக்குவாவார்வைக்கைதுலமை
ஏழுகற்கல்லிலெழுதியபின்பெயரிலாவிதருசெருப்புறத்தே
பாழாய்க்கிடக்குமனையதனைப்பகர்க்கமனிதன்பெருகநும்
தாழாவண்ணம்அதனையெடுக்கத்தானியமில்லைவாழ்க்கைதிதமே. (972)

விலாவில் துவார மிடுவதின் பலன்.

போலவேவம்மனைகள்தம்மில்பொருப்புடன்விலாத்துவாரம்
சிலைப்பலைப்பாருக்கிலிட முடனெஜமான்பீடை
சாலவேவைத்திப்பில்சோர்வாய்ச்சஞ்சலமிகவுண்டாகும்
தாலமேபலரித்தைதவன்றனர்தனக்கதாமே. (973)

† செய்யுள் சில விரந்தன.

பிணம் எதிர் பட்டமனையின் பலன்.

மனமுங்கலங்கிடுமேபிணம் எதிர்த்தமனையில்தவம்வாழ்வுநில்லாது
கனங்குறைந்திடுமேகவலைமீறிடுமேகல்லாறுலுயிர்பகைவருமே
தினச்சண்டையுறுமேதேப்புதிப்பிடுமேதெய்வமுன்அழைக்கவாரா
தே,யினம்எதிரிடுமேயிதயமுந்தப்பிடுமேயேழைமனையாயிருந்திடுமே

மாப்பட்ட மனையின் பலன்.

மாப்படவிடமைத்தால்மடிப்புண்டுசோரம்போகும்
தீப்படுமில்லாவிட்டால்தீபமணிதெரியாதம்மா
சிப்படும்பிள்ளையாண்டான்திசைதப்பியேயோடிப்போவான்
கூப்பிடப்போனபேர்கள்கூடவேயிருப்பார்கண்டீர். (975)

விசிறி மனையின் பலன்.

விசிறிபோலேவீடமைத்துவெகுளிதம்சம்பாதிப்பார்
பொசிப்புமுன்உடல்கொள்ளாதுபோராமைபொறையுமுண்டு
பசித்திடும்வேளைவந்தால்பழையசோறுண்பார்தின்பார்
இசுவெடுத்திழுத்துச்சாவார்யமன்வந்தழைக்கும்போது. (976)

டகரவுரு மனையின் பலன்.

டாப்படவீட்டில்மத்தோராசுகியேயடைவான்றி
கூப்பிடுங்கடனும்வந்துகுணமும்நல்லழகுங்கோணும்
சாப்பிடும்போதுபொல்லாச்சண்டையுங்கூச்சலாகும்
ஆப்பிடுஞ்சோறொருக்கால்அகப்படாமலுமிருக்கும். (977)

நந்தி மனையின் பலன்.

முந்தியமுப்பத்தாண்டுமுனிகள்பேரழிந்துவாழ்வார்
கந்திருவதேகம்பெற்றுகளியமுதுடன்பாலுண்டு
சுந்தரமானபெண்ணும்சுதனையும்பெறுவார்கண்டீர்
நந்தியைப்போலேவீடுநலமுடனமைத்தபேர்க்கே. (978)

யானை மனையின் பலன்.

ஆனைநிகரானவிழியாள்வனவாத்தும்
சேனைமுனம்வந்துசேர்ந்துமேவிளங்கும்
சோனைமலைவாழும்தூயமுனியமைத்த
யானைமனையின்பெருமையாண்டதுமிருக்குமே. (979)

வைசியர் மனையின் பலன்.

புதன்பத்திவாசல்வைத்துப்போக்குக்காட்டி
மதிபுணர்ந்தவாசலதுதானேயாகில்
மதங்கொள்வார்மகிமையுண்டுவணிகர்க்கெல்லாம்
மதங்கொடுத்துவழிபடுவார்வாழ்வுண்டாமே. (980)
புதன்பத்திவாசல்புகுதக்குயிற்றி
சதாகரன்பக்கமிடத்தூப்பு—நிதம்பாவும்
வாழ்வும்மதங்கொள்வர்மாட்சியேயுண்டாகும்
தாழ்வொன்றும்வாராதுதான். (981)

தாலக்கிரகத்தின் பலன்.

மோடொழுங்காகுமுறைமுறைசேரும்முத்தமம்தெருப்புறம்நீளும்
தேடறந்தவமும்பக்தியுந்தருமம்திருந்தியுஞ்சந்திரனில்காலேல்
தோடருமத்தியும்துலங்கியகுருவில்சுராங்கமும்கேணியுமுண்டாம்
பாடருமாப்பார்சாதியாமனைக்குப்பாப்புமுப்பத்திரண்டாண்டே.

துலுக்கர் மனையின் பலன்.

மாதவத்தைசெய்புகரில்வாசல்வைத்தார்
மாதவத்தைக்காட்டிவான்வெளியைவைப்பார்
நீதம்வலத்தில்செல்வார்தெம்புதப்பார்
நீதக்குலத்தில்வந்திடுவார்தினமமைத்தவிதே. (983)

மாதவத்தைக்செய்யசுங்கன்வாசல்வைத்தார்
பாதைநன்றுப்பார்த்துவானபக்கம்வைப்பார்
சேதவலத்துத்திசையின்புறமேசெல்வார்தென்பு
நீதமுற்றுப்பந்துநிலவுமந்தவிதே. (984)

உலுத்தர் மனையின் பலன்.

நிலக்குச்சாயவிடமைப்பார்நிலையும்வைக்கார்
நினைத்தவிடம்காணியென்பார்நிலைத்திருக்கார்
குலத்தொழிலாயொன்றுசெப்பார்கூடிநிற்கார்
குவலயத்திலிறந்துண்பார்கூடிவாழார். (985)

இரண்டு சர்க்காமனையின் பலன்.

சதிரடியானவீடுசரியல்லசாகாரண்டு
கெதிகெடும்தெய்வமேகும்கிளம்பியவாழ்வுகுன்றும்
பதிபுகழ்பெருமைகெட்டுப்பரதவித்துருகிவாடி
புதிதுறுமனையில்பேதைபொற்றொடிகூடிவாழார். (986)

ஒற்றக்கதவுடைய மனையின்பலன்.

ஒத்தக்கதவுதான்உறும்பலனையோதக்கேளு
சுத்தம்சுகமில்லைமிகுசூரத்தால்தலைவலிநோய்
வித்தங்கெடும்விளைவுங்கெடும்மனையாள்மலடாவள்
பித்துப்பிடித்திடுமேயிதைப்பிலன்செய்தவன்தனக்கே. (9 7)

முன்பின்தாழ்ந்த மனையின்பலன்.

பின்னுமுன்னுந்தாழ்ந்துயர்ந்தபெருத்தகட்டடத்துள்ளோரே
மன்னுமதன்மனையாளோடுமருவிவிருடையில்லை
சின்னசிற்றிடையாள்சிதேவியிருந்துமென்னு [வாரே.
குன்னமும்சொல்வார்பெண்மேல்குறைசொல்வார்முறைசொல்

கோபுரசாயல் மனையின்பலன்.

கோபுரச்சாயல்வீட்டில்கூடுதல்மெத்தவுண்டு
போவதையாருங்காணார்பொசிப்புஅவ்வேளைக்கில்லை
ஆவலினலேபெண்ணை அடுத்தடுத்துடையாராவர்
ஏவல்கேட்டிடுவாரெங்குமிறந்துண்பார்ஏழையாவர். (989)

மத்தன் மனையின் பலன்.

மத்தமாமனையில்பொல்லாவல்வினைமிகவுமுண்டு
சுத்தமும்வாழ்வுமில்லைசுசிகரம்சுகமுமில்லை
வித்தையுஞ்செல்வம்நின்றும்வீண்படும்பெலமுமில்லை
சத்துவமுறவும்நீங்கும்சவுக்கியத்தொலையுமாதோ. (990)

பெருகக்கட்டிய மனையின் பலன்.

பெருத்தகட்டடத்திலுள்ளோன்வெகுசனத்தலைவன்சூரன்
செருத்திடுமேழைக்கெல்லாம்சேகானுகிவாழ்வான்
பொருத்தமில்லாதபெண்ணையும்புணருவான்பிள்ளையில்லை
மருத்துவம்ராசதெண்டம்வருமவர்க்கெந்தநாளும். (991)

பிணஞ்சுற்றிய மனையின் பலன்.

பிணஞ்சுற்றுமனையினுள்ளேபேதையைப்பேசிப்பார்ப்பாள்
குணமும்பெண்குறியுந்தின்பாள்கூடவேயிருந்துமென்னும்
பணமதைப்பறிகொடுத்துப்பால்பசுகருதரிக்கவொட்டாள்
ருணமதைக்கலகமேத்திஎறவிடிடியச்செய்வாள். (992)

ஒரு கண்மனையின் பலன்.

ஒருகண்மனைதனிலுள்ளோர்க்குறவோர்பகையாமே
வரவும்பொதுவாழ்வும்பொதுமகமும்பொதுவாமே
ரிணமும்பொதுநிதியும்பொதுநிலமும்பொதுவாமே
உறமும்பொதுஒழுக்கம்பொதுஒருகண்மனையாமே. (993)

ஒருகண்ணுன்டானநாளுமுத்தமமுமாகுமிப்போ
இருகண்ணுண்டானதாகிலின்பமனையும்வாழும்
யிருகண்ணுமில்லாவிட்டாலியற்றியகருமந்தீதாம்
விரவியசுற்றத்தோடுகெடுமேயவ்வீடும்பாழாய். (994)

ஊடுக்குமனையின் பலன்.

உடுக்குபோல்மனையிருந்தால்உள்ளடிபலனைக்கேளு
திடுக்கிட்டுத்திகைத்துநிற்பர்தெய்வமம்மனையிலில்லை
படுக்கையில்கனவரட்டிபாரியாள்மனம்சலித்து
சிடுத்துண்ணப்பேசுவார்கள்சீரழிந்தடங்கிவாழ்வார். (995)

வில்லடியான மனையின் பலன்.

வில்லடியானவீட்டில்விருந்துபோயிருந்துவாழார்
மல்லுகள்சண்டைபூசைவாய்க்கிறதில்லைகண்டீர்
சொல்லினுல்கோரங்கொண்டுசுகமில்லைக்களவுமுண்டு
நில்லுஅம்மனையில்வந்துநிற்றிடும்பலனைச்சொல்லே. (996)

ஒருமனைக்கு இரண்டு வழியுள்ளதன் பலன்.

ஒருகடையிரண்டுபோக்குஒழிந்திடுந்தனநாணியங்கள்
வருவதுமில்லைசெம்பொன் வழக்குண்டுகடனால்துன்பம்
பெருவதையன்றிவேறேபெற்றிடும்பலனைக்காணார்
உருகியேமனதுவாடி உள்ளழிந்தொடுங்கிப்போவார். (997)

கோவிலையொட்டிய மனையின்பலன்.

வேதத்தோடொத்துவாழும்விண்ணவர்மனையோடொக்கும்
மாதவசாலைசத்திரம்வாழ்மனை ஆரங்கம்வாவி
தாதவிழ்பூந்தோட்டங்கள்தலங்களும்பலனைத்தந்து
பூதமும்ஏவல்செய்யும்புண்ணியம்மிகவுண்டாமே. (998)

எதிரொலி மனையின் பலன். (Echo)

கூடவேபேசிப்பேசிக்குடித்தனம் அழிக்கும் வீடு
மாடங்கள்கூடமெல்லாம்வலமிடமாகும்வவ்வால்
நாடகக்காரர்போலேநலமிலாமுறைமைகெட்டுத்
தேடவேபோனமக்கள்திரும்பியும் வரக்கண்டீரோ. (999)

ஒருமனையுடன் ஒருமனையைச் சேர்க்கும்பலன்.

அடர்ந்தாய்மனையிருக்க அதற்கிணைமனையேசெய்தால்
தொடர்ந்துகீழ்பானுக்குமேல்தொடர்சுவர்க்கனமுதலாந்தச்சுப்
படசிறுகோலாலளந்துபதினொருபொருத்தம்பார்த்து
குடந்தையில்மாதந்தன்னில்கோலவும்மயனுர்சொன்னார்.

தென்வடல்கிழக்குமேற்குதிரும்பவுமனையேசெய்தால்
முன்னுள்ளதாயமனைக்குமூலைதன்னால்சுவர்க்கணத்தைச்
சொன்னகோல்கொண்டளந்துதுகைவகைநலமதாக
வுன்னியமனைகள்கோலவுத்தமமாகுமென்றே. (1001)

வேறு.

மனையுடன்மனையைச்சேர்த்துமனையெடுத்திடுவாகிற்
றனமிகுவலமேபெற்றால்றாழ்விலாவாழ்வதாகு
மிணிதிலாவிடமேயாகில்இழிவுடன்வாழ்வுகுன்றும்
நினைவுடன்நேரேகொள்ளில்நிச்சயம்சமவாழ்வென்னே. (1002)

ஆனதோர்கட்டுப்போக்குமதிலிநகட்டுப்போட
யேனதோர்தெற்குமேற்கேயிதமுடன்கட்டவாழ்வன்
ஆனதோர்தனங்கள்சேரும்அன்புடைமக்கட்பேறும்
நானதோர்மயன்தானித்தைநன்மையென்றுரைசெய்தானே. (1003)

ஒருபழைய மனையுடன் பக்கத்திலுள்ள காலிமனையைச் சேர்க்கும்பலன்.

மனையதுபெற்றுக்கட்டில்வடக்கொடுகிழக்குநன்றாம்
தனமுறுஞ்செல்வமுண்டாம்தரணியிலிருந்துவாழ்வார்
அனலுறுந்தெற்குமேற்குஅறைந்தனராகாதென்று
கனமுயர்மயனார்தாமுங்கருணையாற்கூறினாரே. (1004)

கீழ்த்திசையில் மனையைச் சேர்க்கும்பலன்.

பெற்றிடுங்கீழைநூலைப்பெருக்கவேவடக்குதன்னில்
மற்றதோர்மனைகள்நன்றாம்மகன்றதோர்பொருளுமுண்டாம்
பற்றிடும்தெற்குப்போகில்பாருளமனையாள்சேடாம்
மெய்த்தசெந்தமிழோர்க்கெல்லாம்மெய்ப்படவுரைத்தவாறே. (1005)

வடதிசையில் மனையைச் சேர்க்கும்பலன்.

உத்தரதிசையில் நாலையுசந்தமேதோர்மேற்குப்போகில்
சித்திரமாடம்பொங்கிசிறப்புடன்பெருகிவாழ்வா
ருத்தமேதோர்கிழக்குப்போகிலுசந்தமேதோர்மனையாள்கேடாம்
வித்தகநூலின்வல்லோர்விளம்பினர்தமிழினாலே. (1006)

மேல்திசையில் மனையைச் சேர்க்கும்பலன்.

மூலமாய்வளர்ந்துமேல்நால்முற்றவேதெற்குப்போகில்
சாலவேகருமமன்றும்தனம்பொருள்தானுமுண்டாம்
ஏலமாங்குழலினாளேயியல்புடன்வடக்கேபோகில்
காலனாருயிரையுண்ணுங்கற்றவர்நூலிதாமே. (1007)

தென்திசையில் மனையைச் சேர்க்கும் பலன்.

தென்றிசைசெந்நால்தன்னில்தெளிந்துடன்கிழக்குப்போகில்
அந்திரமில்லையென்னுமமைந்ததோர்பிணியுந்தீரும்
முந்தியமேற்குப்போகில்முனிந்ததோர்மனையாள்கேடாம்
மந்திரவிதியினாலேமனையிநூல்விதித்தவாறே. (1008)

கால் மனையின் பலன்.

கால்மனையுச்சமிச்சங்கதிரோனுமுச்சமாகும்
மால்அயன்றிசையிலெட்டும்வரிசையாயிரவிநின்றால்
கோலமாமனைக்குநல்லகுறித்ததோரிராகுநிற்பன்
பாலனோர்புரட்டன்பின்னும்பலன்பாலனஷ்டமாகும். (1009)

அரை மனையின் பலன்.

அரைமனைவிடும்மானால்அனதோர்சனியுநிற்பன்
மருவியமற்றோரெட்டும்மலர்த்திசைமாறிநிற்கும்
குருவுமேபூமிகாப்பன்குணமிலான்மனையிற்செல்வம்
அரியுடனலைச்சலாகும்ஆடுமாடயர்ந்துபோமே. (1010)

முக்கால் மனையின் பலன்.

முக்கால்மனைவீடுமானால்முதல்பலன்விருத்திலாபந்
திக்கெல்லாம்புகழவாழ்வான்திகழ்மதிஉச்சனானால்
மக்களும்வீடுஞ்செல்வமைந்தரும்மகிழ்ச்சியுண்டாம்
பக்குவமிகுந்தசெல்வம்பாரினில்பெரியோனாவன். (1011)

முழு மனையின் பலன்.

ஒருமனைவீடுமானால்உற்றதோர்குழப்பங்காட்டும்
வருவதுவறுமைதுன்பம்வண்கேதுஉச்சமாவன்
திருவுறுஞ்செவ்வாய்பூமிசேர்ந்திடக்கலந்துநின்றால்
மருவியவீடுபாழாம்மாமனைவீடுசாமே. (1012)

முழு மனைக்கு மேலுள்ள மனையின் பலன்.

எண்பதாமடிக்குமேலேஎடுத்திடும்மனைக்குமெத்த
வண்ணம்வந்திடுமேபெற்றசுதனுடனுமையாள்வாழாள்
கண்ணியம்வருமேயந்தகட்டிடம்கிரகமாகா
எண்பதம்வாழமாட்டாரெதிரியாலிளப்பாங்கண்டீர். (1013)

ஒற்றை நிலைகளாலாய மனையின் பலன்.

வாசலின்கால்கள்நேர்நேர்வைப்பதேநலமதாகும்
வாசலைக்கருங்கல்லாலேவைப்பதேவீட்டிற்காகா
வாசலைக்கருங்கல்லாலேமடந்தளியில்வைக்குவைக்க
மாசறஅறைகள்வாசற்கால்களுமொருமைநன்றே. (1014)

இல்லின்வாயில்ஒற்றைப்படில்இருப்போர்கென்றும்மகிழ்ச்சிதரும்
நில்லும்சுபமேயெந்நாளும்நீளும்புத்திரபாக்கியமே
ஏல்லைக்கடக்கும்தனவரத்துஎன்றார்சான்றோர்புகழ்ந்தேற்று
மல்லல்தெளிந்தபெருமானாய்விளங்கும்மயனார்நயம்பெறவே. (1015)

ஒத்த நிலையின் பலன்.

ஒத்தரோருடசச்சாலையொருமித்தேயிருந்துவாழ்வார்
மெத்தவுந்தவமுமுண்டுவீட்டுளாள்சோரம்போகாள்
கத்தனைக்காக்கவல்லகணவன்மேல்காதல்கொள்வாள்
அற்றவர்க்கன்னம்கொஞ்சம்அநுதினமளித்தேவாழ்வார். (1016)

சூலம் எதிரிலுள்ள மனையின் பலன்.

ஒருத்தந்தலைநோயுகந்துவந்திடுமேஊமைபிள்ளைகள்பிறந்திடுமே பெருத்சந்ததியும்பலமுங்குன்றிடுமேபேதையைப்பேய்கள்தீண்டிடுமே, வருத்தம்வந்திடுமேவாழ்மனையாளைமரிக்குமுயிர்கெடுத்திடுமே, திருத்துவாங்கல்லில்திருசூலமெழுதிதெருப்புறனுட்டிடத்தில்லறமே. (1017)

பொருந்தாத நிலையுள்ள மனையின் பலன்.

பொருந்தாநிலைக்குவிருந்தில்லைபோவதரிதேபிருந்துண்ண
நருந்தாமரைக்கண்ணுயகியாள்நாடாள்நடனம்தெருநடையில்
தெரிந்தாரும்தெம்புசொல்லத்தெரியாதவர்போலிருந்திடுவார்
மருந்தவுண்பார்வாய்பொசிப்பைமறையோர்வகுத்தவிதியிதுவே.

மேடுகுத்தலான வீட்டின் பலன்.

மேடுகுத்தலானவீட்டில்முடங்கள்பிறக்குமச்சுடன்
ஓடுபோட்டுயர்த்தினல்உயிர்கள்யாவுஞ்சாகுமே
ஆடுமாடுபெண்டுபிள்ளையல்லல்கொண்டுவாழ்வினும்
வீடுவிட்டுக்காடெழும்பிவிருந்துபெற்றுவாழலாம். (1019)

கூரை குத்தலினலுண்டாகும் பலன்.

கூரையைக்கூலிற்குத்தக்கொடியசெந்தணலெழும்பும்
வாரையைநீட்டிவிட்டுவழிநடைசந்துங்காட்டிப்
பேரையைக்கேட்டுமென்னப்பெருகியேபொருந்தாவிட்டால்
ஊரையேவிட்டுநாவில்லோடுவார்உற்றுப்பாராய். (1020)

இருமா மனையின் பலன்.

ஈரற்குலைநோய்வருமேயிருமாமனையோருக்குத்
தாரம்தவறிடுமேமறுதாரம்எதிரிடுமே
சோரம்போய்விடுமேபெற்றசுதனும்கிழார்க்கடிமை
சாரும்வாரத்தும்தவறிடுமேவாழ்மனைதான்தப்பிடுமே. (1021)

கதவுகுந்தி தேய்ந்த வீட்டின் பலன்.

கதவுகள்குந்தித்தேய்ந்தால்கடனுண்டுகணவர்மேலே
யிதமில்லேமனம்வேறுகியிரண்டுபட்டுடமைகெட்டு
மதங்கொண்டுமதிமயங்கிமணந்தபெண்மனமுநொந்து
சதமிலாவீடெண்ணிச்சாத்தியேபூட்டிப்போவார். (1022)

சூத்திரமாறிச் செய்வதின் பலன்.

கோவிலேவிலக்கிநூலேக்குறுக்கடியாகநீக்கி
ஆவொடுதனதான்யங்கள் அடங்கியவீடிட்டாக்கின்
கோவிஞல்துயரப்பட்டுநுண்ணியவாழ்விழந்தே
யேவலேப்போலேபெண்களெதிர்ந்துமுன்பேசுவாரே. (1023)

மனைக்கு வயதாகிவிட்டதிஞலுண்டாகும் பலன்.

மனைக்குளவயதாய்விட்டால்வரும்பலன்மத்திபந்தான்
வினையிஞல்சோம்பலாகும்விஷங்கள்வந்தடையும்பின்னும்
முனையுமேபல்லிநோயும்மூத்தவள்வரவுமுண்டு
நினைத்திடுங்காரியங்கள்நிலையிலாக்கருமமாமே. (1024)

நிலமட்டாழங்கள்.

தாபித்தமனையின்வாசல்தளமட்டம்சொல்லக்கேளு
சோபிக்குமென்றுசொல்வார்தூக்கிஞல்பார்வைக்கீனம்
நாபிக்குமேலுயர்ந்தால்நலமில்லாப்பலனேயென்று
கோபித்தேஓடிப்போவாள்கொடியிடையானதேவி. (1025)

உத்திரமட்டங்கள்.

கூடத்துச்சரமேவிட்டம்குதிக்குமுன்னெட்டவேண்டும்
மாடகமார்புமட்டம்மணிப்பிறையிடையின்மட்டம்
ஆடகாசிதம்தாதாதானதை அறையாய்ச்செய்து
பீடத்துக்கீழ்ச்சுரங்கம்பித்தினில்ஆழம்செய்வாய். (1026)

வேறு.

கூடத்துவிட்டமெல்லாம்குநிக்குமுன்னெட்டவேண்டும்
மாடகமார்புமட்டம்மணிப்பிறையிடையின்மட்டம்
மோடொசப்பாளிமட்டம்முத்தமுமுழங்கால்மட்டம்
ஆடகாசிகம்வைக்கஅரைமட்டம்அதின்கீழ்வேண்டாம். (1027)

மனைகளுக்கு வயதுசொல்ல.

பெருக்கவேமனைக்குவந்தபெருகியவயதைமூன்றில்
ஒருக்கவேகொடுத்துகந்தேஉலவியநாளேவாழ்வர்
செருக்கப்பட்டிடுவார்பின்புதிசைக்குள்ளவயதாய்விட்டால்
பெருக்கியேகூட்டிவைப்பர்பெரும்பொசிப்படையுமாறே. (1028)

சிரோகிரகம் அமைப்பதின் பலன்.

சுவர்தள்ளிப்பொருத்தம்பாலும்தூயவில்லமைக்கவென்றால்
கவருங்கல்லாலேமுற்றம்காண்சரக்காவிரண்டே
அவர்க்கவர்பொருத்தம்வேண்டும்அழகுடன்மேன்மைமையங்
கயவர்வந்திருக்கலாகாரெழிலாசர்க்காமே. (1029)

தெருவாசல் கொல்லைவாசல்கள் நேர்முகமாயிருத்தலின் பலாபலன்கள்.

தெருவாசற்கொல்லைத்திருவாசல்ரண்டும்
மருவகலநேர்பெறுதல்வாகம்—விருத்தியற
வொன்றுடனேவொன்றையொதுக்கியமைத்துவிடின்
நின்றுவிடும்லாபம்நிசம். (1030)

சன்னல் அமைத்தற்பலனும் அறுகால் ஜீரணோத்தாரண பலனும்.

சன்னல்வெளிப்புறத்தில்சத்தியமாய்வைக்கலாம்
உன்னபடிபக்கத்தும்உட்பின்னும்—பின்னமுடன்
வைக்கவேகூடாவேவாசல்பழுதுபடின்
நிற்கச்செய்வேறுநிலை. (1031)

பழுதிலா அறுகாலைப்பெயர்த்து புத்தறுகால் அமைப்பதின் பலன்.

வாசற்பழுதாகாவண்ணமிருக்கையிலே
வாசல்புதிதாகவைத்தாக்கால்—நாசமுற
வீட்டின் தலைவன் விரைவில்மரித்துசுடு
காட்டிற்குப்போவனேகாண். (1032)

அமைத்தவாசலை யிடித்தெறிதலால் உண்டாகும் பலன்.

கணக்கிட்டுவாசற்படிவைத்துக்கட்டி
பிணக்கிட்டுகாட்டற்கபேர்த்துக்—கணக்கிட்டு
வைத்தபடிவாசல்காத்துவருந்தெய்வங்
கூத்தன்எடுப்பான்கொதித்து. (1033)

வெளிவாசற்படிக்கு உள்வாசற்படி சிறியதாயிருக்க வேண்டுமெனல்.

வெளிவாசலுள்வாசல்வித்தியாசமில்லா
நளியாகவைத்திருக்காடேல்—தெளிவாக
உள்வாசல்சற்றுசிறுகவுஞற்றுகென
தெள்ளியோர்சொன்னார்தெளிந்து. (1034)

கட்டின சுவரையிடித்து அதில் வாசற்படி வைக்கும் பலன்.

சுவரைஎழுப்பினபின்தோண்டிச்சிறைத்துச்
தவறுய்வழிவாசல்வையேல்—இவறலுடன்
வாசலிடுவாயேல்வந்துவிடும்வீதலே
பாசமாய்ச்சொன்னேன்பரிந்து. (1035)

இரண்டுமனைக்கு இடையில் கிணறு வாசற்படிக்கெதிரில் தேர் இவை இருத்தலின் பலன்.

இரண்டுமனை நடுவில்கூவலிருந்தால்
புரண்டுவிடும்வாழ்வுபொதுவாய் — தரணியிலே
வாசற்கெதிரில்வருந்தேரின்குற்றனின்றால்
தோசம்தலைவனுக்காஞ்சொல். (1036)

தோஷந்தரும்பொருள்கள் இத்துணை தூரத்திற்கப்புற மிருக்கின் தீங்கன்றெனல்.

வாசற்கெதிரில்வாழ்காய்மரமும்வீதிகளும்
பாசமுறுமூலையும்பாழ்ங்கிணறும் — வீசுமொளி
கந்துஜலம்நிற்றல்கயமுயரமீர்மடங்கி
லெந்தவிததோஷமுமில். (1037)

வீட்டிற்குசமீபத்தில் சமாதியும் யாகசாலையும் இருக்கலாகாதெனல்.

வீட்டின்சமீபத்தில்வீந்தோர்சமாதியுறு
கோட்டமாவுபுற்றுகூவலுடன் — ஆட்டமாம்
யாகமனையுண்டானல்யாண்டுந்தலைவர்க்குச்
சோகமுறுதீங்கெனநீசொல். (1038)

மனையைக் கணக்கெடுத்துக் கட்டியபின் அதனை இரண்டாய்ப் பிரிக்கலாகா தெனல்.

மனையைக்கணக்கெடுத்துவைத்தபின்ஈராய்
தினையளவும்பீறிப்யோய்செய்யேல் — மனைசெய்தால்
வீட்டின்எஜமான்விரைவில்மனைவிடுத்து
காட்டிற்குப்போவான்கரைந்து. (1039)

வீட்டுக்கெதிரில் கட்டைச்சுவர் இருத்தற் பலன்.

கட்டைச்சுவர்தானும்காண்கின்றவுத்திரமும்
திட்டமுடன்தண்டியனும்செல்கின்ற—கட்டழகின்
முற்றத்தின்மூலைத்தெருவாசல்கால்படிலோ
குற்றமுயிர்சேதம்கூறு. (1040)

பழையவீட்டை இரண்டாய்ப் பிரித்தற்பலன்.

பழவீட்டையிராய்ப்பகிர்தல்நலவில்
வழங்கும்வழக்குங்கலக்கம்—சழக்குவரும்
பொன்னஷ்டப் பூமிபொருள்நஷ்டம்ஆகுங்காண்
தன்னிஷ்டம்நிற்காதேசற்று. (1041)

உள்வாசற் படிக்கு வெளிவாசல் உயரும் பலன்.

இல்லின்வெளிவாசல்உள்வாசலெப்படிக்கும்
புல்போகதாழ்தல்புகழென்பர்—இல்லேல்
வருபலன்நீங்கும்மயன்கூறும்வாறே
அருகுவரேஉண்மையறி. (1042)

வாசற்கெதிர்ப்பில் கூடமிருத்தலின் பலனும் எதிருக்கெதிரில் வாசற்படி யிருத்தற் பலனும்.

வாயற்கெதிரேவருமாகிற்பொற்கூடம்
போய்விடும்வாழ்வுபுரண்டுமே—ஞாயம்
எதிர்வீட்டின்வாசற்கெதிர்வாசல்நின்றால்
அதிற்செயித்தோர்வெல்வார்அறி. (1043)

வீடுகளின் க்ஷேமமும் விவரமும்.

கன்னியுமீனம்வீட்டில்காணுவாய்பாழாமீனம்
அன்னியகீழ்மேல்வீட்டிலழிந்திடுமேலாம்வீடு
மன்னியதென்வடகில்மடிந்திடும்வடக்குவீடு
பன்னியஅங்கிவாழ்வுபாழுதான்வாயுவீடே. (1044)

வீடுகளில் ஒற்றைப்பாடு இரட்டைப்பாடு அறைகள் இருத்தற்பலனும் வீட்டிற்பிரித்த சாமான்களைக்கொண்டு புதுவீடு கட்டுதல் பலனும்.

வீட்டின் அறைவீடுஒற்றைப்பெண்மேன்மைதரும்
நீட்டும்இரட்டிப்பெண்தீதாகும்—நாட்டமுடன்
வீட்டைப்பிரித்துமரங்கல்லால்வேறுமனை
நாட்டல்தரித்திரமாய்நாடு. (1045)

பழையவீட்டைப் பிரித்து படைவைத்துயர்த்திக் கட்டலாகாதெனல்.

பழவீட்டைநீத்துப்படைவைத்துயர்த்திக்
குழகுமனையாக்கிக்கொள்ளின்—இழப்பர்
பனையுடனேமக்களையும்மற்றுமுறுந்துன்ப
வினைவருமென்றேவிளம்பு. (1046)

பழையவீட்டிற் பிரித்த சாமான்களைக்கொண்டு வீடுகட்டுதற்பலன்.

பழமனைபிரிக்கப்போக்கப்பழமரந்தன்னிற்சேர்க்க
முழுமதேகுறியாய்க்கொண்டுமுழுமதேகொள்வீராகில்
அளவிலாமக்கள்சுற்றமையபவேநோவதுண்டாய்
கிளையதுசுற்றத்தோடுங்கெடுமெனமயனுஞ்சொன்னான்.(1047)

வெளிவாசற்படிக்கு உள்வாசல் உயர்ந்திருத்தலின் பலன்.

தலைவாசல்உந்திக்குச்சற்றுயர்ந்தேஉள்ளில்
நிலைவைத்தல்வேண்டும்நிசமாய்—அலைகடற்போல்
வாழ்வுபெருகிமலிவாகிக்கீர்த்திஜயம்
தாழ்வென்றும்வாராதவர்க்கு. (1048)

கோவணமனையின் குடியிருப்புப்பலன்.

குறுகிநீட்சிகுலவுமனையிலே
மறுவநின்றுமனையொடுவாழ்வரேல்
சிறுமைதோன்றியேசெல்வந்தொலைந்துபோய்
துறுவற்பாட்டிற்குஞ்சோகமுறுவரே. (1049)

வீட்டெஜமானுக்கு அடுத்தடுத்து விடிருந்தால் இன்ன வீட்டில்தான் இருக்கலாமெனல்.

தெற்குவடக்கில்திருவீடிரண்டானல்
நிற்கவடக்கில்நியாயபதி—வற்புடனே
யன்றேல்தனஞ்சுதனும்அற்றுவிடும்மேற்கீழில்
நன்றாகுமேல்மனையேநன்று. (1050)

வீதியில் அதிகமாய் வெளிவந்த வீட்டில் வசிப்பவர்களின் பலன்.

முன்பின்மனையிருக்கில்முன்னின்றவவ்வீடே
சுன்னின்றுசுற்றங்கலக்கமுறும்—பொன்விரயம்
சத்துருக்கடோன்றிசனிக்குமேசங்கடங்கள்
சித்தமதில்வையேல்செல. (1051)

வடக்கு மேற்கு தாழ்ந்த விட்டில் வசிப்பதினலும் அதிக உயரமாக இருக்கும் வீட்டில் வசிப்பதினலும் உண்டாகும் பலன்.

மேற்கும்வடக்கும்பணிந்துற்றவீட்டினிலே
தேறல்தனவிரயம்சேருமே—கூறுமதி
பின்னீறுபோலும்உயர்வீட்டில்வாழ்பவர்க்
கென்னாளும்நாசதனம்எண். (1052)

கீழ்வீட்டிற்கு மேல் வீடு உயர்ந்திருப்பதின் பலன்.

ஓதியகீழ்வீட்டுக்குஉயர்ந்ததோர்மேலாமில்லம்
நீதியாயுயருமானால்நிச்சயம்சண்டும்வாழும்
ஆதியமேல்வீடஃதே அளவுடன்குறையுமாகில்
சேதமாம்உயிர்கள்போகும்சிறையுடன்மனையும்பாழே. (1053)

மனைக்கட்டடமானது கிழக்கே உயர்ந்து மேற்கே தாழ்ந்திருப் பதினாலுண்டாகும் பலனும், கிழக்கு தெற்கு உயர்ந்து மேற்கு வடக்கு தாழ்ந்திருப்பதின் பலனும்.

கீழ்த்திசையுயர்ந்துமேற்கேதாழ்ந்திடுகிரகம்வாழ்வார்
பாழ்படுதுன்பமுற்றேபசியினால்மெலிவர்கேள்வன்
கீழ்ப்பட அலக்கணெய்திக்கிடப்பனேவடக்கும்மேற்கும்
தாழ்ந்துகீழ்பாமம்தூங்கில்தலைவன்கெடுறுவன்மாதோ. (1054)

கட்டட மனையானது தெற்கேயுயர்ந்து கிழக்குமேற்கு வடக்கு தாழ்ந்திருப்பதினாலுண்டாகும் பலனும் தெற்கு கிழக்கு உயரமாயிருப்பதின் பலனும்.

தக்கணமுயர்ந்துகீழும்வாருணமுதக்குத்தாழ்ந்தால்
முக்கியம்வறுமைதுன்பம்மூதேவிவந்துநிற்பாள்
தக்கணம்பிராசிமேடாய்ச்சமைந்திடுவீட்டில்வாழ்வார் (1055)
துக்கமும்அயர்வுந்தோன்றித்தொலையுமேதனங்களெல்லாம்.

வாசற்படிக்கு நேரே சிறுசுவரும் தம்பமும் இருத்தற் பலனும் தாய்ச்சுவரை ஆயாதியிடத்தினில் சேர்க்கவேண்டு மெனலும்.

தெருவாசற்படிக்குநேரேசிறுசுவர்தம்பமுற்றால்
இருப்பவரெவர்க்குமென்றும்இடுக்கணுந்தீங்குமுண்டே
இருபக்கத்தாய்ச்சுவரை ஆயாதியிடத்திற்சேர்க்க
இருமனைவேறாய்க்கட்டில்இடையிலோர்சுவரைப்போடே. (1056)

இதுவுமது.

போடும்அச்சுவருதானும்புகுத்த ஆயாதிதன்னில்
கூடுமேசெல்வம்க்ஷேமம்கூடாதாய்ச்சுவரில்வீடே
தேடியசெல்வம்மாய்ந்துசேர்புமன்சாவான்என்றே
ஆடியமயனார்கூற்றை ஆறைந்தனர்உலகுக்கன்றே. (1057)

வீட்டிற்குவைக்கும் ஸ்தம்பங்களின் மேல்பாகத்தை மேலேயும் கீழ்ப்பாகத்தைக் கீழேயும் வைக்கவேண்டு மென்பது.

வீட்டினில்வைக்குந்தம்பம்மேன்மரம்மேலதாயும்
நாட்டுக அடியைக்கீழில்நலமிகும்முராணுமாயின்
ஈட்டியசெல்வம்யாவும்இழப்பரேகஷ்டமுண்டாம்
நீட்டஉத்திரச்சரத்தைநீபிணையடிதென்மேற்கே. (1058)

வாசற்படி சாய்ந்திருப்பதின் பலன்

வெளிவாசல்படியுள்சாய்ந்தால்விளையுமேநாசம்யாவும்
வெளிப்பக்கம்சாயுமானால்வெளியிடம்எஜமான்நிற்பன்
வெளிதேயம்சென்றுஅன்னான்வீணனுயலைவனென்று
தெளிவுடைமயனார்கூறும்செய்தியைத்தெளித்தேன்மாதோ.

வாசற்படிக்குக் கதவுமாட்டும் பலனும் உத்தரதிக்குத் தவிர மற்ற மூன்றுபக்கமும் தாழ்வாரமிருப்பதின் பலனும்.

புதன்வெள்ளிகபாடம்வாசல்போடுகசாத்தில்என்றும்
பதமுறகாலக்ஷேபப்பண்ணுவரெந்தநாளுஞ்
சதனதாழ்வாரமுத்தரந்தவிரமுப்புறத்திலானால்
மிதமறசெல்வமோங்கிவிளங்குமக்கிரகந்தானே. (1060)

கிழ்ப்பக்கம் நீங்கலாக மற்ற மூன்று பக்கங்களில் தாழ்வார மிருப்பதின் பலனும், தென்புறம் நீங்கலாக 3-பக்கங்களில் இருப்பதின் பலனும், மேல்புறம் நீங்கலாக 3-பக்கங்களில் தாழ்வாரம் இருப்பதின் பலனும்.

கிரகதாழ்வாரம்கீழில்நீங்கமுப்புறமதானல்
அருகுமேசெல்வமென்று அறைந்தனர்மயனர் தானும்
கிரகமேதனம்தாழ்வாரம் தென் புறம்விட்டு சிற்கில்
இருக்குமேமேற்குகாயிழப்பரேசெல்வம்மைந்தன். (1061)

தாழ்வாரம் தெற்கு மேற்கு இவைகளில் இருப்பதின் பலனும் தாழ்வாரம் மேற்கு வடக்கு இவைகளில் இருப்பதின் பலனும்.

மேற்குதக்கணதாழ்வாரவீட்டிலேவசிப்போர்நாளும்
எற்பர்சந்தோஷம்யாவும்இழப்பன்வீட்டெஜமான்ஆவி
மேற்குஉத்தரதாழ்வாரவீட்டினில்வசிப்பாரானல்
சாற்றினர்மயனருண்மைசகத்தவரறியத்தானே. (1062)

கிழக்கு வடக்கு இவைகளில் தாழ்வார மிருப்பதின் பலனும் கிழக்கு தெற்கு இவைகளில் தாழ்வார மிருப்பதின் பலனும்.

குணக்குஉத்தரத்தாழ்வாரம்குலவுமாமனையில்வாழ்வார்
பிணக்கினல்உடைகள்பட்டுபிடிக்குமேதுன்பம்முற்றும்
குணக்குதக்கணத்தாழ்வாரக்கோவிலிலிருப்போர்க்கென்றும்
பிணக்குசச்சரவுதோன்றிப்பிடிக்குமேசனியன்மாதோ. (1063)

கிழக்கு மேற்கு இவைகளில் தாழ்வார மிருப்பதின் பலனும் வடக்கு தெற்கு இவைகளில் தாழ்வார மிருப்பதின் பலனும்

குணக்கினுமேற்குமுள்ளதாழ்வாரக்கோவிலுள்ளோர்
உணங்கியேசெல்வம்மாய்ந்துஉறங்குவர்கஷ்டப்பட்டே
அணங்கறவுதக்குத்தெற்குத்தாழ்வார அகத்தில்வாழ்வார்
பிணங்கிப்பங்காளியாலேபிழைகளேதோன்றுமாதோ. (1064)

நான்கு பக்கங்களிலும் தாழ்வார மிருப்பதின் பலனும் நான்கு பக்கங்களிலும் வாசற்படி யிருப்பதின் பலனும்.

நான்குதாழ்வாரமுள்ளநகரினில்வாழ்வரென்றும்
மேன்மையாய்க்கீர்த்தியோங்கிவிளங்குவர்செல்வத்தாலே
ஆன்றியதிசைகள்நான்கும்வாயல்சேர் அகத்திலுள்ளோர்
தோன்றியசெல்வத்தாலேசுகமுடன்வாழ்வார்தானே. (1065)

வீட்டிற்குத் தெற்கு மேற்கு வடக்கு இம்மூன்றுபக்கங் களிலும் வாசற்படி யிருத்தலின் பலனும், கிழக்கு மேற்கு வடக்கு இம்மூன்று பக்கங்களிலு மிருப்பதின் பலனும்.

தக்கணம்வடக்குமேற்குவாயல்சேர்சதனந்தன்னில்
சொக்கமேதிருடராலேசுகமில்லைபசுக்கள்தங்கா
முக்கியம்பிராசிமேற்குஉதக்குமுப்பக்கவாயல்
சிக்கறுமனையில்வாழ்வார்க்ஷேமமேஅடைவரன்றே. (1066)

வடக்கு தெற்கு கிழக்கு இம்மூன்று பக்கங்களிலும் தெற்கு கிழக்கு மேற்கு இம்மூன்று பக்கங்களிலும் வாசற்படி இருப்பதின் பலன்.

வடக்குதென்கிழக்குவாயல்மனையினில்இருப்பவர்க்கு
இடக்கறஎந்தநாளும்இனிமைசந்தோஷமுண்டாம்
வடக்கின்றுமற்றமூன்றுதிசைவாயல்மனையில்வாழ்வோர்க்
கடமறநயமாமென்றுஅறைந்தனர்மயனார்தாமே. (1067)

வாசற்படிக்கெதிரில் சேற்று நிலம் சாக்கடை நீரோட்டம் கிணறு கோவில் தெய்வங்கள் மரக்குற்றல் தேர்க்கூற்றல் ஸ்தம்பம் இவை இருக்கலாகா தெனல்.

வாசற்கெதிரில்சேற்றுநிலமிருந்தால்வருமேதுன்பமிக
வீசும்நாற்றநீரோட்டம்வீழ்ந்தால்நேரேவீண்செலவாம்
பேசுங்கூவலிருந்தக்கால்பெருகுங்காக்கைவலிநோயே
நாசம்எஜமான்தெய்வமுறின்நங்கைமாணம்தம்பமதால். (1068)

இதுவுமது.

மாக்குற்றவிருக்குமாகில்மைந்தனோநாசமாவான்
வுருவுடைதெய்வக்கோவில் டற்றிடில்குலமேநாசம்
யருமைசேர்க்குற்றல்நின்றால்பலமுடையெஜமான்சாவான்
திருமயன் கூறும்வாறேசெப்பினன்உலகத்தோர்க்கே. (1069)

ஒருவீட்டிற்கு தெருவாசல் மட்டுமிருந்து தோட்டத்திற்கு வாசலில்லாத வீட்டில் வசிக்கும் பலனும், ஆயாதிகணக் கிட்ட வீட்டை யிரண்டாய்ப் பிரித்து வெளிவாசல் வைக்கும் பலனும்.

தெருவாசலிருந்துகொல்லைத்திருவாசல்வைக்கா வீட்டில்
இருப்பவர்புத்திரபாக்கியம்இழப்பரோயிருந்தால்மாள்வர்
பொருத்தவாயாதிவீட்டைபுகழுறப்பிரித்தேயிராய்
திருத்தியேவாசல்வைத்தோர்எமன்பதிசேர்வர்மாதோ. (1070)

ஒரு வீட்டிற்கு எதிரெதிராக கூடங்கள் இருப்பதின் பலனும் மூன்று தொட்டி தொடராகக்கட்டிய வீட்டில் வசித்தற் பலனும்.

எதிரெதிர்கூடமீராயிருக்குமவ்வீட்டிலுள்ளோர்
அதிகமாய்வறுமைப்பட்டு அடைவரேகஷ்டம்பாவும்
துதியுறமூன்றுதொட்டிதொடராகக்கட்டிவாழ்வோர்
பதியினில்பெருமைநீத்துப்பாக்கியம் இழந்துமாய்வர். (1071)

அடுத்துள்ள வீட்டாருக்கு ஆயம் வேறு என்பதும் கோவில் நிழல் மனையினில் விழுவதின் பலனும்.

புரமனையடுத்தோர் வீட்டைப்புரிவரேல் ஆயம்வேறும்
பரமநீள்கோவில்நீழல்பதியினில்வீழுமாகில்
திருமனைக்ஷீணமாகிச்செல்வமேதொலைந்துபோகும்
முருகுசேர்மயனார்சொன்னமுறைப்படிமொழிந்தேன்மாதோ. (1072)

பிராமணர்கள் க்ஷத்திரியர்கள் வசிக்கும் வீடுகளின் இலட்சணம்.

நான்குபக்கம்உயர்வீட்டில்அன்றேல்நான்குந்தாழ்வீட்டில்
நோன்மையாய்த்தோர்வசித்துவரல்நுவலுந்தோஷங்கிடையாதே
கோன்மைக்ஷத்திரியர்வசிக்குங்குலமோஉதக்குப்புரமுயர்ந்
து, மான்றலறவேமுப்புரங்கள்தாழ்தல்வண்ணம்மயன்வாக்கே.

வைசியர்களும் சூத்திரர்களும் வசிக்கும் வீட்டினிலட்சணம்.

கிழக்குவடக்குஉயர்வீட்டில்கீர்த்திபெருகும்வைசியர்கள்
சழக்கில்வாழ்க்கைப்பெறலாகுந்தக்கணமுங்குணக்கும்
வடக்குயர்ந்து, இழுக்கில்மனைக்கண்சூத்திரர்களிருந்துவரலாமெங்நா
ளும், வழுவுநீக்கிவாழ்பவர்க்குவருஞ்செம்மையாள்கடாக்ஷமரோ.

இன்னின்ன ஜாதியார் இத்தனைக்கட்டில் இருக்கலாமென்பது.

எச்சாதியொன்றுயிருக்கலாமோர்கட்டில்
விச்சைசேர்வேதியர்க்குநான்குகட்டும்—நிச்சயமாய்
க்ஷத்திரியர்மூன்றுகட்டில்தங்கியிருக்கலாம்
உத்தமமீதென்றேயுரை. (1075)

இதுவுமது.

வணிகர்க்குக்கட்டிரண்டும் மண்மக்கட்கொன்றும்
மணியெனவேசொன்னார்மயன். (1076)

வீட்டிற்கு உபயோகிக்கக் கூடாதென்று விலக்கிய மரங்களால் வீடுகட்டும் பலனும் நான்குபுறமும் சரியளவுள்ள தாழ்வார வீட்டில் வசிக்கும் பலனும்.

வசதியாம்றவாகாதமரங்கள்கொண்டுபதியவமைத்தால்
நிசமாய்அவ்வில்எந்நாளும்நிகழுங்கலக்கம்வளர்ந்திடுமே
வசமாய்வீட்டின்நாற்புறமும் வரும்தாழ்வாரச்சரியானால்
குசலம்மலிக்தேதனம்பெருகிகுலமுந்தழைத்தேவாழ்வாரே. (1077)

சாத்தியகதவு தானே திறந்துகொள்ளும் பலனும், திறந்த கதவு தானே சாத்திக்கொள்ளும் பலனும், வாசற்படி அளவு கூடகுறைய இருக்கும் பலனும்.

சாத்துங்கதவுதானாய்த்திறக்கால்நாவும்பைத்தியமே
சாத்திக்கொண்டால்தானாகதவடைக்க நலமும்நாசமுறும்
பூத்தவாசல் அளவிற்குபோதாதிருக்கில் அயர்வாகும்
ஆத்தம்மிகுமேல்சோரருடன் அரசர்பயமும்வந்துறுமே. (1078)

வீட்டிற்கு வாசல் விடுவதின் பலன்.

வீட்டின்திருவாசல்மேற்கில்சுகமுறுமே
நாட்டத்திழக்கில்நவதான்யம்—ஈட்டும்
வடக்குமுகமானால்வாழ்வாகுந்தெற்கிற்
றிடமுடனேசேருஞ்ஜெயம். (1079)

இரட்டித்த வாசற்படிகளில் வசிப்பவர்களின் பலனும் ஒருவருக்கு எதிரெதிராக காலிமனையிருப்பின் முதல் முதல் காட்டவேண்டிய இடமின்னதென்பதும்.

அறைமனைவாசற்காலும்ஆலயமிரட்டைக்கூடு
முறைமனைவசிப்பார்க்கென்றும்உறுபொருள்நாசமாகும்
குறைபறமேல்கீழ்காலிமனையுண்டேல்கோவில்கட்டில்
முறையுடன்மேல்பால்கட்டிமுடிப்பதேநன்மையாமே. (1080)

இதுவுமது.

தெக்கணம்வடக்குகாலிமனைகளில்சேர்புகட்டில்
முக்கியம்வடக்குவீடுமுடித்தபின்தெற்குகட்டே
சொக்கம்விட்டேஜமானுக்குச்சுகமிதம்வாழ்வுதோன்றுஞ்
சிக்கலொன்றனுகாதென்றுசெப்பினர்பயனர்தாமே. (1081)

வேறு.

வாசற்கால்கள்இரட்டைபடில்வருமேகவலைபிருப்பவர்க்கு
மோசம்வருமேவருப்படியில்முழுதும்கெடுமேதனமுழுதும்
தோஷப்படுங்காணவ்வீடுசாலேயும்க்ஷேமம்முற்றுமென
நேசமுடனேமனுர்களுக்குநிகழ்த்திப்போந்தார்மயனுமே. (1082)

அரசுவசிக்குமாண்மனையும்அமலர்வசிக்குஞ்சத்திரமும்
முரசுமுழங்குந்திருக்கோவில்முருகுவாயல்பிணைநலமே
பிரசமொழியாய்மனையவர்க்குப்பிசகேகமீறிவசிப்பாரேல்
பொருளேநாசப்படுமென்றுபுகன்றார்நிசங்காண்மயனாரே. (1083)

மனைகள்மேல்கீழ்இருந்தாலும்வடக்குந்தெற்குமிருந்தாலும்
மனையைமேல்பால்கட்டிவிட்டுக்கிழ்ப்பால்சமைக்கமனைபிறகே
மனையைவடக்கில்கட்டிவிட்டுதெற்கிலமைக்கமனைபின்னே
மனையைமுரணிக்கட்டிவிடில்வடக்கும்மேற்கும்முடியாவே. (1084)

தூண்கள் ஒற்றைப்படையாயிருக்கும் வீட்டின் பலன்.

வியநிலைத்தூண்கள்நிற்கும்வீட்டினில்வசிப்போரென்றுந்
துயருறவாடிமிக்கத்துன்பமேயடைவர்காந்தன்
உயவுடன்பிணியால்நொந்தேஉடலசும்வருந்துவானே
நயம்வருமிருமைத்தூண்சேர்நகரினில்வாழ்வார்க்கன்றே. (1085)

இன்பமாகியஇல்லறந்தன்னிலே
கம்பமொற்றைக்கதவுகள்ரெட்டையால்
அம்புபட்டமான்போலேஆகிபின்
துன்பமாகியவம்புதொடருமே. (1086)

திண்ணையில் மூன்று தூணிருப்பதின் பலன்.

திண்ணையில்மூன்றுதூண்செய்துவைத்தல்துன்புற்றுப்
பண்டம்தொலைந்துபாழும்மனை — திண்டூண்
அடியில்கல்சில்லிடுதல்அல்லலையுண்டாக்கும்
மிடியுமிடைஞ்சலாமெண். (1087)

தூண்களின் கீழேகல் சில் இவைகள் இருப்பதின் பலன்.

கல்விட்டுயர்த்திக்கனதூண்நடாவுதல்
சில்விட்டுயர்த்தச்சிறுமையை — நல்குமே
கல்விட்டுயர்த்தக்கனமில்மனையதும்
இல்லாழ்பவர்க்கேஇடர். (1088)

வெளித்தூண்கிரிமேவும்வீட்டில்முதலில்
நளிசெல்வம்நண்ணிப்பெருகும்—தெளிவாகப்
பிந்திகுறைவாகிபேர்கெட்டுத்தேய்வாகி
நொந்துபடுமென்பநூல். (1089)

கபாட சாஸ்திரம்.

சூரியவன்றன்னைப்போற்றிக்கபாடந்துநாடியாலே
வருகிறபலன்கள்சல்லியபம்மனையிலாபசூன்யம்
பெருமனைவாழ்வுதாழ்வுபுத்திரன்பிறவிநஷ்டம்
சரிவரஅறியவேண்டிச்சரபங்கர்நூல்செப்தாரே. (1090)

வளர்ந்திடுங்கிரகமுன்றில்வாய்ந்திடுங்கபாடந்தன்னை
அளந்தவர்சாணிலேயதனிடங்குழியையாறித்
தளர்ந்திடுங்குழியைநாலீராறதிற்றூக்கியீய
வளமிகக்கழித்தசேடம்வலியலக்கினமதாமே. (1091)

ஆகுமதாராகுவஃதுபோலவுருவாகி
யேகுமுகமுதல்மேஷமிடபிடரிரிஷபம்
ஆகுமுதுகோடிடையாழ்கடகமீன
மேகமாசனஞ்சிங்கமெய்நிமிடுந்தானே. (1092)

வேகமெனுங்கூழைபதுவெள்ளிகன்னி
விருச்சிகமேமணிதுலாம்வயிறதாகும்
நாகநடுமார்தநுசுமகரங்கண்ட
நகுமீனநடுவதடுகும்பமாகும்
ராகுநடுமீனநல்லவகையீராறு
ராசிவகைதமையோர்ந்துநாளுபேத
போகமுறப்பெரியோர்கள்புகன்றவாறு
பொருத்தமுறலக்கினத்தைநாடிக்கொள்ளே. (1093)

முகமதுலக்கினமாகில்முக்கியமதியம்வெள்ளி
வகமெனவாழ்வுமெத்தமந்தன்சூரியனேகூடி
யகமதில்சூன்யசவகைபார்த்தையேசாவுசொல்லும்
பிணைமன்னபாழேயாருப்பிடறுமனையென்பாயே. (1094)

பிடரியில்ரிஷபப்பீடைபுந்தியுஞ்சனியருக்கன்
திடத்தினில்நோக்கருன்யசல்லியஞ்சேருமந்தன்
படைகொலைவிழுந்தவில்லம்பாழ்மனையதுதான்வெள்ளி
அடருமத்திங்கள்நோக்கிலரைவகைப்பலனென்பாயே. (1095)

மிதுனமேமுதுகில்நிற்கமேன்மையாஞ்சனியேநோக்கில்
பதியதில்சங்கைகளுட்டம்பாங்கியாபேலேநோக்கஞ்
சதிவரும்விந்துநஷ்டம்தாழ்வில்லிபல்லிகூவும்
மதியுடன்சுபர்கள்நோக்கில்வகையறப்பலமேயாமே. (1096)

கடகமேயிடுப்பில்நிற்ககரியவனருக்கன்சேரப்
படைமனைவெகுசாய்நட்டம்பாழடைந்திடுமேபின்னால்
யிடம்வலம்சங்கைபில்லியினிசுபக்கிரகம்நோக்கில்
நடைவரவிதனால்கொஞ்சம்நலமென்னவறியலாமே. (1097)

வெள்ளியேசிங்கங்கூடவிதமில்லைமனைக்குவாழ்வு
தெள்ளியவருக்கன்நோக்கில்சிவப்புடன்மண்டையோடு
கொள்ளையாம்கன்னிமாரைக்குறிக்கிடுமாந்தைகூவும்
பல்லியேபடபடக்கும்பழிகொண்டமனையென்பாயே. (1098)

கன்னியில்புதனேவெள்ளிகனகுருசோமன்வாழ்வு
பன்னியசனியேசேயும்பாவிகள்கூடுமாகில்
கன்னியர்நட்டந்துர்க்கைகாத்திடுங்காகஞ்சொல்லும்
குன்றிடும்வாழ்வுதாழுங்குழவிகள்நாசந்தானே. (1099)

மாலவன்வெள்ளிராகுமணிதுலாந்தொட்டுநிற்க
சாவனமனைக்கேயஸ்வம்சாம்பிராச்சியமும்வாழ்வும்
காலவனருக்கன்சேரகன்னியாஞ்சங்கையாலே
ஏலவேசல்லியபூமியெடுபட்டமனையென்பாயே. (1100)

சந்திரன்தேளோடொக்கதண்டிகைவாழ்வாதிக்கம்
மந்தனேயருக்கன்சேரமன்மனையவளில்லைகண்டாய்
சந்ததியேற்குப்பல்லிசாவென்றுகூவிநிற்கும
மங்கையாமனையேகண்டாய்மண்டையோடிருக்குதென்பாய். (1101)

வில்லுடன்கேதுபுந்தி வெகுஞானபாக்கியமுண்டு
வல்லவன்மந்தன்சேரில்வாழ்வில்லைமைந்தர்நஷ்டம்
கல்லுடன்மண்டையோடுகருதுசாமுண்டிதூர்க்கை
சல்லியகூகைசொல்லும்சாவுள்ளமனையென்பாயே. (1102)

மகரத்தில்ராகுசெவ்வாய்மைந்தரைக்கொல்லுமில்லம்
கொலையொத்தசங்கைநாட்டங்கூகையேசாவுசொல்லும்
நிலைபெற்றசோமன்கேதுநிற்கவேகீடும்வாழ்வு
மலையொத்தவரசன்போலேவாழ்ந்திடுமனையுந்தானே. (1103)

குடமதைக்குருவுநோக்ககூடியேவெள்ளிவாழ்க
தடையிலாப்போகமுண்டாஞ்சனியிராகுகூடிநோக்கில்
படையற்றகளங்கள்போலபாழ்மனையாகுமென்பார்
தடையற்றசெல்வமுண்டுசாவுள்ளபல்லிசொல்லும். (1104)

ஞானவன்மதியும்வெள்ளிநின்றவன்மீனம்நிற்க
மானமார்குலங்களோடேமகிழ்ந்துமேதழைத்துவாழ்வர்
கானவனருக்கன்சேரதாழ்வென்றுபல்லிசொல்லி
வானரசங்கைநாட்டமாதரையழிக்கும்பாரே. (1105)

பூண்டதுமனையிற்சல்லியம்பூரணமறுபதாகிற்
ஆண்டதுகழிந்துபின்புஅறிவுசாஸ்திரத்தில்தோன்று
மூண்டதுஎவல்சங்கைமோசமாங்கொலைகள்மற்றும்
ஆண்டதுமுதலாய்காணுமறியலாமறிந்துபாரே. (1106)

அரிசிவனயன்மால்தேவியனுகியேவாசலாகி
பரிமுதல்நவக்கோள்சட்டம்பலகையிலாணியாகி
சரிபடும்வாதபித்தசிலேட்டுமம்நாடிசட்டம்
விரிபடுகதவுநெம்பேயெலும்புமாமிசமுமாமே. (1107)

பார்தனில்மனைசெய்வோர்க்குப்பரிவுடன்மனையின்நாடி
பேர்பெறவுரைக்கநற்றுணும்பெலமுளகதவிஞ்ஞைசை
சீர்பெறுவகையைக்கண்டுதிறம்படுமொழியினுளே
நேர்பெறுபலங்களெல்லாம்நேர்மையாயுரைக்கலுற்றேன். (1108)

மந்தமாம்வாதபித்தமருவியேநடக்கும்போது
அந்தமாய்நடுச்சட்டத்திலாணியொன்றானமாகும்
விந்தையாய்க்கதவுசாத்தில்விரிமாம்போலேசீறுந்
தொந்தமாயிருக்குநோய்கடொலையாதுமென்றுங்கூறே. (1109)

தள்ளியகதவுதானுஞ்சடக்கெனவலியாள்போலே
துள்ளியேகதறுமாகில்துக்கமுமிகவுமுண்டாங்
கள்ளிதான்சோரம்போவாள்கடுக்கெனமக்கள்சாவாம்
தெள்ளியகதவினாலேதெளிந்தனர்வேதத்தோரே. (1110)

கதவினிலோசைதானுங்கௌதாரிப்போத்துப்போலே
விதமுடன்பேசுமாகில்வினையினால்மெலிந்துவாடும்
சதமுடன்பொருளும்போகுந்தாணியில்வறுமையாகு
மதமுள்ளகொங்கைமாதேமனையினிலணுகிடாதே. (1111)

முருக்கித்திருக்கிக்கொக்கதுபோல்முடுங்கதவுகத்தவொரு
பெருத்தசெல்வங்குறையுமங்கேபிசாசுக்கூட்டம்மேலாடும்
வருத்தப்படுவார்நோய்மிகுத்துமனையாள்சொன்னபடிகேளாள்
விருப்பமுடனேவாய்நாறுமவிநித்தார்லோகமறிந்திடவே. (1112)

ஓரிபோலூளையிட்டுமுயர்ந்துமேகத்துமாகில்
நாரியர்க்கிடுக்கமாகும்நன்மையுந்தின்மையாகுங்
காரியஞ்சேதமாகுங்கடுக்கெனமக்கள்சாகும்
வீரியங்குறையுமென்றுவிளம்பினர்வேதத்தோரே. (1113)

கழுதையைப்போலேவாசல்கதவுதான்கத்துமாகில்
பழுதுவந்தடைந்துமிக்கப்பகையினால்மெலிந்துவாடு
மழுவதுகுரலுமாகுமாண்டிபோலிறக்கப்பண்ணும்
முழுவதுமதுபோலாகுமொழிந்தனர்வேதநூலார். (1114)

வண்டதுபோலேவாசல்கதவுதான்கத்துமாகில்
நன்றதுவாகுமப்போநலமுடன்மக்கட்பேறும்
நின்றதுதங்கியாமைநேர்மைபோற்பேசுமாகில்
கொண்டவன்சாவனென்றுகூறினர்வேதத்தோரே. (1115)

ஓங்கியகதவுதானுமோந்திபோற்சீறிமெத்த
தாங்கியேகத்துமாகில்சத்துருபொருந்தும்பின்னும்
வேங்கியேமெலிந்துவாடிவெகுமக்கள்சாவதாகும்
பாங்கிதேர்மயனார்சொன்னபழிபடாதென்றுங்கூறே. (1116)

மூடியகதவுதானுமூழிபோல்முழங்குமாகிற்
குடியபொன்னுமுத்துந்துலங்கியேயிலங்கிவாழுங்
கூடியவேசிவேட்டகுணமுள்ளகள்வனவன்
நீடியமயனார்சொன்னநிச்சயமறிந்துகூறே. (1117)

சங்குபோல்தாளம்போலக்கதவுதான்மூடுமாகில்
பொங்கமாறுடனேதானும்புத்திரர்மிகவுமுண்டாம்
துங்கமார்மாதுசேர்வள்சோபனமிகவுண்டாகுந்
தங்கமேபொழியுமென்றுசாற்றினார்மயனார்தானே. (1118)

சங்கதுபோலேவாசல்கதவுதான்சாத்துமாகில்
செங்கண்மால்மாதுசேர்வள்செல்வமுமிகவுண்டாகும்
தங்கமாய்த்தாழ்ந்துதாரைபோன்றகாய்ப்பேசுமாகில்
தங்கமேயழியுமென்றுசாற்றினர்வேதத்தோரே. (1119

கதறியேசிக்கெழுக்கிக்கரும்பாலைசெக்குப்போலே
பதறியேயோசைகண்டால்பதியைவிட்டேகப்பண்ணும்
கதறியேமைந்தன்சாவாம்காரணனுஞ்சாவான்பின்னும்
சிதறியேயழியுமென்றுசெப்பினர்வேதத்தோரே. (1120)

பேசியகதவுதானும்பெண்குரல்செக்தப்போலே
வாசியாய்ப்பேசுமாகில்மனையினிற்றனமுண்டாகும்
கூசியேவாலைபோலேகூவிடுமாகிற்றீதாம்
மாசிலாமயனார்சொன்னார்மனையினில்வாழொணாதே. (1121)

தும்பிபோல்கதவுதானுந்துய்யவேகத்துமாகில்
வம்பிடும்பேய்கள்கூட்டம்மனையினில்மிகுதியாகும்
நம்பியேபிணிகள்கூடிநாடியதருமஞ்சேதம்
வம்புமேயநேகமுண்டுவரிசையாய்மயனுஞ்சொன்னார். (1122)

பேரிகைமேளம்போலேபேசினாற்கதவினோசை
நாரியர்க்கிடுக்கமாகும்நையவேபிணிகள்கூடிக்
காரியஞ்சேதமாகுங்கடுக்கெனவிதனமுண்டாம்
ஊளைவிட்டகலுமென்னஉரைத்தனர்வேதத்தோரே. (1123)

வக்கதுசெக்குப்போலேவந்திடக்கதவினோசை
சிக்கெனமனையாள்சாவாம்சிறுவனுமில்லையாகு
மிக்கெனபெண்பிசாசுமிகுத்திடுமனையிற்றானும்
துக்கமேசெய்யுமென்றுசொல்லினர்வேதத்தோரே. (1124)

மன்றினிற்கதவுதானுமகிழ்பூரிகையைப்போலே
நன்றில்லைமனையாள்ரெண்டுநாடியபிள்ளையொன்று
அன்றியபெண்கள்மூன்றுவகத்தினிலொன்றுசாவு
மென்றிசைபுவனமெல்லாமியலுடனறிந்துகூறே. (1125)

கரும்பாலைபோலேவாசல்கதவுதான்கத்துமாகில்
வரும்பாலகர்க்குத்துன்பம்வந்திடுமனையிற்குற்றம்
பெரும்பாடுமிகவுமுண்டாம்பெண்பழிதன்னைவாங்கு
மரும்பானகொங்கைமாதேவலைச்சலுங்கொடுக்கும்பாரே. (1126)

செக்க்துதாரைபோலேதிகைத்திடுங்கதவினோசை
மிக்கவேபிள்ளைரெண்டுமிகுத்திடும்பெண்கள்மூன்று
தக்கவேயொருவன்நோயால்சலத்தினிலிறந்துபோவான்
திக்கென்றிறந்தாரென்றுஞ்செப்பினர்வேதத்தோரே. (1127)

பாங்குள்ளமனையின்தாதுபகர்ந்திடக்கேளுமாதே
தேங்கியதாதுமூன்றுதெளிவாகவிஸ்விஸ்சென்று
ஓங்கிடப்பெரியதாகிஉற்றிடுஞ்செல்வமென்றும்
நீங்கிடாதொருநாளுந்தான்நிலைத்திடுமாஸ்திதானே. (1128)

தானனமனையினடித்தப்பிடாத்தாதுகேளாய்
வானனகிளியினோசைவண்மையாங்குயிலினோசை
தேனனகௌளியோசைதெளிவாகநடக்குமாகில்
பானனபருஞ்சீர்செல்வம்பாக்கியமெய்தும்பாரே. (1129)

பாரினில்கதவையாட்டிப்பகர்ந்துறையறிந்துசொல்லு
நேருநீகிளிருன்றல்நேமமாந்துயிலின்பேதம்
சீருநீசிறுநொடிக்கின்சிறுபறைகமறல்கண்டால்
காருநீகுருவின்றனைக்கருணையாய்க்குமுறக்காணே. (1130)

கன்னியரேவாரும்கதவுசிக்குஞ்செக்கோசை
முன்னியபுத்திரர்மத்திபமாம்—முன்வந்த
கன்னியரைத்தோற்கும்கவலைமிகப்படுத்தும்
முன்னமேசொன்னோர்மொழி. (1131)

தாதுதானிடத்திலோடில்தப்பறநோக்குமாகில்
வாதுகள்மிகவுமுண்டுவழக்குகள்தீர்ந்திடாதே
ஏதுகள்யாவுந்தப்புமெதிர்த்திடுவாளேபெண்டீர்
சாதுக்களொருக்காலில்லைசாட்சியாய்கதவிற்பாரே. (1132)

குழறிடக்கதறுமாகில்குருத்துரோகிவீடேயாகுங்
குழறிடனோடுமாகிற்கொலைவிழுமிடமுமாம்
குழறிடவிரிச்சென்றோடிகூசாமலடைக்குமாகில்
குழறிடக்கூத்தியாளும்குலைத்துமண்தூற்றுவாளே. (1133)

மண்டூவிசண்டையிட்டுமாயமாய்மேல்விழுந்து
கொண்டுவிடமாட்டேன்கோதுறவே—கண்டனுடன்
போர்தொடுக்கக்கூத்தியரும்புத்திகெட்டுவீட்டெஜமான்
பேர்கடன்பட்டவான்பேசு. (1134)

இந்தவழிவந்தவகையீடாமோபெண்மயிலே
சொந்தமனையாளன்றுயர்பெற்றான்—கந்தனிட
சாபமிருக்குதுபார்சாதகம்போல்பாழாகு
தாபமறிந்தேதவிர். (1135)

ஊரோன்பகையாகுமொக்கலுடன்சுற்றத்தா
ராரோசயிவர்க்குறுதியாவாரே—யோராய்ப்
பருகிடுமேபாக்கியங்கள்ஏறிடுமோவூர்நகைக்கத்
தேரிடாள்பெண்டீர்தினம். (1136)

தினந்தினமும்வாய்மிரட்டிக்கடன்பட்டுநொந்தே
யினந்தனமும்வாங்கவிசைந்து—தினமும்
மனையாளுந்தானும்மகிமைகெடவே
யினஞ்சிரிப்பாரென்றுமிருந்து. (1137)

ஓடியடைக்கிலுயிர்போக்குமொலித்திங்கடைக்கில்றெருப்பாழா
மூடித்திறக்கில்முனைமழுங்குமூடாதடைக்கில்மூரண்தப்பும்
பாடிநொடிக்கில்மனையாள்போம்பாங்காயிவற்றைப்பார்த்திடுக
கூடிக்குறிப்பைப்பார்த்துநன்றாய்க்குலாவியுரைத்தேன்கேள்மானே.

மனைக்குள்ளேபுற்றுகாணுமரணமுமில்லைபெண்டீ
ருனைக்குள்ளேயடங்காள்நீவியுறுதியாய்த்தீங்குண்டாகு
முனைவாயிலுத்திரக்கட்டைமூர்க்கமாறிடமுமுண்டே
அனைக்குநல்வரத்துநோராடங்களுமோடிப்போமே. (1139)

தலைவாயில்நேரேவீறலுண்டதுதாதுவில்லை
வலியமாய்வழக்குச்சுத்துவாழ்வுகள்சிந்திப்போகும்
துலையவேபுத்திரநாசந்துன்பமுமவர்க்குண்டாம்
கலையவேஊரோர்கூடிக்கலங்கவேயுரைப்பார்மாதே. (1140)

கமறியேதாதுசிக்கிற்காரியமொன்றுமில்லை
குமறியேதாதுவீழில்குடியோட்டும்பெண்ணும்பிள்ளை
யமர்தருமடியிற்றேய்ந்தங்கரிவையாற்சாபமுண்டா
மமருறுமதனைக்கேளுமதிக்கெதிர்பகராம்பூட்டே. (1141)

பாடிப்பலைப்பிடபதுங்கியதாதுபகர்ந்திடவே
வாடித்திரிவள்மனைகளுக்கேவந்துவாழ்மயில்கள்
கூடிப்பலருடன்கோறணிகொண்டுகுலாவிநிற்பாள்
நாடித்திரிந்தவளாகாதபெண்டீர்நவின்றனரே. (1142)

சூடுங்கதவினிற்றுதுகள்பார்க்கவுஞ்சொல்லுகின்றேன்
கூடுமதனைப்பிடித்தேயலைக்கக்குறியதுதான்
நாடுநகரங்கள்யாவுமறியநயம்பெறவே
தேடுபவர்க்குநீசிந்தனையாகத்தெளியவுமே. (1143)

வாதமும்பித்தமுஞ்சிலேட்டும்மூன்றும்வகைவகையாய்
ஓதவுங்கேள்உற்றுரைக்கூட்டியுறுதியுடன்
வேதமுறைப்படிதப்பாதுசொன்னவிதிகளெல்லாம்
பேதமொன்றில்லையென்றேயிவ்வகைபேசுவதே. (1144)

திறந்தேயடைக்கவிரிசாய்க்கிரீச்சென்றுவிடுவிடென்றே
யிறந்தேவிழுந்துகிணறுகள்சிக்கியிருப்பதினால்
பறந்தேவிடும்பலதானியம்வெள்ளிபொன்பாலர்களுந்
துறந்தேவெளிப்படபாத்திரமியாவுந்தொலையுமென்றே. (1145)

தூடியாங்கதவினொடித்தேவீறுவிடத்துன்பமுற
நடியாய்நடுங்கிச்சிறுநாடிவிட்டுநட்டிகழன்றால்
அடியாமனையில்விடியாதகைம்பெண்ணவளொருத்தி
படியாய்ப்பலநடையாகவுஞ்சுத்திப்பதறுவளே. (1146)

பதறியேகருவழித்துப்பங்கமாய்மனையிற்போட்டு
உதறியேகலப்பள்நீட்டைஉவாதையில்லாமல்சுற்றி
விதறியேகாயந்தின்றுவினவியேயிருப்பாள்பாரு
சிதறியேதெருக்கள்யாவுஞ்சூனியமென்றுசெப்பே. (1147)

சொல்லியமனைக்கீசானஞ்சூலியங்கோவிலொன்று
நல்லியல்மேற்குத்திக்கில்நாசமாய்பெருமாள்கோவில்
வல்லியவாயுதிக்கில்வழியில்லாச்சிவாலயந்தான்
பல்லியகௌளிசொல்லும்பாங்கில்லாமனையும்பாரே. (1148)

தாதுக்குக்குறையைக்கேளுதப்பில்லாப்பிள்ளைமெத்த
வாதுக்குப்பெண்கள்கூட்டம்வம்புக்கேயிடமாய்ப்பேச்சா
மேதுக்குச்சூடித்தனங்கள்இயற்கைகளெல்லாமாதே
போதுக்குப்போதுமாகப்பெண்பிள்ளைபின்னுமொன்று. (1149)

கூடியகதவுதன்னில்குறிப்புடன்பாடுதற்கு
மூடியகுறளியாவுமூர்க்கமாய்ச்சொல்லுவார்க்கு
நாடியேபார்த்துச்சொல்வேன்நன்றாகக்கேளுமாதே
தேடியேயிருந்தவாட்சிதெளிவுடன்சொல்லுவேனே (1150)

ஆட்சியாம்பொருள்கள்தேடியனுகியேயிருந்தார்முன்னோர்
சாட்சியாய்ப்புதைத்துவைத்ததனம்யாவுமிக்கசீராய்ச்
சூட்சியாய்வாதம்பண்ணுந்தூநடைகாண்டலாகும்
தாட்சியாய்விர்விசென்றுதடையில்லாநடக்கும்பெண்ணே. (1151)

பெண்ணேவைத்ததனையாய்ந்துபேசாமலெடுத்துக்கொள்ள
உண்ணவேகன்னிமூலையுயர்ந்திடமேடுகாணும்
நண்ணவேகுலதெய்வத்தைநயந்துநீநேர்ந்துகொண்டு
சண்ணவேசதயத்தேந்திச்சாட்சியாய்வைத்துக்கொள்ளே. (1152)

விள்ளுநற்கதவுதாளிநெடித்திடிற்கிலேசமிஞ்சும்
சுள்ளென்றுகதண்டுகொட்டுஞ்சூட்சமாயுனக்குச்சொன்னேன்
வள்ளென்றதங்கக்காசுவடிக்கடிசொர்னகுப்பல்
தள்ளென்றயாவுங்கொண்டுதாங்கியேயெடுப்பாய்க்கன்னி. (1153)

கன்னியேசொல்லக்கேளாய்கதவிடம்நொடித்ததானால்
உன்னியேபாருமாதேஉத்தமநடுமையத்தில்
மன்னியசாடிமூன்றுமயக்கமாங்கருங்கல்லொன்று
துன்னியேபின்னெடுத்துதுடிமுழமாறுமூன்றே. (1154)

மூண்டுதாள்திறக்கும்போதுமூர்க்கமாய்க்கீச்சென்றோடி
வீண்டுதானுனுக்காய்ச்சொல்லவினவியேகேளுமானே
தூண்டுதானெரியிடத்தில்துலக்கமாய்க்கரியிரும்பு
காண்டகவெடுக்கமெத்தக்காரியம்நன்றாம்பெண்ணே. (1155)

பெண்ணேகேளுருக்கிச்சிக்குபேதகமுமெத்தவுண்டா
மண்ணேயாள்நிலையின்கீழேயகலமாய்க்கருங்கல்லுண்டு
நண்ணேமும்முழத்தின்கீழேநயமில்லாச்சாடியொன்று
கண்ணேநீயெடுக்குமாறுமுழத்தினில்சல்லியங்காணே. (1156)

முண்டெனவிவாஞ்சொல்லமுனையாகக்கேளும்பெண்ணே
யுண்டென்றகரியுமுற்றவெழுத்தாணிமுறிந்ததுண்டு
தொண்டெனப்பார்த்துநன்றாய்த்துலக்கமாயெடுக்கமேலாம்
புண்டகரிலட்சுமித்தாய்புகழுடன்போற்றுவாளே. (1157)

போற்றுவாள்தானுமேலாம்புகழ்கீர்த்திமெத்தவுண்டாம்
தோற்றுவாள்சுமங்கலிப்பெண்துடியாகச்சந்தியாமே
யேற்றுவாள்சீராமின்பவுழவுமேற்சிறப்பாமெத்தப்
போற்றுவாள்புகழெந்நாளும்பிள்ளைகள்பெறுவாள்மாதே. (1158)

மாதேகேள்பூமிசல்லியம்வகைதொண்ணூற்றாறுக்குள்ளே
போதேனின்பநிறைறும்பார்பொறுமையாய்த்தானேசூட்சம்
வாதமேபித்தந்தானுமயக்கமாமதனைப்பார்த்தே
நீதமேயோதிநன்றாய்நிலைக்கவேயெடுத்துப்போடே. (1159)

போடக்கதவுப்போக்கில்வர்வர்வழுத்துமென்னில்
கூடவேகேளாய்மாதேசொல்கிறேன்சிறுகிறுச்சு
தேடியேபின்னூரச்சாய்ச்சேருமேபிறகுநீச்சும்
நாடியேவரிசையாகநயந்தனர்நம்பிக்கேளே. (1160)

அன்னமேகேளாய்பாகமவ்விடங்கீழேசாம்பல்
சொன்னநேர்மேற்குத்திக்கிற்சூட்சமாய்க்கரியும்பார்க்கில்
முன்னியேவாயுதிக்கிலுறுதியாய்ப்புற்றுமுண்டு
வன்னமாக்கிளிச்சொல்மாதேவாய்மிதத்தூற்றுவாளே. (1161)

தூற்றுவாள்பெண்ணொருத்திதுக்கமாய்ப்பரிதவித்துத்
தேற்றுவானூரிலுள்ளோர்தேற்றமலமுழுதுகொண்டு
கூற்றுவனேதானென்றுகும்பிடுவாளெப்போதும்
சாற்றுவாள்பிள்ளைபெண்ணேசாங்கமாய்க்கேளுமென்றே. (1162)

அன்னேமுன்னேயின்னங்குறியாறியப்போகின்றார்
சொன்னிதிகீழாட்டெலும்புதொலையாமற்றான்கிடக்கும்
வன்னமிரும்புவட்டுகிண்ணஞ்செம்புபித்தளையும்
கன்னமுடன்சோரமும்போங்காணுவாய்பெண்மானே. (1163)

மானேமனைக்குமாற்றலர்கள்மெத்தவுண்டு
நானேதான்சொன்னகுறிநயந்துபாரதனிற்
தானேயவ்வாரநடைதாங்கியேசீரெனவுஞ்
தேனேயச்சல்லியங்கள்செப்பநீகேள்மயிலே. (1164)

மயிலினடையாகமாற்றியேகீச்செனவே
ஓயினிடர்எழ்வூராமுற்றமுழுசல்லியமே
மயிலினிடறிஞெடிபாங்கில்மாறிடவுங்
குயிலழுத்தமூன்றினுக்குள்சல்லியங்கள்கோதையரே. (1165)

கிளியோசைக்குள்ளேகிடுகிடென்றுதாஞெடிக்கில்
அளியோசைகாணுமலங்காரவீடதனில்
புளியினுடைவேர்மிகவும்பித்தளையுமீயமுடன்
துளியிரும்புகரிபாண்டத்தோடிருக்குந்தோகையரே. (1166)

குணமானபெண்ணேகேள்கோடிதனில்நான்குபுற்றும்
மணமானபெண்ணேவழக்குமிகவிருக்குவூடல்மிகு
நிணமாகுங்காலதனில்நெடுங்காலந்தீராது
பிணம்போலத்திரிந்திடுவாள்பித்தாகப்பேசுவளே. (1167)

பேசுவாள்பெண்மாதேபேசியருளாத்திரிவாள்
கூசியேயாவருக்குங்கூறிடுவாள்தன்னுடலே
நீசியாயவர்களிடம்நேசமாய்வாழ்ந்திடவே
சீசீயவளாலேதீராச்சல்லியம்பெண்பாவாய். (1168)

எண்ணுமனையத்தெருவிவிருப்பதெல்லாஞ்சல்லியமாம்
நண்ணுமேகன்னிதனில்நாலாறுசாடியுண்டாம்
மண்ணுமெடுத்தெறியவேந்திழைபாள்துன்பமுப்போம்
கண்ணுக்குக்கண்ணெதிரேகாணுங்கருங்குயிலே. (1169)

அந்தச்சிலம்புகளால்கதவாட்டியரிவையரே
முந்தவும்வாதநடைபித்தமையம்மூன்றினுட
பந்தம்பகாமண்டுகேத்தாதுபகருகிறேன்
கந்தன்கருணையறுபத்துநாலுகத்தலுக்கே. (1170)

கடகடசத்தங்கணீரென்றோசைகதவில்நின்றால்
மடமடவையன்கொய்யெனவோடிவருகையிலே
திடதிடதோவெனதேனெனப்பாயுந்தெளியுறவோ
சடசடக்கோபஞ்சகலர்க்குஞ்சாட்சியாய்ச்சாற்றுவனே. (1171)

சாற்றும்பகலெனச்சளவனைச்சஞ்சீயெனவும்
போற்றும்பொருள்படவங்கனம்வீற்றிடப்போதுமன்றே
தோற்றுமக்கதவினிலத்தோருமத்தொடிகினத்தீபெழும்
மாற்றும்பெருக்கிணைபாமறையோர்க்கும்வழுத்துவனே. (1172)

பயிருஞ்செழிக்கும்பால்பொங்குமெத்தபாங்களுக்கு
முயிருஞ்செழிக்குமறையோர்களுநந்துவுண்ணத்
தயிருப்பழைபதுந்தங்காமல்போடத்தாணிமிசை
உயிருக்கொருபிள்ளையுண்டெனச்சொல்லவும்வாயிலையே. (1173)

மண்டுகத்தத்துவதனால்துபரும்மைந்தர்பெண்டூர்
விண்டுகம்பார்க்கவெளியிலத்துயாம்வேறென்றில்லை
கொண்டுகட்டுக்குள்கொடுஞ்சல்லியமாறஞ்சுண்டு
முண்டுகம்பார்த்தெடுக்கமுள்துயாமொழிந்திடுமே. (1174)

சல்லியம்முப்பதுஞ்சொல்லுகின்றேன்சங்கையறுத்தெடுக்க
வல்லியங்கொட்டுபித்தளைகிண்ணம்வகைகாண்டி
நல்லியஞ்செம்புவெண்கலங்காரீயம்கழுவுந்தொட்டிப்
பல்லியமென்றும்புதைந்துகிடக்கும்பார்புரைபுகுந்தே. (1175)

சங்கேகிடக்கும்சதுரக்கனைக்குதலையுருவு
மங்கேகிடக்கும்கரியுமிப்பாண்டமாண்டலைமாயிரும்
பங்கேபழையகிணறுந்தோன்றும்புகுத்தறிந்தால்
அங்கேவகையெட்டுமாகவிருக்கும்வகையறியே. (1176)

அறிந்தேயெடுக்க அரிதரிதாகுமதனுக்குள்ளே
செறிந்தேவிழுந்தபெண்மாதருக்குச்சிறுபிள்ளையொன்று
தெரிந்தேவிழுந்தகருநாய்கழுதைதெளிந்தெடுக்க
வறிந்தேயெடுக்கஆனபொன்வெள்ளிதங்கங்கல்முத்துகளே. (1177)

விடவிடவீறினமண்டுகமாகவிளங்கிவந்தால்
படபடப்பின்கொண்டுதள்ளியிழுக்கப்பருங்குறிகேள்
மடமடலாகத்தொட்டிகள்மேலுமதமதக்க
கொடுநடையாகப்பசுக்கன்றுகூட லும்பாழ்கிணறே. (1178)

கூகமதுகுடங்கிடக்குதுமெத்தக்கிலேசமுற
நாகமுறமாமையுஞ்சாம்பலும்நாளுங்குவித்திடலாம்
ஊகமறிந்திந்தமுப்பதுசல்லியமோடிடவே
தாகமதாவெடுக்கசாரும்பிரபலம்பிள்ளையுண்டே. (1179)

மூடுங்கதவோசைமூஞ்சூறுபோல்சிறில்
தேடுந்திரவியம்சென்றுவிடும்—கூடாது
பின்செல்வப்பேர்போகும்பிந்தாமல்திண்ணமுடன்
பின்போம்பெருமைபிரிந்து. (1180)

நாய்கள்நரிபோலேநன்மனைவாரியது
பேயமுதால்போலப்பேசிடுமேல்—நோய்மிகுந்து
வெந்திடுவர்நொந்துமெலிந்திடுவர் அம்மனையில்
நைந்திடுவரென்றேநவில். (1181)

நாடியடைக்கிலுயிர்போகும்நன்றாகப்
பாடியடைக்கிற்பழியாகும்—நாடியே
நின்றவிடத்தில்நிலையானால்நற்செல்வம்
பின்றிடத்தில்பாயும்பிணி. (1182)

ஆடுங்கதவோசையம்புவியில்நாரையிசை
நாடவிருத்தல்நலமாகும்—நீடிய
காலம்நிறைசெல்வம்காதலர் உண்டாகி
சீலம்பெருகுமெனச்செப்பு. (1183)

சல்லியம்.

ஆடியதோர்சபைக்குள்ளரிஷிகள்மூர்த்தி
ஆனந்தனூர்முதலாயமர்ந்தசெம்பொன்
தேடியவர்காணுமலிருந்தசெம்பொன்
செம்புவெள்ளிவெண்கலங்கள்சென்ட.தெல்லாம்
நாடியேயெடுக்கும்வகைநன்றாய்ச்சொல்வேன்
நன்னூலின்பயனறிந்துகளினமாகப்
பாடியேசல்லியந்தான்பார்க்கும்போது
பயனறிந்துராசியோடஞ்சுசேரே. (1184)

அஞ்சோடேகண்டவடிகூடச்சேரு
வந்தநாள்நின்றநிதியனுவாய்ச்சேரு
பஞ்சோடேயிதுவெல்லாமொன்றாய்க்கூட்டி
பதினாறில்பெருக்கிநாலேழுக்கிய
நஞ்சோடேஒன்றென்றால்தங்கக்காசு
நன்மையிரண்டுவெண்கலமும்பொன்னுமுண்டாம்
மிஞ்சாதேமூன்றுக்குவெண்கலமிரும்பு
மேன்மையாம்நாலுக்கு*குண்டுமாமே. (1185)

ஆமேகேளஞ்சுக்குரத்தினமிரும்பும்
ஆறுக்குப்பித்தளைவெண்கலமிரும்பும்
சேமேகேளேழுக்குக்கருங்கல்தங்கம்
செய்யவெட்டுகிணற்றினுறைசொம்பொன்ஈட்டம்
வேமேகேளொன்பதுக்குப்பொன்னும்வெள்ளி
பத்துக்குக்கிடாரங்கள்நிரம்பவுண்டு
பாமேகேள்பதினொன்றுசுத்ததங்கம்
பன்னிரண்டுவெள்ளியெனப்பணித்திட்டேனே. (1186)

படிந்திட்டபதின்மூன்றுவெண்கலத்தின்சிலையாம்
பதினாலுகிடாரங்கள்மூவைந்துவெள்ளி
அடிந்திட்டபதினாறுக்கிடாரமேழு
வான்பதினேழுகண்டாண்டகிடாரம்
சடிந்திட்டபதினெட்டுதங்கம்பொன்னும்
சத்திரபத்துவொன்பதுக்குவெள்ளி
முடிந்திட்டவிருபதும்செய்பொன்வர்க்கம்
மூவேழ்மாட்டெலும்புவகையாய்க்காணே. (1187)

---

* Iron ball.

காணவிருபத்திரண்டுளவும்புச்சாடி
கனமானவிருபத்துமூன்றுங்காசுதங்கம்
வேணதொருமூவெட்டுதங்கமுண்டு
மெய்நிறைந்தவையைந்துவெண்சொர்ணம்
வீணதல்லவிருபத்தாறுதிட்டெல்லாங்கல்
விருதாவாமிருபத்தேழ்வேண்டும்பொன்னு
நாணவேசரியானுல்சல்லியமூன்று
நற்பொருளையறிந்தவர்தாம்நயஞ்சொன்னரே. (1188)

எல்லையெனும்பொன்னிருக்குமிடத்தைச்சொல்வேன்
ஏகாந்தகோவிலடியிடிந்தசெங்கல்
சல்லையென்றுகடற்கரையாம்மோர்தொட்டு
தணிந்தநத்தம்பிரகாரம்சாவடியுந்திட்டு
மல்லையென்றுவேணதிடலாமேரிகரைதோட்டம்
வயல்நத்தமிப்படியாயிருந்ததெல்லாம்
சொல்லையென்றுசிவலிங்கமெல்லாங்கூட்டந்
துரையிருந்தவாமனைகள்திரவியமாந்தலமே. (1189)

தலமாயித்தலங்கள்நன்றாய்ப்பார்த்துச்
சல்லியங்களின்னதெனத்தாபித்தேதான்
பிலமானயிடமிருக்குந்திடத்தைச்சொல்வேன்
பெருந்தீவையிருபத்தெட்டறைபகுந்து
வலமானகீழ்மேலாயெட்டுக்கோடும்
மிருந்ததெற்குவடக்குமதுவஞ்சுகோடு
சிலமானவிருபத்தெட்டரையிலீசன்
தெற்காககீழ்வரைமூணமகப்வைத்தெண்ணே. (1190)

காணுவதுஇராசிச்சக்கரவீட்டில்
காண்சல்லியமெடுக்கும்வகைசொன்னபடி
கோணந்தோறுமேற்றுவாயபிசித்துநட்சத்திரம்
குலவவைபேரெழுத்துவரைகள்தோறும்
சாற்றுவாயதுவிடமாய்ச்சதுரத்துக்குள்தாபிக்க
தான்வகைசொல்வேன்மேடஞ்சாணெழு
வேற்றுவாய்ரிஷபமதுவெட்டுச்சாணு
வியல்மிதுனமாறுசாணென்றுசொல்லே. (1191)

என்றுசொல்லுகடகமதுவஞ்சுசாணு
வெழுசிங்கங்கன்னிக்குவெட்டுச்சாணு
மென்றுசொல்லுந்துலாத்துக்குவொன்பதுவேசாணு
வளமானவிருச்சிகமேவேழுசாணு
தன்றுசொல்லும்தநுசுக்குச்சாணும்பத்து
சங்கையுள்ளமகாமதுசாணுமஞ்சு
யன்றுசொல்லுங்கும்பமதுநாலுசாணும்
அறைகமீனஞ்சாணறுபகர்ந்திட்டேனே. (1192)

பகர்ந்திட்டேனிந்நூலில்மனையிற்சல்லியம்
பார்தனிலேயுள்ளவர்க்குப்பண்பதாக
நிகர்ந்திட்டேன்சொல்லாதசொல்லையெல்லாம்
நிலையற்றகிரகங்கள்நிற்குங்கூற்று
விகர்ந்திட்டநடனஞ்சார்விதமுஞ்சிற்பம்
மேலாகவிவரமெலாம்விளங்கச்சொன்னார்
தகர்ந்திட்டவிச்செய்யுள்பத்துமுற்றும்
சங்கரனார்மயனுக்குச்சாற்றினரே. (1193)

கீழ்சாரிவீட்டில் கிணறு எடுப்பதின் பலன்.

இந்திரன்திக்கில்வீடே இருந்திடக்கிணறுவேண்டில்
தந்திரதாரசுகன்னிதருஞ்சாடிமீனமேடம்
வந்திடலதிகநன்மைமையத்தில்வைக்கநாசம்
தந்திரமயனார்தாமும்தயவுடனுரைத்தாரன்றே. (1194)

தென்சாரிவீட்டில் கிணறு எடுப்பதின் பலன்.

எமன்றன்றிசையிலில்லம்மிருந்திடக்கிணறுவேண்டில்
வாமமாம்துலையுஞ்சிங்கம்வருகன்னிகும்பமீனம்
ஆமதுமேடம்நன்மைஆகாதுமற்றைப்பாகம்
சேமமேகுறையுமையம்செய்திடமனையும்பாழாம். (1195)

மேல்சாரிவீட்டில் கிணறு எடுப்பதின் பலன்.

மேலதிலில்லஞ்செய்யவேணதார்க்கிணறுமானால்
சீலமாங்கும்பமீனம்சிங்கமுந்துலையுங்கன்னி
சாலவேதேளுமேடம்தங்கிடத்தனமேலாபம்
பாலன்போம்நடுவுபாகாபண்புடன்மனையுந்தீதாம். (1196)

வடசாரிவீட்டில் கிணறு எடுப்பதின் பலன்.

சந்திரன்திக்கின்வீட்டில்சரிவரக்கிணறுவேண்டில்
தந்திரகன்னிசிங்கம்தருதேள்இடபம்தண்டு
சுந்தரமீனமாயின்சுகமுண்டாமதிகநன்மை
குந்தகம்நடுவுமாகும்குணமிலைமனைதான்பாழே. (1197)

வீட்டில் கிணறு இருக்கும் இலட்சணம்.

வடபாலீசன்கிழக்கோடுவளரும்மேற்கேகிணறாகில்
மடவாளின்பம்சுகங்கொடுக்கும்மகனுமரணம்வாயுதனில்
அடைநோய்நிருதியமன்மரணமங்கியாயில்சிசுவில்லை
நடலைமையம்பொருள்நாசம்நன்றாயிருக்கமயனுரைத்தார். (1198)

கட்டியமனையிற்கூபங்கட்டிடக்கீழ்வியாதி
கிட்டியவங்கிமைந்தர்கேடுபெண்மாயுந்தென்பால்
மெட்டியநிருதிபீடைமேல்திசைசெல்வங்காத்து
தட்டியதலைவன்மாயுந்தனதிக்குவிளைவுமீசன்
மட்டிடாயின்பம்நல்கும்மனைநடுவாகாதென்னே. (1199)

தேடுமவர்சிந்தைதனிலேயுரையுமீசன்
நாடுமவர்மாகுடிலில்நண்ணிடுசோமன்
மாடுதலைகொண்டல்வருணன்மீதிற்
கேடிலைமிகுந்தநலமாங்கிணறுவெட்டின். (1200)

எடுத்தகிணரங்கியும்யமனிருதிவாயுவும்
விடுத்தபிரமனடுவினிற்கிணறுவெட்டில்
அடுத்துவருமக்களுமவிந்துடைமைபாழாய்
கெடுத்தபடியாமெனவேயோடதுகிடைக்கும். (1201)

மேலைத்தென்கீழ்கிணறுகில்மக்கள்போம்
மிளிருந்தெற்குத்தென்மேற்குமாணமாங்
கோலமேற்குநோய்மத்திபம்வாயுவே
குறைவிலா வடக்கீசன்கிழக்குமே
பால்பாக்கியமாகும்பசுக்களும்
பவிசுசுத்தம்பதியுமதிகமாம்
சீலமாகவிப்பாப்பயன்யாவையுஞ்
சிந்தையில்வைத்துச்செப்புவார்சித்தரே. (1202)

வீட்டின் தோட்டத்தில் மரங்கள் இருப்பதினு லுண்டாகும் பலன்.

எண்ணமேபோலேயெங்குமெழுந்திடுமனைத்தோட்டத்தில்
கன்னியுமாப்பலாவுமகனிவர்க்கம்வேம்புதெங்கு
புண்ணியமானபுஷ்பச்செடிகளும்கொடிமூலங்கள்
பண்ணியபாத்திகட்டிப்பயிரிடக்கருமம்நன்றே. (1203)

தெங்குபலாமாகதலிசெங்கரும்புபூக்கமுகு
பாங்குடன்நீர்நிம்பையுநன்மனைக்குப்பண்புடனே
நீங்கும்வகைதள்ளிநினைவில்லைத்துப்பாராமல்
பாங்குபெறவின்னமுங்கேள்பலன்கள்யாவையுமே. (1204)

கிளுவையாம்வில்வம்விளாவெண்ணொச்சிமாவிலிங்கு
முளுவையாமுல்லைமல்லிமுட்டுதுவளையுமாகா
குளுவையாமாமரத்தாசுகூத்துநொச்சியாகாது
தளுவையாயாச்சாதனக்குமனைமுஞ்சேராதே. (1205)

ஆலரசுவாகைநெல்லிபானதொருமின்னைகுமிழ்
வேலாகாமூன்றுவகைவெட்பாலைமுருங்கையுமே
தாளுகாபோரகத்திசிற்றகத்திதண்மைமிகு
காலாகாமகிழ்பாலைகாரிகையேமாதரசே. (1206)

பருத்தியகத்திபனைகைமுருக்கு
மெருக்கும்புளிநெல்லியென்று—மிருக்கொணு
வாழ்மனையில்வைத்தாக்கால்மாங்குயிலேதப்பாமற்
றாழ்வாகச்செய்யுஞ்சதா. (1207)

மனையைச்சுற்றி இருக்கக்கூடாத மரம்.

எருக்குடன்அகத்திநாவலியல்புடன்முருக்குநெல்லி
தருக்குடன்பனைபருத்திதகுபுளியெட்டுஞ்சுற்றி
செருக்கியேவாழுமந்தசெல்வமாம்மனையைச்சுற்றி
நெருக்கியேயிருக்குமாகில்நிலைவாங்கேடதாமே. (1208)

வீட்டில் பயிரிடாத செடிகொடி வகைகள்.

துவரையும்பேய்ப்பீர்க்குந்தூதுவளையோடே
அவரைக்குமரிஅவுரிஇவையாறும்
பார்மனைக்கொல்லையில்பாங்காயிடவிவற்றின்
வேர்விழச்சூனியமாம்வீடு. (1209)

பாதிரிகோங்குபரிமுல்லைசண்பகமு
மோதரியநெல்லிபுறம்பரத்தைக்—கோதார்
மகிழ்தேற்றான்காட்டாத்திவாய்க்தலிங்குநெட்டி
யிகுதமிழ்கூடாவிவை. (1210)

வாகைமுருங்கைவளாத்திப்புன்னையுந்
தோகைபேய்முன்னையுஞ்சோகத்தி—யோகக்
குடியோட்டும்பாரீர்குவலயத்தில்தட்டு
மிடியீட்டுமென்றேவிளம்பு. (1211)

வேறு.

எருக்குடன் அகத்திபருத்திஎற்றவிருப்பை வில்லம்
தருக்குவிளாபுளிகோங்குதாணமாலரிவாகை
செருக்குளமுருங்கைசேர்பனைசெம்மையாமணக்கிலவு
வருக்கநறுவிலிவந்திடின்வாழ்வது குறையுந்தானே. (1212)

கொன்றைநாவல்குளிரெலுமிச்சைசகூறுபலா
நன்றுசேர்முல்லைதுளசிகவிலுங்கமுகுமல்லி
வென்றிசேர்மாதுளைவேம்புவேர்தருவாழைபுடனே
இன்புளதிராட்சைநாரமெழிலுத்தமமாகுந்தானே. (1213)

வீட்டுக்கருகில் குளமிருப்பதின் பலன்.

குளமதுமிருந்தால்போகும்குணமுடன்மனையைக்கேளு
பெலமதுகுண்டைவீடுபெருகுடங்கன்னிகோலுந
தளமதுமனையுந்தீர்க்கம்தனமுடனாசனுவான்
தளமதுமற்றாசிதருத்திடும்வீடுபாழே. (1214)

பெருகியகுளமுங்கும்பம்பேணியமீனையுஞ்சிங்கம்
மருவியமகரம்விண்டும்மீனையுடன்விடுபோதாம்
அருகியசிங்கவீடுஅழிக்கிடுமக்கள்போகும்
தருவியதனங்கள்போகும்தனகையனுரைசெய்தானே. (1215)

சூரியன்வீடுமாகாசுறவுடன்சேய்வீடாகா
மாறியபாசிகனுமீனையுடன்வீடுமாதாம்
பாரியுமக்கள்சேதம்பாக்கியக்கேடதாகும்
காரியுமீனையும்பாழேகலமாமனுரைத்தவாறே. (1216)

கன்னியுமீனமாகும்கடகமும்கும்பம்பேறு
வன்னியதுலாமுதன்றும்வாழ்வுடன்பெருகவுண்டாம்
பன்னியஅரசனுகில்பாக்கியமும்மெத்தவுண்டாம்
மன்னியமயன்தாவித்தைமகிழ்ச்சியாயுரைசெய்தானே. (1217)

கண்டதக்கிணிமூலையிற்கள்ளமாக்குழிகுளங்கள்
உண்டெனிலடியாள்சாவாள்உயிருடன்பொருளும்போகும்
தெண்டிசையமனார்திக்கில்சிறப்பில்லைமிடியேயாகும்
தண்டியகொடியாள்திக்கில்சம்பத்தும்பொருள்வக்கெய்தும். (1218)

வாம்புகழ்மேற்குசெல்வம்மத்தியம்வடமேற்காகா
அம்பொருள்கிழக்குச்சேமனிரதமுங்கல்விதானும்
தாம்முதல்பலவுஞ்சேரும்மைசாற்கேள்சென்திக்கில்
வேய்மட்டும்தீயில்பட்டுமிக்கநோய்வருமைகாணும். (1219)

சிக்கமுப்பருத்தமூலைசிறக்கிடுந்திக்கிலேதான்
அங்கொருகுளமுண்டாகிலதின்கோடிமேலைக்கேகுதா
தங்கியகன்னிமேற்குத்தரமதிசென்திக்கில்
மங்கைகொள்குளத்தின்கோடிமீலயவர்வாழும்கன்மை. (1220)

சந்திர வாஸ்து மனை.

நன்றாகுமல்லிகை முல்லைநல்லிருவாட்சி செண்பகமும்
நன்றாகுமிதுநலமே தோட்டங்களென்றுமே கோட்டினில்நாடாது
இன்பமிருமையாறனைத்திறபன்னீர்ப்பூமணந்தான்
ஒன்றாகக்கோத்துப்புன்னையுயர்வேர்க்கொழுந்துமருவதுவே. (1221)

அதுவிலாமிச்சைபாதிரிஆனநற்புடலாரணங்கே
அறுதாழைசாதிசாதகப்பூவும்ஆனசிறுசண்பகமும்
அதுவொத்தகசம்பைபுநாகு அருஞ்சவ்வாதுமேவ
வருநிதன்னைநறுநுப்பூவெனுமிச்சைதாரந்தைதபே. (1222)

காரத்தைதப்பலாப்பழந்தேநமந்சனப்பட்டைடைனுறயறி
வாரத்தைகர்ப்பூரதுளிபச்சைப்பூரமணமுப்பதானகுறி
ஆர்த்தைதபிராமணன்தன்மனை சொல்வாய்முப்பதுவாசனைபால்
ஆர்த்தவம்மனைசந்திரவாஸ்துவாமென்றேநினரே. (1223)

† சில செய்யுட்க ளிறந்தன.

க்ஷத்திரியர் மனை.

நன்றாபுரவலர்க்குநன்மைதருமணமே
யொன்றாமுதல்முப்பதத்தாறெங்குமே — அன்றுமே
கண்டெடுக்கக்காரிகையேகாணும்குறிப்புத்தான்
வெண்டுரைக்கவேணும்விதம். (1224)

விதமுப்பத்தாறதனைவிண்ணறியச்சொல்வேன்
நிதமறிந்துநிச்சயமாநீசொல் — பதனத்
துளசிகளாவில்வம்மருதாணிவெட்சி
விளநொச்சிகார்நொச்சிப்பூ. (1225)

* சில செய்யுட்க ளிறந்தன.

பூஞ்சங்குசாணுக்கிப்பூவரசம்புக்கொத்தான்
ஆழப்பத்தாறுயறிந்துபார்— தாமென்றுஞ்
தன்குலமாஞ்சத்திரியர்க்குத்தான்மணம்பார்த்துமனை
யின்வகையாய்ப்போட்டறி. (1226)

வருப்படிபரனினதுசிவகதிபுகழ்வாழ்ந்திடுவார்குரப்பான
வர்களுக்குதவியமந்திரம்குறிப்புடனேதிருவடிபோற்றிடு
மருளினைமறந்திடாதெளிவுறமடியவர்க்கன்புடனே
மருவியம்மனையிதுமாட்டவும்பூட்டவும்மார்க்கமுமிதுவே. (1227)

தானமனைத்தனித்தனியவரவர்க்குறுதியாய்த்தப்பிடம்புக்காமலே
வானவர்புகழ்ந்திடவாழ்த்தியும்போற்றியும்வாணிபமிகமேலேற
மானமுஞ்சேவகமகிழ்ச்சியும்புகழ்சுகிமார்க்கமுமறிந்துகொண்டே
தென்புகழ்போசனந்தீர்க்கமுங்கிடமுடன்றேறியேமனைகட்போடே.

வைசியர் மனை.

போட்டுமனையதற்குப்போதமாவைசியருக்குத்
தேட்டுமிகவுண்டாம்தெரிப்பதுதான்மனைக்கு
நாட்டுவாசனையதனைநானறிந்துமுப்பதையும்
கூட்டும்குறிப்பொன்றுப்க்கூசாமற்சொலக்கேளே. (1229)

முருங்கைமுசுட்டைமுன்னைதாமரைப்பூவுந்
திரும்புசெவ்வல்லிசெங்கழுநீர்நெய்தலுடன்
றிரும்பக்கொத்துமல்லிசிராம்பெருஞ்சிரா
மரும்புவெந்தயம்கெந்தமரிதாரம்நாதுவனை. (1230)

வாழைக்கத்தரிபாகல்வண்மைசணைசர்க்காட்டை
கோழைகொட்டைக்காந்தைருருக்கத்தியாலமரி
தாழையாந்தன்னமரியாட்டமரிதேங்காயழுகல்
பேழையேலங்கிராம்புபெருவால்மிளகாமே. (1231)

ஆறுப்பதின் குணமுமறிந்துநன்றாயாழம்பறித்து
தான்மணமேபார்த்துநன்றாய்த்தயவாய்யாய்ந்துநீபோட்டு
ஓமனையசய்நீபார்த்துஉயர்ந்தவணிகருக்கருளி
நாமிடமிருந்துவீடுகட்டநலமாம்வணிகருக்கே. (1232)

வணிகர்மனைவீதியிலேவாழ்கோவிலாகாது
அணியணியாயவையின்மட்டுகடைகட்டிடுவாய்
மணிபெருகுஞ்சீலமுறும்மாதனங்களேறியிடும்
துணிபெருகிவாழ்ந்திடவேநடுக்காகும்பொற்கொடியே. (1233)

பூமியின் குற்றந்தீர.

பார்தனில்குற்றந்தீரப்பகையில்லாநாளைப்பார்த்து
சீர்பெறகணபதிக்குச்சிறப்பினால்பூசைசெய்து
நேர்பெறகாலைகட்டிநிலமதையுழுதுபின்னும்
பேர்நவதானியத்தைப்பெலமதாய்விதைத்துக்கொள்ளே. (1234)

கொண்டபின்பதினைந்தாநாள்குறைவிலாமுளைத்தபின்பு
விண்டுநல்பசுவைவிட்டுவிரைத்ததைமேய்த்துப்பின்னும்
குண்டமாமெழுகிசாந்திகோடிவஸ்திரமுங்கட்டி
பண்டுள்ளமறையோர்க்கங்கேபிராமணச்சாலைபண்ணே. (1235)

பண்ணியபின்நமஸ்சரித்துப்பண்புடனெழுந்திருந்து
மண்ணின்மேல்மனைசெய்வோர்க்குவரமதுகேட்கும்போதே
யெண்ணியேகேட்கநல்லபாக்கியமீவாரக்கால்
நண்ணியேமுகூர்த்தங்கொண்டுநன்மனைகோலநன்றே. (1236)

இடச்சுத்தம்.

மனைபார்க்கஇலக்கினமேசுத்தியாகும்
　　மனைபோடயிரண்டேழாமிடமேசுத்தம்
மனைதனக்குமரம்வெட்டமூன்றேசுத்தம்
　　மரம்தச்சுவேலைசெய்யநாலேசுத்தம்
மனைமாணவாசற்கால்நிறுத்தஐந்து
　　வகைஉத்திரம்போடஆறுந்தானம்
மனைகூடங்குலந்தழைக்கவேழேசுத்தம்
　　வடிவேலர்இந்நூலைக்குறித்திட்டாரே. (1237)

குறித்தலகுகைசாத்திவைக்கஎட்டாம்
　　குறுக்குப்பட்டைக்கொன்பதாம்ஒடுபத்தாம்
தெருக்கதவுநிலைநிறுத்தப்பதினொன்றாகும்
　　திங்கள்புதன்குடிபுகவீராறும்சுத்தம்
பெருக்கமுடன்இவ்வகையாயமர்ந்ததானால்
　　பேருலகில்மன்னருக்குமன்னராவார்
பொருள்தனங்கள்மனைதனிலேசேருமென்று
　　போகமுனிஇந்நூலையுரைசெய்தாரே. (1238)

கீழ் மேல் வீதியில் உத்தமமனை.

வீதியுதக்குத்தென்புறத்தில்விளங்குமனைகளிருந்தாக்கால்
நீதியுறவேவடசாரிகருடன்யோனிநியமிக்க
பீதியறவேதென்சாரிமனையின்பேச்சுமதுமனையில்
பூதிதான்யம்பெருகுமிகபுத்திரர்சுகமென்றார்மயனே. (1239)

தென் வடல் வீதியில் உத்தமமனை.

திடமாம்கீழ்மேல்பக்கமதில்சேருமனையில்கீழ்ப்புறமே
பிடியோவலதுஅரியோனிபேசும்மேல்பால்பனியோனி
நெடியமனையேஉத்தமமாயநிலவுங்களிப்புஞ்சம்பத்தும்
படியில்புத்திரபாக்கியமேபடருமென்றார்மயனுமே. (1240)

உத்தமமனையின் பலன்.

இருமனையமைக்கவின்னே உத்தமம்இதுவாமென்றே
பொருவருசிற்பநூலிற்புகன்றனர்செய்தனந்தானியம்
பெருகுமேவாழ்வுமிக்கபெருமையுமெய்துமென்ன
அருமையாய்மயனுர்தானும்அறைந்தனர்உலகோர்க்கன்றே. (1241)

இந்நகல்விதமாயில்லமெழில்பெறவமைப்போர்க்கென்றும்
தொந்தரவில்லையென்றேசூட்சமாய்மயனுரைத்தார்
புந்தியிலிதனைக்கொண்டுபோற்றியேமனைகள்செய்யின்
கந்தனின்கருணையுண்டாம்கழறுவாய்உத்தமமனைக்கே. (1242)

உத்தமமனையில்வாழ்வோர்க்கொருவருமெதிரியில்லை
சுத்தமுஞ்சுகமுமுண்டுசுந்தரவாழ்வுமுண்டு
கத்தனின்கிருபையுண்டுகாத்தலிற்பெருமையுண்டு
வித்தகஞானமுண்டுவிளங்கிடுமைந்தருண்டே. (1243)

பொங்கியசெல்வமுண்டுபுத்திராநேகருண்டு
மங்களவாழ்வுமுண்டுவன்மையும்பெருமையுண்டு
எங்குமேகியாதியுண்டுஎழில்பெறுமனைவியுண்டு
தங்கியசுற்றமுண்டுதழைத்திடுமைந்தருண்டே. (1244)

ஐசுரியமெத்தவுண்டுதனித்திடுஞ்சம்பத்துண்டு
பெருமையுமிகவுமுண்டுபேசிடுந்தெய்வமுண்டு
சிறுவருமெத்தவுண்டுசேயிழைசுகமுமுண்டு
நெருங்கியகூட்டமுண்டுநேர்பெறுமைந்தருண்டே. (1245)

உத்தமமனைக்குமெத்தஉதவியுண்டரசர்தன்னுல்
மெத்தவுமழகுமுண்டுமேம்படுபணிகளுண்டு
வித்தையும்விருத்தியுண்டுவிளங்கிடுசெல்வமுண்டு
பத்தியும்ஞானமுண்டுபடருமேமைந்தருண்டே. (1246)

செல்வமுமிகவுமுண்டுசேயிழைலாபமுண்டு
பல்விதபாக்கியமுண்டுபலமுமேமிகவுமுண்டு
சொல்லுகளுறுதியுண்டுசுந்தரவாழ்வுமுண்டு
பல்விதவணிகமுண்டுபலமுண்டுஐந்நூறுண்டே. (1247)

சுந்தரமைந்தனுண்டுசுகிர்தமுமிகவுமுண்டு
தந்திரமிகவுமுண்டுதனமுமேவாத்துமுண்டு
புந்தியுமிகவுமுண்டுபொறுமையுமிகவுமுண்டு
சிந்தனைமிகவேயுண்டுசெழித்திடுமைந்நூறுண்டே. (1248)

இந்தநல்விதமாய்முன்னாள்எழில்பெறுமயனுரைத்தார்
புந்தியில்வைத்துப்போற்றும்புலவர்காள்நீவிரிந்நாள்
சுந்தரமாகத்தானும்சொகுசுடன்மனையைச்செய்தால்
கந்தனின்கிருபையுண்டாம்கழறுவாய்மனையிலென்றே. (1249)

கதவில் பூட்டுத் தைத்தல்.

உத்திராஞ்சதயமூலமுருண்மகஞ்செயையிற்காரி
வித்தகவியாழன்வாரம்விளங்குமவ்வேட்சிதன்னில்
வைத்திடுங்கதவுவாயில்வகுத்திடல்வாய்த்தபூட்டு
தைத்திடன்மிகவுநன்றாந்தாமரைமுகத்தினாளே. (1250)

வீடு மெழுகல்.

சேயுதிக்கமண்பூசிசெங்கதிரில்பூசித்தே
தாயக்கபாடத்தின்தாள்பூட்டி—ஆயமனே
வாசலுக்குள்மாதேநீமாளிகைக்குள்நாயகமே
பூசித்துநித்தம்புகழ். (1251)

பகலவன்காரிநீள்பார்மகன்றனி
லகமெழுகிடிற்பொருளனைத்துநாசமாம்
புகர்மதிபிதகன்புந்திதன்னிலே
மிகவுறும்வாழ்வுசீர்மேன்மையின்பமே. (1252)

வீடு வேய்தல்.

நனிகதிர்சேய்தீமன்னுநனைந்திடுந்திங்கள்வெள்ளி
கனகன்மால்வாழ்வுகூடுங்கரியவனுசமுண்டா
மின்னுறுநாட்கள்முன்பினியம்புநாட்பாவநாட்கள்
வனிதையேயனலாற்கேடாம்வாழ்மனைவேயினன்றே. (1253)

தீயபௌமன்றினத்தினிற்றோன்றிய
வோய்வின்முற்பொழுதுட்டணராசியிற்
சேயுதிக்கசெழுமனைவேய்ந்திடிற்
காய்கனற்பயங்காட்டுதறிண்ணமே. (1254)

நினையுநீரிராசியில்வெள்ளிநிற்கவே
யனையவன்றினத்தினிலவனுதித்திட
மனைகள்வேய்ந்திடுவரேன்மாதவத்துளோர்
நனையுமென்றுரைத்தனர்நாணிலத்தரே. (1255)

முகட்டு நாள்.

மாமுதல்நான்குமூலமகமுதல்நான்குமேறுஞ்
சேமமான்றலைவிட்டஞ்சித்திரைமுகடாஞ்செப்பே
நாமநாளிறங்குநாள்கள்நன்னெறிகூபங்கெல்ல
காமரும்பெற்றதல்லகடிமுகமுயர்ச்சியென்றே. (1256)

இலங்குமார்புரிகள்மூன்றையிசைத்துமூவரையுங்கீறி
விலங்குடன்னாலதாக்கிமிக்கதோர்முகட்டுநாளாம்
குறங்குவதிறங்குநாளாம்கோபுரம்விமானம்கூடம்
துலங்கியமனைகள்கோவில்துக்கமாமிடிந்துபோமே. (1257)

எறியநாள்களுமெதிர்முகநாள்களும்
கூறியமனைகளுங்கோபுரவிமானமுந்
தேறியமண்டபம்சிறந்ததோப்புமே
கூறியவாண்டுதான்கோடிவிளங்குமே. (1258)

இறங்கியநாட்களில்ஏரிவாவிகள்
துறவுகள்கூபமும்தோண்டிடக்குளங்களும்
விரும்பியவாயிரமாண்டுவிளங்கிடுமென்
றுறுதியாய்மயன்உரைத்திடும்வாறிதே. (1259)

கிரகாலங்காரம்.

கிழக்காந்திசையிலடுக்களையுங்கிளருந்நீயில்பாகவினிலே
அடுத்ததெற்கிலிடுங்குப்பையாகுந்தென்மேல்தோப்பிடுதல்
குடபால்தனமும்பெருமைதொழுக்கூடும்வடமேல்நேர்கூடும்
அடுத்தவடக்கிலமுதுண்கையாகுமீசன்றிசைநீர்ச்சால். (1260)

மதியணியுமீஸ்வரர்க்குமறையவர்க்கும்விஷ்ணுவுக்கும்
பதியாகுந்தீமூலைபாங்காமடுக்களைதான்
விதியாம்பலதெய்வம்வேதியரைப்பூசித்தல்
மதியாகுமீசானம்வாழ்வுமிகவெய்திடுமே. (1261)

ஆகுமனைக்கும்அடுக்களையீசான்யத்தில்
வேகுமேசோறுமெத்தவேந்தருக்குத்தானடுப்பில்
போகுமேமலமாயைபொல்லாததெல்லாம்
பாகமேசற்குருபாக்கியங்கள்தானளிப்பார். (1262)

வளர்கின்றமாணிடர்க்குக்குறியைக்கேளு
வளமானஎமன்திசையில்குப்பைகொட்டு
சளர்கின்றநிருதியிலேதோப்பைவைத்துச்
சட்டமொடுவைக்கலொடுவைக்கநன்றும்
களர்கின்றமேல்திசையில்எருமைகட்டு
கனத்ததொருசிவிகைசாவடியுங்கட்டு
குளிர்கின்றவாயுநவதானியஞ்சேர்
குபேரனெடுமூலையிலேகுதிரைகட்டு. (1263)

கட்டுவதுஈசான்யம் அடுக்களையுங்கிணறும்
கனமானபோஜனஉச்சாட்டபோடு
நட்டுவதுகீழ்த்திசையில் அடுப்பைக்கட்டு
நலமானஉடல்பெருத்தயானைகட்டு
திட்டமுடன் ஆக்கினையில்பொக்கிஷம்வைக்க
திடமானதேவருக்குமடப்பள்ளியாகு
மிட்டமுடன்இதையறிந்துமயனூர்சொன்னூர்
இன்பமுள்ள உலகிலுள்ளோர் அறிந்துசெய்க. (1264)

இந்திரன்கிழக்கிற்போகமிரவியிலசனங்கொள்ள
அந்தகன்தெற்குவாடையருநிருதியிற்றண்ணீராம்
வந்தகார்வருணன்பூசைவாயுவிற்றானியந்தான்
நிந்துசேர்குபோணித்தவீசான்யன்மக்கட்பேறே. (1265)

தெற்கினிற்குப்பைநிருதியில்வைக்கோல்நிருந்தியமேற்கினிலெருமை, தக்கதோர்தொழுவம்வாயுமூலையிலேதனைகமைசேர்தானியமிடுவாம், மிக்கதோர்குபோன்வடக்கினிற்பசுவுமேவியதொழுவமுமதுவாம், இக்கருவுடனேகட்டனையிடவுமியம்பியமயனுரையிதுவே.

அத்தவடதிசைதனிலடுக்களையேவைப்பாம்
வைத்தருகிழக்கதனிலாடுகளைவைப்பாம்
செத்தரியவங்கியினிற்வைக்குமதுசெம்மல்
பத்தியாய்மொழிந்தபடிபார்த்திடுதல்நன்றே. (1267)

இந்திரனில்விக்கிரயமடுப்புகட்டு
யியலாட்டுத்தொழுவமுடனுவில்கட்டு
வந்திடுந்தீமூலைதன்னில்பதார்த்தம்நேர்சேர்
வாகுடனேதொழுவமுடனேவைக்கவிர்த்தி
முந்தியமன்திசைதனிலேசாம்பல்குப்பை
முனைகன்னிபிரசவமும்தோப்புவைக்கில்
விந்தையுடன்மேல்திசையிலெருமைகட்டு
விதமானபல்லக்குசாவடியுங்கட்டே. (1268)

காட்டுவாய்பின்னுமதில்சயனஞ்செய்வாய்
காற்றுதனில்தானியம்வைதேவர்பூசை
நாட்டுவாய்குபேரனிலேபசுக்கொட்டாரம்
நன்குதிரைபந்தியுடன்போசனமுஞ்சோலை
பூட்டுவாய்தனம்புதயல்பூணாரம்வைக்க
பொங்கியேவரும்போஜனமும்பண்ண
ஊட்டுவாய்கிணறுடனேநீர்சால்வைக்க
வுறுதியுடன்மயனுரைத்தார்உறுதிதானே. (1269)

நன்றாங்கிழக்குமுதலெட்டுநயமாயாடும்பசுத்தொழுவாம்
குன்றாதாம்வைதோப்பெருமைக்கூடாம்நேர்கூடுண்ணுமிட
மென்றார்தண்ணீர்க்குறிய துவாமிடமேசெயநல்மனைமீதி
லொன்றாவொன்றுகுறையில்லாவுலகில்வாழ்வாருரைமாதே. (1270)

பாரமாங்கிழக்கில்நாதம்பகரெறிபாகஞ்செய்தல்
நேரியதெற்கனந்தல்நிருதியில்படைக்கலங்கள்
தேர்தருமேற்கேயுண்டல்திகழ்வலிபசுக்கள்கட்டல்
வாரடும்வடக்கிலாக்கம்வளர்பரன்பூசைசெய்யே. (1271)

மாண்புடைக்குரிசனுதிவயங்குமெண்திக்குக்குள்ளும்
காண்பருததியேகூடுகழிவிடம்பாடசாலை
தீண்டுபோதனமேபோகம்துயரமூசிகிச்சாசாலை
சேண்டகுமகப்பேறினச்செய்திடல்நன்றேயாகும். (1272)

ஆடு மாடு குதிரை யானை முதலியவைகட்குத் தொழுவம் செய்யவேண்டியவைகள்.

மேதகுயானையொட்டைமேவுறுதொழுவம்யாவும்
மாதவக்கருடன்யானைமன்னும்யோனிக்கண்செய்க
தீதிரைகுதிரைமாடுதிகழும்புள்ளொன்றேயாகும்
மாதுடன்பயில்வதாதிமன்னரிதுவசத்தாகும். (1273)

வேறு.

ஆகுமேயாஸ்தானமண்டபங்கள் அரசர்கட்கு
வாகுசேரியந்திரசாலைவண்மைசேர்செபசாலை
பாகுசேர்சயனசாலைபால்பசுதொழுவம்யாவும்
தோகைசேர்குழலாய்கேளாய் துவஜனில்கொள்கநன்றே. (1274)

கொள்வதுஆத்தொழுநீங்கொடும்புலிமிகவுநன்றே
கொள்வதுயானையொட்டைகுதிரைகள்கபிலையாவும்
கொள்வதுயானைகருடனில்கொள்ளலாமிகவுநன்றே
கொள்வதுயாவுங்கஜமுனில்குணமயன்விளம்பலுற்றேன். (1275)

பெரியோர்கள் வசிக்க வேண்டிய விடம்.

கற்புறுமில்லாளோடுகடிமணஞ்செய்துவாழ்வோன்
தற்புகழ்தமயனுக்குந்தாய்முதலானபேர்க்கும்
இற்புறந்தெற்கேயாதலியைந்தமேற்பாலேயாதல்
பொற்புறவில்லஞ்செய்துபொருத்தியேவாழ்விப்பானுல் (1276)

நன்மனைகுருக்களொடுநார்வசிமன்னர்
தன்கிளையின்மேலவர்தனக்குமனைகோலின்
தென்திசைமேல்திசைதெளிவுநிலநசிக்கும்
பொன்குலவுமேலவைபோற்றுசுகமவர்க்கே. (1277)

நன்குலத்தோர்கணவிலுநாயகனு
நன்பெறுங்கிளையுளோர்மூத்தோர்
தென்றிசையவர்கடிருமபியமேற்கு
செய்குடியிருக்கவுந்தீதாம்
பொன்குலவவரைத்தெற்கினில்வைத்துப்
பொருந்தியவடகிழக்காயிருந்தால்
இன்மைசேர்பொருளுஞ்சுகத்தையுங்
கொடுக்குமியம்பியமயனுரையிதுவே. (1278)

நன்குலத்தானவர்க்குநாநிலத்துவேந்தருக்குந்
தென்திசையுமேல்திசையுமிருவராம்வைசியர்க்கும்
பொன்குலவுமேலவைதாம்பூதலமமர்குவனே
கொன்வடதிசையுங்கீழைத்திசையுங்கொள்வான்றோர். (1279)

கிராமாலங்கார விலட்சணம்.

ஊரினில்திக்குக்கெல்லாம்உயர்பதிறுறுகோணம்
பாரினிலறியாதார்க்குப்பகர்ந்ததுமயனூல்தானும்
பேரினில்தேவுமந்தபெருமையையறிந்துகூறு
சீருநீயறிந்தபோதுசெயமுடன்றரிக்கப்பூட்டே. (1280)

பூட்டுடன்புகழ்ந்துகொள்ளும்புகழ்பெரிதானசெல்வம்
தேட்டெனத்தெளிந்துகூடும்தேவுகள்பதியைவைத்தே
நாட்டெனநயந்துதிக்கில்நயம்பெறநாடிக்கட்டி
சூட்டெனச்சூட்சமாதேசுந்தாமாகத்தானே. (1281)

தானெனவீசானத்திற்றப்பில்லாச்சிவாலயந்தான்
வானெனவண்மைகொள்ளும்வழிச்சாத்தாகோவில்பூட்டே
நானெனவீசானத்தில்நன்மூலையறிந்துகொண்டு
கோனெனதெய்வமங்குக்கோதையாள்கன்னியாமே. (1282)

ஆமெனச்சத்தகன்னியங்கங்குகுளமுநாட்டு
ஓமெனமூலைதெற்கில்உயர்ந்திடுமயானம்பூட்டு
தாமெனருத்திரபூசைதானதுமிருக்கச்செய்வாய்
ஓமெனக்காளிகோவிலோங்குமேல்திசையிற்பூட்டே. (1283)

பூட்டிமதிலுடனேபோதமுடன்வீரனுக்கு
நாட்டிக்கிழ்த்திசையதனில்நயம்பெருமாலாலயத்தைச்
சூட்டிமன்புறவாய்சுந்தாமாய்நேர்குளமுங்
காட்டிக்கருத்தொன்றுய்க்காண்பநற்குவீடகமே. (1284)

வீடகங்கட்டிநன்றாய்விஷ்ணுபக்தர்யாவர்க்கும்
நாடவேபதின்மூன்றுநன்மையுள்ளபதினான்கு
போதகமேசந்திரபத்திபோதகமாய்நன்றாக
வாடகங்களில்லாமல்வாணிபமுஞ்செய்வாயே. (1285)

செய்வாயதின்கிழக்குசேதமில்லாப்பிடாரிநிலை
வையர்வ்வகைவிவரமாதரசேகேளாயோ
உய்வாயிதன்றிறங்களுக்கமுடன்நீகேட்டு
வய்வாருமில்லாமல்மாண்புறவேவாழ்ந்திடுவாய். (1286)

அறியுமாடன்வகைகளன்புத்துக்கோவிலிடு
பிரியமுப்பத்திரண்டும்பேதமறமவ்விடமே
குறியுமதின்மேற்குங்குறிப்புள்ளசெட்டிசிவ
மறியுமடங்கட்டிடுவாய்மயங்காக்குளமுமிடே. (1287)

சிற்பாமாந்தீமூலைதிரமாங்கறுப்பாகும்
நிற்பதுவாவைத்தால்நிலைகொள்ளுமாம்பாமம்
அற்புதமாலையத்திலாடல்மிகக்கொண்டிருக்கும்
உற்பனங்காணுந்தீபமுசிதமாம்பூசைசெய்யே. (1288)

பூசைகருப்பனுக்குப்போதகமாம்வெள்ளிதிங்க
ளாசைமிகக்கொள்ளுமன்பருக்கு—மோசையே
யோச்சலாய்க்கொள்ளாமலொன்றேடியாளாட்டம்
பாச்சலாய்க்கொண்டுநிற்கும்பார். (1289)

பாரடுக்கக்காட்டேரிபதினாறுரூபமுள்ள
நேரடுக்கவைத்திடலாம்நேரிழையே—சேர்வள்
மிகவோங்கும்வேறேசிதையாதொருநாள்
தகவேயமைமூலைதான். (1290)

காண்பார்யதனருகில்கைவசமெத்தவுமே
பூண்பாராடல்புகழ்கொள்ளுமாம்—வீண்போகா
வேதமாம்பேர்களுக்குவேறில்லாநற்குறிப்புப்
போதமற்றேநிற்கும்புகழ். (1291)

காணப்பலியிடுங்கைலசமாசாதொருவருக்கும்
ஆணப்பிடித்தேயுழட்டுதலாகவுணத்திவைக்கும்
பூணப்பொருந்திப்புகழ்கொண்டமூலைப்புனிதமுறும்
தோணவறிந்துமயனுருரைகளிதோகையரே. (1292)

அயரேயடுக்கக்குடத்திறப்பாடும்வணிகன்செக்கு
வயிறேயிடுகரியுறுதியுமாகமுணர்த்தியும்
பயிரேமிகவும்பலிக்கட்டெடுப்பாரும்படுங்குடி
தயிரும்பழையதுந்தான்கைக்கூட்டத்தடையில்லையே. (1293)

இலைத்தேக்குச்சூளியமேற்றருபவன்சூளையும்
தலைநிலைகுதிரைகள்தாபிதமாரிகாட்டேரியுரு
நிலைவிரக்கருப்பனுஞ்சாமுண்டியாளுருவாடுகளும்
மூலைப்பெண்ணுருங்கன்னித்தொட்டிலுமுனைந்துசெய்யே. (1294)

இடுவகைமெத்தனியல்புகளாகவிளங்குதல்கேள்
தொடுகுழியாவுந்தோணவும்பார்த்துக்கொந்தமுடன்
கொடுந்தொட்டில்பிள்ளைகுறைபாகதன்னுருவாகிநிற்குங்
நடுந்தேவுநாடுமாலயம்பார்த்துநயந்துசெய்யே. (1295)

செய்யெனயிதின்குடத்தில்சிறப்புடன்செல்வமாறி
மெய்யெனவிஞவிநாட்டுமேவியவினையுந்தீரும்
பொய்யெனநாளும்போகாபுகழுகள்மெத்தவுண்டு
தையெனவந்ததிக்கில்தடையில்லைவிரணஞ்சூட்டே. (1296)

சூட்டெனச்சொல்லிலம்மன்சுகம்பெறவாழ்வுமீறக்
கூட்டெனக்கன்னிமூலைகுறிப்புடன்தடாகம்நாட்டி
பூட்டெனக்கணபதிக்குபுகழ்குளங்குடத்தின்திக்கி
ஊட்டெனநாளிகோமுயர்ந்தமோதகம்தாம்பூலம். (1297)

தாம்பழங்கம்பிசுண்டல்தடையறமாற்றும்பேர்கள்
நாம்புகழ்கீர்த்திமெத்தநாடியுமிருப்பார்மாதே
போம்வரவினையளவாவும்போதமாய்ச்செலவுமீறும்
ஆம்படஅயிஸ்வர்யங்கள்அனுகியும்வாழ்வார்காணே. (1298)

காணவுமதின்வடக்குகண்டிதமுள்ளதான
பூணவுஞ்சொலவுங்கேளுபுகழுடன்மடங்களாகும்
தோணவுஞ்செய்தாயானல்தொடங்கள்யாவுந்திரு
மூணவுமதற்குமேற்குமுறியாய்க்குளமுங்காட்டே. (1299)

நாட்டிடனயத்தைப்பாருநயமுள்ள அசுவத்தேர்கள்
பூட்டிடனிவாகங்கூடப்புண்ணியம்பைசேர்த்து
மூட்டிடனச்சிவனார்தங்கள்முனையுடன்முனைச்சிநாகம்
காட்டிடன்றவிருசுதம்சுத்திகனப்பிரகாரமாமே. (1300)

ஆமெனவதின்வடக்குவண்புற்றமடியார்கோவில்
நாமெனமடாலயங்கள்நயந்துநீபிரமதாயந்
தாமெனக்கட்டநன்றும்தப்பில்லாவாழ்வுமாறும்
ஓமெனமுடிந்துவாழ்கூடயர்ந்திடுங்கிராமந்தானே. (1301)

கீழ்மேலத்தெருவுமானல்கிளைகூட்டமிகவுமூறும்
ஊழுறவெவருஞ்சிராமுத்தமமைந்தன்மேலாம்
பாழ்மனையதனுக்குள்ளேபதிபொருள்மிகவுமுண்டாம்
பாரேழுக்குடையோன்பன்னுபறைகளுமிகவுண்டாமே. (1302)

உண்டாகுஞ்சல்லிபந்தாறாறுமோப்பமையினுள்ளாய்
முண்டாகயிவர்செழிப்பாய்முழுமுயநூல்கட்டிக்கொள்வார்
தண்டாகுங்கிராமந்தானே நல்லிபசப்பந்தண்டு
பண்டாகுங்கிராமந்தானும்பலித்திடத்தெருவைப்பாரே. (1303)

தென்வடல்தெருவேயானல்தேசத்திலுத்தியோகம்
பன்முறைகிராமங்கொண்டுபாக்குடன்சேருஞ்செய்வான்
நன்மையுமிகவுமுண்டுநாடியமைந்தருண்டு
பொன்மயப்பொருளுஞ்சேரும்புகழுமேயேறுமாதே. (1304)

இடும்வாஸ்துவிரண்டிருக்கமனைபாருகிறதுங்
தொடுகுழிப்பாகத்தொடுபத்திதிட்டக்கோணவொன்று
இடுதேவுபெருமாளுக்காலயமேற்றபின்குளமு
மிடுமீசானசிவாலயங்கிழ்க்குளம்வெட்டநன்றே. (1305)

அயல்மனை கிணற்றுநீர் தன்மனையில் வருவதினாலுண்டாகும் பலன்.

அயல்மனைகிணற்றுநீரை அடுத்துதன்மனையிற்சேர்த்தால்
உயிர்வதைகலகம்ரோகம்உண்டுதன்மனைநீர்நன்று
நயந்தநீர்கிழக்கீசான்யம்நற்சுபம்வடக்குநீரும்
உயர்ந்தநீர்வருந்திவிட்டைஉதவிசெய்வாழ்வுண்டாமே. (1306)

நீரும் நெருப்பும் நேராயிருப்பதின் பலன்.

நீரும்நெருப்புமேநேர்படநிற்குமாயின்
பார்பெண்கலகம்பழியுடனே—நேருமென
ஆதிநூல்வல்லோர் அறைந்தனர் அவனியிலே
நீதிசொல்வாய்மானேநீ. (1307)

நீரும் நிலையும் நேராயிருப்பதின் பலன்.

நீரும்நிலையுமொன்றாய்நிலைபெறநிற்குமாயின்
சேருமின்பலாபம்திண்மையாய்க்கிட்டுமென்றும்
ஏறுமேசெல்வம்யோகம்இயல்புடன்வாழ்வரென்றே
வீறுடன்முன்னோர்சொல்லவிளம்பினன்மயனுமன்றே. (1308)

விளம்பினர்முன்னோர் நூலில்வினையதுமனைவிக்கென்றே
விளம்பினர்முன்வேதத்தில்விதித்ததுநிசமாமென்றே
விளம்பினர்தீர்க்கநோயைவிரிகுழன்மாதேகேளாய்
விளம்பினர்மயனுமந்நாள்விரிகடலுலகுக்கன்றே. (1309)

கோல் முறிசல் மனையின் பலன்.

கோல்முறிசலாகுங்குழிமுறிசலாமனையை
பலனைப்பொருளும்போம்பாழ்மனையாம்—கோலுமே
பார்பீறில்பண்பாயுரைத்தார்மயனரும்
கூராயறிந்துமனைகோல். (1310)

கோல்முறிசலின்பங்குழிமுறிதலோதுன்பம்
மால்முறிசலாமனையைபாழாம்—மேலும்
மாடுபொருள்செல்வம்மனைபோடுபுத்திரர்கள்
விடழிந்துபோகுமிசை. (1311)

குழி முறிசல் மனையின் பலன்.

மூக்காலுநாசமனைமூதேவிவந்தடையும்
எக்காலுங்காலுமிடாரோகும்—மூக்காலும்
நாசவிசம்உயிரழிக்குமேமெய்யதைக்கால்
காசம்குழிமுறிசல்காண். (1312)

கூன் மனையின் பலன்.

வாழ்மனைபெல்லைக்குள்ளேவளர்க்குமேகூனிருந்தால்
தாழ்வர்பெண்டிர்பிள்ளைதனம்பொருள்பூமிசேதம்
சூழ்வினைவந்துசேரும்உடைமையவள்சோரமென்றும்
பாழ்படுமனையாமென்றுபகர்ந்திட்டார்மயனார்தானே. (1313)

கட்டிய வீட்டில் ஆமை முதலியன வருவதாலுண்டாகும் பலனும் சாந்தியும்.

மாருக்கமடச்சடைகாகம்வருங்காற்கிரிவறட்டோடான்
தேரைதடும்புமண்ணுண்ணிதேவாங்கிலந்திவருமாகில்
வாருந்திங்கள்தனித்துயரங்கோயால்வருந்தோஷாதிகளும்
விருப்பால்விபமொழிக்கவேண்டில்விவரம்விளம்புவதே. (1314)

விளம்புவோமந்தர்ப்பணமும்வேதாகமசாஸ்திரவிதியால்
வளங்கொளன்னதானமொடுமாடுமறையோர்க்களித்தே
உளங்கள்களிக்கமனுவோஒருதீங்கென்றுமணுகாது
களங்கமகலும்பெருவாழ்வுகனகம்பலுகும்கருவிதுவே. (1315)

கருவேபடுசல்லியங்களைத்தாங்கமல முனிசெய்தருளியதால்
பெருவேள்விகளுமுதிரமுடன்பெலியோகினிக்குப்பூசைசெய்து
மருமாலிகையுந்தோசைவடைவஸ்துவுடனேமுனம்வைத்துத்
திருவேநிவேதஞ்செய்துமனைகோலமயனுர்சொன்னதுவே. (1316)

வேறு.

இணங்கியசுணங்கனுமையியலுறுகூகைபாம்பு
வணங்கியமனையில்புற்றுவைக்கத்தென்கருடன்புள்ளு
விணங்கியவெடிபொன்னேரியிவையெலாங்காணுமாகில்
வணங்கியபேயுமுண்டாம்மக்களும்சாவார்கண்டீர். (1317)

கருவேபடுசல்லியங்களைத்தாங்கமலனுரைசெய்தருளியதால்
பெருவேள்விகளுமுதிரமுடன்பெலியோகினிக்குப்பூசைசெய்து
மருமாலிகையாந்தீபமுடன்மறைநூல்வழியாய்மகிழ்ந்தளிக்கப்
பெரிதாய்வருசல்லியம்போகும்பேய்சூனியமும்பேசுவதே. (1318)

கிருகப் பிரவேசம்.

மாவார்மயனுர்வகுத்தகிருகத்தில்
தேவார்பிரவேசம்செப்புதற்கு—தூவார்
வழிபடுதெய்வவணக்கம்புரிந்து
மொழிவேன்நடத்தும்முறை. (1319)

மறையொலியோமமுழங்கமங்கலமுழவமார்ப்ப
நிறைமணிவிளக்கினேடுநிகழலங்காரமன்ன
நிறைவுளநூலிற்சொன்னநேர்பொருள்யாவுங்கொண்டு
குறைவறத்திருவையுன்னிகுடிபுகநன்றதாமே. (1320)

தத்துங்கதிர்சேயிலையாகாசனிபொன்புந்திபுகர்திங்கள்
அத்தமேடம்புனர்பூசமநுஷம்சோதியசுபதியு
முத்திரங்களொடுமூன்றுமோணமிரேவதியிவைநன்றும்.
எத்துங்குடந்தேள்சதுர்த்தியுவாவிவற்றைநீக்கிக்குடிபுகுமே. (1321)

அஷ்டமியுவாவிருத்தையருக்கன்சேய்மூலமாதம்
விட்டலும்விஷகடிகைவெள்ளியேயெதிரில்மூடஞ்
சுட்டியவலக்கண்சுக்கிரன்சூலமுநேரேயாதல்
நட்டமாமனைபுகுந்தால்நாசமென்றுரைக்கலாமே. (1322)

வேறு.

முற்றுங்கொவ்வையங்கனியிதழ்முகமதிமாதே
பற்றும்வீட்டினிற்குடிபுகபகர்ந்தனர்மயனூர்
உற்றராசிகட்பனிரண்டிலுனுற்றுகசுத்தம்
மற்றராசியிலுபயமுந்தேளினிற்சுபமிலிவம்பே. (1323)

வேறு.

மங்களஞாயிறுவாரம்மனைபுகில்வாழ்வுமீறும்
திங்களிலில்லஞ்சேரிற்றிருமகள்கடாக்ஷமுண்டாம்
பங்கமாம்செவ்வாய்நாளில்பதிபுகில்சண்டையுண்டாம்
மங்கையேமயனூர்சொன்னவண்மையையறிந்துகொள்ளே. (1324)

பொங்கியபுதனேயாகிற்போனவரகத்தில்வாழ்வர்
மங்கியவியாழநாளில்மனைபுகில்வாழ்வுண்டாகும்
பங்குறவெள்ளிநாளில்பாரியாள்வேசியாவள்
தங்கியசனியிற்போனல்சலிப்பில்லைசுகமதாமே. (1325)

வேறு.

பொலந்திருவனையமாதேபுகுதுநாளநுடம்விட்டம்
சிலம்புமுத்திரங்கள்ரோணிசித்திரைசதயந்தோணி
இலங்குமான்றலையேபத்தாமிவைகளுத்தமமேயாகும்
நலங்கொளும்பூசம்மத்திநாடுறக்கண்டுகொள்ளே. (1326)

சொல்லுமச்சோதியத்தம்சொல்புணர்பூசமோணம்
புல்லுமக்குதிரைநாளில்போய்புகினயலார்கொள்வர்
நல்லகார்த்திகைசிவன்மீன்நாடுமேதீயால்சேதம்
மல்லலோங்யர்புகுயத்துமாமயன்உரைத்தவாறே. (1327)

உதித்ததோராசிமுன்னாவுயர்சுகம்வறுமைகீர்த்தி
கதித்ததோர்நட்புமைந்தர்கடியசத்துருவினாசம்
மதித்திடுமில்லாள்சாவுமாணமேபிணிசம்பத்து
பதிவிரோதந்தான்மூன்றுபத்தாறுபன்னொன்றேகொள். (1328)

பாவியாம்கிரகம்பாவிபார்த்திடப்படுமெட்டுற்றால்
பாவியாமமரபக்கப்பணிமதியாறெட்டுற்றால்
பாவியாம்விரயத்துற்றால்பாரிடைகொடியவாகும்
பாவியாமவனுமாய்வன்பண்ணவருரைத்தவாறே. (1329)

பத்திரகாணம்தத்தம்பகர்சூன்யதிதியீர்சஷ்டி
நத்தமாமமரபக்கத்தட்டமிபன்னொன்றாதி
யுக்தநான்குசுக்லமுதயமாம்பக்கமுன்னாள்
சுத்தமாய்ப்பிரதோடங்கள்சுகந்தராவாகாவம்மா. (1330)

பூமகனுறுவர்க்கம்புகல்மதிகதிரோன்பார்வை
நாமுறுமதிசேர்வீடுநாட்டெதிர்புகரோணிற்றல்
பேமுறுமென்பர்மேலோர்பேசொணாநாட்களின்ன
தாமறிந்தறிவோர்நன்னாள்தாங்கொளற்குரியான்றே. (1331)

சுங்கனையாட்சியுச்சம்தூயநட்போடேகூடின்
சுங்கனுரெதிரேநிற்குந்தோடங்கொஞ்சமுமில்லை
தங்கியதிரத்துராசிதானுவாழுபயம்மத்யம்
துங்கமில்சாத்துராசிதொலைவுறுமாகாதம்மா. (1332)

விடையதினமிசமெல்லாவீட்டிலும்புகுதலாகும்
விடையதுகுணமில்லாதுமேவினுமுத்தமந்தான்
விடையிற்சுபரிருந்தால்மென்மேலுஞ்சுகமேநல்கும்
விடையம்சமிரவானாலும்மேலவைகுறிக்கநன்றே. (1333)

கிழக்கே குடிபுக ஆகாத விராசி.

கடகமுஞ்சிங்கந்தானுங்கதிரவன்றிசையிற்செல்லில்
படமுடையரவந்தீண்டும்பார்மனைபாழதாகும்
திடர்மனைதனிற்புத்துசேர்ந்திடக்காணலாகும்
விடமெனும்விழியினாளேவிதிவழிதிண்ணந்தானே. (1334)

தெற்கே குடிபுக ஆகாத விராசி.

துலாமொடுதேளுந்தெற்குதோன்றுதல்செய்வானாகில்
பலாபலனெல்லாம்பாழாய்ப்பதியுடன்குடிபோமென்று
நிலாவெனும்விழிகண்மாதேநிறைமனைபோகலாகா
தலாதலமுன்னேசொன்னேன்சமயமாந்திங்களுண்டே. (1335)

மேற்கே குடிபுக ஆகாத விராசி.

மகரமாங்கும்பமேற்கேவாழ்மனைபுகுவானாகில்
நிகரமாந்தலங்கள்வேறாய்நிறைமனையழிந்தேபோகும்
சிகரமாந்தலைவன்சாவன்சிதைவுறுந்திண்ணமாகும்
அகரமாந்தல்மல்லாமலாட்சியுமல்லகேடே. (1336)

வடக்கே குடிபுக ஆகாத விராசி.

தகருடனேறுதன்னில்தாழ்மனேவடக்கேபோகில்
இகலுடனிழிவுண்டாகிஇன்பமேயில்லையென்று
நிகருடன்தலங்கள்வேருய்நிச்சயமழிந்துபோகும்
திகிலுடனிறப்பனென்றேநிடம்பெறுமயனுஞ்சொன்னர். (1337)

மீனவன்கிழக்குமேடன்மிளிர்தெற்குதநுவோன்மேற்கு
ஆனவவ்விடைவடக்குமன்றேதான்கொல்லுங்தேளோன்
மானமாரங்கித்திக்குமாநண்டுதென்மேல்கோல்தான்
வானகுவடமேற்பாங்குவளர்குடம்வடகீழாகா. (1338)

சிங்கமேமகரங்கன்னிசெறியுந்தண்டிற்கூறு
பங்கமார்நடுத்திசையின்பாற்செலிற்றீதேயாகும்
துங்கஞ்சேர்கோள்பகைக்குத்தோற்றமாம்தானம்பத்தேழ்
பொங்கவேபுக்காணுயிற்புலன்பிறன்கொள்வனன்றே. (1339)

பூர்வ-தட்சிண-பச்சிம-உத்தர திக்கில் குடிபோகும் பலன்.
கிழக்கே குடி புகுதல்.

பூர்வதிக்கைப்போலேநலந்தருமோபுதுக்கியவீடடைவோர்க்குக்
கோருமுன்பரிந்துகுலதெய்வம்தொடர்ந்துருகியவாயினல்விண்டு
பாரும்வெண்பசுபாலுடன்விளக்கும்பருத்தியும்நிறைகுடம்பழைய
வழக்கும், சேருடன்சோமன்சுகந்தசந்தனமும்சுசரிதகுணமுள்ள
பெண்ணும். (1340)

சேரும்நல்லினமும்ஸ்வஸ்திரீயுடன்பூரணகும்பம்சம்பிரமத்துடனே
ஊரும்உப்பும்உறைப்புடன்புளியும்உவர்ப்புடன்கசப்பறுசுவையும்
ஆரூடம்பார்த்தே அருணேதயகாலம்அறிந்துநீயழகியநன்னுளி
லேறினல்குடியேயெழில்பெறவாழுமிகபரமிரண்டும்நல்வழியே.

தெற்கே குடிபுகுதல்.

சேர்க்குந்தெற்குச்செலவதிகம்தமிழிற்பாயிதின்றதற்குத்திரவியம்
கொடுப்பாய்,பாற்கடல்போலொழிப்பறவாழ்வாய்பாட்டிபாட்டனைத்
தொழுவர், யேற்கநல்வினைமும்உணரும்பேத்திடுவாயிதமுண்டுபிதிர்
தேவதைக்கும், தீர்க்கமாய்த்தேவிஆசையிட்டுவாய்நின்பானுள்பாய
சம்சமைத்து. (1342)

சேர்க்கும்செம்பருத்திப்புஷ்பமும்தினையுமநெல்பலதானியத்துடனே
யார்க்கும்பொதுவாய்மறந்திடநடந்துயாவர்க்கும்யாசகம்கொடுப்
பாய், மார்க்கமாம்மால்பொழுததனிலேகமாதவமாமகம்பெறுமே
யார்க்குமெய்க்குணத்தையறிந்திடச்சொல்வாய்யமர்ந்திட்டமனைத
னையுத்திக்கு. (1343)

மேற்கே குடிபுகுதல்.

குடதிசையைநோக்கிக்குடித்தனமேறதுநுவைநீதொழுவாய்கேளா
யிடறச்சொன்னல்யேகலாம்மேற்கேயிதம்சதமகமென்று
அடரும்பொன்னுடைமைஅணியணிவெதுவாய் அமர்ந்திடுமதிலுள்
ளோர், படருமேபூமிபாக்கியம்கிடைத்துபலவெகுமானங்கள்நடக்
கும். (1344)

மடமுங்கட்டிடலாம்மாடுநின்றிடவாகனங்களும்வாழும்கட்டடமும்
தொடுமேபின்னைசுகந்தருமேதாண்டாமல்விடிவிளக்கேற்ற
நடமுறநல்வித்தியாய்நாரணன்பூஜைசநந்தியாவட்டபூஞ்செண்பகமல
ரால், திடமுறப்பார்த்துத்தீபம்வைத்திடப்போப்திபாகமுங்கொடுக்
கநீவாழ்வாய். (1345)

வடக்கே குடிபுகுதல்.

வடக்கிலேநீவாழநினைத்தால்வாழ்ந்திடபெண்களுக்குவரிசையுடன்
தடக்கையில்வளையிமத்தரிக்கும்பேசனுடையும்மாய்வுடனணிந்து
முன்னழைத்து, இடக்கையுமேத்திவிடமுன்சேர்த்துவிந்தையாய்ச்
சோபனமா, நடக்கவேநாலுஅடிக்கொருதேங்காய்நறுமலர்மாலையுங்
கோடிகொடுப்பாய். (1346)

சோபனந்தருமேசுசிருசிப்படுமேசுசிலனுயிருக்கபோதிலுமே
பாபமுந்தரித்திடுமேபாவையர்க்கடுமைபலவிதமானாத்தினமே
லாபமும்வாய்க்கிடுமேலாவண்யக்தருமேஉல்லாசமுமுறவும்பேத்திடு
மே, தாபமுந்தீர்ந்துவிடுமேதையகந்திடுமேதபதியார்தாபிக்கும்தல
மே. (1347)

நேரெதிர்சூலதோஷம்நிகாட்டமியுவாதோஷம்
பாரொத்தவிஷாதிதோஷம்பகர்சுக்கிரனெதிரின்தோஷம்
வாரொத்தவாஸ்துகாலம்வண்மையாய்மாற்றுமென்றே
நேரொத்தமொழியாய்கேளாய்நிகழ்த்தினார்மயனுமன்றே. (1348)

பேசுமறைநான்கினுமுயன்றபிரமன்வகுத்தபுவிதனிலே
வாசமயன்முன்சொன்னபடிமறைநூல்வழியாய்மனைதெரிந்து
நேசமுடனேயுரைத்துவிட்டேன்நீடூழியெனுநிலைதவறு
தாசைக்கனிபோலினிதையருந்தஅரிமாதகலாதமருவளே. (1349)

சீரும்சிறப்பும்பெருக்குமனைதிருக்கிமுடிக்குந்தகுதியர்க்குப்
பேரும்பெருவாழுலகியல்பும்பிரமன்வகுத்தபுவிதனிலே
காரும்பொழிந்துவிளைவதுபோல்கல்விக்காசன்கனமுடையான்
தேரும்பரியும்தண்டிகையும்சிவிகைகுளிரும்சிறப்புளதே. (1350)

முன்னாள்மயனுமேமொழிந்தமுதுமொழிகண்டுளம்பூரித்தே
இன்னாள்வாழ்பவர்க்கிணங்கஏற்றமொழிகளியாவும்
சொன்னயம்கண்டுமேசொன்னசொற்களைமாற்றிடாதிருந்தவர்
தன்மயம்பெற்றேதாழ்விலாசெல்விகத்துடன்வாழ்வரே. (1351)

† சில செய்யுட்கள் மறைந்தன.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சிற்ப ரத்நாகரம்

முற்றிற்று.

ஒவ்வொரு நட்சத்திரங்களிலும் கிரகாரம்பம் செய்யும் போதுண்டாகும் பலன்.

அசுவினிமுதல் சுவாதிவரையுமுள்ள 15 நட்சத்திரங்களுக்குரிய கிருக முகூர்த்த நிர்ணயங்களுக்கான நூல்கள் எத்தகைய பிரயாசையினும் எமக்குக் கிடைத்தில. இத்திற நூல்களையுடையார் எமக்கு எழுதியனுப்பின் அச்சிடுவித்து வெளியிடற் கேலும்.

விசாக நட்சத்திரம் முதற்பாதம்.

முளைத்திடும்விசாகந்தன்னில்முதற்காலில்மனையுண்டானால்
குளைப்படும்மோகமாதாகுடும்பத்தில்நன்மையுண்டாம்
விளைப்புண்டாகும்மக்கட்பேறுவிளைந்தாலுமுடனேதீரும்
தளைப்புண்டாம்பாக்கியங்கள்தான்வயதிருபதாமே.

2-ஆம் பாதம்.

இருபதாமிரண்டாங்காலிலிடுதையெடுப்பானாகில்
விருபூமிநாறுநாளில்வினைவரும்விலங்குமுண்டாம்
சிறையினில்படிப்பதாகும்சிலபலநோயுண்டாகும்
குருபரம்வயதுபத்தில்குடியதுமிழந்துபோமே.

3-ஆம் பாதம்.

வளர்ந்திடுமூன்றுங்காலிவழியதுயெடுக்கும்போது
வளர்ந்திடும்நாற்பத்தைந்தில்மன்னரால்சேநம்செல்வம்
குளந்திடும்குலதெய்வங்கள்குடும்பத்தில்ஜனங்கள்சேரும்
வளர்ந்திடுமெண்பத்தஞ்சுவயதுதானிருக்குந்தானே.

4-ஆம் பாதம்.

தானதுநாலாங்காலில்சம்பத்துமிகவுண்டாகும்
மானநிலத்திலுள்ளமகிழ்ந்தறவுந்தசேரும்
நானமதெண்பத்தொன்றுநாளினிற்பொருளுந்சேரும்
கானல்வாழ்பொருளுக்கேற்றுக்கனவயதெழுபதாமே.

அநுஷ நட்சத்திரம் முதற்பாதம்.

எழும்பியவநுஷந்தன்னிலிருக்கின்றமுதற்கால்தன்னில்
விளம்பிடுமுப்பதானால்வீட்டினில்மனையாள்சாவாள்
குளம்பிடுமக்கள்சாகும்குடும்பத்தில்ஜனங்கள்சேதம்
வளம்படுவருஷமஞ்சில்மனையதுமழிந்துபோகும்.

2-ஆம் பாதம்.

அழியா துரண்டாங்காலில்அம்மனையிருப்பதானால்
விழுந்துணர்சோபனங்கள்மென்மேலும்பலனுண்டாகும்
யெளியவனாவதில்லையிடஞ்சலுமுடனேதீரும்
களிப்புடன்வாழ்வுஞ்சேரும்கனவயதறுபதாமே.

3. ஆம் பாதம்.

ஆறானமூன்றாங்காலில் அன்புடன்மனையுண்டானால்
வீறானமூன்றுமாசம்மேவியமன்னன்சாவான்
தேறுதகுழவிசாகும்சேர்ந்திடுங்காலிசேதம்
மீறுதவீடுபாழாய்விருப்பியவயதுமூன்றே.

4-ஆம் பாதம்.

விரும்பியநாலாங்காலில்விளங்கியமனையுண்டானா
லிருபத்திரண்டாம்நாளிலேந்திழைமனைவியுண்டாம்
குருபதம்வணக்கம்செய்யும்குழந்தைகள்பேறுமுண்டா
மரும்பியேஎழுபத்தஞ்சில்மனையதுயிறக்குந்தானே.

கேட்டை நட்சத்திரம் முதற்பாதம்.

இருந்திடுமுதற்கால்கேட்டையேந்திழைசாவுமுண்டாம்
இருந்திடுமுப்பத்தஞ்சில்இறைவனால்கலகமுண்டாம்
வருந்தியமனையினுள்ளேவஞ்சனையேவல்சேரும்
மருந்துகள்நித்தமுண்ணும்மயக்கங்கள்நோயுண்டாமே.

2-ஆம் பாதம்.

நோயுண்டாமிரண்டாங்காலில்நோக்கியவிருபதாம்நாள்
பேயுடன்தோஷத்தாலேபிள்ளைகள்மரணமாகும்
நாயுமேபகையதாகும்நலசம்பத்துமழிவதாகும்
ஓயாதசண்டையுண்டாம்ஒன்பதுவயதுமாமே.

3-ஆம் பாதம்.

வயதுதான்மூன்றாங்காலில்வாழ்வதுமிகுதியாகும்
முயலுறுராஜமன்னர்முயங்குநாள்முப்பத்தெட்டில்
தயவுண்டாம்பெரியோர்வந்துதைரியமிகவுஞ்செய்வார்
அயனுமேவகுத்துச்சொன்னார்ஐம்பதுவயதுதானே.

4-ஆம் பாதம்.

அன்புடன்நாலாங்காலில்அம்மதிக்கோளதாகும்
வலம்பிலேமாடுசாகும்மைந்தர்கள்நோயுண்டாகும்
இன்பமாயிருக்கொட்டாதுஎந்திழைவயிற்றிற்பீடை
துன்பமுமிகுதியாகும்சொல்லியவயதேழாமே.

மூலநட்சத்திரம் முதற்பாதம்.

ஏழதாம்முதற்கால்மூலம் எண்ணைஞ்சுநாளில்மங்கை
கோளதுமிகவுண்டாகும்கோனதபாலிடஞ்சலுண்டாம்
தானதுவீட்டில்க்ஷேமந்தந்துயிர்சேதமாகும்
மானமதில்லைஎட்டுவருஷத்தில்மனைபாழாமே.

2-ஆம் பாதம்.

பாழில்லையிரண்டாங்காலில்பத்தஞ்சுஒன்பதானால்
மீளவேயயலூர்போம்வேளையில்பிணங்கள்காணும்
கோளில்லையபிர்களுண்டாம்கொடுத்தபொன்றுடனேமீளும்
நாளிலேசெல்வஞ்சேரும்நாற்பத்தேழ்வயதுமாமே.

3-ஆம் பாதம்.

சேருமேமூன்றாங்காலில்செட்டுவெள்ளாண்மைசேரு
மாருமேநிகரில்லாமலாறெட்டுநாளில்நன்மை
பாரும்நீர்குற்றந்திருப்பாலுடன்செல்வமுண்டா
மூருமேயுறவதாகுமுதித்திடும்வயதுபத்தே.

4-ஆம் பாதம்.

பற்றியகாலாங்காலில்பால்மாடுகறவாதாகும்
மத்திமவிளைவுமில்லைமங்கையாள்தெய்வமுண்டாம்
குற்றமுமிகுதிகாணும்குழந்தைகள்நோயுண்டாகும்
நித்தியம்கலகமுண்டாம்நிலைத்திடும்வயதுநாலே.

பூராட நட்சத்திரம் முதற்பாதம்.

வருடமாம்பூராடத்தில்வந்திடும்முதற்கால்நன்மை
திருடனால்களவுபோனதுதிரும்பிடுமேதானாலும்
மருடவர்எண்பதாநாள்மணமுண்டாம்நன்மைசேரும்
திருவுமேநிறைந்துவாழும்சேர்ந்திடும்வயதீராறே.

2-ஆம் பாதம்.

ஆறொணயிரண்டாங்காலில்ஐயைந்துநாளில்கேளாய்
கூர்மனை அரசன்சாவான்குணமுடன்தேடிவைத்த
பேருடன்வயிற்றுப்பிள்ளைபிணமதுதாயுஞ்சாகும்
வேறுடன்பொருள்காணுதுவெறுமனையாகிப்போமே.

ஷை நட்சத்திரம் 3-4 பாதங்களின் செய்யுள்களிறந்தன.

உத்திராட நட்சத்திரம் முதற்பாதம்.

அஞ்சியஉத்திராடம்அறிவுடன் முதற்காலாகில்
வஞ்சியர்பொருளுமுண்டுமைந்தரால்செல்வஞ்சேரும்
மிஞ்சியேவாக்குமுண்டாம்வெல்லுமேமனையாள்தீர்க்கம்
குஞ்சியேதெய்வங்காக்கும்கூறியவயதுநூறே.

2-ஆம் பாதம்.

ஆறுனரண்டாங்காலில்நோக்கியமூன்றுமாதம்
காறெனமாடானாலுட்கண்டுகொள்பிள்ளைதானும்
வீறெனத்தண்ணீராலேவிளையதாலுயிரும்போகும்
தேறெனத்தெண்டமுண்டாம்செப்பியவயதுநாலே.

3-ஆம் பாதம்.

நாலெனமூன்றுங்காலில்நாளெட்டில்நன்மைகாணும்
பாலுடன்பசுக்களுண்டாம்பட்டிகள்பெருகிவாழும்
காலமேபூமிவித்துகளவில்லைவிளைவுண்டாகும்
ஓலமாய்த்தொண்ணூற்றஞ்சுவயதுடனுகந்துவாழ்வாய்.

4-ஆம் பாதம்.

வாழ்பவர்நாலாங்காலில்வாழ்மனைமுளைத்ததானால்
வர்ழ்தருமூன்றுமாசம்நாளதுவந்து சேரும்
காழ்மனைமரித்தலுண்டாம்கனமுடன்பின்னுந்தோறும்
நீள்புவிமனையாள்சோவுநிலைத்திடும்பின்னுந்தேறும்.

திருவோண நட்சத்திரம் முதற்பாதம்.

பின்னுமேதிருவோணத்தில்பிறந்திடும்முதற்கால்தன்னில்
சொன்னதோர்பதினொன்றுநாள்சுரமுண்டாந்தெளிவுகாணும்
மன்னவன்சடையுங்காணும்வரும்பிணியுடனேதீரும்
மன்னவன்மனையுந்தீர்க்கம்வருபலன்மிகவுண்டாமே.

2-ஆம் பாதம்

ஐயனேயிரண்டாங்காலிலையிருநாளில்நன்மை
மெய்யுனமுடியும்வீடுவினைவந்தாலுடனேதீரும்
கையினால்விரைத்தளித்துகனமதாய்விளைவுண்டாகும்
செய்யவேதர்மம்செய்யும்செலவயதறுபத்தஞ்சே.

3-ஆம் பாதம்.

செல்வமேமூன்றுங்காலில்திருஜென்மமிகுதிகாணும்
வல்பிணியக்கால்தீரும்மயக்கமும்வந்துபோகும்
கல்மனதானாலுந்தான்கரைந்திடுமிரக்கவேண்டாம்
நல்மனையென்றுபேசிகொடியவையதுபத்தே.

4-ஆம் பாதம்.

நாடியதிருவோணத்தில்நாலாங்கால்மனையுமானால்
தேடியமுப்பதாநாள்செல்வருமரணமுண்டாம்
கூடியமனையிற்கர்ப்பம்குறைந்துதானழிந்துபோகும்
நீடியமன்னகோயாம்நீள்மனைவயதுமொன்றே.

அவிட்ட நட்சத்திரம் முதற்பாதம்.

ஒன்றான அவிட்டத்தன்னில்உதித்திடுமுதற்காலானால்
சென்றதுஒன்பதாநாள்திரவியமனையிற்கிட்டும்
நற்றெனமனையிலுள்ளேநல்லதோர்செல்வமுண்டாம்
பின்னெனக்குறைபாவாழ்வுவிரும்பியவயதுநூறே.

2-ஆம் பாதம்.

வாழ்வதுயிரண்டாங்காலில்மனையதுபுதிக்குமாகில்
மீள்வதுகளவுபோனவெள்ளிபொன்மாடானாலும்
தாழ்வில்லைபதினைந்தாநாள்தான்திருவருஷங்காலும்
மேல்புவிமனையின்வாழ்வுமேவிடுமென்பாருளே.

3-ஆம் பாதம்.

எண்பதுமூன்றாங்காலிலிடைஞ்சலேமிகுதியாகும்
வன்பதாய்ப்பொருளுஞ்சேரும்மனைவியாலழிந்துபோகும்
துன்பமுந்துயரமுண்டாம்துக்கமுஞ்சுகமுங்காணும்
மண்படும்இல்லைபக்தமனைவயதிரண்டுமாமே.

4-ஆம் பாதம்.

ரண்டானநாலாங்காலில்ஏந்திழைமரணமாகும்
பண்டுள்ளமுதல்கள்எல்லாம்பரந்திடுமுயிர்விட்டேகும்
கண்டவர்நகைப்பதாகும்கருங்குட்டம்சன்னியாகும்
உண்டாதுதங்காதாகும்ஒருமாதம்வயதாண்டே.

சதய நட்சத்திரம் முதற்பாதம்.

வாசமாஞ்சதயம்வந்துவணங்கியமுதற்கால்தன்னில்
நேசமாயிருப்பதானல்நிமிஷத்தில்புக்கம்விடும்
வாசமாய்மன்னர்தேகம்வாசனைமிகுதியேறும்
தேசமேபுகழவாழ்வுதிருவயதிருபத்தஞ்சே.

இரண்டாவது பாதமில்லை (பழுதுபட்டுளது)

3-ஆம் பாதம்.

எளனமூன்றுங்காலில்ஏந்திழைபிறவிமைந்தர்
மாளுவர்மாளாவிட்டால்மாதாபிதாவுமாளும்
நீள்புவிசுற்றத்தார்கள்நெருக்கமும்வழக்குமுண்டாம்
நாளதுாண்டுமாசம்நல்வயதெட்டதாமே.

4-ஆம் பாதம்.

இட்டமாய்நாலாங்காலில்இருபத்திரண்டாம்நாளில்
தொட்டதோர்மனைவியாள்கைதிரவியம்தோணலாகும்
மட்டில்லாசெல்வம்யேறும்வல்லவர்க்குறவுண்டாகும்
செட்டதுபலிக்குமாறுவயதுமேதிடமுண்டாமே.

பூரட்டாதி நட்சத்திரத்தின் நான்கு பாதங்களுக்குஞ் செய்யுள்களில்லை.

உத்திரட்டாதி நட்சத்திரம் முதற்பாதம்.

காணவேஉத்திரட்டாதிகலந்திடுமுதற்கால்தன்னில்
பூணவேஏழாம்நாளில்பொருளதுமிருப்புங்காணும்
தோணவேமநுஷர்மாடுதோன்றியபிணியுந்தீரும்
ஊணவேமெணங்கள்செய்யஒருபத்துமீரெட்டாமே.

2-ஆம் பாதம்.

ஈரெட்டிரண்டாங்காலிலெழும்பியபதினெட்டாநாள்
வீரிட்டுப்பிள்ளைசாகும்விளங்கியபயிருந்தியும்
வாரிட்டமனையாள்கர்ப்பம்வள்குலைபிசாசுகூடிச்
சீரிட்டேஅழிவதற்குத்திருவயசஞ்சதாமே.

3-ஆம் பாதம்.

ஆகுமேமூன்றாங்காலில்அரும்பொருள்ஏழாம்நாளில்
வாகுடன்பாக்கியங்கள்வலியவேவந்துசேரும்
பாகுடன்சித்தாதிக்குப்பணிவிடைசெய்யலாகும்
ஆகமநூல்கள்தோன்றுமைம்பத்தேழ்வயதுதானே.

4-ஆம் பாதம்.

கூறியநாலாங்காலில்குழந்தையுமுப்பதாம்நாள்
நீறியசர்ப்பத்தாலேநீங்கியேஉயிர்தான்போகும்
மாறியவழக்குண்டாகும்மறிதலும்தெண்டமுண்டாம்
கூறியவருஷம்நாலில்குடியதுமிழக்குந்தானே.

இரேவதி நட்சத்திரம் முதற்பாதம்.

இளகும்ரேவதியிலிட்ட இதுமுதற்காலதானால்
வளமுடைமாடுபாய்ந்துமலரொடுகண்ணேபோகும்
அளகம்சேர்மனைவிதானும்அருகுவள்சர்ப்பந்தீண்டி
களவினால்சேதம்வந்துகழியுமேவயதுபத்தில்.

2-ஆம் பாதம்.

பத்தெனாண்டாங்காலில்பதினொருநாளில்செல்வ
மத்தமுங்காசுசேரும்அருஞ்சுதர்ப்பெற்றுவாழ்வாய்
பித்தமுஞ்சுரங்கள்தீரும்பேயினாலழிவுபோகும்
முத்தமநன்மையாகும்மொழியரியிருபத்தஞ்சே.

ரேவதி 3-4-பாதங்களின் பாக்கள் கிடைத்தில